82

காழு ஜவன் ஐயர் (தொ)

தொகுத்த பிரியாவை

அறிக்கிரம் -


ல.6.6.21193

No6

# HISTORY

OF

# THE TRANQUEBAR MISSION

A. D. 1706 - 1906.

---

# தரங்கை மிசியோன் சரித்திரம்.

இஃது

ஞா. சாமுவேல் ஐயர்

இயற்றியது.

---

கர்த்தர் தம்முடைய அதிசயங்களின் நினைவுகூருதலை
உண்டுபண்ணினார். (சங். 111, 4.)

Tranquebar,

PRINTED AT THE EV. LUTH. MISSION PRESS.

1906.

06:b 21193
N06

## பொருளட்டவணை.


பக்கம்.

முகவுரை ... ... ... ... ... ... 1

I. தரங்கை மிசியோன் புராதன சரித்திரம்

1. ஆரம்ப காலம் ... ... ... ... ... 5
2. அபிவிர்த்திகாலம் ... ... ... ... 23

தரங்கை கஸ்பா மிஸியோன் ... ... ... ... 23
க. சென்னை மிஸியோன் ... ... ... ... 39
உ. கூடலூர் மிஸியோன் ... ... ... ... 47
ங. திருச்சிறுப்பள்ளி மிஸியோன் ... ... 49
ச. தஞ்சாவூர் மிஸியோன் ... ... ... ... 58
ரு. திருநெல்வேலி மிஸியோன் ... ... ... 75

3. கலிவுகாலம் ... ... ... ... ... 84

க. தரங்கை கஸ்பா மிஸியோன் ... ... ... 84
உ. வெளிச்சபைகள் ... ... ... ... 89

II. தரங்கை மிசியோன் நூதன சரித்திரம்

க. லெப்சிக் மிஸியோன் தாய்ச்சங்கம் ... ... ... 92
உ. லெப்சிக் மிஸியோன் ஆரம்பவேலை ... ... ... 96
ங. மிஸியோன் விசாரணைக்கும் விர்த்திக்குமான கூட்டங்கள் ... ... ... ... 100
ச. லெப்சிக் மிஸியோன் சேகரங்கள் ... ... ... 102

1. தரங்கை,
   - க. தரங்கைச் சபை காரைக்கால் ... ... 102
   - உ. செமினேரி ... ... ... ... 106
   - ங. அச்சுக்கூடம் ... ... ... 113
2. பிறையாறு
   - க. பிறையாற்றுச் சபை ... ... 115
   - உ. தொழிற் பாடசாலை ... ... ... 117
3. மணிக்கிராமம் ... ... ... ... 118
4. மாயூரம் ... ... ... ... ... 120

5. சீர்காழி

| | | |
|---|---|---|
| | க சீர்காழிச் சபை ... ... ... | 124 |
| | உ சீர்காழி சென்றிரல் ஸ்கூல் ... ... | 125 |
| 6. | கும்பகோணம் ... ... ... ... | 128 |
| 7. | நாகபட்டணம் திருவாரூர் ... ... ... | 129 |
| 8. | தஞ்சாவூர் ... ... ... ... ... | 131 |
| 9. | திருச்சிராப்பள்ளி, மேட்டுப்பட்டி ... ... | 135 |
| 10. | புதுக்கோட்டை ... ... ... ... | 139 |
| 11. | அணைக்காடு ... ... ... ... | 141 |
| 12. | கோயமுத்தூர் ... ... ... ... | 142 |
| 13. | சென்னபட்டணம் ... ... ... ... | 144 |
| 14. | செங்கற்பட்டு ஜில்லா ... ... ... | 148 |
| 15. | ஈரோடு, ஏர்காடு ... ... ... ... | 150 |
| 16. | தென் ஆற்காடு ஜில்லா ... ... ... | 151 |
| 17. | மதுரை, விருதுப்பட்டி ... ... ... | 154 |
| 18. | திண்டுக்கல் ... ... ... ... | 159 |
| 19. | பங்களூர் ... ... ... ... ... | 160 |
| 20. | இரங்கூன் ... ... ... ... ... | 162 |


அநுபந்தம்.


| | | |
|---|---|---|
| க. | சத்தியவேதத் தமிழ் மொழிபெயர்ப்பின் சரித்திரம் | 165 |
| உ. | தரங்கை மிசியோன் கணக்கு (1905). ... ... | 179 |


# தரங்கை மிசியோன் சரித்திரம்.

## முகவுரை.

"மலர்தலையுலகின் மல்கிருள் அகல
இலகொளி பரப்பி யாவையும் விளக்கும்"

சூரியனை யொத்ததாம் எம்பெருமான் இயேசு கிறிஸ்துவின் திருச்சுவிசேஷம். இதைப் பிரசங்கித்து, இப்பூதலத்தாரின் அஞ்ஞான இருளைப் போக்குவிக்க நமதருமை ரட்சகர் தமது சீஷர்களை உலகெங்கும் அனுப்பினார். அச்சீஷரில் ஒருவராகிய பரி. தோமா அப்போஸ்தலர் அந்தகாரப் பிரபுவின் அரங்கத்துள் ஒன்றாகிய இத்தேசத்திற்கு வந்து, மலையாளத்திலும் சென்னைக்கருகிலுள்ள மைலாப்பூரிலும் இரட்சணிய சுவிசேஷத்தைக் கூறி, சிலரைக் கிறிஸ்தவர்களாக்கி, பிராமணர்களின் ஏவுதலால் கொலையுண்டு, சத்திய சாட்சியாய் மரித்தார் என்கிற ஐதிகம் திருச்சபையில் தொன்று தொட்டு வழங்கி வருகிறது. தோமாஸ் கிறிஸ்தவர்கள் என்னப்பட்ட அவர்களுடைய முந்தின குருமார் இறந்த பின் சின்னாசியா, பெர்சியா, முதலிய தேசங்களினின்று வெவ்வேறு காலங்களில் வந்த நெஸ்தோரியானர் முதலிய போதகர்களாலும், 16-ம் நூற்றாண்டின் ஆரம்பமுதல் கொங்கணா நாட்டில் ஆளுகை செய்த போர்த்துகீஸ்காரரின் கொடுமையினாலும் மேற்கூறிய தோமாஸ் கிறிஸ்தவர்களின் போதகங்கள் பழக்க வழக்க ஆசாரங்கள் எல்லாம் சீர் குலைந்து மாறிப்போயின. இவர்கள் தற்காலத்தில் மலையாளத்திலே சூரிய கிறிஸ்தவர்கள் என்னப்படுகிறார்கள்.

Apostle Thomas.

மேலும், பாப்பு மார்க்க குருவாகிய பிரான்சிஸ் சவேரியார் 1541-ம் வருஷம் இத்தேசத்திற்குக் குருவாக போர்த்துகால் அரசனால் அனுப்பப்பட்டு, கோவைக்கு வந்து, அங்கே யேற்கனவே போர்த்துகீஸ்காரரால் ஏற்பட்டிருந்த சபைகளைச் சீர்படுத்தி, யாழ்ப்பாணம், கன்னியாகுமரி முதலிய இடங்களுக்குப் போய், கீழ்க்கரையிலுள்ள மணப்பாடு நாற்

Francis Xavier.

னுக்குடி முதலான கரைத்துறைகளிலும், பின்பு மேல் கரையிலுள்ள கோட்டாறு திருவாங்கோடு முதலான இடங்களிலும் வசித்த முக்குவர் செம்படவர் பட்டணவர் பரவர் முதலானவர்களுக்கு உபதேசம் பண்ணி, அவர்களுக்கு வேண்டிய வாக்குச் சகாயமும் பொருள் சகாயமும் செய்து, அவர்களைத் துன்பப்படுத்தினவர்களுக்கு விரோதமாக அவர்களுக்குத் துணைநின்று, அனேகருக்கு ஞானஸ்நானங் கொடுத்துப் பாப்புமார்க்கத்தில் சேர்த்தார். பிறகு அவர் மலாக்கா, ஜாவா, ஜப்பான் முதலான தீவுகளுக்குப் போய் உபதேசம் பண்ணி, சீனதேசத்துக்கு அருகிலுள்ள சென்சியான் என்னும் தீவில் இறங்கினார். அங்கே அவருக்குக் காய்ச்சல் கண்டு, 1552-ம் வருஷம் டிசம்பர் மீ 22-ம் உ பரகதி அடைந்தார். இவருக்குப் பின் தத்துவபோதகர் (Robert de Nobili), வீரமாமுனிவர் (Beschi) முதலிய ஏராளமான ரோமான் குருக்கள் இத்தேசத்திற்கு வந்து, வெகு ஜனங்களைத் தங்கள் சபையில் சேர்த்தார்கள். *

ஆயினும், சீர்திருத்தப்பட்ட திருச்சபையின் அறிக்கைப்படி சுத்த சுவிசேஷத்தை இத்தேசத்தாருக்குப் பிரசங்கிக்கும் குருமார் 18-ம் நூற்றாண்டின் ஆரம்பமளவும் இங்கே வந்ததில்லை. தென்மார்க்கு அரசராகிய நா
Ziegenபalg & Plütschau லாம் பிரதரிக் அனுப்பிய சீகன்பால்க்,
பிளிச்சௌ என்ற குருமார்களே சுத்த சுவிசேஷம் அறிவிக்கும் பிரதம ஸ்தானாபதிகளாக 1706-ம் வருஷம் ஜூலை மீ 9-ம் உ தரங்கம்பாடியில் கரையிறங்கினார்கள். ** இவர்கள் தெய்வ நாமத்தை முன்னிட்டு ஆரம்பித்த மிசியோன் சரித்திரமே, நாம் இந்தப் புத்தகத்தில் விபரிக்கும் தரங்கை மிசியோன் சரித்திரம்.

தரங்கையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் சுவிசேஷ வேலை நடந்த சரித்திரம் மாத்திரமே தரங்கை மிசியோன் சரித்திரமன்று. தரங்கையினின்று தெய்வ அருளால் பரம்பினதும் தரங்கையில் உழைத்த சுவிசேஷ லுத்தரன் திருச்சபைக் குருமாரோடு ஏக விசுவாசத்தில் நிலைத்திருந்த சுவிசேஷ குருமாரால் பலவிடங்களில் நடந்துவந்ததுமான மிசியோன் வேலையின் சரித்திரமும் தரங்கை மிசியோன் சரித்திரமாம்.

* இந்துதேசத்தில் கிறிஸ்துமார்க்கம் விருத்தியான சரித்திரமென்ற நூலினின்று சுருக்கியது.

** இவர்களை அனுப்பிய டேனிஷ்-ஹல்லே மிசியோனே இந்தியாவில் வேலைசெய்யும் சகல புரோட்டெஸ்டான்டு மிசியோன்களிலும் முந்தினது. 1792-ம் வருஷம் பப்திஸ்து மிசியோனரிகள் வருமளவும் தரங்கை மிசியோனரிகளையன்றி வேறெந்த புரோட்டெஸ்தாந்தரும் இத்தேசத்தில் மிசியோன் வேலை செய்ததில்லை.



தரங்கை டேனிஷ் துரைத்தனத்தார் எல்லைக்குட்பட்ட இடங்களில் உழைத்த லுத்தரன் ஐயர்மார் டேனிஷ்-ஹல்லே மிசியோனால் சம்பளம் பெற்று வந்ததுபோல், அதற்கு வெளியே இங்கிலீஷ் சர்க்காரில் வேலைசெய்த லுத்தரன் ஐயர்மார் கிறிஸ்துமார்க்க அறிவு விர்த்தி சங்கத்தார் (Society for Promoting Christian Knowledge) இடத்தில் சம்பளம் பெற்றார்கள். 1699-ம் வருஷத்தில் ஏற்பட்ட இந்தச் சங்கம் புறமதஸ்தரைத் திருப்புவதற்கு ஏற்பட்டதல்ல. புத்தகங்களைப் பிரசுரித்து, பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து நடத்துவதால் கிறிஸ்துமார்க்க அறிவை விர்த்தி செய்வதே இதன் நோக்கம். ஆயினும், தரங்கை மிசியோன் ஏற்பட்ட காலத்திலிருந்த அவசியத்தை முன்னிட்டு இச்சங்கத்தார் நமது ஐயர்மாரைக்கொண்டு தென்னிந்தியாவில் ஏறக்குறைய நூறு வருஷக்காலம் மிசியோன் வேலை செய்யலானார்கள். இவர்கள் தரங்கை கஸ்பாவில் வேலைசெய்த ஐயர்மாருக்கும் செய்த உதவி கொஞ்சமானதல்ல. அப்படியே தரங்கைக்கு வெளியே உழைத்த கி. அ. வி. சங்கத்தின் ஐயர்மாருக்கு டேனிஷ்-ஹல்லே மிசியோன் உபகாரிகள் செய்த உதவிகளும் அநேகம்.

கி. அ. வி. சங்கத்தாரோ, முன்போல் ஜெர்மனியாவினின்று லுத்தரன் குருமார் வராமையால் சபைகள் நலிவடைவதைக் கண்டு, தங்கள் ஆதரவிலிருந்த சபைகளை அங்கிலிக்கானராகிய சுவிசேஷ பிரபல்லிய சங்கத்தாருக்கு ஒப்புவிக்க, தரங்கைச் சபை ஒன்றுமாத்திரம் லுத்தரன் சபையாய்த் தனித்திருந்தது. இதுவும் அந்நிய சபைக்குட்படும் ஆபத்து வருமுன் தெய்வானுக்கிரகத்தால் ஸ்தாபனமாயேற்பட்ட லைப்சிக் மிசியோன் சங்கத்தார் அதை ஒப்புக்கொண்டார்கள். அவர்கள் தரங்கையில் ஆரம்பித்த வேலை தெய்வாசீர்வாதம் பெற்றதால், முன்போல் தமிழ்நாடெங்கும் லுத்தரன் சபைகள் ஏற்பட்டு வளர்ந்தோங்கி வருகின்றன.

இதனால் தரங்கை மிசியோன் சரித்திரம் புராதன சரித்திரம் நூதன சரித்திரம் என இருபங்காம்.

I. டேனிஷ்-ஹல்லே மிசியோன் சரித்திரமாகிய புராதன சரித்திரம் (1706—1840) மூன்று காலப்பிரிவுகளாம்:

௧. ஆரம்பகாலம்: முதற் குருமார் கரையிறங்கினது முதல் கிரீண்ட்லரையர் மரணமட்டும் (1706—1720).
௨. அபிவிர்த்திகாலம்: கிரீண்ட்லர் ஐயர் மரணமுதல் முதலாம் சதாப்த உற்சவமட்டும் (1720—1806).
௩. நலிவுகாலம்: முதலாம் சதாப்த உற்சவ முதல் லைப்சிக் சுவிசேஷ லுத்தரன் மிசியோனின் முதல் குரு கரையிறங்கினது மட்டும் (1806—1840).

II. லைப்சிக் சுவிசேஷ லுத்தரன் மிசியோன் சரித்திரமாகிய நூதன சரித்திரம் (1840—1905).

இதோ, நான் உலகத்தின் முடிவுமட்டாக சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன் என்ற திருநாதர் மொழி பொய்யாமொழி என்பதை நாம் இச்சரித்திரத்தால் கண்டு, தரங்கை மிசியோனின் இரண்டாம் சதாப்த மகோற்சவத்தைக் கர்த்தருக்குள் அக்களிப்பாய்க் கொண்டாடி, அவரது திருநாமத்தை ஸ்தோத்திரிக்க அவரே நமக்குக் கிருபை செய்வாராக.

---

கவனிப்பு. இதில் உள்ள ஐயர்மார் நாமங்கள் அநேகமாய்க் கர்மானிய உச்சரிப்பின்படி தமிழில் எழுதப்பட்டிருந்தும், இங்கிலீஷ் லாக்காவில் உழைத்த பின்வரும் ஐயர்மார் நாமங்களைப் பழைய கிறிஸ்தவர்களின் நாவுக்கிசைந்த உச்சரிப்பின்படி எழுதலானோம். திருஷ்டாந்தமாக சூல்ச்சே ஐயரை சூல்ச்சையர் என்றும், பப்ரீசியுஸ் ஐயரை பாவரீசையர் என்றும், யேனிக்கே ஐயரை ஜேனிக்கே ஐயரென்றும் எழுதியிருக்கிறது.



# I.

# தரங்கை மிசியோன் புராதன சரித்திரம் (1706—1840.)

## I. ஆரம்பகாலம் (1706—1720.)

செல்வமிகுந்த இத்தேசத்தில் வியாபாரம் செய்வதனால் பொருள் சம்பாதிக்க வேண்டுமென்கிற முக்கிய நோக்கத்தோடு பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் போர்த்துகீஸ்காரர், டச்சுக்காரர், டேனிஷ்காரர், பிரெஞ்சுக்காரர், இங்கிலீஷ்காரராகிய நாலு ஜாதியார் இங்கே வந்து, பல நகரங்களிலும் வியாபார ஸ்தலங்களையுண்டுபண்ணி, காணியாட்சிக்காரரானார்கள். (ரோமானித்தாராகிய போர்த்துகீஸ்காரரைத் தவிர வேறெந்த ஜாதியாரும் இத்தேசத்து அஞ்ஞானிகளைக் கிறிஸ்துமார்க்கத்துக்குக் கொண்டுவர முயற்சி செய்ததில்லை).

The Danes.

இவர்களில் டேனிஷ்காரர். 1620-ம் ௵ தஞ்சாவூர் அரசனிடத்தில் உத்தரவு பெற்றுத் தரங்கைக் கோட்டையைக் கட்டி வியாபாரம் நடத்தி அதிலும் அதின் சுற்றுக்கிராமங்களிலும் ஆளுகை செலுத்தி வந்தார்கள். சுவிசேஷ லுத்தரன் சபையாராகிய அவர்கள் ஆரம்பத்தில் தான்ஸ்போர்க் என்ற உட்கோட்டையிலும், 1701-ம் ௵ முதல் சீயோன் தேவாலயத்திலும் மெய்த்தெய்வமாகிய பராபரனுக்கு ஆராதனை செய்து வந்தும், அவரை அறியாத அஞ்ஞானிகளுக்குள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் அவர்களைக் குணப்படுத்தித் திருச்சபையிற் சேர்க்கவும் யாதொரு விசேஷித்த முயற்சியும் செய்யவில்லை.

Frederick IV.

ஆயினும், எல்லாரும் இரட்சிக்கப்பட்டுச் சத்தியத்தின் அறிவுக்கு வரச் சித்தமுள்ளவராயிருக்கிற பராபரன் இத்தேசத்தாருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதற்கான வழியை நாலாம் பிரதரிக் என்ற டேனிஷ் அரசரைக்கொண்டு திறந்தருளினார். இவ்வரசர் சிம்மாசனமேறுமுன்னமேயே அஞ்

ஞானிகளின் மனந்திரும்புதலைக் குறித்த கவலையைக் கர்த்தர் அவர் மனதில் உண்டுபண்ணியிருந்தார். அவர் மகுடாபிஷேகம் பெற்ற "நாள் முதல் (1699) ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்காவிலும் தமது இராச்சியத்தைச் சேர்ந்த அஞ்ஞானிகளுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கச் செய்வது தமது இராசரீகக் கடமை என்று எண்ணினார். அதற்காகத் தமது அரண்மனை குருவாகிய லித்கன்ஸ் (Lütkens) சாஸ்திரியாரை அழைப்பித்துச் சுவிசேஷக வேலைக்குத் தகுந்த குருக்களைத் தெரிந்து அழைத்துவரக் கட்டளையிட்டார். அரண்மனை குரு தென்மார்க்கு தேசத்தில் தகுந்தவர்களைக் கண்டுபிடிக்கக் கூடாததால் தன் சொந்த தேசமாகிய கர்மானியாவிலிருந்து குருக்களை வரவழைக்கத் தீர்த்து, பெர்லீன் நகரத்திலுள்ள சில குருக்களுக்கு நிருபம் எழுதி அவர்கள் உதவியைத் தேடினார். அவர்கள் ஏவுதலால் பிரதரிக்வேர்தர் (Frederic-werder) பாடசாலைத் தலைவராகிய லாங்கே (Lange) சாஸ்திரியார் தமது முந்தின மாணாக்கராகிய பர்த்தொலொமேயு சீகன்பால்கு என்பவரை மிஷியோன் வேலைக்குத் தகுந்தவரென்று சிபாரிசுபண்ணினார். அக்காலத்தில் பெர்லீன் நகரிக்குச் சமீபமான ஒரு இடத்தில் ஒரு குருவுக்குப் பதிலாய்ப் பிரசங்க ஊழியஞ் செய்துகொண்டிருந்த சீகன்பால்கு தமது அழைப்பை அறிந்தபோது அதை உடனே ஒப்புக்கொள்ளாமல், கர்த்தருடைய சித்தத்தை அறியும்படி செபத்தில் தரித்திருந்து, கடைசியாகத் தமது உள்ளத்தில் இது தேவ அழைப்புதான் என்று உணர்ந்து அமர்ந்தார். 1705-ம் ௵ அக்டோபர் ௴ 1-ம் ௳ பெர்லீன் நகரக் குருக்களின் கூட்டத்தில் சீகன்பால்கும், பிளீச்சௌ (Heinrich Plütschau) என்ற மற்றொருவரும்: தேவநாமத்தை முன்னிட்டு அஞ்ஞானிகளிடத்திற் போவோம்; கர்த்தர் அஞ்ஞானிகளுக்குள் எங்களுக்கு ஒரு ஆத்துமாவையாகிலுந் தந்தால், அதையே எங்கள் யாத்திரைக்குப் போதுமான பலனாக எண்ணுவோம் என்றார்கள். அவர்கள் யாத்திரையின் இலக்கு பலமுறையும் மாற்றப்பட்டது. துவக்கத்தில் டேனிஷ் இராசா அவர்களை மேற்கு இந்திய தீவுகள் என்னும் அமெரிக்கா தீவுகளுக்கும், கினியா (Guinea) என்ற ஆபிரிக்க நாட்டிற்கும், கடைசியில் தரங்கன்பாடிக்கும் அனுப்புவதாக மாறி மாறி உத்தரவு பண்ணினார்."*

* சீகன்பால்கு கிரேஷ்டர் ஜீவியசரித்திரம் 8-ம் பக்கம்.



B. Ziegenbalg.


சிலுவையின் வசனத்தைத் தமிழ் நாட்டாருக்குப் பிரசங்கிப்பதற்கு ஏற்பட்ட பர்த்தொலொமேயு சீகன்பால்கென்பவர் சிறுவமுதலே அந்த வசனத்தைக் கற்று, சிறுவமுதலே சிலுவைப் பள்ளிக்கூடத்தில் பண்படுத்தப்பட்டவராயிருந்தார். அவர் 1683-ம் ௵ ஜூன் ௴ 24 ௳ சக்சோனியா நாட்டிலுள்ள புல்ஸ்நித்ஸ் (Pulsnitz) என்ற சிற்றூரில் பிறந்தார். அவருடைய தாயாகிய கத்தரீனாள் சாகும்போது தன் பிள்ளைகளைத் தன்னண்டையழைத்து: என் அருமைப் பிள்ளைகளே, நான் உங்களுக்காக மகாப்பெரிய திரவியம் சேர்த்துவைத்திருக்கிறேன், அதை என் வேதபுத்தகத்திலே தேடுங்கள், அங்கே அதைக் கண்டடைவீர்கள், அதன் ஒவ்வொரு ஏட்டையும் என் கண்ணீரால் நனைத்திருக்கிறேன் என்றாளாம். இதை அந்தப் பிள்ளைகள் ஒருபோதும் மறந்து கடந்ததில்லை. சீகன்பால்கு 6 வயது பிள்ளையாயிருக்கையில் புல்ஸ்நித்ஸ் ஊரில் தீப்பற்றி, அவர் வீடும் வெந்துபோகவே, வியாதியாயிருந்த அவர் தகப்பனாரை அவர் ஏற்கனவே ஆயத்தப்படுத்திவைத்திருந்த சவப்பெட்டியில் வைத்துக் கண்டத்தெருவுக்குக் கொண்டுபோனார்கள். அதிலே அவர் மரித்துப் பாக்கியமடைந்தார். பெற்றோர் மரித்தபின் பர்த்தொலொமேயுவின் படிப்பு வளர்ப்புக்காக அவருடைய மூத்த சகோதரி மிகவுங் கவலைப்பட்டு, அவரைக் கர்த்தருடைய வழிகளில் நடத்திவந்தாள். அவர் சிறுபோதே கர்த்தரிடத்தில் ஞானவரங்களைத் தேடியடைந்ததுமன்றி, ஒரு நல்ல சிநேகிதனின் தோழமையால் ஞானஜீவனில் தேர்ச்சி பெறலானார். மேலும் அவர் வாலிபனாயிருக்கையில் கர்த்தர் அவருக்குச் சிலகாலம் தமது முகத்தை மறைத்து, அவர் மாமிசத்தில் ஒரு முள்ளையும் கொடுத்ததால் அவர் 9 மாசக்காலமாய் மிகவும் வேதனைப்பட்டார். ஆயினும் தேவகிருபையின் சூரியன் அவர் மேல் திரும்பவும் உதித்ததால் அவர் பலமடைந்து, தம்மைக் கர்த்தருக்கு முழுவதும் தத்தம்பண்ணக் கூடியவரானார். அவர் தமது சரீரத்தைப் பலப்படுத்துவதோடுகூடக் கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் ஒரு சொற்ப வேலையாகிலும் செய்யமனதாய் பிராங்கே சாஸ்திரியார் யோசனைப்படி முந்த மெர்செபுர்கு (Merseburg) என்ற ஊரிலும், பிறகு எர்புர்த்து (Erfurt) பட்டணத்திலும் உபாத்திமை வேலை பார்த்தார். அப்பால் அவர் 1703 ௵ ஹல்லே சர்வகலாசாலையில் பிர

வேசித்து, பிராங்கே சாஸ்திரியாரிடத்தில் வேதசாஸ்திரங் கற்றுவருகையில் அவர் நோயினால் வருந்தவும் தமது படிப்பை நிறுத்தவும் நேரிட்டது. அவர் சர்வகலாசாலை ஒழுங்கின்படியே வேதசாஸ்திரம் படிக்கக் கூடாமற் போனபோதிலும், 1704-5ம் வருஷங்களில் பலவிடங்களிலும் பல குருக்களுக்குப் பதிலாய்ப் பிரசங்கித்து, பக்திமுயற்சியில் அதிகரித்து, அனேக உபத்திரவங்களைச் சகித்துக்கொண்டார். பெர்லினின் பள்ளிக்கூடத்தில் தேறின மாணாக்கராகி, தம் தேசத்தில் மிஷியோனூழியத்திற்குப் பக்குவப்பட்டவராயிருந்தார். மேற்சொல்லியபடி மிஷியோனூழியத்திற்கு அழைக்கப்பட்டபொழுது அவரும் அவரது சிநேகிதராகிய ஹென்றிக் பிளீச்சௌ ஐயரும் இந்தியாவுக்குப் போவதற்கு உடன்பட்டார்கள். தெண்மார்க்கு அரசாட்சி மிஷியோனுக்கு வேண்டிய பொருளையும், ஹல்லே நகரம் பொருளோடு கூட மிஷியோனுக்கு வேண்டிய ஆட்களையும் ஆலோசனையையும் கொடுத்ததினால் இந்த மிஷியோன் சரித்திரக்காரரால் "டேனிஷ்-ஹல்லே மிஷியோன்" என்னப்பட்டது.

இந்த மிஷியோனின் பிரதம குருமாராகிய மேற்கூறிய இவ்விருவரும் 1705-ம் ௵ அக்டோபர் ௴ தெண்மார்க்குத் தேசத்தின் இராஜதானியாகிய கோப்பனுகன் நகரிக்கு வந்து, லுத்தரன் திருச்சபையின் மெய்விசுவாச அறிக்கைக்கு ஒத்தபடி சுவிசேஷம் பிரசங்கிக்க வாக்களித்து, குருப்பட்டம் பெற்றார்கள். அங்கிருந்த அநேகர் அவர்கள் தெரிந்துகொண்ட மிஷியோன் ஊழிய விஷயத்தில் அவர்களை வெகுவாக அதைரியப்படுத்தியும் அவர்கள் மனந்தளராமல் தங்களைத் திரு ஊழியத்திற்கு அழைத்த கர்த்தரை நம்பி, இராஜ விஞ்ஞாபனம் பெற்று, நொவம்பர் ௴ 19 உ சோபியா ஹெட்விக் என்ற கப்பலில் ஏறினார்கள்.

அடுத்த 1706-ம் ௵ ஜூலை ௴ 9-ம் உ கர்த்தர் அவர்களைச் சௌக்கியயாத்திரையாய்த் தரங்கன்பாடியில் கொண்டுவந்து சேர்த்தார். நாம் வருஷந்தோறும் விசேஷித்த சந்தோஷத்தோடு நினைவுகூருகிற அந்த நாள் அந்த ஐயர்மாருக்கு மிகுந்த சந்தடியான நாளாயிருந்தது. கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறவர்களாகவும், ஏழை அஞ்ஞானிகளுக்குப் பரிதபிக்கிறவர்களாயும் கரையிறங்கின அவர்களைத் தரங்கையிலிருந்த ஐரோப்பி

9th July 1706.



BARTHOLOMAEUS ZIEGENBALG
சீகன்பால்கு சிரேஷ்டர்.

(7-ம் பக்கம் பார்க்க)

யரில் ஒருவரும் பட்சமாய் ஏற்றுக்கொள்ளவில்லை. இங்கிருந்த டேனிஷ் அதிகாரிகளும் வியாபாரிகளும், அவர்களைச் சத்துருக்களாகப் பாவித்ததுமன்றி, அவர்கள் கொண்டுவந்த இராஜ கட்டளையையும் அவமதித்துத் தள்ளினார்கள். டென்மார்க்கரசர் தரங்கையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் ஆளுகைசெலுத்திவந்த வர்த்தகக் கம்பேனியாரின் தலைவர்களோடு பேசாமலும், அவர்களுடைய அனுமதி பெறாமலும் இந்தக் குருமாரை அனுப்பினதினால், அவர்களை விரோதிக்கவும் பிற்காலத்தில் அவர்கள் வேலைகளுக்கு இடையூறு செய்யவும் ஏதுவாயிற்று. நாள் முழுவதும் "அண்டச் சுவருமில்லை, ஒண்ட நிழலுமில்லை" என்பதுபோல் தவித்துக்கொண்டிருந்த அவர்களைச் சாயங்காலத்தில் அத்துருப் (Attrup) என்ற ஒரு துரை தமது மாமன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய் அவர்களுக்கு விடுதி கொடுத்தார்.

பிறகு அவர்கள் (மேற்குக்கோத்தள வீதியில்) குடிக்கூலிக்கு ஒரு வீடு பிடித்து, அதில் வாசஞ்செய்து, முந்த போர்த்துகீஸ் பாஷையையும் பிறகு தமிழ்ப் பாஷையையும் படிக்கத் தொடங்கினார்கள். இதற்காக அவர்கள் செப்தெம்பர் மீ 3 உ தங்கள் வீட்டிலே எழுபது வயதான ஒரு விருத்தாப்பியத் தமிழ் வாத்தியை அவன் பள்ளிக்கூடத்தோடு ஏற்றுக்கொண்டு, பிள்ளைகளோடு பிள்ளைகளாய்த் தரையில் உட்கார்ந்து, விரலினால் மணலில் எழுதி, தமிழ் அட்சரங்களைக் கற்றார்கள்.

பாஷை கற்பதில் அவர்களுக்கு முக்கிய உதவி புரிந்த மனுஷன் பெயர் ஆலப்பன் (அழகப்பன்?). டேனிஷ் கம்பேனியாரின் துவிபாஷிகராகிய இவருக்குத் தமிழ்ப் பாஷையையன்றி, போர்த்துகீஸ், டேனிஷ், டச்சு, ஜெர்மன் பாஷைகளும் தெரிந்திருந்தது. இந்த ஆலப்பனின் உதவிகிடைத்த அக்டோபர் மீ 12 உ முதல் அவர்களின் பாஷாபிவிர்த்தி அதிகமாயிற்று. சீகன்பால்கு எட்டுமாசக் காலத்திற்குள் தாராளமாய்த் தமிழ்ப்பேசக் கற்றுக்கொண்டார். தற்காலத்தில் இருப்பதுபோல் அக்காலத்தில் ஐரோப்பியருக்கு உதவியான அகராதி, இலக்கணமுதலிய நூல்கள் இல்லாமையால் சீகன்பால்க் ஐயர்தாமே நாளாவிர்த்தியில் அவற்றைப் புனைந்து கொள்ளப் பிரயாசப்பட்டார்.

ஆரம்பமுதல் அவர்களுக்குப் பல விதத்திலும் இடையூறுகள் உண்டாயின. அங்கிருந்த ரோமான் குருமாத்திரமல்ல, உலக மக்களான டேனிஷ் துரைகளும் அவர்களுக்குச் சார்பா

யிருந்த டேனிஷ் குருக்களும் அவர்களைப் பகைத்து அவர்களுக்கு விரோதமாயிருந்தார்கள். ஆயினும் ஐயர்மார் மனந்தளரவில்லை. "இக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை."

இரண்டு போதகமாரும் வெகு சிரத்தையோடு பாஷைகளைக் கற்றுக்கொண்டு வரும்பொழுதே தங்களால் கூடிய அளவாய்ச் சுவிசேஷ வேலையையும் செய்ய முயன்று, 1706-ம் ௵ நொவம்பர் ௴ பொர்த்துகீஸ் பாஷையிலும், 1707-ம் ௵ ஜனுவரி ௴ தமிழ்ப்பாஷையிலும் ஞானோபதேசம் போதிக்க ஆரம்பித்தார்கள். அவர்களிடம் முதல் முதல் போதனை பெற்றவர்கள் ஐரோப்பியர் வீடுகளில் வேலைசெய்த அடிமைகள். இவர்கள் அஞ்ஞானிகளான சுதேசிகளாயினும், ஐரோப்பியரைப் போல் உடையுடுத்து பொர்த்துகீஸ் பாஷை பேசி வந்தார்கள். இவர்களில் ஐந்து பேருக்கு * 1707-ம் வருஷம் மே ௴ 12-ம் ௳ சீயோன கோயிலில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இந்த விசேஷம் அவர்கள் விசுவாசத்தைப் பலப்படுத்தி, அவர்கள் ஊக்கத்தையும் முயற்சியையும் விர்த்திப்பித்தது.

First converts.

இந்தப் புதுக் கிறிஸ்தவர்கள் நிமித்தமாகவும், தங்களிடம் சம்பாஷிக்கவும், உபதேசங்கேட்கவும் அடிக்கடி கூடிவந்த புறமதஸ்தர் நிமித்தமாகவும் கடற்கரைக்குச் சமீபமாக (இப்பொழுதிருக்கிற தட்டாரத்தெருவின் ஓர் அந்தத்தில்?) அவர்கள் ஒரு கோயிலைக்கட்டக் கருதினார்கள். கோயில் கட்டுவதோ சாமானிய விஷயமல்ல. அதற்குப் பொருள்வேண்டும். அந்த ஐயர்மாருக்கோ வருஷவாரிச்சம்பளம் ரூ 300 க்குமேல் வேறு வரும்படி கிடையாது. சீமையிலிருந்து பொருள் உதவி கொண்டுவரக்கூடிய ஒரு கப்பல் இச்சமயம் தரங்கைக்கு வந்தும், அதில் பொருள் உதவியாவது, அவர்களைப் பலப்படுத்துவதற்கான ஒரு கடிதமாவது வந்ததில்லை. ஆகையால் கட்டட வேலையைத் துவக்குவது உசிதமல்லவென்று பலருந் தடுத்தார்கள். தடுத்தும், ஜூன் ௴ 14-ம் ௳ அவர்கள் கர்த்

First chapel.

* இவர்களில் ஒருத்தி மகமதிய ஸ்திரீயாயிருந்தவள். இவள் ஞானஸ்நானம் பெற்றது முதல் 51 வருஷகாலம் கிரமமாய்க் கோயிலுக்கு வந்து, கிறிஸ்துமார்க்கத்துக்கொத்த சன்மார்க்கத்தில் நடந்து, 1758-ம் ௵ நொவம்பர் ௴ கர்த்தருக்குள் பாக்கியமாய் மரித்தாள். அவள் அடக்கத்தின்போது பழைய எருசலேம் கோயிலில் ஐயர்மாரில் ஒருவர் துக்கப் பிரசங்கம் செய்தார்.



தருடைய திரு நாமத்தில் கோயிலுக்கு அஸ்திபாரம் போட்டு, முப்பது கூலியாட்களை வைத்து வேலைசெய்தார்கள். தொடுத்த வேலை முடியப்போகிறதில்லை என்று அநேகர் பரிகாசம் பண்ணினார்கள். ஆயினும், தேவானுக்கிரகத்தால் அவர்கள் தங்கள் சொந்தச் சம்பளத்தில் சேர்த்து வைத்த பணத்தைக் கொண்டும், சிலர் கொடுத்த தர்ம சகாயத்தினாலும் 2 மாசத்தில் வேலை முடிந்தது.

ஆகஸ்டு ௴ 14-ம் ௳ ஐரோப்பியரும் சுதேசிகளுமான சனத்திரள் பார்க்க, ஐயர்மார் கோயிலைப் பிரதிஷ்டைசெய்து அதற்குப் புது எருசலேம் என்று பெயரிட்டார்கள். அச்சமயத்தில் சீகன்பால்கையர்: எருசலேமின் சமாதானத்திற்காக வேண்டுங்கள்; உன்னைச் சிநேகிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக (சங். 122, 6) என்ற சங்கீத வாக்கியத்தின் பேரில் தமிழ்ப் பிரசங்கம் செய்தார். அது முதல் அந்தக் கோயிலிலே ஞாயிறு, புதன், வெள்ளிக்கிழமைகளில் டேனிஷ் முறைமைப்படி ஆராதனை நடந்து வந்தது. கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல, அஞ்ஞானிகளும் ஆராதனைக்கு வந்தார்கள். செப்தெம்பர் ௴ 5-ம் ௳ அந்தக் கோயிலில் முதல்விசையாக ஞானஸ்நானங் கொடுத்துப் பரிசுத்த இராப்போசனம் பரிமாறப்பட்டது. அத்தினத்தில் ஞானஸ்நானம் பெற்ற பேர்களில் முந்தினவன் பெயர் அந்திரேயா. * அவனுடைய அஞ்ஞானப் பெயர் சேப்பெருமாள். அவன் செட்டி ஜாதியான சூத்திரன், வயது 30. இவன் அநேக வருஷக்காலம் சீகன்பால்கையரிடம் வேலைசெய்தான். அவன் மரணமடைந்தது 1731-ம் ௵.

1707-ம் வருஷமுடிவுக்குள் கிறிஸ்தவர்களின் தொகை 40 ஆயிற்று. பணமுட்டால் மிகுந்த சங்கடப்பட்டுக்கொண்டிருந்த ஐயர்மாருக்கு 1708-ம் வருஷ மத்தியில் கப்பலில் பணம் வந்தும், ("கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போவது" போல்) கப்பலிலிருந்து இறக்குகையில் கடலில் விழுந்து போனதால், விரோதிகள் கைகொட்டி நிந்தனை செய்வதற்கேதுவாயிற்று. ஆகிலும் அந்த தேவ ஊழியர் தளரா முயற்சியோடு வேலைசெய்தார்கள். அதே வருஷத்தில் சீகன்பால்கு நாகப்

* ஐயர்மாரின் பிரதம அறிக்கைகளிலும் கடிதங்களிலும் வெகுவாய்ப் பிரஸ்தாபிக்கப்படும் முதலியப்பன் என்ற வாலிபன் கிறிஸ்துமார்க்கத்திற் சேருவான் என்கிற நம்பிக்கையிருந்தும், அவன் ஞானஸ்நானம் பெற்றதாகத் தோன்றுகிறதில்லை. அவனுடைய பெயர் ஞானஸ்நான டாப்பில் இல்லை.

பட்டணத்திற்குப் போய் சுவிசேஷம் பிரசங்கித்தார். வருஷ முடிவில் தரங்கம்பாடியிலிருந்த கிறிஸ்தவர்கள் நூறு. தேவ திருவசனத்தை ஜனங்களுக்கு வாசிக்கக்கொடுப்பது மகா முக்கியமென்றிருந்த சீகன்பால்கு அந்த வருஷம் புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்க்க ஆரம்பித்தார்.

அவர் மத்தேயு சுவிசேஷத்தின் 23-ம் அதிகாரத்தை மொழிபெயர்க்கையில் அதற்கு இடையூறாக அவருக்கு ஒரு பெரிய சங்கடம் நேரிட்டது. நகராதிபதி அவரைக் கைதியாக்கிக் காவலில் போடுவித்தான். இதற்குக் காரணம் ராயப்பனென்ற ஒரு கிறிஸ்தவ அம்பட்டனின் ஏழை விதவைக்காகவும் அவளுடைய 2 பிள்ளைகளுக்காகவும் பரிதபித்து, அவள் வழக்கில் தலையிட்டுச் சிபாரிசு செய்ததே. சீகன்பால்கு அநியாயமாகச் சிறையிலிருக்குங் காலத்தில் பிளிட்சௌ ஐயர் சபையையும் பள்ளிக்கூடங்களையும் கவலையோடு கண்காணித்து வந்தார். துரைகள் செய்துவந்த இடைஞ்சல்கள் கொஞ்சமல்ல. அந்தக் குருவை அஞ்ஞானிகள் சந்திக்காதபடி தடை செய்யப்பட்டது. அவருக்குத் தமிழ்ப் படிப்பிக்கிறவர்களும், அநேக ஏழைக் கிறிஸ்தவர்களும் கோட்டைக்கு வெளியே துரத்தப்பட்டார்கள்.

Z. in prison.

சீகன்பால்கு மனிதரால் கைவிடப்பட்டும், கர்த்தர் அவருக்குத் துணை நின்றதால், அவர் தமது கொடிய சிறையிருப்பைப் பொறுமையாய்ச் சகித்து வந்தார். அவர் காவற்கிடங்கில் வேத மொழிபெயர்ப்பைத் தொடர்ந்து செய்ய வாஞ்சித்தும், அவருக்குக் காகிதமும் மையுங் கிடைத்ததில்லை. அவர் கர்த்தரை நோக்கிச் செபித்துக் கொண்டிருக்கையில், ஜர்மானியரான 2 சத்திகட்டிகள் அவருக்குக் காகிதமும் பென்சிலும் கொடுத்தார்கள். அவர் அப்போது இரண்டு பிரபந்தங்களை எழுதினார். ஒன்று கிறிஸ்தவபோதகரின் நிலைமையையும், மற்றது மெய்க்கிறிஸ்தவர்களின் நிலைமையையும் பற்றியதாம். குற்றமில்லாத அவரைக் குற்றவாளியாக்கும்படி நகராதிபதி வெகுவாய் முயன்றும் சித்திபெறாமல், கடைசியாய் அவரோடு சமாதானமானதால் அவர் 1709-ம் ௵ மார்ச்சு ௴ 26-ம் ௳ விடுதலை பெற்றார்.

அவர் திரும்பிவந்த நாள் யாவருக்கும் சந்தோஷ நாளாயிருந்தும், அதனோடு சோதனைகாலம் முடியவில்லை. ஐயர்மாருக்குக் குறிக்கப்பட்ட இராஜ சம்பளம் அவர்களுக்குக்



கிரமமாய்க் கொடுக்கப்படவில்லை. அவர்கள் தங்கள் செலவுக்காகவும், மிஷியோன் சபை பள்ளிக்கூடங்களின் செலவுக்காகவும் கடன்பட வேண்டியதாயிற்று. ஆயினும், ஜூலை ௴ 20-ம் ௳ கர்த்தர் அவர்களுக்கு ஒத்தாசை அனுப்பி அவர்கள் துக்கத்தைப் பெரிய சந்தோஷமாக மாற்றினார். ஐயர்மார் தாங்கள் இந்தியாவுக்கு வந்தநாள் முதற்கொண்டு எழுதிவந்த நிருபங்கள் ஜர்மானியாவிலும் தென்மார்க்கிலும் இங்கிலாந்திலும் உள்ள அநேக உபகாரிகளின் மனதை அசையப் பண்ணினதால், அவர்கள் 3000 டாலர் (ஏ-கு-4500 ரூ) சேர்த்தனுப்பினார்கள். இராணியார், இராஜகுமாரி, பிராங்கே சாஸ்திரியார் மற்றும் பெரியோர்கள் எழுதின ஆறுதலான கடிதங்களும் முதல் விசையாக வந்து சேர்ந்தன. கிரீண்ட்லர், போவிங், யோர்தான் என்ற மூன்று புதிய போதகர்களும் வந்து சேர்ந்தார்கள். இவர்களில் கிரீண்ட்லர் ஐயர் சீகன்பால்கையருக்கு வலது கை போல் இருந்து, மிஷியோனுக்குப் பெரிய ஆசீர்வாதமானார். அவர் முதல் விசையாகச் சுதேச கிறிஸ்தவர்களைக் கண்டபோது துன்பப்பட்டிருந்த அவர்களுக்காக மனமுருகி, அனுதாப ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். இவரால் மிஷியோன் வேலைக்கு எவ்வளவு அநுகூலமுண்டாயிருந்ததோ, அவ்வளவாக போவிங் என்ற ஐயரால் பிரதிகூலமுண்டாயிருந்தது.

Gruendler.

சீமையிலிருந்துவந்த பணத்தினால் ஐயர்மார் தாங்கள் பட்டிருந்த கடனையெல்லாம் அடைத்தபின் கோட்டை அரசர்வீதியில் ஒருவீட்டை 1000 டாலருக்கும் (23 ஜூலை 1709), பிறையாற்றில் ஒரு பெரிய தோட்டத்தை 50 டாலருக்கும் (நொவம்பர் 1709) வாங்கினார்கள். நமது கிரேஷ்டர் குடியிருப்பதும் ஆலோசனைச் சங்கத்தார் கூடிவருவதுமான இடமே அந்த வீடு. பெதலகேம் கோயில் கட்டியிருக்கும் இடமே அந்தத் தோட்டம். அதிலே ஒரு தர்மப் பள்ளிக்கூடம் கட்ட வேண்டுமென்கிற நோக்கமாய் அதை வாங்கினதாக சீகன்பால்கையர் ஒரு நிருபத்தில் எழுதியிருக்கிறார். இதுகாறும் வாடகைவீட்டிலே குடியிருந்த ஐயர்மார் இதுமுதல் புதிதாய் வாங்கின மிஷியோன்வீட்டிற் குடியிருந்து பள்ளிக்கூடங்களையும் அங்கே வைத்து நடத்தினார்கள். இக்கட்டடத்திற்கு வந்தபின் ஆதரிப்புச் சாலையிலிருந்த பிள்ளைகள் 44. தமிழ்ப்பள்ளிக்கூடத்தில் 3 கிறிஸ்தவ உபாத்திமாரிடம் 25 பிள்ளைகள்

படித்தார்கள். பொர்த்துகீஸ் பள்ளிக்கூடத்தில் 2 உபாத்திமாரிடம் 16 பிள்ளைகள் படித்தார்கள். சிலபிள்ளைகள் தையல் வேலை கற்றுக்கொண்டார்கள். அச்சுப்புத்தகங்கள் இல்லாமையால், கோயிலுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் வேண்டிய நூல்களைப் பிரதி செய்வதற்கு 7 கணக்கப்பிள்ளைகள் நியமிக்கப் பட்டிருந்தார்கள். *

1709-ம் ௵ அக்டோபர் ௴ 16 ௳ யில் கல்வியிற் சிறந்த கணபதி உபாத்தியார் என்ற உயர்குல வாலிபனொருவன் கிறிஸ்தியான் பிரதரிக்கென்ற பெயருள்ளவனாய் ஞானஸ்நானம் பெற்றான். அவனுக்குத் தென்மார்க்கரசராகிய 4-ம் பிரதரிக் ஞானத்தகப்பனாயிருக்க ஒப்பினார். அவன் சீகன்பால்க்கையருக்குத் தமிழ்ப்படிப்பித்த தன் தகப்பனைப் பார்க்கிலும் சமர்த்தனாயிருந்து, ஞானஸ்நானத்திற்கு முன்னமேயே ஞானோபதேசத்தின் ஐந்து அதிகியாயங்களைச் செய்யுளாக்கி மாணாக்கருக்குப் போதித்துவந்தான். ஞானஸ்நானம் பெற்றபின்னும் சிறந்த சுவிசேஷகனும், நல்ல உபாத்தியுமாயிருந்தான். ஆயினும் அடுத்தவருஷத்தில் ரோமான்சபையில் சேர்ந்து, பிறகு அஞ்ஞானத்தில் விழுந்து பூசாரியாகி இறந்து போனான். இது ஐயர்மாருக்கு வெகுசஞ்சலத்தை உண்டுபண்ணும் சங்கதியாயிற்று.

Z. in Madras.

அடுத்தவருஷம் ஜனுவரி ௴ 7 ௳ சீகன்பால்கு முதல் விசை சென்னைக்குப் போனார். அவர் அங்கே 3 வாரம்தங்கி, சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, கவர்னர் அவரையும் இங்குள்ளான அனேகரும் மதிக்கப்பெற்றுத் தரங்கைக்குத்திரும்பினார்.

Tamil N. T.

1711-ம் ௵ பல காரணங்களால் தரங்கை மிசியோன் சரித்திரத்தில் ஒரு விசேஷித்த வருஷமாயிற்று. அந்த வருஷம் மார்ச்சு ௴ 31 ௳ சீகன்பால்கையர் பராபரனைத் தோத்திரித்து: இன்று புதிய ஏற்பாட்டாகமங்களையெல்லாம் மொழிபெயர்த்து முடித்தேன். இதுவே இந்துதேசத்தின் சகல திரவியங்களிலும் விலையேறப்பெற்றதெனக் கூறினார். மேலும் அவ்வருஷம் பிளிச்சௌ ஐயர் சீமைக்குத் திரும்பிப்போய், இங்கு நடக்கும் மிசியோன் வேலையையும், அதற்கிருக்கும் இடைஞ்

* Letter of Ziegenbalg, dated Oct. 19, 1709.



சல்களையும் அங்குள்ள பெரியோருக்குத் தெரிவித்தார். அவர் மறுபடியும் இந்தியாவுக்கு வராமல் சீமையிலேயே தங்கியிருந்தும், மிசியோனுக்கு உபகாரியாகவே யிருந்தார். அவரோடே சீமைக்குத் திரும்பிப்போன பேவிங் ஐயரோ இங்குள்ள ஐயர்மாருக்கு எப்பொழுதும் விரோதியாயிருந்தார். அன்றியும், அதேவருஷத்தில் 4-ம் பிரதரிக் அரசர், தமதிராச்சியம் பெருவாரிக் காய்ச்சல், யுத்தம், பஞ்சம் என்றவற்றால் மெத்தசங்கட்டப்பட்டும், தரங்கை மிசியோனுக்கு அரண்மனைப் பொக்கிஷத்திலிருந்து வருஷவாரி 2000 டாலர் கொடுத்துவரும்படி தேவநாமத்தில் மாறாத நித்திய கட்டளையாக ஆக்கியாபித்தார். * அப்பொழுது மரணப்படுக்கையிலிருந்த லிட்கென்ஸ் சாஸ்திரியார் அதைக் கேள்விப்பட்டு: இப்பொழுது சந்தோஷமாக மரிப்பேன்; கர்த்தர் இராசாவை ஆசீர்வதிப்பாராக என்று சொல்லி, கொஞ்சக்காலத்திற்குப் பின் மரித்தார். பிரதரிக் அரசரின் கட்டளைப்படி நாளதுவரையில் நடந்தேறி வருகிறது.

பிளிச்சௌ ஐயர் சீமைக்குப் புறப்பட்ட அதே சமயத்தில் சீகன்பால்க் இரண்டாம் முறை சென்னைக்குப் போனார் அவர் அங்கிருந்து திருப்பதிக்குப்போய்ச் சுவிசேஷம் பிரசங்கிக்க மனதாய் ஒரு சத்திரத்தில் தங்கியிருக்கையில், அவரைக் கொலைபுரியச் சதியோசனை செய்திருந்த சில பிராமணர்களின் கைக்குத் தெய்வகதியாய் தாவீதென்ற பிள்ளையாண்டான் யோசனையினாலே தப்பி, 1712-ம் ௵ ஜனுவரி ௴ தரங்கைக்குத் திரும்பி வந்தார். * *

* வால்தர் ஐயர் திருச்சபை சரித்திரம் 288-ம் பக்கம் பார்க்க.

* * அந்த வருஷத்தில் கிறிஸ்தவர்களின் தொகை 200. 1713-ம் ௵ எப்பிரில் ௴ சீகன்பால்கு எழுதிய ஒரு நிருபத்தின்படி அப்பொழுது மிசியோன் சம்பந்தமாயிருந்த பள்ளிக்கூடங்கள் 5:—

1. 2 தமிழ் ஆண்பாடசாலை. ஒவ்வொன்றுக்கு ஒரு உபாத்தியார். ஒன்றில் பெரியபிள்ளைகள் 11 பேரும், மற்றதில் சிறுபிள்ளைகள் 21 பேரும் படித்தார்கள்.

3. தமிழ் பெண்பாடசாலை: இதில் 11 பெண்கள் ஒரு உபாத்தினியிடம் படித்தார்கள்.

4. பொர்த்துகீஸ் பாடசாலை: இதில் ஆண் பெண் இருவருமாக 21 பிள்ளைகள் படித்தார்கள்.

5. டேனிஷ் பாடசாலை: இதிலும் ஆண் பெண் இருவருமாக 14 பிள்ளைகள் படித்தார்கள். இந்த 78 பிள்ளைகளில் 56 பேர் ஆதரிப்புச்

இங்கிலாந்து தேசத்தில் சீகன்பால்கையரின் நிருபங்களைப் பார்வையிட்ட பக்திமான்களும், முக்கியமாய்க் கிறிஸ்து மார்க்க அபிவிர்த்தி சங்கத்தாரும் (S. P. C. K.) தரங்கை மிசியோன் அபிவிர்த்தியைக் கருதி ஒரு அச்சியந்திரத்தையும், 100 ரீம் காகிதம், 213 பொர்த்துகீஸ் புதிய ஏற்பாட்டுப் பிரதிகள், இன்னும் பல பிரயோசனமான புத்தகங்கள் சாமான்களையும் அனுப்பினார்கள்; * இவை அநேக அபாயங்களுக்குத் தப்பி 1712-ம் ௵ தரங்கைவந்து சேர்ந்தன. அக்காலமளவும் வார்ப்பிக்கப் பட்டிராத தமிழ் எழுத்துக்கள் முதல்முதல் ஹல்லேபட்டணத்தில் வார்ப்பிக்கப் பட்டன. அந்த எழுத்துக்களைக்கொண்டு பரிட்சார்த்தமாக அச்சிடப்பட்டமுதல் விஷயம் விசுவாசப்பிரமாணம். அடுத்த வருஷம் பெர்லீன், ஆத்லேர் என்ற துரைமார் அச்செழுத்துக்களோடு தரங்கைக்கு வந்தார்கள். 1714 ௵ புதிய ஏற்பாட்டின் முதற்பங்கும் (அதாவது 4 சுவிசேஷங்களும், அப்போஸ்தலர் நடபடிகளும்) மறுவருஷத்தில் மறுபங்கும் அச்சிட்டு முடிந்தது. முதற் பங்கில் உபயோகித்த எழுத்துக்கள் பெரிதாயிருந்ததால், ஆத்லேர் துரை சிறிய எழுத்துக்களை வார்ப்பித்து அவற்றை 2-ம் பங்கில் உபயோகித்தார். மேலும் அவரே பொறையாற்றில் கடுதாசிப்பட்டடையை ஆரம்பித்து அச்சுக்குவேண்டிய காகிதங்களைச் செய்வித்தார்.

First Printing Press.

மிசியோன்வேலை விர்த்தியானதைக்கண்ட தென்மார்க்கு இராசா அதற்கு அதிகமதிகமாக உதவிபுரிந்ததுமன்றி, அதைக் கவலையோடு பராமரித்து நடத்தி விசாரித்துவரும்படி மிசியோன் கொல்லேகியும் ** என்ற விசாரணைச் சங்கத்தை

Collegium.

சாலையில் வளர்க்கப்பட்டார்கள். காலையில் 7-11 வரையிலும் மாலையில் 2-6 மணிவரையிலும் பள்ளிக்கூடத்தில் பாடங்கள் நடத்தப்பட்டன. வெள்ளிக்கிழமை சாயங்காலங்களில் 6 முதல் 7 வரையில் ஐயர்மாரிடம் உபாத்திமார், உபதேசிமார், கணக்கப்பிள்ளைகள் கூடிவந்து, பிள்ளைகளின் பாடம், நடக்கை முதலியவற்றைக் குறித்துச் சொல்லி, ஐயர்மார் சொல்லும் புத்திமதிகளையும் யோசனையையும் கேட்டுப்போவார்கள்.

* cf. The letter of Ziegenbalg & Gründler dated 23 rd September 1712.

** "Collegium de cursu evangelii promovendo"



யும் 1714-ம் ௵ ஏற்படுத்தினர். அந்த வருஷத்தில் கப்பலில் வந்து சேதப்பட்டுப் போன 2000 டாலருக்குப் பதிலாக இன்னம் 2000 டாலரைத் தமது சொந்தப் பொக்கிஷத்திலிருந்து கொடுத்தார். இராஜ காத்தினின்று மிசியோனுக்கு அநுகூலமான தாக்கீதுகள் தரங்கை நகராதிபதிக்கு வந்தும், காரியாதிகள் அதிகமாய் மாறவில்லை. சீகன்பால்கையர் இராஜ சமுகத்தில் மிசியோன் விஷயங்களை விபரிப்பதற்கென்றும், தமது சுகவிர்த்திக்கென்றும் 1714 ௵ சீமைக்குப் பயணப்பட்டார். இதையறிந்த நகராதிபதி (Hassius) அவரோடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு அவரை வழிவிட்டனுப்பினான். ஐயர் தங்களைவிட்டுப் போகிறதற்காகக் கிறிஸ்தவர்கள் மிகத் துக்கப்பட்டார்கள். கடவுளையடுத்திருக்கும் ஒரு பரிசுத்த புருஷன் தங்கள் நடுவிலிருப்பதனால் தங்களுக்குண்டாகக் கூடிய பயன் அவர் போய்விடுவதால் அற்றுப்போகுமேயென்று அஞ்ஞானிகளும் அங்கலாய்த்தார்கள். அக்டோபர் ௴ 31 ௳ யில் கப்பலேறின ஐயர் மறுவருஷம் ஜூன் ௴ 1 ௳ நோர்வே தேசம் போய்ச்சேர்ந்தார். அவர், யுத்தமுகாந்திரமாய் ஸ்திரால்சுண்ட் (Stralsund) பட்டணத்திற்குப் போயிருந்த தென்மார்க்கரசரை அங்கே கண்டு, அவருக்கு மிசியோன் காரியாதிகளைத் தெரிவித்து, இராஜதயவைப் பெற்றவராய் கோப்பனேகன் நகரிக்குச் சென்று, அங்கே மிசியோன் விசாரணைச் சங்கத்தாரையும், டேனிஷ் வியாபாரக் கூட்டத் தலைவர்களையும் சந்தித்து, அவர்களுக்கு முகமுகமாய்த் தரங்கம்பாடிச் சங்கதிகளைச் சொல்லி, மிசியோனுக்கு அநுகூலமான உத்தரவுகளைப் பெற்றார். பிறகு தமது பிறந்ததேசமாகிய ஜர்மானியாவுக்குப் போய், பிராங்கே சாஸ்திரியார் முதலிய உபகாரிகளைக் கண்டு களிகூர்ந்தார். அங்கே அவர் முன் தம்மிடம் கல்விகற்ற பெண்களில் ஒருத்தியைத் திருவிவாகஞ் செய்துகொண்டார். இச்சமயத்தில் அவருக்குச் சிரேஷ்டர் (Provost) என்கிற பட்டமும் கிடைத்தது.

Z. in Norway.

பிறகு அவர் இங்கிலாந்துக்குப் போய், முதலாம் ஜார்ஜ் என்னும் அரசனையும், கிறிஸ்துமார்க்க அபிவிர்த்தி சங்கத்தாரையும், அநேக கனவான்கள் தனவான்களையும் கண்டுபேசி, அவர்களால் மிகுந்த மரியாதையையும் அதிகப் பொருளுதவியையும் பெற்று, 1716-ம் ௵ மார்ச்சு ௴ கப்பலேறி, ஆகஸ்டு மாசமத்தியில் சென்னைக்கும், அம்மாசக் கடைசியில் தரங்-

கைக்கும் வந்து சேர்ந்தார். அவர் முதல் முறை தரங்கைக்கு வந்தபோது அவரை அசட்டை செய்து துன்பப்படுத்தின அ

Z's return via London.

போச, இந்த இரண்டாம் முறையில் எல்லாரும் அவரைக் கனப்படுத்தி ஏற்றுக்கொண்டார்கள். ஹாசியுஸ் என்ற நகராதிபதி அதே வருஷத்தில் சீமைக்கு அழைக்கப்பட்டான். அவனுக்குப் பதிலாக வந்த புருன் (Brun) துரையும் சீகன்பால்கும் நல்ல சிநேகிதராயிருந்தார்கள்.

சீகன்பால்கு திரும்பி வந்தபின் அவரும் கிரீண்ட்லர் ஐயரும் கலந்துபேசி, 1716-ம் ஞு அக்டோபர் மீ 23-ம் வ ஒரு செமினேரிப் பாடசாலையை ஸ்தாபித்து, அதில் மிசியோனுக்கு வேண்டிய உபதேசிமார், உபாத்திமார்களை ஆளாக்க ஏற்பாடு

Seminary.

செய்தார்கள். அதில் ஆரம்பத்திலே படித்தவர்கள் எட்டுப்பேர். அடுத்த வருஷம் கிறிஸ்தவ அறிவு விர்த்தி சங்கத்தரால் கூடலூரிலும் சென்னையிலும் ஸ்தாபிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய உபாத்திமார்களை மேற்கூறிய செமினேரியினின்று சிரேஷ்டர் அனுப்பினார்.

அவர் சீமைக்குப் போயிருந்த காலத்திலே கிரீண்ட்லர் ஐயர் மிசியோன் வீட்டிற்கெதிரேயிருந்த வீட்டையும் தோட்டத்தையும் ஒரு புதுக்கோயில் கட்டும் நோக்கமாய் 850 டாலருக்கு வாங்கியிருந்தார். தரங்கைச் சபை வருஷா வருஷம்

N. Jerusalem church.

பெருகி வந்ததால், முன் கட்டின எருசலேம் கோயில் போதாமை கண்டு, 1717-ம் ஞு பெபுருவரி மீ 9-ம் வயில் நகராதிபதியைக்கொண்டு புதுக்கோயிலுக்கு அஸ்திபாரம் போடப்பட்டது. அச்சமயத்தில் சீகன்பால்க் சிரேஷ்டர்: போடப்பட்ட அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்து என்ற அஸ்திபாரமேயல்லாமல் வேறு அஸ்திபாரத்தை ஒருவனும் போடக்கூடாது (க கொரி. 3, 11) என்ற வாக்கியத்தின்பேரில் பிரசங்கஞ் செய்தார். அதில் நமதிரட்சகர் தமது மூன்று உத்தியோகங்களின்படியேயும் திருச்சபைக்கு அஸ்திபாரமாயிருக்கிறார் என்று பிரஸ்தாபித்து, கூடிவந்த யாவருக்கும் சமயோசிதமான புத்திமதிகளைப் புகன்றார். தெய்வ நாமத்தில் தொடங்கிய இக்கட்டட வேலை யாதொரு இடையூறுமின்றி முடிந்து, 1718-ம் ஞு அக்டோபர் மீ 11-ம் வ் வெகு சிறப்பாய்ப் பிரதிஷ்டையாயிற்று. இதற்கும் முந்தின தெய்வாலயத்தைப்



போல் புது எருசலேம் என்றே பெயரிடப்பட்டது. சீகன்பால்கு பிரதிஷ்டை பிரசங்கம் செய்தார்.

அக்காலத்தில் இங்கிருந்த சபை சிறு சபையாயிருந்தும், இந்தப் பெரிய ஆலயத்தை ஆதிக்குருமார் கட்டி முடித்தது இவ்வூர்ச்சபை தெய்வானுக்கிரகத்தால் ஆல்போல் தழைத்து ஓங்கி வளரும் என்கிற பூரண நம்பிக்கையும் விசுவாசமும் அவர்களுக்கு இருந்தது என்பதற்கு அத்தாட்சியாய் விளங்குகிறது.*

கட்டட வேலை ஆத்துமாக்களைத் திருப்பும் வேலைக்குத் தடையாயிருக்கவில்லை. 1717-ம் ஞு 30 அஞ்ஞானிகளும் அடுத்த வருஷம் 50 பேருக்கதிகமாகவும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

சீகன்பால்கு சிரேஷ்டர் வாய்மொழியாகவும் கடிதமூலமாகவும் சமீபத்திலும் தூரத்திலுள்ள இந்துக்கள் மகமதியர்களுக்குச் செய்த சுவிசேஷ பிரசங்கங்களையும், அவர் பல முறையும் செய்த சுவிசேஷ பயணங்களையும், சத்தியவேத மொழிபெயர்ப்பையன்றி அவர் இயற்றிய நூல்களையும் விபரிக்கப்புகின் இப்புத்தகம் விரிவாகும். அவர் தரங்கையிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் மாத்திரமல்ல, அதற்குத் தூரமான இடங்களிலும் கிறிஸ்துவின் இரட்சணிய போதகம் பிரசித்தமாவதற்கும், தரங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட சபையும் பள்ளிக்கூடங்களும் சீர்பொருந்தித் தேறுவதற்கும் தாம் செய்யக்கூடியதை எல்லாம் செய்தார் என்பது பின்வரும் சரித்திரங்களினால் தெளிவாம்.

அவர் தமிழில் மொழிபெயர்த்தவைகளும், புனைந்தவைகளுமான நூல்களில் விசேஷித்தவை: லுத்தரின் ஞானோபதேசக் குறிப்பிடம், இரட்சிப்பின் ஒழுங்கு,

Z's writings.

வேதசாஸ்திரம், 51 பிரசங்கங்கள் அடங்கிய ௬ பிரசங்க புத்தகங்கள், வேதசரித்

---

* சிலுவை ரூபமான இந்தப் புது எருசலேம் கோயில் மத்தியிலே, துவக்கத்தில் செங்கல் தூண் நிறுத்தியிருந்தது. 1748-ம் ஆண்டில் நடுத்தூணை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக இப்போதிருக்கிறபடியே மேலே மையத்தில் மரக்குண்டு கோத்து, கச்சிதமும் அந்தமுமாய்ச் சமைக்கப்பட்டது. 1819-ம் ஆண்டில் இரண்டாந்தரம் பழுதுபார்க்கப்பட்டது. 1877-ம் ஞு மூன்றாம் முறை பழுதுபார்த்து, முன்னிருந்த பனங்கைகளை எடுத்துப்போட்டு தேக்கமரக் கைகளை உபயோகித்தார்கள்.

திரம், விஞவிடையான திருச்சபைச் சரித்திரம், சோழமண்டலத்தாருக்கு ஒரு நிருபம், வேறு பல நிருபங்கள், சில ஞானப்பாட்டுகளடங்கிய புத்தகம், ஜெபபுத்தகம், கொடுந்தமிழ் அகராதி, செந்தமிழ் அகராதி, தமிழ் இலக்கணம், ஷி ஷி.

அவர் கடைசியாகப் பயணஞ்செய்தது கூடலூருக்கு. அங்கே ஸ்தாபிக்கப் பட்டிருந்த பள்ளிக்கூடங்களை விசாரிக்கும்படி 1718-௵ அவ்வூருக்குப் போனார். போகும் வழியிலே திருக்கடையூர், சீர்காழி, சிதம்பரம் முதலிய ஸ்தலங்களில் தங்கிப் புறமதஸ்தரான திரள் ஜனங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அவர் திரும்பிவந்தபின் ஏழு குடும்பங்கள் அவரிடம் ஞானஸ்நானம்பெற வந்தார்கள். அவ்வருஷத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் தொகை 58. இவர்களில் ஒருவர் முதற் சுதேச குருவான ஆரோன் என்பவர்.

இவ்வாறு மிஷியோன் வேலை அநேக பல துறையிலும் விர்த்தியாகிவந்தும், சீகன்பால்குக்கு மனவேதனையுண்டாக்கும் வேறு பல சங்கதிகள் நடந்தன. தரங்கையிலிருந்த ஐயர்மார் வீடுவாசல்களை வாங்கி, கோயில்கள் பள்ளிக்கூடங்களைக் கட்டி, பணங்காசுகளைச் செலவழித்து வருவது சரியல்லவென்றும், அவர்கள் ஆதி அப்போஸ்தலமாரைப்போல பையும் வட்டுவமுமில்லாமல் ஊரூராய்ச் சென்று பிரசங்கித்துக்கொண்டே இருக்கவேண்டுமென்றும் தென்மார்க்கிலுள்ள உபகாரிகள் அபிப்பிராயப்பட்டு, இரண்டு வருஷக்காலம் செலவுக்கனுப்பாமல் கொடுமையான கடிதங்களால் ஐயர்மாரை மனம் நோகப்பண்ணினார்கள்.

அன்றியும், இங்கிருந்த சில கிறிஸ்தவர்களின் துர்நடக்கையினாலும் வேறு சிலரின் மறுதலிப்பினாலும், சிரேஷ்டருக்குண்டான சஞ்சலமும் கொஞ்சமல்ல. அவர் இரவு பகலாய்க் கண்ணீர்விட்டு, ஜெபித்து வெகு ஊக்கமாய் உழைக்கவேண்டியதாயிற்று. 1718-ம் வருஷத்தின் பிற்பாதியில் அவருக்குண்டான வயிற்றுவலியும் இருமலும் மேற்கூறிய காரணங்களால் அதிகரித்து, அவரைப் படுக்கவைத்துவிட்டன. கொஞ்சம் சுகப்படுவதாகக் கண்டகால், அவர் மிகுந்த பலவீனத்தோடு கர்த்தர் பிறந்த பண்டிகையிலும் வருஷப்பிறப்பிலும் எருசலேம் கோயிலில் கடைசிவிசையாகப் பிரசங்கம் பண்ணினார். பிறகு அவர் சாப்பிட்ட ஔஷதங்களால் பயனுண்டாகாமல் வியாதி அசாத்தியப் பட்டது. தமது மரணகாலம் சமீபிக்கிறதை அவர் கண்டு, 1719-ம் வருஷம் பெப்ருவரி ௴ 10 உ



கிரீண்ட்லர் ஐயருக்கு மிஷியோன் விசாரணையை ஒப்புவித்து, உட்கருத்தான ஜெபத்தோடும் கண்ணீரோடும் பரிசுத்த இராப்போசனத்தை வாங்கினார். பிறகு சபையாரை அழைப்பித்து, அவர்களுக்குக் கரிசனமாகப் புத்திசொன்னார். அவர் எப்படியும் பிழைத்துக்கொள்வார் என்று எல்லாரும் நினைத்தும், கர்த்தருடைய சித்தம் வேறாயிருந்தது. பெப்ருவரி ௴ 23 உ யில் அவர் தமது வழக்கத்தின்படி தமது மனைவியோடு காலைஜெபம் பண்ணினார். 9 மணிக்கெல்லாம் அவருக்கு மரண அவஸ்தை உண்டாயிற்று. அப்போது கிரீண்ட்லர் ஐயரையும் அம்மாளையும் அழைப்பித்து எல்லாரும் அவரோடு ஏகமாய் ஜெபம் செய்தார்கள். சீகன்பால்கு தமது விசுவாசத்திற்குச் சாட்சிகொடுத்து, பிறகு தமது கண்களைக் கையால் மூடிக்கொண்டு: அந்த வெளிச்சம் என்ன. என் கண்களில் சூரியவெளிச்சம் படுகிறதோ என்று வினவினார். அப்புறம் "என்னை மீட்டுத் தாங்கிய" என்று தொடங்கும் ஞானப்பாட்டைக் கின்னரவாசிப்போடு பாடக் கேட்டுக்கொண்டார். பாடியபின் தம்மைப் படுக்கையிலிருந்து நாற்காலியில் வைக்கச் சொல்லி, அதிலேயே அமைதலாய் மரித்தார்.*

Z's death.

* அவர் மரித்த இடம் இப்பொழுது நமது செமினெரி வைத்திருக்கும் தோட்டமாம் (1863-64 வருஷத்து அருணோதயம் 57-ம் பக்கம் பார்க்க). இதற்குச் சுதேசிகளுக்குள் 'நந்தவனம்' என்றும், ஐரோப்பியருக்குள் 'சீகன்பால்கு தோட்டம்' (die Ziegenbalgschen Plätze) என்றும் பெயர்வழங்கும். இது சீகன்பால்கு சிரேஷ்டர் சீமைக்குப்போய் திரும்பியபின் (1716-ம் ௵) தமது சொந்தத்துக்கு வாங்கின அவர் சொத்து. இதில் ஒரு பாகம் ஒரு சுதேசி அவருக்கு இனமாகக் கொடுத்தது. அவர் அரசர் வீதியிலிருக்கும் மிஷியோன் வீட்டிற் குடியிருந்துகொண்டு, நந்தவனத்தில் இருந்த வீட்டைத் தாம் தனித்திருந்து எழுத்துவேலை செய்வதற்கான இடமாக உபயோகித்து வந்தார். உபாத்திமார் உபதேசியாரைக் கூட்டி அவர்களோடு சம்பாஷிப்பதற்கும் இது இடமாயிருந்தது. அவர் வியாதிப்பட்டபின் அவரை இங்கே கொண்டுவந்திருக்கலாம். அவர் மரித்தபின் அவருடைய விதவை தான் மறுவிவாகம் செய்துகொள்ளுமட்டும் இங்கே குடியிருந்ததாகத் தெரியவருகிறது. 1733-ம் வருஷம் இதை மிஷியோனில் விலைக்கு வாங்கிக்கொண்டு, இதைப் பள்ளிக்கூடத் தலமாக்கினார்கள். இதிலுள்ள வீட்டையும் கட்டடங்களையும் விஸ்தாரப்படுத்திய பின் இதிலே முதல்முதல் (1741 ௵ ஆகஸ்டு ௴) குடிபுகுந்த குரு கோலோப்பையர்.

அவர் இத்தேசத்தில் சஞ்சரித்த காலம் கொஞ்சமாயினும், அவர் செய்த வேலை அதிகமும், தெய்வ ஆசீர்வாதம் பெற்றதுமாயிருந்ததென்று பார்க்கிறோம். அவர் சடலத்தைப் புது எருசலேம் கோயில் பீடத்துக்கு முற்புறத்தில் கிரீண்ட்லர் ஐயர் அடக்கம் பண்ணினார்.

அவருக்குப்பின் மிசியோன் விசாரணையை நடத்திவந்த கிரீண்ட்லர் ஐயரும் மிகுந்த சுகவீனப்பட்டார். அவர் சில சமயங்களில் பிரசங்கத்தொட்டியில் நிற்கமாட்டாமல், அதிலே ஒரு நாற்காலி போட்டுக்கொண்டு உட்கார்ந்து பிரசங்கம் செய்துவந்தார். கர்த்தர் தமது சிறு மந்தைக்கு இரங்கி, புது ஐயர்மார் வருமட்டும் தம்மை உயிரோடே வைக்கும்படி அவர் கண்ணீரோடு ஜெபித்தார். இவ்வாறு அவர் தவித்துக்கொண்டிருக்கையில் அவருடைய ஜெபங்களைக் கேட்ட கர்த்தர் மூன்று புதிய ஊழியர்களைச் சீமையிலிருந்து வரப்பண்ணினார். அவர்கள் பெயர்: சூல்ச்சே (Schulze), டால் (Dal), கிஸ்தென்மகர் (Kistenmacher). இவர்கள் 1719-ம் ௵ ஜூலை ௴ 26௳ சென்னையில் கரையிறங்கி, செப்தெம்பர் ௴ 16௳ தரங்கைக்கு வந்து சேர்ந்தார்கள். இம்மூவரும் அபிஷேகம் பெருமல் வந்ததால், 1720-ம் ௵ ஜனுவரி ௴ 31௳ சூல்ச்சையருக்கு எருசலேம் கோயிலில் கரீண்ட்லர் ஐயரால் குருப்பட்டம் கொடுக்கப்பட்டது. அவர் தமது பலவீனத்தைப் பாராமல், கடுமையாய் வேலை செய்து, 1720-ம் ௵ மார்ச்சு ௴ 19௳ மரித்து, மறுதினத்தில் எருசலேம் கோயில் பீடத்தருகே சீகன்பால்கு சிரேஷ்டர் கல்லறைக்குத் தென்புறத்தில் அடக்கம் பண்ணப்பட்டார். அவருடைய மரணத்தினால் குருமார் சபையார் யாவருக்கும் உண்டான துக்கம் இவ்வளவென்றில்லை.

இதனோடு தரங்கை மிசியோன் [ஆரம்பகால சரித்திரம் முடிந்ததென்று சொல்லலாம். நமது மிசியோனுக்குப் பலமான அஸ்திபாரம் போடப்பட்ட இந்தக் காலம் மிகுந்த சங்கட காலமாயிருந்தும் ஆசீர்வாதகாலமாயிருந்ததென்று அறிகிறோம். அம்மட்டும் ஞானஸ்நானம் பெற்றுத் திருச்சபையில் சேர்ந்தவர்கள் தொகை 472. கர்த்தருடைய கிருபையால் அவர்களுக்கு அத்தியாவசியமாயிருந்த புதிய ஏற்பாடும் மற்றும் சில ஞானநூல்களும், அனேக நூல்களை அச்சிடுவதற்கான அச்சுக்கூடமும், சிறந்ததோர் தெய்வாலயமும், பல பள்ளிக்கூடங்களும் கிடைத்திருந்தன.

## 2. அபிவிர்த்தி காலம் (1720 - 1806).

இந்தக் காலவகுப்பில் தரங்கைச் சபையும் பள்ளிக்கூடங்களும் விர்த்தியானதுமன்றி, சுதேச குருமார் ஏற்படுத்தப்பட்டதும், டேனிஷ் எல்லைக்கு வெளியே தமிழ் நாட்டின் பலவிடங்களிலும் சபைகளுண்டாகிப் பெருகினதும் கவனிக்கத்தக்க விசேஷங்களாம்.

புதிதாய் வந்த மூன்று ஊழியர்களில் கிஸ்தென்மகர் 1722-ம் ௵ இறந்துபோனார். தால் என்பவர் போர்த்துகீஸ் பாஷையைக் கற்று, போர்த்துகீஸ் சபையை விசாரித்து வந்தார். அவருக்கு 1730-ம் வருஷந்தான் குருப்பட்டம் கொடுக்கப்பட்டது. சூல்ச்சையர் மாத்திரமே

B. Schulze.

தமிழ்ப் பாஷையை நன்றாய்க் கற்று, மிசியோனுக்காக அதிகமாய் உழைத்தார். இவர் சீகன்பால்கு சிரேஷ்டர் மொழிபெயர்த்திருந்த ஞானப்பாட்டுகளையன்றி, வேறனேக ஞானப்பாட்டுகளையும் மொழிபெயர்த்து, 1723-ம் ௵ 112 பாட்டுகளடங்கிய ஒரு புத்தகத்தைப் பிரசுரஞ்செய்தார். சீகன்பால்கு புதிய ஏற்பாட்டையும் பழைய ஏற்பாட்டில் மோசேயின் ஐந்தாகமங்களையும், யோசுவா, நியாயாதிபதிகளின் ஆகமங்களையும் மொழிபெயர்த்திருந்தார். சூல்ச்சையர் பழைய ஏற்பாட்டின் மற்றெல்லா ஆகமங்களையும் மொழிபெயர்த்தார். இவைகளெல்லாம் பின்னால் பாவரீசையர் மொழிபெயர்ப்புகள் வெளிப்பட்டபின் உபயோகமாகாமற் போயின.

மேலும், சூல்ச்சையர் சபையிலும் பள்ளிக்கூடங்களிலும் அஞ்ஞானிகளுக்குள்ளும் செய்த வேலைகளைக் கர்த்தர் ஆசீர்வதித்தார். 1724-ம் ௵ தரங்கன்பாடியில் 153 பிள்ளைகள் படித்த ஐந்து மிசியோன் பள்ளிக்கூடங்கள் இருந்தன. அடுத்த வருஷத்திலோ 525 பிள்ளைகள் படித்த 21 பள்ளிக்கூடங்கள் மிசியோன் விசாரணையில் இருந்தன. அஞ்ஞானப் பிள்ளைகளும் வேதபாடங்களைப் படித்தார்கள். அன்றியும் 1720-ம் ௵ முதல் 25-ம் வருஷமட்டும் சபையில் சேர்ந்த ஆத்துமாக்கள் 131. 1725-ம் வருஷக் கடைசியில் (போர்த்துகீஸ் சபையாரைக் கழித்து) தரங்கன்பாடியிலிருந்த தமிழ்க் கிறிஸ்தவர்கள் 147. ஏழைக் கிறிஸ்தவர்களுக்குப் பிழைப்புண்

டாக நெசவு வேலை, சித்திர வேலை, மேற்சோட்டு வேலை முதலிய பலபிரயோசனமான கைவேலைகள் படிப்பிக்கப்பட்டன.


தரங்கன்பாடியில் வெளிப்பட்ட இந்த ஆசீர்வாதங்கள் தரங்கன்பாடியோடுதானே நின்றுபோகவில்லை. இதன் பிரஸ்தாபம் வெளியூர்களிலும், இலங்கைத் தீவுக்குங்கூடச் சென்றது. இங்கே அச்சிடப்பட்ட புத்தகங்களை வெளியூரிலுள்ளோர் அழைப்பித்து ஆவலோடு வாசித்தார்கள். தஞ்சாவூர் அரசனின் மாமனாராகிய தலாப்சிங் இராசன் முதலாய் ஆட்கள் மூலமாகவும் கடிதமூலமாகவும் இவ்விசேஷங்களை விசாரிக்க, சூல்ச்சையர் அவருக்கு நல்ல நல்ல புத்திபோதனைகளடங்கிய நிருபங்களை எழுதினார்.

சூல்ச்சையர் மிகஊக்கமான உழைப்பாளியாய் இருந்து, மற்ற ஐயர்மாரோடுகூடி வேலைசெய்வதைப் பார்க்கிலும் தனித்து வேலைசெய்ய விரும்பி, 1726-ம் ௵ கூடலூருக்குப் போனார். அங்கும், பரங்கிப்பேட்டை முதலிய இடங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். ஆகிலும் அவருக்குச் சென்னையில் மிசியோன் வேலையை நடத்தவேண்டுமென்கிற எண்ணம் மேலிட்டதால் அவ்விடம் சென்று, அங்கும் பழவேற்காடு முதலிய அனேக இடங்களிலும் சுவிசேஷம் பிரசங்கித்து, அதனால் மிகுந்த வியாதிப்பட்டார். பிறகு தரங்கன்பாடிக்கு வந்து, சகோதரரோடு கலந்து யோசனைபண்ணி, திரும்பவும் சென்னைக்குப் போய், அங்கேயே தரித்திருந்து வேலைசெய்தார்.

Schulze in Madras.

1725-ம் ௵ ஜுன் ௴ 19-ம் உ மூன்று புதிய ஐயர்மார் தரங்கன்பாடியில் கரையிறங்கினார்கள். அவர்கள் பெயர்: பிரெசிர் (Pressier), வால்தர் (Walther), போசே (Bosse). இவர்களில் போசே என்றவர் மிசியோனுக்கு ஈங்கினையாய் நடந்து, பிற்காலத்தில் தள்ளுபட்டார். மற்றிரு ஐயர்மாரும் மிகப் பிரயோசனமான வேலைசெய்தார்கள். அவர்களில் முக்கியமாய் வால்தர் ஐயர் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பாண்டித்தியமுடையவரும், சுயம்பாடக் கூடியவருமாயிருந்தார். அவர் இயற்றிய திருச்சபை சரித்திரம் மிகப் பெயர்பெற்ற நூல்.

சூல்ச்சையர் சென்னைக்குப் போனபின் மேற்குறித்த இரு ஐயர்மாரும் தரங்கைச் சபையை விசாரித்து வந்தார்கள். இக்காலத்தில் திருச்சபையில் சேர்ந்தவர்களின் கணக்கு வருமாறு:



BENJAMIN SCHULZE — சூல்ச்சையர்.

(23-ம் பக்கம் பார்க்க)

1727-ம் வருஷம் 127 பேர்; 1728-ம் வருஷம் 265 பேர்; 1729-ம் வருஷம் 281 பேர்; 1730-ம் வருஷம் 290 பேர்; 1731-ம் வருஷம் 239 பேர்; ஆக ஐந்து வருஷங்களில் 1203 பேர். 25 வருஷங்களில் சேர்க்கப்பட்டவர்களின் தொகை 1840. மரித்தவர்கள், தப்பிப்போனவர்கள் போக 1731-ம் வருஷக் கடைசியில் தரங்கை மிஷியோன் சபையார் தொகை 1197. இவர்களில் 239 பேர் போர்த்துகீஸ் சபையும், 533 பேர் தரங்கம்பாடி தமிழ்ச் சபையும், 414 பேர் தரங்கைக்கு வெளிப்புறத்திலிருந்த தமிழ்ச் சபையையும் சேர்ந்தவர்கள்.

1727-ம் வருஷம் ஞானஸ்நானம்பெற்றவர்களில் வேதப்பன் என்பவன் கவனிக்கப்படத்தக்கவன். இவன் அனந்த மங்கலத்தானான குயவன். சமுசாரக்

A remarkable conversion.

காரனாயிருந்தும், துறவிவேஷம் பூண்டு, முட் பாதகுறடு தரித்து, ஆவேஷங் கொண்டு, கோடாங்கி சொல்வதனால் இந்துக்களால் மிகவும் மதிக்கப்பட்டிருந்தான். அவன் ஜுல்ச்சையர் பிரசங்கங் கேட்டு, மனந்திரும்பி, முந்தத் தன் முட் பாதகுறடுகளையும் பிறகு தன் பூஜாபாத்திரங்களையும் ஐயரிடம் ஒப்புவித்தான். அவன் தானே முந்த ஞானஸ்நானம் பெறாமல், தன் பெண் குழந்தைக்கு ஞானஸ்நானங் கொடுக்கக் கேட்டுக்கொண்டான். அந்தக் குழந்தைக்கு ஏவாள் என்று பெயரிடப்பட்டது. ஞானஸ்நானம் ஐரோப்பாவிலிருந்து வரும் ஜலத்தால் செய்விக்கப்படுகிறதாகவும், ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் வாயில் மாட்டுக் கறியைத் திணித்து, சாராயத்தை ஊற்றுகிறதாகவும் அவனுக்குப் பலரும் சொல்லியிருந்ததால், அப்படி நடக்கிறதில்லை என்று காண்பிக்க இந்த ஞானஸ்நானம் அவன் வீட்டுத் தோட்டத்திலே ஒரு பந்தலில், எல்லா சனங்களும் பார்க்க, அவன் கிணற்றிலிருந்து மொண்டுவந்த ஜலத்தினால் கொடுக்கப்பட்டது. பிறகு அவன் ஞானோபதேசத்தைக் கற்று, தன் துணைவிக்கும் படிப்பித்து, 1727-ம் ௵ பெப்ருவரி ௴ 23-௳ அவளோடு ஞானஸ்நானம் பெற்றான். அவன் யாவிலும் மெய்க் கிறிஸ்தவனாய் விளங்கி, தன் தகப்பனும் சகோதரனும் கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்ததைக் கண்டு களிகூர்ந்து, 1729-ம் வருஷம் அக்டோபர் ௴ 21-௳ பாக்கியமாய் மரித்து, பொறையாற்றில் அடக்கம்பண்ணப்பட்டான்.*

* 1864-65 ௵ அருணோதயம் 16-18 பக்கம் பார்க்க.

நாம் மேலே சொல்லிய கணக்கினால் தரங்கைக்கு வெளியேயும் சுவிசேஷ வெளிச்சம் வீசி, அனேகர் கிறிஸ்தவர்களானார்கள் என்பது விளங்கும்.

தரங்கன்பாடி எல்லைக்கு வெளியே இருக்க கிளைச்சேகரங்களின் சரித்திரங்களைத் தனித்தனியே விபரிக்கக் கருதி, இங்கே விட்டுவிடலானோம்.

தரங்கன்பாடியில் சபைவேலையும் பள்ளிக்கூட வேலையும் விர்த்தியாகிக்கொண்டே வந்தது. கர்த்தர் சுவிசேஷ பிரசங்கத்தோடுகூட யுத்தம் பஞ்சம் என்ற உபத்திரவங்களினாலும் அனேகர் சபையில் சேர இடம் பண்ணினார். 1728-ம் வருஷம் தஞ்சாவூர் இராசாவுக்கும் டேனிஷ்காரருக்கும் சண்டை உண்டானதால், அனேக கிறிஸ்தவர்கள் தங்கள் வீடு வாசலை இழக்கவும், பசியினால் வருந்தவும் வேண்டியதாயிற்று. ஏழைகளுக்கு ஐயர்மார் செய்த உதவி அதிகம். 1730-ம் வருஷத்தில் கோட்டை வெளிப்பாளையத்தில் மாத்திரமல்ல, சாத்தன்குடி, மாணிக்கப்பங்கு, பொம்மியப்பன் பேட்டை, தில்லையாடி என்ற கிராமங்களிலும் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள்.

1730-ம் வருஷம் ஜனுவரி மீ 12உ வொர்ம் (Worm), ரிக்ஸ்தைக (Richsteig), சார்த்தோரியுஸ் (Sartorius) என்ற மூன்று புதிய ஐயர்மார் சென்னைத் துறையில் கரையிறங்கினார்கள். இவர்களில் சார்த்தோரியுஸ் ஐயர் சென்னையில் சுல்ச்சையருக்கு உதவியாக நின்றுவிட்டார். மற்றிருவரும் தரங்கைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அப்பொழுது தரங்கையிலிருந்த ஆறு ஐயர்மார்களில் பிரேசிர், வால்த்தர், வொர்ம் என்றவர்கள் தமிழ்ச் சபையிலும், மற்ற மூவரும் பொர்த்துகீஸ் சபையிலும் ஊழியஞ் செய்தார்கள். நாட்டுச் சபைகளின் விசாரிப்பில் சவரிமுத்து, ஆரோன், தியோகு, இராயல் நாயக்கன் என்ற உபதேசிமார் ஐயர்மாருக்கு மிகுந்த உதவியாயிருந்தார்கள்.

தரங்கைக்கு வெளியே இருந்த சபைகளின் தொகை பெருகப் பெருக, அவற்றை நேர்நேராய்ப் போய் விசாரிப்பது ஐரோப்பிய குருமாருக்குச் சாத்தியமாயிராமையால், 1728-ம் ௵ அவர்கள் சுதேசிகளில் ஒருவருக்குக் குருப்பட்டங் கொடுப்பதற்கு உத்தரவனுப்பும்படி கோப்பனகன் பட்டணத்திலிருந்த மிஷியோன் தலைவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். உத்தரவு வந்தும், தகுந்த பேர்வழியைத் தெரிந்து



கொள்ள 5 வருஷஞ் சென்றது. அபிஷேகம் பெறத் தக்கவரை ஐயர்மார் தெரிந்துகொண்ட விதமாவது:

அவர்கள் 1733-ம் ௵ தரங்கைச் சபையோடு சம்பந்தமாயிருந்த மூன்று உபதேசிமாரில் ஒருவரைத் தாங்களும் சபையாருமாய்த் தெரிந்துகொள்ளக் கருதி, அம்மூவருக்கும் இந்த சங்கதியைக் கடிதமூலமாய்த் தெரிவித்தார்கள். அவர்களில் மூத்தவராகிய சவரிமுத்து உபதேசியார்: எங்கள் குருமாராகிய தாங்கள் திருச்சபையின் பிரதம மேய்ப்பராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை முன்னிட்டுத் திருச்சபையின் நலத்தைக் கோரிச் செய்த இத்தீர்மானம் மிகவும் அவசியமாதலால், அது எனக்கு மிகுந்த திருப்தியாயிருக்கிறது; தாங்கள் ஆரைத் தெரிந்துகொள்ளுகிறீர்களோ அவனைப் பிதாவாகிய பராபரன் அழைக்கவும், அவனுக்குக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது ஊழியத்தை அளிக்கவும், அவன்பேரில் பரிசுத்த ஆவியானவர் முத்திரை போடவும் வேண்டுமென்று மன்றாடுகிறேன் என்றெழுதினார். இரண்டாம் உபதேசியாராகிய ஆரோன்: தமது பரிசுத்த ஆவியால் குருக்களின் இருதயங்களில் இத்தீர்மானத்தை எழுப்பிவிட்ட பராபரனுக்கு ஸ்தோத்திரம். வெளிச்சபைகளுக்கு நன்மையுண்டாவதற்கு இது அவசியமே. கர்த்தர் அதை முற்றுமுடித்து நிறைவேற்றுவாராக என்றெழுதினார். தியோகு என்ற மூன்றாம் உபதேசியார்: நமது பிரதான மேய்ப்பராகிய இயேசு கிறிஸ்துநாதரே, தாம் ஏற்படுத்திய இவ்வேலையைச் செய்யும்படி தமக்குப் பிரியமானவனைத் தெரிந்துகொண்டு, அந்த விஷயத்தைத் துலக்கி நடத்தி முடித்தருள்வாராக, அவருடைய திருநாமத்திற்கு ஸ்தோத்திரம் எனறெழுதினார்.

கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகையில் உள்ளூர் வெளியூர்ச் சபையாரில் அனேகர் எருசலேம் கோயிலில் கூடிவந்திருக்கையில் ஐயர்மாரில் ஒருவர் மேற்கூறிய விஷயத்தைச் சவிஸ்தாரமாகப் பிரஸ்தாபித்து, அவர்களை உட்கருத்தான ஜெபத்திற்கு ஏவி அனுப்பினபின், அதற்கும் பரிசுத்த ஆவியின் பண்டிகைக்கும் இடையிலுள்ள காலத்தில் ஐயர்மார் அந்த மூன்று உபதேசிமாருக்கும் தெய்வ ஊழியம் நடத்தவேண்டிய விதத்தைக் குறித்துப் போதனை செய்தார்கள். சவரிமுத்து உபதேசியார் தமது முதிர் வயதைக் காரணமாகச் சொல்லி, தம்மைத் தெரிந்துகொள்ளாதிருக்கக் கேட்டுக்கொண்டார்.

பரிசுத்த ஆவியின் 2-ம் திருநாளாகிய திங்களன்று ஆரோன் உபதேசியார் ரோமர் 8, 14-16ன் பேரிலும், 3-ம் திருநாளாகிய செவ்வாய்க்கிழமை தியோகு உபதேசியார் ௧ கொரி. 3, 16-17ன் பேரிலும் பிரசங்கஞ் செய்தார்கள். ஐயர்மாரும் சபையாரும் கூடி ஜெபம் செய்து, அவ்விருவரில் ஒருவரைத் தெரிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். கூடிவந்த குடும்பத் தலைவர்களில் சரிபாதிப் பேர் ஆரோனையும், மறுபாதிப்பேர் தியோகுவையும் தெரிந்துகொண்டார்கள். அப்படியே, வந்திருந்த 6 ஐயர்மாரில் மூவர் ஒருவரையும், மறு மூவர் மற்றவரையும் தெரிந்துகொண்டார்கள். இதனால் காரியம் தீராமையால், முடிவான தீர்மானஞ் செய்யப் பின்னும் ஆறு மாசம் சென்றது.

Ordination of Aaron.

இருவருள் ஆரோன் மூத்தவராயிருந்ததால், 1733-ம் ௵ டிசம்பர் ௴ 28-ம் ௳ ஆரோனுக்குக் குருப்பட்டம் கொடுக்கிறதென்று தீர்மானஞ் செய்தார்கள். தரங்கை மிஷியோன் ஐயர்மார் ஆறுபேரும், சென்னையிலிருந்து வந்திருந்த சார்த்தோரியுஸ் ஐயரும், சீயோன் கோயிலின் இரண்டு டேனிஷ் குருமாரும், துறைமுகத்தில் நின்ற இரண்டு டேனிஷ் கப்பல்களின் இரண்டு குருமாரும் ஆக 11 குருமார் ஆரோன் பேரின்மேல் கைவைத்து அபிஷேகம் செய்தார்கள். அபிஷேகம் பெற்ற ஆரோன் ஐயர் கலா. 4, 4. 5ன் பேரில் பிரசங்கம் செய்தார்.

ஆரோன் என்பவர் 1698-ம் ௵ கூடலூரில் அஞ்ஞானியாய்ப் பிறந்தவர். இவரது முந்தின பெயர் ஆறுமுகம். அவர் தகப்பனார் பெயர் சொக்கநாத பிள்ளை. இவர் வீட்டிற்கெதிரே சர்க்காரால் ஏற்பட்டுச் சவரிமுத்து உபதேசியாரென்ற கிறிஸ்தவனின் விசாரணைக்குட்பட்டிருந்த ஒரு பள்ளிக்கூடத்திற்கு ஆறுமுகம் போக்குவரத்தாயிருந்து, உபதேசியாரிடத்தில் சத்திய வேதாகமங்களை வாங்கி வாசித்ததால் கிறிஸ்து மார்க்க அறிவைப் பெறத் துவக்கினார். பிறகு அவர் பெற்றோருக்குக் கஷ்டகாலம் நேரிடவே, அவர் தரங்கைக்கு வந்து, உபதேசம் பெற்று, 1718-ம் ௵ சிகன்பால்கு சிரேஷ்டர் கையால் ஞானஸ்நானம் பெற்றார். அவரது பெற்றோர் தரங்கை சேர்ந்து, அவருடைய விசுவாசத்தை அசைக்க எவ்வளவாய்ப் பிரயாசப்பட்டும் சித்திபெறாமல் திரும்பிவிட்டார்கள். ஆரோனே மிஷியோனில் முந்த உபாத்தியாயராகவும், பிறகு



உபதேசியாராகவும், கடைசியில் குருவாகவும் மிக்க பயனுற உழைத்தார்.

அவர் தமது இரட்சகரின் மகிமையையும், ஆத்துமாக்களின் இரட்சணியத்தையும் கருத்தில் வைத்துச் செய்த வேலைகளும், பட்ட பிரயாசையும் மிகுதி. அவர் பட்டம் பெற்ற வருஷத்தில் 279 பேரும், அடுத்த வருஷத்தில் 421 பேரும் சபையில் சேர்ந்தார்கள்.—ஆரோனையரின் விசாரணையிலிருந்த மாயூர வட்டத்தாரின் தொகை 433. அவர் செய்த பிரயாணங்கள் அனேகம். முதற் சுதேச குருவாகிய அவர் பிற்காலத்துக் குருமாருக்கு நல்ல முன்மாதிரியாயிருந்து, தமது 47-ம் வயதில் மரித்துத் தமது பரம எசமானின் இளைப்பாறுதலுக்குட்பட்டார். அவருடைய தேகம் பழைய எருசலேம் தெய்வாலயத்தில் அடக்கம் பண்ணப்பட்டது. அச்சமயத்தில் ஒபுக் ஐயர் அறி. 2, 10ன் பேரில் துக்கப் பிரசங்கம் செய்தார்.

ஆரோனையர் அபிஷேகம் பெற்ற மூன்றாம் வருஷம் தரங்கை மிஷியோனுக்குச் சற்றுச் சங்கடகாலமாயிற்று. அந்த வருஷம் (1735) முந்தின 6 மாசக்காலத்தில் ஒரு துளி மழையும் பெய்யாமையால், கோடைக்காற்று பயங்கரமாய் வீசி, விஷக்காய்ச்சலை உண்டுபண்ணிற்று. அதனால் ரிக்ஸ்தைக் ஐயரும், அவரது பிராண சிநேகிதராகிய வோர்ம் ஐயரும், இவரது மனைவியும், வால்த்தர் ஐயர் பாரியையும் இறந்துபோனார்கள். அந்த வருஷத்தில் 319 பேர் சபையிற் சேர்ந்தார்கள். வால்தர் ஐயர் எழுதின திருச்சபை சரித்திரம் அச்சிடப்பட்டு முடிந்தது.

அவ்வருஷத்துத் துவக்கத்தில் ஞானப்பிரகாசமென்னும் உபதேசியார் இறந்ததினால் ஐயர்மார் துக்க சாகரத்தில் அமிழ்ந்தும், அவர் பாக்கியமான மரணமடைந்ததற்காகப் பராபரனை ஸ்தோத்திரித்தார்கள். அந்த உபதேசியார் மதுரையில் பிறந்து, ஏதோ காரணத்தால் நாகூருக்கு வந்திருந்த தருணத்தில் தரங்கன்பாடியிலிருந்த அஞ்ஞானியாகிய தமது இஷ்டனொருவனால் இவ்விடத்தில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறதைக் குறித்துக் கேள்விப்பட்டு, தம் ஆத்தும இரட்சிப்பைத் தேடி, 1733-ம் ௵ தரங்கன்பாடிக்கு வந்து, ஏப்ரில் மாசத் துவக்கத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். அவரோடு கிறிஸ்தவ உபதேசங்களைப் படித்திருந்த அவர் பெண்சாதி அவர் பேரில் விசனப்பட்டு, நாகூருக்குப்போய், நெடுநாள் அவ்விடத்திலிருந்தாள். அவரோ தமது விசுவாசத்தில் ஸ்திர

மாயிருந்து, தாம் ஞானஸ்நானம் பெற்ற ஆறு மாசத்திற்குப் பின் அவளும் ஞானஸ்நானம் பெற்றமையால் மிகுந்த சந்தோஷத்திற்குள்ளானார். அவர் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளையுஞ் சபையாரையும் விசாரித்து, தமது வேலையையெல்லாம் ஜெபத்தோடு நடத்தி வந்தமையால், இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்று இயேசு சுவாமி நாத்தான்வேலைப்பற்றிச் சொன்னதை ஐயர்மார் இவரைக் குறித்துஞ் சொன்னார்கள். அவர் மரணமடையச் சில நாட்களுக்கு முன் தமது வழக்கப்படி புதிய ஏற்பாட்டை வாசித்த ஓர் சமயத்தில் சந்தோஷத்தால் நிறைந்து: கர்த்தர்வே, நீர் இந்த நன்மையை எனக்குஞ் செய்தால் போதுமென்று உரத்த சத்தத்தோடு மொழிந்தார். அவர் மரண அவஸ்தையிலிருக்கையில் தமது பிரிய இஷ்டனாகிய தியோகு உபதேசியாரோடு செய்திருந்த உடன்படிக்கையை அவருக்கு நினைப்பூட்டி, தமது மனைவியை அவர் வசத்தில் ஒப்புவித்து: கர்த்தாவே, என்னைக் கைவிடாதேயுமென்று சொல்லி, ஆறுதலான மரணமடைந்தார்.

War & famine.

மறுவருஷத்தில் ஆற்காட்டு நவாபின் சேனாபதியாகிய சந்தா சாய்பு திருச்சினாப்பள்ளியைப் பிடித்து, மதுரை ராச்சியத்தையும் மகமதியர் வசப்படுத்தினதினாலும், தஞ்சாஊருக்கும் அபாயம் வருமென்ற பயமிருந்ததினாலும் அங்கிருந்த உபதேசிமார் தரங்கைக்கு வந்து விட்டார்கள். கிறிஸ்தவர்களில் அனேகர் துரத்துண்டு, மிகுந்த சேதத்திற்குள்ளானார்கள். இதனால் வெளிச்சபைகளின் விர்த்திக்குப் பெருந்தடை நேரிட்டது. இத்தோடு ஆரோன் நாட்டையரும் வியாதிப்பட்டதனால் அவர்கள் அவ்வருஷம் கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகையைக் கொண்டாடக் கூடாதேபோயிற்று. தஞ்சாஊர் இருப்பால்துறை முதலிய இடங்களிலிருந்து துரத்துண்ட 76 கிறிஸ்தவர்கள் ஒரு இடத்தில் இராயல் நாயக்கன் என்ற உபதேசியாரோடு பரிசுத்த ஆவியின் பண்டிகையை ஆசரித்தார்கள். கர்த்தர் பிறந்த பண்டிகையையோ அதிக அமைதலோடு ஆசரிக்கக் கூடியதாயிற்று. யுத்தத்திற்குப் பயந்து தரங்கன்பாடிக்கு வந்து அடைக்கலம் புகுந்த அஞ்ஞானிகள் அனேகர் ஞானஸ்நானம் பெற ஏதுவாயிற்று. அந்தச் சங்கடமான வருஷத்திலே சபையில் சேர்ந்தவர்கள் 278.

அடுத்த வருஷத்தில் ஒபுக் (Obuch) வீதெபுரெக் (Wiedebrock), கோலோப் (Kohlhoff) என்ற புதிய ஐயர்



மார் வந்து சேர்ந்தது, மிகுந்த பலவீனத்தினால் மரணத்தை எதிர்பார்த்திருந்த பிரெசீர் ஐயருக்குப் பெரிய ஆறுதலாயிற்று. மூவரும் தமிழை நன்றாய்க் கற்றுக்கொண்டார்கள். இவர்களில் கோலோப் ஐயர் 53 வருஷம் தரங்கையில் உழைத்தார். அந்த வருஷத்தில் முன்னொரு வருஷத்திலும் நடந்திராவண்ணம் 484 பேர் திருச்சபையில் சேர்ந்தார்கள்.

13 வருஷமாசத் தரங்கையில் உழைத்த பக்தி மிகுந்த பிரெசீர் ஐயர் 1738-ம் ௵ ஜனுவரி ௴ 15-ம் ௳யிலும், வைஸ்தர் ஐயரோடு கூடலூருக்கு வந்து அங்கொரு மிசியோனை ஸ்தாபித்து பிராமணனைப்போல் தமிழ்ப் பேசுகிறவனென்று பெயர் பெற்ற சார்த்தோரியுஸ் ஐயர் மே ௴ 27-ம் ௳யிலும் மரித்தார்கள். இதனால் மற்ற ஐயர்மாருக்கும், சபையார் யாவருக்கும் உண்டான துக்கம் கொஞ்சமல்ல. துக்க மிகுந்த இவ்வருஷத்திலும், கர்த்தருடைய ஆசீர்வாதம் குறைவுபட்டதில்லை. அந்த வருஷத்தில் ஞானஸ்நானம் பெற்ற புறமதஸ்தர் 609. இவர்களில் வெளிச்சபைகளைச் சேர்ந்தவர்கள் 474.

1739-ம் ௵ தஞ்சை சமஸ்தானத்திற்கு மிகக் கெடுதியான வருஷமாயிருந்தது. சந்தாசாகிப் என்பவன் அச்சமஸ்தானை முழுவதையும் தன் வசமாக்கி, கொடுமையினாலும் கொள்ளையினாலும் ஜனங்களுக்குச் சேதம் உண்டுபண்ணினான். பஞ்சம் மிகுத்தது. அனேகர் தரங்கன்பாடியில் அடைக்கலம் புகுந்து, கிறிஸ்தவர்களாக மனதாயிருந்தார்கள். அவ்வருஷம் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 738. அவ்வளவு ஜனங்களை உபதேசித்து ஆயத்தப்படுத்துவதில் ஐயர்மாருக்கு அபரிமிதமான வேலையிருந்தும், கிராமங்களுக்குப் போய் அஞ்ஞானிகளுக்குப் பிரசங்கிப்பதை நிறுத்தவில்லை.

தமிழில் நிபுணரெனப் பெயர் பெற்ற வால்த்தரையர் இத்தேசத்தில் 14 வருஷங்களாய் உழைத்து, தமது மனைவியையும் ஐந்து பிள்ளைகளையும் சாகக்கொடுத்துச் சீமைக்குத் திரும்பினார். அவரை விட்டு விடுவது அவரை யறிந்த யாவருக்கும் வருத்தமாயிருந்தது. அவர் ஏறின கப்பலில் அடிமைகளான அனேக அஞ்ஞானிகளும் யாத்திரை செய்தார்கள். இவர்களுக்கு வால்த்தரையர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஓயாதிருந்ததால், இவர்களில் 17 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர் கோப்பனேகன் பட்டணம் போய்ச் சேர்ந்தும், தாம் தேடின இளைப்பாற்றியை இவ்வுலகத்தில் அனுபவியா

டல் (1741-ம் ௵) கர்த்தருக்குள் நித்திரையடைந்து பரம இளைப்பாற்றிக்குப் பங்காளியானார்.

அலுப்பு மிகுந்து, வேலையாட்கள் தொகை சிறுகினதால் ஐயர்மார் உதவியாட்களை அனுப்பும்படி சீமைச் சங்கத்தாருக்கு எழுதினார்கள். அவர்கள் கோரிக்கைப்படி அனுப்பப்பட்ட கியர்நாந்தர் (Kiernander), பப்ரீசியுஸ் (Fabricius), சேக்லின் (Zeglin) என்ற மூன்று ஐயர்மார் 1740-ம் ௵ ஆகஸ்டு ௴ 8-ம் ௳ கூடலூரில் கரையிறங்கினார்கள். இவர்களில் சுவேதிஷ் குருவாகிய கியர்நாந்தர் ஐயர் சைஸ்தர் ஐயருக்கு உதவியாகக் கூடலூரில் தங்கிவிட்டார். மற்றிருவரும் தரங்கைக்கு வந்து, பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளின் பாடங்களையும் படிப்பையும் கேட்டதினாலும், ஆரோன் நாட்டையரையும் தியோகு இராயல் நாயகன் என்ற உபதேசிமாரைக் கண்டதினாலும் அடைந்த சந்தோஷம் கொஞ்சமல்ல.

1732-ம் ௵ முதல் 1740-ம் வருஷமளவும் 4 ஐயர்மார் இறந்துபோனார்கள். ஒருவர் சீமைக்குத் திரும்பிப் போனார். ஆகவே 1740-ம் வருஷ முடிவில் ஐரோப்பிய குருக்கள் பத்துப்பேர் இத்தேசத்தில் உழைத்தார்கள். அவர்களில் 7 பேர் தரங்கையிலும், 2 பேர் கூடலூரிலும், ஒருவர் சென்னையிலும் இருந்தார்கள். தரங்கையில் தியோகு சவரிமுத்து என்ற உபதேசிமாரும், வேறு சில ஊழியர்களும் ஐயர்மாருக்கு உதவி செய்தார்கள். ஆரோன் நாட்டையர் மாயூர வட்டத்தை விசாரித்தார். இராயல் நாயக்கனென்ற உபதேசியார் சில உதவிக்காரரோடு தஞ்சாவூர் வட்டத்தில் வேலைசெய்தார். அவருக்குள்ளாகி மூன்று உபதேசிமார் மாதேவிப்பட்டணம், திருப்பாலத்துறை, கும்பகோணம் முதலிய இடங்களில் இருந்த சபையாரை விசாரித்து வந்தார்கள். துவக்கமுதல் அதுவரைக்கும் ஞானஸ்நானம்* பெற்றவர்கள் தொகை 5723. அப்பொழுது இருந்த போர்த்துகீஸ் சபையார் 301, எருசலேம் தமிழ்ச் சபையார் 1044, வெளியூர்ச் சபையார் 2591.

இக்காலத்திற்குள் தரங்கைக்கு வெளியிலிருந்த கிராமச் சபைகள் அதிகரித்ததால் பிறையாற்றில் ஒரு தெய்வாலயம் கட்ட வேண்டியதாயிற்று. 1743-ம் ௵

Bethlehem Church.

அஸ்திபாரம் போடப்பட்ட அந்தக் கோயில் கட்டடம் 1746-ம் ௵ முடிந்து, அந்த வருஷம் ஜுன் ௴ 1-௳ பரிசுத்த ஆவியின் பண்டிகைக்குப் பிந்தின புதன்கிழமையில் வீடேபுரோக் ஐயரால் சிறப்



பாய்ப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அச்சமயத்தில் கோட்டைச் சபையாரும், வெளிச்சபையாரான 400 கிறிஸ்தவர்களும் வந்திருந்ததுமன்றி, நகராதிபதியும் தமது ஆலோசனைக்காரரோடும் ஒருவேரோடும் வந்திருந்தார். ஏசா. 56, 7ன் பேரில் பிரசங்கஞ் செய்யப்பட்டது. ஆராதனை முடிவில் தியோகு நாட்டையரியற்றியிருந்த ஒரு பாட்டு பாடப்பட்டது. வெளிச்சபையார் பெரிய பண்டிகை நாட்களில் பிறையாற்று பெத்லெகேம் கோயில் தோட்டத்தில் ஒரு வாரம்போல் தங்கியிருந்து, கோயிலில் செய்யப்படும் செபங்களாலும் போதனைகளாலும் பயன் பெறுவது வழக்கமாயிற்று. 1746-ம் ௵ ஆகஸ்டு ௴ 3-௳ கிலேன் (Klein), பிரைதாப்டு (Breithaupt) என்ற இரண்டு புதிய ஐயர்மார் நாகப்பட்டணத்தில் கரையிறங்கினார்கள். இவர்களில் கிலேன் ஐயர் 44 வருஷகாலம் தரங்கையில் உழைத்தார். மற்றவர் பாவரீசையருக்கு உதவியாய்ச் சென்னையில் வேலைசெய்தார்.

சபைகள் பெருகப் பெருகத் தேவ ஊழியர் தொகையும் அதிகரிக்க வேண்டியதாயிற்று. கிராமச் சபைகளை விசாரிக்கவும் வெளியூர்களுக்குப் போய் மிஷியோன் வேலையை நடப்பிக்கவும் ஆரோன் நாட்டையர் ஒருவர் மாத்திரம் அப்பொழுதிருந்தார். அவர் அபிஷேகிக்கப்பட்ட 1733-ம் வருஷத்திற்குப்பின் 1800-ம் வருஷத்திற்குள் அபிஷேகிக்கப்பட்ட சுதேச குருமார்: தியோகு, அம்புரோஸ், பிலிப்பு, இராயப்பன் என்பவர்கள்.

தியோகு என்பவர் ரோமான் சபையில் பிறந்து, எட்டு வயதாயிருக்கையில் தமது தாயார் சகோதரர் சகோதரிகளோடு கூடி, லூத்தரன் சபையில் சேர்ந்து தரங்கன்பாடியில் கல்விகற்று உபதேசியார் ஆனார். அவருக்கு 1741-ம் வருஷம் *பிறையாற்றில் வீடேபுரோக் ஐயரால் குருப்பட்டம் கொடுக்கப்பட்டது. தமிழில் கவிபாடக் கூடியவரும் சாதுரியப் பிரசங்கியுமாயிருந்தார். அவர் வெளிக் கிராம விசாரணை வேலையைச் சிரத்தையோடு நடத்துகிறவராயிருந்து, 1781-ம் வருஷம் மரித்து, பழைய எருசலேம் கோயில் தோட்டத்தில் க்ஷேமிக்கப்பட்டார்.

Diogo.

அம்புரோஸ் என்பவரும் (1713-ம் வருஷம்) ரோமான் சபையிலிருந்து நமது சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டவர். இவர் சிறுவமுதல் நமது மிஷியோன் பள்ளிக்கூடத்தில்

வளர்ந்து, நெசவு வேலை கற்றார். பிறகு கப்பலேறித் திவாந்தரம் போய், சரிப்படாமல் திரும்பி வந்து, 1733-ம் ௵ மிசியோனில் உபாத்தியார் ஆனார். 1740-ம் ௵ இவர் கூடலூருக்கு உபதேசியாராக அனுப்பப்பட்டு, அங்கே எட்டு வருஷம் சுறுசுறுப்பாய் வேலை பார்த்தபின் தரங்கைக்குத் திரும்பி வந்து, 1749-ம் ௵ பிறையாற்றில் வீதெபுரோக் ஐயரால் குருப்பட்டம் பெற்று, 28 வருஷகாலம் உற்சாகமும் உண்மையுமாய் வேலையார்த்து, 1777-ம் ௵ பாக்கியமாய் மரித்து, பெத்லகேம் கோயில் தோட்டத்தில் அடக்கம்பண்ணப்பட்டார்.

Ambrose.

பிலிப்பு என்பவர் 1731-ம் ௵ நாகப்பட்டணத்துக்குச் சமீபமாய் அஞ்ஞானப் பெற்றோரிடம் பிறந்தார். தகப்பனார் மரித்தபின் அவர் ஆள் பிடிக்கும் ஒருவன் கையில் மோசமாய் அகப்பட்டுப் போனார். அவரைப் பிடித்தவன் அவரைத் தரங்கன்பாடிக்குக் கொணர்ந்து, அச்சக்கரைக்கு (Acheen) கப்பலேற்றி விட்டான். இச்செய்தியை அறியாத அவருடைய தாயார் தரங்கை எருசலேம் கோவிலுக்கு முன் விழுந்து, கிறிஸ்தவர்களின் சுவாமி தன் மகனை அகப்படப்பண்ணினால், தானும் அவனுமாய் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறதென்று பிரதிக்கினை செய்தாள். அற்புதமான பிரகாரம் பையன் திரும்பி வந்தும், அவள் தன் பிரதிக்கினையை மறக்கவே, ஒரு சொப்பனத்தினால் எச்சரிக்கப்பட்டு, தரங்கன்பாடிக்கு மறுபடியும் வந்து 1741-ம் ௵ தன் பிரதிக்கினையை நிறைவேற்றினாள். பிலிப்புவின் உழைப்பையும் உண்மையையும் பல விதத்திலும் கண்ட ஐயர்மார் 1772-ம் ௵ அவரைக் குருவாக அபிஷேகித்தார்கள். அவரோ கர்த்தருடைய திராட்சத் தோட்டத்தில் உண்மையும் சுறுசுறுப்புமாய் உழைத்து, 1788-ம் ௵ மரித்துப் பழைய எருசலேம் கோயில் தோட்டத்தில் அடக்கம்பண்ணப்பட்டார்.

Philip.

இராயப்பன் என்பவர் 1742-ம் ௵ கிறிஸ்தவ பெற்றோரிடம் பிறந்தவர். அவரது பாட்டனார் பக்தி மிகுந்த மாற்கு உபதேசியார், தகப்பனார் பெயர் அந்திரேயா. மூத்த இராயப்பனுக்கு அச்சுக்கூடத்தில் வேலை கற்பிக்கப்பட்டது. பிறகு அவர் உபாத்தியாராகி அப்பால் தஞ்சாவூருக்கு உபதேசியாராய்ப் போனார். அவர் சுவார்ச்சையரின் நற்சாட்சி

Rayappen.



பெற்று, 1778-ம் ௵ குருவாக அபிஷேகிக்கப்பட்டார். தென்னாட்டுக்குச் சுவிசேஷ வெளிச்சம் உதிப்பதில் இவர் ஒரு முக்கிய கருவியாகி, 1797-ம் ௵ திடீரென மரித்து, பெத்லகேம் கோயில் தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டார்.

1750-ம் ௵ ஜூலை ௴ 30-ம் ௳ சுவார்ச்சு (Schwarz), போல்சனாகன் (Polzenhagen), ஹித்தெமன் (Huetteman) என்ற மூன்று புதிய ஐயர்மார் கூடலூரில் கரையிறங்கினார்கள். இவர்களில் சுவார்ச்சையர் மற்றவர்களைப் பார்க்கிலும் பேரெடுப்புள்ளவராகி, சுவிசேஷப் பரம்புதலுக்கு விசேஷித்த கருவியானார். இவர் தரங்கையில் 11 வருஷகாலம் வேலை பார்த்தபின், திருச்சி, தஞ்சை முதலிய இடங்களுக்குச் சென்று அங்கங்கே சபைகளை ஸ்தாபித்ததால், அந்த இடங்களைக் குறித்துப் பேசுகையில் அவரைக் குறித்தும் சொல்லுவோம். இவருக்குப்பின் வந்த ஐயர்மாரில் கேரிக்கே (Gericke) ஐயரும், யோனையரும் (John) விசேஷித்தவர்கள்.

42 வருஷம் தரங்கன்பாடியில் உழைத்த யோனையரோடு தரங்கை மிசியோனின் செழித்தகாலம் முடிந்துபோயிற்று. அவர் முக்கியமாய்ப் பள்ளிக்கூட வேலையை மிகுந்த சிரத்தையோடு நடத்தினார். அவரிடத்தில் படித்தவர்களில் மிச்சமானவர்கள் மிசியோனூழியத்தை நாடாமல் லௌகீக உத்தியோகங்களை நாடினார்கள் என்பது அக்காலத்து முறைப்பாடு. ஆயினும், பிற்காலத்தில் திருநெல்வேலியில் பேர்பெற்ற குருவாயிருந்த ஜான் தேவசகாயம் ஐயர் (C. M. S.) இந்த யோனையருடைய சீஷரில் ஒருவரென்று அறிவோம்.

Dr. John.

1760-ம் ௵ நடந்த ஒரு விசேஷம் தரங்கன்பாடி ஐயர்மாருக்குப் பெருங் கலக்கத்தை உண்டுபண்ணிற்று. அதென்னவெனில், மொராவிய சகோதரரான 14 பேர் புதிய நகராதிபதியோடு கப்பலினின்று இறங்கியதே. இவர்கள் தரங்கையில் நிலைத்திருந்து அஞ்ஞானிகளுக்குள் மிசியோன் வேலை செய்ய வேண்டுமென்கிற நோக்கமாய் 1100 டாலருக்கு ஒரு தோட்டம்* வாங்கி, அதில் வீடுகட்டி தமிழ் பொர்த்துகீஸ

Moravians.

* சாத்தன்குடி வண்ணார் குடியிருப்புக்கு வடக்கே அவர்கள் வாங்கியிருந்த தோட்டம் நாளதுவரையில் சிலரால் சாலமோன் தோட்டமென்றும், சிலரால் சகோதரர் தோட்டமென்றும் சொல்லப்படும். அந்த மொராவியரால் தரங்கையில் கைத்தொழில் விர்த்தியானதாகத்

பாஷைகளைப் படிக்கத் தொடங்கினார்கள். புதிய நூரையும், சீயோன் கோவில் குருவும் அவர்களுக்கு அனுசரணையாகவே யிருந்தார்கள். "கீரைக் கடைக்கு எதிர்க்கடை" போன்ற இச்சங்கதி தென்மார்க்கரசர் சம்மதத்தோடு நடந்ததோ என்று விசாரித்ததில், அப்படியே என்று தெரியவந்தது. ஆயினும் கோப்பனுகனிலிருந்த கொல்லேஜியுமென்ற மிஷியோன விசாரணைச் சங்கத்தாரின் அனுமதியும் சம்மதமுமின்றிச் செய்யப்பட்டதால், அந்தச் சங்கத்தார் அரசருக்கெழுதி அவர் கொடுத்திருந்த கட்டளையை 1762-ம் ௵ ரத்துசெய்வித்தார்கள். இதற்குள் 1761-ம் வருஷத்திலேயே 9 புருஷரும் 4 ஸ்திரீகளுமாகிய வேறு 13 மொராவியர் தரங்கைக்கு வந்து முந்தினவர்களோடு கூடிக்கொண்டார்கள். அவர்களில் படிப்பாளிகளான இருவர் தமிழையும் போர்த்துகீஸையும் நன்றாய்க் கற்று, சின்சென்தோர்பென்பவர் இயற்றிய பிரசங்கங்களை அந்தப் பாஷைகளில் மொழிபெயர்த்து, நமது கிறிஸ்தவர்களுக்குக் கொடுத்து, நமது போதகர்களைக் குறித்துச் சந்தேகங்களை உண்டுபண்ண முயன்றார்கள். அவர்கள் நயவசனிப்பினாலும் தாழ்மையும் சுத்தமுமான நடக்கையினாலும் ஐரோப்பியரும் சுதேசிகளும், கிறிஸ்தவர்களும் புறமதஸ்தருமான வெகு ஜனங்களின் அநுதாபத்தையும் சிநேகத்தையும் சம்பாதித்துக் கொண்டார்கள். ஜனங்கள் அவர்களை "ஞானிகள்" என்று சொல்லி, அவர்களைக் குறித்து மதிப்பாய்ப் பேசினார்கள். இராயல் நாயக்கன், சவரியப்பன் என்ற உபதேசிமார் முதலாய் அவர்களிடம் போக்குவரத்தாயிருந்தார்கள். ஆயினும், நமது மிஷியோனைத் தங்களுடையதாக்கிக்கொள்ள வேண்டுமென்கிற அவர்கள் எண்ணம் வாய்க்கவில்லை. 1766-ம் வருஷம் அவர்களில் இரண்டுபேர் கொழும்புக்குப் போகையில் ஒருவர் இறந்துபோனார். 1768-ம் ௵ அவர்களில் 6 பேர் நீக்கோபார் தீவுக்குப் போனதாகவும் அவ்விடத்தில் இருவர் செத்துப்போக மற்றவர்கள் 1787-ம் வருஷமளவும் அங்கிருந்து ஊர் ஒத்துக்கொள்ளாமல் அத்தீவுகளை முற்றிலும் விட்டுவிட்டதாகவும் சமாச்சாரம். 1803-ம் ௵ அவர்களில் இருவர் தரங்கையில் இருந்ததாகவும், தங்கள் பூஸ்திதிகளை விற்றுப் போட்டு ஐரோப்பாவுக்குத் திரும்பத் தீர்மானித்திருந்ததாகவும் ஐயர்மாரின் ரிப்போர்ட்டில் வாசிக்கிறோம்.

---

கேள்வி. அவர்களால் செய்யப்பட்ட இரண்டொரு மரச் சாமான்களையும் பார்த்திருக்கிறோம்.



இந்தக் காலத்தில் தரங்கை மிஷியோன் இரத்தினங்களாய் விளங்கின பலருள் அரண்மனை கிறிஸ்தியான் தானியேல் பிள்ளை சிறந்தவர். இவர் 1740-ம் ௵ ஓர் ஏழைக் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவர். இவர் ஆறு

Christian Daniel Pillai

மாசக் குழந்தையாயிருக்கும் பொழுதே இறந்துபோன இவர் தகப்பனைப்பற்றி நமக்கு அதிகமாய்த் தெரியாது. இவர் தாய் யோவான் உபதேசியார் மகள். இந்த உபதேசியார் தரங்கைச் சபையின் பூர்வ டாப்பில் இரண்டாம் பேர்வழியாய்ப் பதிவு செய்யப்பட்டிருப்பதால் புதிதாய் ஞானஸ்நானம் பெற்ற ஆதிக் கிறிஸ்தவர்களில் ஒருவர் என்று சொல்லலாம். தானியேலை ஒபுக் ஐயர் மிஷியோன் ஆதரிப்புப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். அங்கே பால்தாசர் கோலோப்பையர் காலைமாலை செய்த ஜெபம், வேத விஸ்தரிப்பு, புத்தி போதனைகள் "சிறுமையில் கல்வி சிலையிலெழுத்து" என்பதற்கேற்ப இவர் மனதில் நன்றாய்ப் பதிந்து, அவர் ஆயுசுகாலமெல்லாம் அவர் ஞாபகத்தை விட்டுப் பெயராதிருந்தன. அவர் வரம் பெற்ற நல்ல பிள்ளையாண்டானாயிருந்ததால் ஐயர்மார் அவரை மிஷியோனூழியத்திற்கென்று ஆளாக்கச் செமினேரியில் சேர்த்தார்கள். அவர் வேதபாடங்களை நன்றாய்ப் படித்துத் தேறி, அக்காலத்து வழக்கத்தின்படியே 1755-ம் ௵ தரங்கையில் கரையிறங்கின, சரமே ஐயருக்குச் சீஷனானார். இவரிடத்தில் அவர் சர்மானிய பாஷையையும், தென்மார்க்கு தேசத்தாராகிய மாதுருப் ஐயரிடத்திலும் அம்மாளிடத்திலும் டேனிஷ் பாஷையையும் செம்மையாய்க் கற்றுக்கொண்டார். தாம் கற்றதைப் பிறருக்கும் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்ததால் ஊரில் பெரியோர் தயவும் செல்வாக்கும் அவருக்குக் கிடைத்தது.

1760-ம் ௵ டேனிஷ் கவர்னர் தமக்கு ஒரு உரவி சொல்த (Interpreter) சர்மானிய டேனிஷ் பாஷைகளைக் கற்றறிந்தவராய் வேண்டுமென்று கேட்க, ஐயர்மார் தானியேல் பிள்ளையின் தகைமையை அனுப்புவதாகப் பதில் எழுதினார்கள். கவர்னரோ தானியேல் பிள்ளைதான் அந்த வேலைக்கு வேண்டுமென வற்புறுத்தி, அவரை அந்த உத்தியோகத்தில் நியமித்து வைத்தார். தானியேல் பிள்ளை கர்த்தருக்குப் பயந்து தேவபக்தருய்த் தமது வேலையைப் பார்த்து வந்ததால் லௌகிக ஊழியமும் தெய்வ ஊழியமெனக் காண்பித்து, லௌகிக உத்தியோகஸ்தருக்கு நல்ல முன்மாதிரியாய் விளங்கினார். அவர்

குதிரையிலிருந்து விழுந்ததினால் ஆறுமாசம் வியாதிப் படுக்
கையில் கிடந்து, சுகமடைந்த பிறகு அவர் செபத்தில் முன்
னிலும் அதிகமாய்ப் பழகி, தினசரி ஒருமணி நேரமாவது
ஜெர்மன் பாஷைகளிலுள்ள பக்தி நூல்களைத் தமிழ்ப்படுத்து
கிறதென்று நிர்ணயம் பண்ணிக்கொண்டு, இந்த நிர்ணயத்
தைத் தேவகிருபையால் நாற்பது வருஷக்காலம் கொண்டு
செலுத்தி, கிறிஸ்தவர்களுக்கு வெகு பிரயோசனமும் எழுப்பு
தலுமான பல புத்தகங்களை மொழிபெயர்த்துக் கொடுத்தார்.
அவற்றுள் முக்கியமானவை: ஞானபரணப் பெட்டி, பாடு
பட்ட தியானம், ஞானமுசிப்பாறும் மணிநேரம், ஒன்று
குறைவு, சன்மார்க்க விளக்கம் முதலியன. இதையன்றிச்
சத்திய வேத மொழிபெயர்ப்பைத் திருத்தும் வேலையில் அவர்
ஐயர்மாருக்குப் பெரிய உதவியாயிருந்தார்.

அவர் நம்பிக்கைக்குரியவரும், கனத்திற்குப் பாத்திருமா
யிருந்ததால், அவரை டேனிஷ் துரைத்தனத்தார் 1763-ம்
வருஷம் தஞ்சாவூர் ராசாவினிடமும் 1773-ம் வருஷ கருநாடக
நவாபினிடமும், 1781-ம் வருஷ ஹைதர் அலியினிடமும் ராசாங்
கவிஷயமாய்த் தூதனுப்புவித்தார்கள். அவர் போனவிட
மெல்லாம் காரியாதிகளை செபத்தோடும் புத்தியோடும் நடத்தி
வந்தார்.

அவர் செய்வ காரியங்களில் சாதி வித்தியாசம் என்கிற
சங்கிலியால் கட்டப்பட்டவராயிருக்கவில்லை. அவர் ஒருமுறை
இராசாவைக் கண்டுகொள்ளத் தஞ்சாவூருக்குப் போயிருந்த
போது, ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்தில் பரிசுத்த நற்கரு
ணைப் பரிமாறப்பட்டது. தானியேல் பிள்ளைக்கும் இராயப்ப
நாட்டையருக்கும் நடுவே இடமிருந்தபடியால் சுவார்ச்சையர்
சொன்ன இன்ஸ்டிரியில் அங்கே காபிரியேல் என்ற வலங்கைத்
தான் வந்திருந்தான். சுவார்ச்சையர் திரு இராப்போசனத்தை
முன்னே அவனுக்குக் கொடுத்து, பிறகு தானியேல் பிள்ளைக்
கும் மற்றவர்களுக்கும் பரிமாறினார். இதைப்பற்றி இராயப்ப
நாட்டையர் மனத்தாங்கல் அடைந்து, ஆராதனை முடிந்தபின்
தானியேல் பிள்ளையைப் பார்த்து: அந்தப் பறையன் நமக்கு
நடுவே வந்திருந்தது எவ்வளவு அக்கிரமம் என்றார். அதைக்
கேட்ட தானியேல் பிள்ளை: கர்த்தருடைய சமுகத்தில் வித்தி
யாசமில்லை, நாமெல்லாரும் பாவிகள் என்று சொன்னார்.
இந்த நல்லாவி தானியேல் பிள்ளையைத் தாங்கினபடியால்,
அவர் சபைக்கு உத்தம முன்மாதிரியும் திடச்சாட்சியுமானார்.



சபைகளில் நல்லொழுங்கை ஸ்தாபிப்பதிலும், இவர் ஐயர்மா
ருக்கு அடிப்படையாய் நின்றார்.

வரவுக்குத்தக்க செலவு பண்ணி, ஏழைகளுக்கும் தம்மா
லியன்ற தர்மசகாயம் செய்தார். அவர் கோட்டை எருசலேம்
கோவிலுக்கு வாங்கிக்கொடுத்த இன்னார்வாத்தியம் வெகுகா
லம் உபயோகப்பட்டு வந்தது. சபையின் புறம்பான காரியங்
களில் ஒத்தாசை செய்தது போதுமென்றிராமல், யோனேயர்
எழுதுகிறபடி "கிறிஸ்தவர்களிடத்திலும் அஞ்ஞானிகளிடத்தி
லும் சகவாசம் பண்ணுகையில் அவர்களோடு பிரயோசன
மான சம்பாஷணை செய்து, இயேசு சுவாமியே நமது இரட்
சிப்பின் அஸ்திபாரமென்று தாராளமாய் அறிக்கையிட்டார்.
கிறிஸ்து திருவசனத்தையும், சுவிசேஷ போதகத்தையும்,
மார்க்கப் பக்திவிஷயங்களையும் அவர் செம்மையாய் அறிந்தவ
ராதலால், சாரமும் அனுமான அவர் சம்பாஷணை எங்கும்
நல்ல வேலை செய்தது. இது விஷயத்தில் நாட்டையர்மார் உப
தேசிமார் எவரும் அவருக்கு இணையல்ல."

இந்த பக்திமான் 1802-ம் வருஷ ஜனுவரி மீ 21 உ கர்த்
தருக்குள் பாக்கியமாய் மரித்து, பிறையாற்று பெத்லகேம்
கோயில் உத்தான பூமியில் அடக்கம் பண்ணப்பட்டார்.*

தரங்கையில் நிலைபெற்ற சுவிசேஷ வெளிச்சம் அங்கி
ருந்து தூரமான இடங்களுக்குப் பரம்பின வயணத்தை இப்
பொழுது பார்ப்போம்.

## ௩. சென்னை மிசியோன் சரித்திரம்.

சேகன்பால்கு சிரேஷ்டர் இருமுறை சென்னைக்குப் பய
ணஞ் செய்து, அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தும் அவர்
அங்கொரு சபையை ஸ்தாபிக்கவில்லை. அவருக்குப்பின் அங்
கேகிய ஐரோப்பிய ஐயர்மாரில் ஷுல்ச்
Ziegenbalg, Schulze. ஐயரே முந்தினவர். அவர் தரங்கை
யில் ஆறு வருஷக்காலந் தங்கி, மிசி
யோனை விசாரித்து நடத்திவந்தபின், 1726-ம் வருஷ சென்னை
நகரம் சென்று அங்கேயும், அதன் அக்கம்பக்கங்களிலுள்ள

* தரங்கை அச்சுக்கூடம் தானியேல் பிள்ளை சரித்திரம் பார்க்க
(Luth. Mission Press Tranquebar) விலை பை 6.

னர்களிலேயும் பிரசங்கஞ் செய்து, தரங்கைக்குத் திரும்பி, அங்கிருந்த மற்றச் சகோதரர்களோடு ஆலோசனை செய்து கொண்டு மறுபடியும் சென்னைக்குப் போனார்.

டேனிஷ் இராஜ்யமாகிய தரங்கையில் நடத்தப்பட்ட மிஸியோனை ஆதரித்து வந்தவர்கள் ஆங்கிலேய அரசாட்சிக்குட்பட்ட இடங்களில் மிஸியோனை நாட்டி ஆதரிக்கக்கூடாமை கண்டு, ஆங்கிலேய தர்ம சங்கத்தாராகிய கிறிஸ்தவ அறிவு விர்த்தி சங்கத்தாரின் உதவியைத் தேடி, அவர்கள் ஆதரவிலே சென்னையில் மிஸியோன் சபைகளை ஸ்தாபிக்க ஆசித்தார். மேற்கூறிய சங்கத்தாருக்கு அவரெழுதிய விண்ணப்பத்திற்குப் பதில்வர இரண்டு வருஷம் * சென்றமையால், 1728-ம் வருஷம் ஆகஸ்டு மீ வரைக்கும் அவர் சென்னை முத்தியாலு பேட்டையில் குடிக்கூலிக்கு ஒரு வீட்டையமர்த்தி, அதிலே தமிழ்ப் பள்ளிக்கூடம் ஒன்றை ஸ்தாபித்து, அஞ்ஞானப் பிள்ளைகளுக்கு அதில் படிப்பித்து வந்ததுமன்றி, காலை 9 மணி முதல் 10 மணி வரையில் அப்பள்ளிக்கூடத்திற்கு எதிரே நின்று, அஞ்ஞானிகளுக்குச் சுவிசேஷத்தை அறிவித்தார். அந்த வருஷம் செப்டெம்பர் மீ 26 உ ஒரு அஞ்ஞானியும் அவன் இரண்டு பிள்ளைகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர் அவ்விடத்தில் தெலுங்கு பாஷையைப் படித்து, சில வருஷங்களுக்குள் சத்தியவேத புத்தகத்தையும் வேறு சில புத்தகங்களையும் அப்பாஷையில் மொழிபெயர்த்தார். பிறகு இந்துஸ்தானி பாஷையையுங் கற்று, அதற்கு ஒரு இலக்கணம் எழுதினதுமன்றி, அந்தப் பாஷையிலும் சில புத்தகங்களை மொழிபெயர்த்தார் அவருக்கு ரோமான் குருக்கள் இடைறுகள் செய்தும், தெய்வ ஒத்தாசையால் அவர் 1728-ம் வருஷமுதல் 1730-ம் வருஷத்துக்குள் 206 ஆத்துமாக்களுள்ள ஒரு சபையைச் சேர்த்தார். 1730-ம் ௵ சர்த்தோரியுஸ் ஐயர் அவருக்கு உதவியாக வந்தார். 1731-ம் ௵ சபையார் தொகை 224. 1732-ம் ௵ கைஸ்தர் ஐயர் உதவிக்கு வந்தது குல்ச்சையர் வேலைக்கு இடையூறாயிற்று. உதவிக்கு வந்த 2 ஐயர்மாரும் 1737-ம் ௵ கடலூருக்குப் போனவுடனே அவர் 100 ஆத்துமாக்களைச் சபையில் சேர்க்கக் கூடிய

* இக்காலத்தில் சென்னை கவர்னர்களாயும், மற்றும் பெரிய உத்தியோகஸ்தர்களும் அவருக்குத் துணைநின்று பொருளுதவி செய்தார்கள். (vide Our oldest Mission by A. Westtcot, M. A.)



CH. TH. WALTHER — வால்தர் ஐயர்.

(24-ம் பக்கம் பார்க்க)

தாயிற்று. அவர் 1742-ம் வருமளவும் சென்னையில் சேர்த்த ஆத்துமாக்கள் 700. மிகுந்த வரம்பெற்றவரும் உழைப்பாளியுமாகிய இந்த குரு 1743-ம் ௵ சீமைக்குத் திரும்பிப்போய், ஹல்லே நகரத்தில் வசித்து 1760-ம் ௵ கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். *

ஷுல்ச்சையரிடத்தினின்று சென்னைச் சபையை ஒப்புக்கொண்டவர் பாவ்ரீசையர். ** கி. அ. வி. (C. K. S.) சங்கத்தார் கேட்டுக்கொண்டதன்பேரில் தரங்கை ஐயர்மார் இவரைச் சென்னைக்கு அனுப்பினார்கள். பாவ்ரீசையர் சென்னைச் சபையை ஒப்புக்கொண்ட காலத்தில் அது நல்ல சீரில் இருந்ததில்லை. அவர் ஒப்புக்கொண்ட ஆத்துமாக்களின் தொகை 240. உலாந்தாக்காரருக்குச் சொந்தமாயிருந்த பழவேற்காட்டில் இருந்த கிறிஸ்தவர்களின் தொகை 25. பாவ்ரீசையர் சென்னைக்குப் போகுமுன் அங்கிருந்த கிறிஸ்தவர்கள், மகமதியர் ஆளுகைக்குட்பட்ட நானாவிடங்களிலும் சிதறியிருந்தார்கள். பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையோர் பாளையக்கார நாய்க்கரின் அடிமைகளும் துரைகள் வீட்டு வேலைக்காரருமாயிருந்ததால், தேவாராதனைக்கு வருடத்தில் ஒருமுறைகூட வருவது கஷ்டம். கிறிஸ்துமார்க்கத்துக்கு அடாத அஞ்ஞான சடங்குகளைச் சபையாரில் அனேகர் அனுசரித்தார்கள். பாவ்ரீசையர் கிறிஸ்தவர்களைச் சீருக்குக் கொண்டுவரப் பிரயாசப்பட்டும், ஆராதனை செய்யத்தக்க கோவில் இல்லை. ஐயர்மார் குடியிருந்த ஒரு வீடுமாத்திரம் மிஷியோனுக்குச் சொந்தமானதாய் அஞ்ஞானிகளின் வீடுகளால் சூழப்பட்டிருந்தது. அந்த வீட்டின் முன்பாகத்தில் பாவ்ரீசையர் ஞாயிறுதோறும் காலையிலும் மாலையிலும் ஆராதனை செய்தார். சேரிகளிலும் கிறிஸ்தவர்களுக்காக ஆராதனை வைக்கப்பட்டது. அங்கங்கே பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து வேத அறிவு விர்த்தியாவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

சுவிசேஷ லுத்தரன் சபையின் சுத்த போதக சித்தாந்தத்திற்கு வேறுபடாமல் போதித்துவந்தவராகிய அந்த ஐயருக்கு 1732-ம் ௵ மனவருத்தமுண்டாவதற்கான ஒரு சங்

---

* இவர் தமிழில் மொழிபெயர்த்த ஞான நூல்களில் ஞானக் கண்ணாடி, ஞானமந்திர செல்வ பூங்காவனம் விசேஷித்தவை.

** இவர் ஜீவிய சரித்திரக்குறிப்புகளை வேதாகம மொழிபெயர்ப்பைப்பற்றிய அனுபந்தத்தில் பார்க்க.

கதி நடந்தது. 1737-ம் வருஷம் கூடலூருக்குப் போன கைஸ்தர் ஐயர் கி. அ. வி. சங்கத்தாரின் அனுமதியின் பேரில் பாவரீசையரோடு சென்னையில் வேலைபார்க்க 1743-ம் வருஷம் கூடலூரினின்று அவ்விடம் திரும்பிப்போனார்.

Geister.

அவர் பாவரீசையரைப்போல் லுத்தரன் குருவாயிருந்தும், அங்கிலேய சபையின் ஞானோபதேசங்களைப் பள்ளிக்கூடங்களில் உபயோகிக்கும்படி உத்தரவனுப்ப மேற்கூறிய சங்கத்தாரை இரகசியத்தில் கேட்டு, உத்தரவு பெற்று, அதை நிறைவேற்றப் பிரயாசப்பட்டார். இதனால் பாவரீசையர் மனம்நோவடைந்து கைஸ்தரையரோடு சமபோசனம் செய்ய மனமற்றவரானதுமன்றி, ஹால்லே பட்டணத்திலிருந்த உபகாரிகளுக்கு இதைப் பற்றி ஒரு கடிதமும் எழுதினார். இங்கிலாந்து சபையின் ஞானோபதேசத்தையல்ல, லுத்தரன் சபையின் ஞானோபதேசத்தையே சபைகளில் உபயோகிக்க வேண்டுமென்றும், சென்னையிலுள்ள ஐயர்மார் தரங்கையிலுள்ள ஐயர்மாரோடு ஏக ஐக்கியமுள்ளவர்களாய் வேலைசெய்ய வேண்டுமென்றும் பிராங்கே சாஸ்திரியார் கண்டிப்பாய் எழுதினதால் கைஸ்தர் ஐயரின் நோக்கம் சித்திபெறாமல் போயிற்று. இதை அந்த ஐயர் அறிந்து, 1746-ம் வருஷம் சென்னையிலிருந்து கூடலூருக்கும், அங்கிருந்து பத்தாவியாவிற்கும் சென்று, அத்தீவினின்று சீமைக்கு யாத்திரை செய்கையில் மரித்தார். பாவரீசையர் பிரயாசையால் கூடலூர் சென்னைச் சேகரங்கள் லுத்தரன் சபையின் ஐக்கியத்தில் நிலைத்திருந்தன.

பாவரீசையர் சென்னை மிசியோனை 46 வருஷகாலம் விசாரணைசெய்தார். 1732-ம் வருஷம் முதல் 1782-ம் வருஷம் மட்டும் அவரது நண்பராகிய பிரைத்தாப்தையர் அவருக்கு உதவியாயிருந்ததால் விசேஷித்த ஆசீர்வாதங்கள் உண்டாயின. அவர் காலமெல்லாம் பெரும்பாலும் யுத்தகாலமாயிருந்தது.

Breithaupt.

1746-ம் ஆண்டு அவர் உதவியின்றி மிசியோனை விசாரித்து வருகையில் பிராஞ்சுக்காரர் சென்னையைப் பிடித்துக்கொண்டார்கள். அதனால் மிசியோன் சொத்துக்களுக்கு நஷ்டமுண்டாகி, ஐயர் தமது மந்தையோடு டச்சுக்காரர் ஆதீனமான பழவேற்காட்டுக்கடுத்த கருமணலுக்குப் போகவேண்டியதாயிற்று. அங்கவர் மூன்று வருஷம் தங்கியிருந்து, பிறகு சென்னைக்குத் திரும்பினார்.



அவர் கருமணலில் வசித்த மூன்று வருஷங்களில் சத்திய வேத மொழிபெயர்ப்போடு ஞானப்பாட்டுகளின் மொழிபெயர்ப்பையும் செய்யத் துவக்கினார். இவ்விரு புத்தகங்களிலும் அவரது வித்வ சாமர்த்தியத்தையும் தெய்வபக்தியையும் தெளிவுறக் காணலாம். (அனுபந்தம் பார்க்க).

T. Bible & Hymnbook.

அவர் மொழிபெயர்த்த ஞானப்பாட்டுகள் முதல் விசை 1774-ம் வருஷம் சென்னை வேப்பேரியில் அச்சிடப்பட்டன. இதற்குப் பின் அவைகள் மூன்றுமுறை வேப்பேரியிலும் இரண்டுமுறை தரங்கன்பாடியிலும் பதிப்பிக்கப்பட்டன. எத்தனையோ ஞானப்பாட்டுப் புத்தகங்கள் இதற்குப் பிறகு வெளிப்படினும், பாவரீசையர் பாட்டுகள்போல் சொல்லும் பொருளும் சுவையுறச் சேர்ந்தவை அரிய.* துன்பகாலமே அவற்றிற்குச் சுவையூட்டிற்றென்று சொல்லலாம். அவரியற்றிய இலக்கண நூலும், தமிழ் - இங்கிலீஷ், இங்கிலீஷ் - தமிழ் அகராதிகளும் மிகச் சிறந்தவை.

அவர் கருமணலிலிருந்து சென்னைக்குத் திரும்பினபோது செப்புத்துறை ஒன்றுதான் மிசியோனுக்கு மீந்திருந்தது. பிறகு அடுத்த மூன்று வருஷக்காலமும் கஷ்டகாலமாயிற்று. எப்படியெனில், யுத்தகாலத்தில்தான் ஒத்தாசை வந்தது.

* சில வருஷங்களுக்கு முன்னே ஒரு ஐயர் சென்னபட்டணத்தைச் சேர்ந்த சூளைக் கடைத்தெருவில் பிரசங்கம்பண்ணிக்கொண்டிருக்கிறதை ஒரு பண்டாரம் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்து, பிரசங்கம் முடிந்த பின்பு, அந்த ஐயருடைய வீட்டிற்குப்போய்த் தான் கேட்ட பிரசங்கத்தின் பொருளை விளக்குகிற ஒரு நல்ல நூல் தன்னிடத்தில் உண்டென்று சொல்லி, உட்கார்ந்து, கச்சையிலிருந்து வெகுபத்திரமாய்ச் சுற்றிக்கட்டப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தை அவிழ்த்துக் காண்பித்து, தான் அதிலிருந்து மனப்பாடம் பண்ணியிருந்த வாக்கியங்களை வீரியத்தோடு பாராயணம் பண்ணினான். ஐயர் அந்தப் புத்தகத்தை எடுத்துப் பார்த்து, அதற்குப் பெயர் முதலானவை யடங்கிய முகப் பேடுகள் இல்லாதிருந்தும் அது பெப்ரீசியுஸ் ஐயர் ஞானப்பாட்டுப் புஸ்தகம் என்று அறிந்துகொண்டு, இந்தப் புஸ்தகத்துக்குப் பெயர் என்னவென்று பண்டாரத்தைக் கேட்டார். புஸ்தகத்துக்குரிய சரியான பெயர் அவனுக்குத் தெரியாமையால், இது நெஞ்சுருக்கி நூல் என்று அதற்குப் பெயரிட்டுச் சொன்னான். அந்தப் பெயர் பெப்ரீசியுஸ் ஐயரின் ஞானப்பாட்டுப் புஸ்தகத்துக்குத் தகுந்த பெயர்தான் என்று அதின் பொருளை உணர்ந்தவர்கள் ஒத்துக்கொள்ளுவார்கள். — (கிறிஸ்துமார்க்கம் இந்துதேசத்தில் விருத்தியான சரித்திரம். 283-ம் பக்கம்.)

இராசாங்கவிஷயத்தில் தலையிட்டுக் கெடுதல் செய்த ரோமான் குருக்களைத் தண்டிக்க விரும்பின ஆங்கிலேயர் பட்டணத்திலிருந்த ரோமான் கோயிலை இடித்துப்போட்டு, வேப்பேரியிலிருந்த ரோமான் கோயிலைப் பாவரீசையர் அடைந்த நஷ்டத்திற்கு ஈடாக 500 வராகன் ரொக்கத்தோடு அவருக்கு ஒப்புவித்தார்கள். வேப்பேரிக் கோயில் கிடைத்தது முதல் சென்னை மிஷியோன் வேப்பேரி மிஷியோன் என்னப்பட்டது. 1752-ம் வருஷம் சமாதானமும் சந்தோஷமுமாய் முடிந்தது.

Vepery Mission.

அடுத்த ஆறு வருஷகாலம் ஊருக்கும் சபைக்கும் அமைதலான காலமாயிருந்தது. ஆயினும், 1758-ம் ௵ திரும்பவும் பிரான்சியர் சென்னைக்கு வரவே, சென்னைச் சபையார் பழவேற்காட்டில் அடைக்கலம் புகுந்தார்கள். இரண்டு ஐயர்மாரும் தங்கள் இடம் விட்டுப் பெயரவில்லை. பிரான்சிய சேனாபதி அவர்களைப் பாதுகாக்க வாக்களித்து, அவர்களைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளும்படி சேவகருக்கும் உத்தரவு செய்தான். செய்தும், அவன் உத்தரவுபோல் நடக்கவில்லை. ஐயர்மார் கஷ்டநஷ்டங்களைப் பொறுக்கமாட்டாமல் முன்போல் பழவேற்காட்டிற்குப் போக வேண்டியதாயிற்று. என்றாலும், அங்கே அவர்கள் முன்போல் அதிககாலம் தங்கியிராமல் சில மாசங்களுக்குள் திரும்பி தங்கள் வேலைகளை அமைதலாய் நடத்தக் கூடியவர்களானார்கள்.

1759-ம் ௵ கொடிய பஞ்சமுண்டானதால் குருமாரும் சபையாரும் பட்ட கஷ்டநஷ்டங்கள் மிகுதியாயிருந்தும், பரம பிதாவின் கரம் குறுகிப்போனதில்லையென வெளிப்பட்டது. 1761-ம் ௵ இங்கிலீஷ்காரர் பிரான்சியரை ஜெயித்து, புதுச்சேரியைத் தங்கள் வசப்படுத்தி, அங்கிருந்த ஒரு அச்சியந்திரத்தைச் சென்னைக்குக் கொண்டுவந்து, மிஷியோனுபயோகத்திற்காக அதைப் பாவரீசையருக்குக் கொடுத்தார்கள். அதனால் மிஷியோனுக்கு அதிகப் பயனுண்டாயிற்று. கிறிஸ்தவர்களில் அநேகருக்கு அச்சுக்கூட வேலை ஜீவனார்த்த வழியாயிற்று. 1763-ம் ௵ வாந்திபேதி இந்த சமஸ்தானத்தில் முதல் முதல் கண்டு திருப்பதி முதலான இடங்களில் அநேகரை வாரிக்கொண்டு போயிற்று. பிரைதாப்தையர் மனைவியும் சபையில் 44 பேரும் மரணமடைந்தார்கள்.

இதனோடு சென்னைச் சபைக்குச் சங்கடகாலம் ஒழிந்துவிட்டதென்று சொல்ல ஏலவில்லை. சில வருஷங்களுக்குப்



பின் ஹைதர் அலி, திப்பு சுல்தான் என்ற கொடியர்களால் உண்டான யுத்தம் தேசத்திற்கும் சபைக்கும் பெரும் நஷ்டத்தை உண்டுபண்ணிற்று. இக்காலத்தில் சுவார்ச்சையர் முதலிய சில ஐயர்மாரும் இங்கிலீஷ் துரைகளிற் சிலரும் தங்கள் பணத்தை பாவரீசையரிடத்தில் பத்திரப்படுத்தி வைத்தார்கள்.

F. in trouble.

அவரோ அத்தொகையால் சபைக்குப் பிரயோசனமுண்டாக்கக் கருதி, பலரிடத்திலும் வட்டிக்கு விட்டார். இது விஷயத்திலே தங்கள் சுயபொழிலை நாடி, அவரைத் தங்கள் மனம்போல் நடத்தின துருபாஷ் உபதேசியார் * முதலிய உண்மையற்ற ஊழியர்களாலும், யுத்த முகாந்திரத்தினாலும், அவர் இரண்டு இலட்சம் ரூபாய்போல் நஷ்டமடைந்து, வெகு பெருடைய மனஸ்தாபத்துக்கும் ஆளானார். அவர் கடன்காரருக்குப் பாதகனாகி இருமுறை காவலிலும் இருந்தார். இப்படிப்பட்ட துன்பத்திலும் அவர் முகமலர்ச்சி நீங்கினதில்லை, ஈகைக்குணம் குறைந்ததுமில்லை என்பதற்குப் பல திருஷ்டாந்தங்கள் உண்டு. கர்த்தர் அவரை ஆற்றித்தேற்றிப் பலப்படுத்தி வந்தார்.

முப்பத்தெட்டு வருஷம் உண்மையாயுழைத்த பிரைதாப்தையர் 1782-ம் ௵ இறந்துபோய், பாவரீசையர் தனித்து வேலை செய்வதைக் கண்ட ஐயர்மார் அவருக்கு உதவியாக கேரிக்கே ஐயரைச் சென்னைக்கு அனுப்பியும், இந்த ஏற்பாட்டுக்கு அவர் சம்மதியாமல் 1788-ம் ௵ மட்டும் தனித்தே சபையை விசாரித்துவந்தார். அந்த வருஷத்தில்தான் அவர் தமது எழுபத்தேழாம் வயதில் சென்னை வட்டத்து வேலையை கேரிக்கே ஐயருக்கு ஒப்புவித்தார். ஒப்புவித்தும், சபையார் பேரிலிருந்த கரிசனமும் கவலையும் அவருக்குக் குறையவில்லை. பலவிதமான இக்கட்டுக்குள்ளான தமது ஊழியனைக் கர்த்தர் 1792-ம் ௵ ஜனுவரி மீ 23உ தம்மிடம் அழைத்துக்கொள்ளச் சித்தமானார். பக்தியில் சிறந்து, 'சந்நியாச குரு' என்று யாவராலும் மதிக்கப்பட்டிருந்த அவருக்காக மிகவும் பிரலாபித்த திரள்கூட்டத்தின் நடுவே மறுதினத்தில் அவர் சடலம் வேப்பேரிக் கோயிலில் ** அடக்கம்பண்ணப்பட்டது.

---

* See Taylor's Memoirs page 47.

** வேப்பேரிக் கல்லறைத் தோட்டத்தில் அடக்கம்பண்ணப்பட்டதாக டெய்லர் ஐயர் எழுதியிருக்கிறார். (Memoirs page 66).

சென்னைச் சபையை ஒப்புக்கொள்ளுகிற காலத்தில் கேரிக்கே ஐயருக்கு வயது 46. அவர் 1742-ம் ௵ பொமரானியா நாட்டிலுள்ள கோல்பெர்க் பட்டணத்தில் பிறந்து, ஹால்லே சர்வகலாசாலையில் கல்விகற்று, அதே நகரத்திலிருந்த அநாத பாடசாலையில் உபாத்தியாயரானார். 1765-ம் ௵ அவர் கி. அ. வி. சங்கத்தாரின் மிஷியோனரியாக அழைக்கப்பட்டு, யாத்திரையில் உண்டான பல மோசங்களுக்குத் தப்பி, 1767-ம் ௵ கூடலூர் வந்து சேர்ந்தார். அங்கே அவர் பத்து வருஷகாலம் வேலை செய்தார். 1778-ம் ௵ அவர் சுவார்ச்சையரோடு தரங்கைக்குப் போய் இராயப்ப நாட்டையரின் அபிஷேகத்தில் உதவிபுரிந்தார். பிறகு அவர் சென்னை, கூடலூர், நாகப்பட்டணம் என்ற இடங்களுக்கு அலைந்து திரிந்து, மிஷியோன் வேலையை நடத்திவந்தார். 1788-ம் ௵ முதல் அவர் சென்னையைத் தமக்குப் பிரதம ஸ்தானமாக்கியும், நாகை முதலிய பலவிடங்களுக்கும் பயணம் செய்து சுவிசேஷம் பிரசங்கித்து வந்தார். அவருடைய உண்மை, பொறுமை, சுறுசுறுப்பை எவரும் காணக் கூடியதாயிருந்தது. அவர் திருநெல்வேலிக்கு முதலாய்ப் பிரயாணம் போய் வெகுதூரம் சுற்றி, அஞ்ஞானிகளுக்குப் பிரசங்கித்து, ஒரு சமயத்தில் ஆயிரம் பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். சென்னைக்கு எண்பது மைல் தூரத்திலுள்ள வேலூருக்கு அவர் அடிக்கடி போய், அங்கே காசநாயக்கன் என்ற உபதேசியாரால் சேர்க்கப்பட்டு, பாவரிசையரால் (1772-ம் ௵) ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த சபையைச் சந்தித்து, அங்கிருந்த ஆங்கிலேயப் பட்டாளத்தாருக்கும் பிரயோசனமாக ஆராதனை நடத்திவருவார். 1803-ம் ௵ செப்டெம்பர் ௴ அவர் வேலூருக்குச் செய்த பயணம் கடைசிப் பயணமாயிருந்தது. அவர் அக்டோபர் ௴ 2௳ வியாதிப்பட்டு இரவில் புறப்படவேண்டுமென்றிருக்கையில் மரண அவஸ்தைக்குள்ளாகி: நான் போகிறேன் என்று தன் வேலைக்காரனுக்குச் சொல்ல, அவன் அவர் பட்டணத்துக்குப் போகிறதைக் குறித்துப் பேசுகிறதாக நினைத்து: ஐயா, தாங்கள் மெத்த பலவீனமாயிருக்கிறீர்களே என்றான். அவரோ: சும்மாயிரு, நான் போகிறேன் என்று சொல்லி, கொஞ்சங் கஞ்சி குடித்துப் படுத்துக்கொண்டார். நடுச்சாமத்தில்: என் பரமபிதாவே, என் இயேசுவே என்று உரக்கக் கூப்பிட்டுப் பரம நகருக்குச் செல்லலானார். அவருக்

Gericke.



காகப் பிரலாபித்தோர் கூட்டம் பெரிது. அவரது தேகத்தை வேப்பேரிக்குக் கொணர்ந்து, அக்டோபர் ௴ 6௳ மிகச் சிறப்பாய் அடக்கம்செய்தார்கள். அவருடைய மரண செய்தியைக் கேட்ட தரங்கை ஐயர்மார் தங்களிடமிருந்த ரொட்லர் ஐயரைச் சென்னைக்கு அனுப்பினார்கள். ஆயினும், கேரிக்கையரோடு சென்னைச் சுவிசேஷ லுத்தரன் சபையின் செழித்த காலம் முடிந்ததெனச் சொல்லவேண்டும்.

---

## உ. கூடலூர் மிஷியோன்.

கூடலூர் மிஷியோன் சீகன்பால்கு கிரேஷ்டர் காலத்திலேயே ஆரம்பமானதென ஒருவாறு சொல்லலாம். அவரங்கே சில சமயங்களில் சுவிசேஷ பிரசங்கம் செய்ததுண்டு. 1717-ம் ௵ கிரீண்ட்லர் ஐயர் அங்கு ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தார். மறு வருஷத்தில் சீகன்பால்கு அதை விசாரிக்கப் போனார். 1726-ம் ௵ குல்ச்சையர் சென்னைக்குப் போம்பொழுது கூடலூரைச் சந்தித்தார். அங்கிருந்த கவர்னர் முதலிய பெரிய துரைமார் அவரைப் பட்சமாய் ஏற்றுக்கொண்டார்கள். அவர் அவ்வூரிலும் மாதேவிப்பட்டணத்திலுமுள்ள அஞ்ஞானப் பள்ளிக்கூடங்களைப் பார்த்து, அஞ்ஞானிகளுக்குப் பிரசங்கம் செய்தார்.

Ziegenbalg, Gründler.

1737-ம் ௵ சென்னையிலிருந்து சர்த்தோரியுஸ் கைஸ்தர் என்ற ஐயாமார் கூடலூருக்கு அனுப்பப்பட்டு, தேவநாமத்தில் அங்கே திருப்பணி செய்யத் தொடங்கினார்கள். மறு வருஷம் சர்த்தோரியுஸ் இறந்துபோனார். கைஸ்தர் ஐயருக்கு * உதவியாக கியர்நாந்தர் ஐயர் 1740-ம் ௵ அங்கு வந்து பதினெட்டு வருஷக்காலம் அங்கே சுவிசேஷ வேலை செய்தார். இவர் 1745-ம் ௵ செல்வார்க்குள்ள ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தமிழ வாலிபனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தபோது, அவனுடைய மூத்த சகோதரன் ஐயர்பே

Sartorius, Geister & Kiernander.

---

* கைஸ்தர் ஐயர் 1746-ம் ௵ மிஷியோனை விட்டுப் பிரிந்து போனார்.

ரில் கவர்னரிடம் பிரியாது செய்ததுமன்றி, ஐயரிடம் ஏராளமான சனங்களைத் திரட்டிக்கொண்டுவந்து, அச் சகோதரனை விட்டுவிட வேண்டுமென்று கலகம் பண்ணினான். கியர்னந்தர் சாந்தசித்தராய் அவர்களுக்கு முன்னின்று: நீங்கள் இத்தனை பேர் இங்கே வந்தது எனக்குச் சந்தோஷம், உங்களுக்கு நான் இப்போது பிரசங்கஞ் செய்யக்கூடியதாயிருப்பதால், கவனமாய்க் கேளுங்கள் என்று சொல்லவே, சனங்கள்: அது எங்களுக்கு வேண்டாம், திருப்புள்ளியைக் (ஞானஸ்நானம் பெற்ற பையனை) கொண்டுபோக வந்தோமேயன்றி, பிரசங்கம் கேட்பதற்கு நாங்கள் வரவில்லை என்று சொல்லி, பலவாறாய்ப் பேசினார்கள். அப்பொழுது ஐயர்: அண்ணனுக்குத் தம்பி அடிமையல்ல, அவன் தனக்கிஷ்டமானபடி அண்ணனை விட்டுப் பிரிந்து வேறிடம் போக அதிகாரமுள்ளவன். இப்பொழுது சசாக்கு என்ற பெயர்பெற்ற திருப்புள்ளித் தன் இஷ்டம்போல் தரங்கைக்குப் போய்விட்டான் என்பதாகத் தெரிவித்தார். அப்பொழுது அனேகர் கலைந்து போனார்கள். சிலர் கூக்குரல் பண்ணிக்கொண்டு கவர்னரிடம் போனார்கள். அவர்கள் ஜயம் பலிக்கவில்லை. சசாக்கு என்பவர் பெயர்பெற்ற உபதேசியாராய் அனேக வருஷகாலம் மிஷியோனில் உண்மையாய் உழைத்தார். அக்காலத்தில் அவருடைய தமையன் அவரோடு சமாதானப்பட்டுத் தன் பிதிரார்ஜிதத்தில் பங்குபிரித்துக்கொடுக்க விரும்பியும், அதை ஏற்றுக்கொள்ளாமல் அந்த உபதேசியார் தமது பங்கையும் தமது தமையனுடைய அனுபோகத்துக்கே விட்டுவிட்டார். தமையன் மரித்தபின் அவனுறவோர் சசாக்கு உபதேசியார் பாகத்தை அவருக்குக் கொடாமல் அபகரித்துக்கொண்டார்கள்.

1759-ம் வரு கியர்னந்தருக்கு உதவியாக ஹித்தெமன் ஐயர் (Hüttemann) வந்தார். அது யுத்தமும் கலகமும் மிகுந்திருந்த காலம். பிராஞ்சுக்காரர் கூடலூரை முற்றுகைபோட்டு 1758-ம் வருஷம் பிடித்துக்கொண்டார்கள். அதனால் ஐயர்மாரும் சபையாரும் ஊரைவிட்டு வலசை போக வேண்டியதாயிற்று.*

Hüttemann.

* கியர்னந்தர் வங்காளத்திற்குப் போய் அங்கே ஒரு மிஷியோனை ஸ்தாபித்தார்.



இரண்டு வருஷங்களுக்குப் பின் ஹித்தெமன் ஐயர் கூடலூருக்குத் திரும்பிவர, உண்மையும் திறமையும் உள்ள கேரிக்கே ஐயர் அவருக்கு உதவிக்காரராய் ஏற்பட, மறுபடியும் சில காலம் அமைதியாய் வேலை நடக்கக் கூடியதாயிற்று. பிறகு பிராஞ்சுக்காரராலும், ஹைதர் அலி, திப்பு சுல்தான் முதலியவர்களாலும் உண்டான யுத்தங்கள் கலகங்களினாலும், பஞ்சம் கொள்ளை நோயினாலும், நாடு பாழாய்ப்போயிற்று. இந்தத் துன்பகாலத்தில் ஹித்தெமன் ஐயரும் இறந்துபோனார். கேரிக்கே ஐயர் அங்கே தனித்திருந்தும், ஐரோப்பியருக்கும் சுதேசிகளுக்கும் வெகு உதவியாயிருந்தார். அவரும் கூடலூரிலேயே தங்கியிராமல் அனேகமாய் நாகபட்டணத்தில் தரித்து, கூடலூருக்குப் போக்கு வரத்தாயிருந்தார். அங்கேயே குடியிருப்பாய் வந்தவர் ஹொல்ஸ்பெர்க் (Holzberg) ஐயர். அவர் 1824-ம் வரு மரித்தார்.

## ௩. திருச்சிறுப்பள்ளி மிஷியோன்.

1757-ம் வரு தஞ்சாவூருக்குப் போன கோலோப்பையர் அங்கிருந்து திருச்சிறுப்பள்ளிக்குப் போனாரென்பது மெய்யேயாயினும், திருச்சிறுப்பள்ளியில் சுவிசேஷத்திற்கு 1760-ம் வருஷம் வழிதிறந்தது சோதிநாயக்கன்* என்னும் ஒரு சிப்பாயின் முயற்சியால் என்று சொல்வது நியாயம். இவர் சாதியில் பஞ்சமர். ரோமான் மார்க்கத்தை அனுசரித்திருந்த இவர் தரங்கை ஐயர்மார் பிரசுரித்திருந்த பக்தி நூல்களை வாசித்து, சுத்த சுவிசேஷத்தின் அறிவைப் பெற்றார். இவர் நமது சபையிற் சேர்ந்து, உபதேசியாராகி, திருச்சிறுப்பள்ளியிலிருந்த தமது பந்துக்களுக்கும் புறமதஸ்தருக்கும் சுவிசேஷத்தைத் அறிவிக்கத் தொடங்கினார். பிற்பாடு இவரோடு தேவநேசன் இன்னாசிமுத்து என்ற உபதேசிமாரும் பக்தி வைராக்கியத்துடன் வேலைசெய்தார்கள். இதனால் அவ்வூரில் உண்டான நல்ல சபையைக்குறித்துக் கேள்விப்பட்ட தரங்கை குருமா

Sodi Naiken.

* இவர் பெயரை ஹல்லே ரிப்போர்ட்டில் "செட்டி நாயக்கன்" என்றெழுதியிருக்கிறது.

ரில் தாமே (Damo) என்ற ஐயரே (1761) முதல் முதல் திருச்சினாப்பள்ளிக்குப் போய் சனங்களைச் சந்தித்து, சுவிசேஷம் பிரசங்கித்தவர். அவர் இச்சமயத்தில் அங்கிருந்த ஜர்மானியர்களுக்குப் பிரயோசனமாக ஆராதனை நடத்தி, கர்த்தருடைய இராப்போசனம் பரிமாறினார்.

Schwarz.

இவருக்குப்பின், 1762-ம் ௵ தஞ்சாவூருக்குப் போன சுவார்ச்சையரும் கிலேன் ஐயரும் திருச்சினாப்பள்ளிக்குப் போனார்கள். அவ்விடயே வாசஞ்செய்து மிசியோன் வேலை செய்வதனால் பெரும் பயன் விளையுமென்று கண்ட சுவார்ச்சையர், கிலேன் ஐயரைத் தரங்கைக்கு அனுப்பிவிட்டு, தாம் திருச்சியில் நிலைத்திருந்தார்.

கிறிஸ்தியான் பிரதரிக் சுவார்ச்சு என்ற இந்த மகானுபவர் திருச்சினாப்பள்ளிக்குப் போகுமுன் அவர் ஜீவியசரித்திரத்தில் நடந்த சில முக்கிய விசேஷங்களை நாம் அறிந்திருப்பது நலமாம். அவர் புருஷியாவிலுள்ள சொன்னென்பூர்க் என்ற ஊரில் 1726-ம் ௵ அக்டோபர் ௴ 26-ம் ௳ பிறந்தார். அவர் சிறு பிள்ளையாயிருக்கும்பொழுதே மரித்துப்போன அவருடைய தாய், தன் மகன் தெய்வ ஊழியக்காரன் ஆகவேண்டுமென்கிற தன் விருப்பத்தைத் தன் புருஷனுக்கும் சில குருமாருக்கும் வெளியிட்டிருந்ததாக அவர் சரித்திரத்தில் வாசிக்கிறோம். இவர் ஹால்லே பட்டணத்தில் பேர்பெற்ற அ. ஹெ. பிராங்கே சாஸ்திரியாரின் குமாரரான தெய்வபத்தியுள்ள பிராங்கே ஐயரிடத்தில் வேத சாஸ்திரங் கற்று, முந்த அவ்வூர் வித்தியாசாலையில் உபாத்திமைத்தொழில் செய்தார். அக்காலத்தில் அங்கிருந்த பழைய ஐயராகிய குல்ச்சையரோடு பழகவும் கொஞ்சந் தமிழ் படிக்கவும் அவருக்குச் சமயங் கிடைத்தது. இந்தியாவில் ஐயர்மார் தேவையென்று கேள்விப்பட்டபோது, அவர் தமதூருக்குப் போய், தமது பிதிரார்ஜிதத்தைத் தமது சகோதரனுக்கும் சகோதரிகளுக்கும் கொடுத்துவிட்டு, தமது தகப்பனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு வேறிரண்டு குருமாரோடு 1741-ம் ௵ ஆகஸ்டு மாதம் கோப்பனுகன் நகரத்துக்குப் போய், அங்கே குருப்பட்டம் பெற்றார். பிறகு இங்கிலாந்துக்குச் சென்று, லண்டன் நகரத்தில் தங்கி, இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக்கொண்டு, அடுத்த ஜனுவரி ௴ 22 ௳ கும்பினியாருடைய கப்பலேறி, பெருங்காற்றினாலுண்டான அபாயங்களுக்குத் தப்பி,



ஜூன் ௴ 16 ௳ கூடலூர் கரையில் வந்து இறங்கினார். அவரையும் அவரோடு வந்த இருபோதகரையும் விதெபுரோக் ஐயர் தரங்கைக்கு அழைத்துவந்தார்.

சுவார்ச்சையர் தரங்கையில் தமிழ்ப்பாஷையைக் கற்று, அங்கிருந்த ஐயர்மாரோடு நற்சிநேக சம்பந்தமாய்ப் பதினொரு வருஷகாலம் வேலைசெய்தார். காவேரியாற்றிற்குத் தெற்கே இருந்த மிசியோன் பள்ளிக்கூடங்களெல்லாம் அவருடைய விசாரணையில் வைக்கப்பட்டிருந்தன. அவர் பள்ளிக்கூட விசாரணைக்காகப் போம்பொழுதெல்லாம் புறமதஸ்தர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தார்.

அவரோடு இத்தேசத்திற்கு வந்த அவரது சகபாடியும் நண்பருமாகிய போல்சனுகன் ஐயர் 1756-ம் ௵ செப்டெம்பர் ௴ தரங்கன்பாடியிலிருந்து நீக்கோபார் தீவுகளுக்குப் போய், அத்தீவாரைக் கிறிஸ்தவர்களாக்கப் பிரயாசப்படுகையில் நொவெம்பர் ௴ இறந்துபோனார். இதைச் சுவார்ச்சையர் கேள்விப்பட்டு, அருந்துயரத்திற்குள்ளானார். ஆயினும், முந்தின வருஷம் இத்தேசத்திற்கு வந்த தாமே (Dame) ஐயரைத் தெய்வபயமுள்ளவரென்று அறிந்து, அவரைத் தமக்கு நெருங்கின சிநேகிதரும் ஜெபத்தோழரும் ஆக்கிக்கொண்டதால் ஆறுதலடைந்தார்.

இலங்கையில் வசித்த ஜர்மானியரின் வேண்டுகோளின் பேரில் தரங்கை ஐயர்மார் சுவார்ச்சையரை 1760-ம் ௵ அத்தீவுக்கு அனுப்பினார்கள். அவர் அங்கே ஏறக்குறைய ஐந்துமாசக்காலமிருந்து, யாழ்ப்பாணம், காலி முதலிய இடங்களுக்குச் சென்று, திருவசனத்தைப் பிரசங்கித்து (400 பேருக்கு) நற்கருணை பரிமாறி வந்தார். 1761-ம் ௵ அவர் சென்னப்பட்டணத்திற்குப் போய்த் திரும்பிவந்து, அடுத்த வருஷம் நாம் மேலே சொல்லியபடி தஞ்சைக்கும் திருச்சிக்கும் போனார்.

Sch. visits Ceylon &c.

அவர் திருச்சியைத் தமது வேலைக்கு மத்திய ஸ்தானமாக்கி, அங்கிருந்த ஐரோப்பிய பட்டாளத்தாருடைய ஆத்மரட்சிப்புக்காக மிகவுங் கவலைப்பட்டு, மேஜர் பிரஸ்தன் முதலிய துரைமக்களின் உதவியால் ஒரு ஜெபவீடும் பள்ளிக்கூடமும் கட்டுவித்தார். சில மாசக்காலத்திற்குள் அநேக அஞ்ஞானிகளும், பாப்புமார்க்கத்தாரும் அவரால் சபையில் சேர்க்கப்பட்டார்கள்.

1763-ம் வருஷம் ஜனவரி மீ அவர் கரூருக்குப் போய் இந்துக்களுக்குச் சுவிசேஷம் அறிவித்து வந்தார். அவர் மார்ச்சு மாதம் தஞ்சைக்குப் போயிருக்கையில் திருச்சிறுப்பள்ளி மருந்துக்கிடங்கு பற்றிக்கொண்டது. மாண்டவர்கள் தெய்வபயமுள்ள மூன்று ஐரோப்பியர் உள்பட 18 பேர். இது செய்தி கேள்விப்பட்டவுடனே அவர் திரும்பிவந்து, அங்கிருந்த போர்ச்சேவகருக்கும் மற்றோருக்கும் லூக். 13, 4-5ன் பேரில் பிரசங்கித்தார். இறந்துபோனவர்களின் பிள்ளைகளின் ஆதரிப்புக்காக ஐரோப்பியரிடத்தில் 330 வராகன் தண்டல் செய்து, ஆதரிப்புச் சாலையொன்றை ஸ்தாபித்தார்.

திருச்சிறுப்பள்ளியை ஆண்டுவந்த நவாபும் அவருடைய பிரதான மந்திரியும் சுவார்ச்சையரோடு விசேஷித்த நட்புக் கொண்டாடி வந்தார்கள். அவர்களுக்கு ஐயர் கிறிஸ்துவைக் குறித்து அடிக்கடி அறிவித்து வந்தார். அக்காலத்தில் உண்டான கொடிய பஞ்சத்தில் அவர் ஏழைகளுக்குச் செய்த உபகாரம் மிகுதி. அவருக்குப் பொருளுதவி செய்யக் கூடிய பிராஸ்தன் முதலிய தர்ம துரைகளும் ஊரில் இல்லாதிருந்ததால் அவருக்குப் பணமுட்டு அதிகமாயிருந்தது. அவர்கள் நவாபுக்கு விரோதமாய்க் கலகம் செய்த மகமது ஈசப்கான் என்பவனை அடக்க மதுரைக்குச் சேனைதளங்களுடன் போயிருந்தார்கள். மதுரை முற்றிக்கை நாட்பட்டிருந்தமையால் நோயாளிகள் காயப்பட்டவர்களின் தொகை அதிகரித்தது. இதன் நிமித்தம் மேற்கூறிய துரைமார் சுவார்ச்சையரை அங்கே அழைப்பித்தார்கள் (1764-ம் வருஷம்). அவர் அங்கே 500 பேர் போல் காயப்பட்டிருக்கக் கண்டார். நாற்றம் சகிக்கக்கூடாததாயிருந்தும், அவர் உற்சாகமாய் அவர்களுக்கு ஆறுதலும் எச்சரிப்புமான வசனங்களைச் சொல்லி வந்தார். ஜூன் 27 உ பிராஸ்தன் துரையும் காயப்பட்டு, சில வாரங்களுக்குப் பின் மரித்தார். சுவார்ச்சையர் வியாதிப்பட்டு, தம்மால் வேலை செய்யக் கூடாமை கண்டு, ஆகஸ்டு மீ 6 உ திருச்சிக்குத் திரும்பி, சிலகாலத்திற்குப் பின் சுகமடைந்தார். அக்டோபர் மீ மதுரை பிடிக்கப்பட்டது.

சுவார்ச்சையர் பட்டாளத்தில் செய்த வேலைக்காக நவாபு இனாம் கொடுத்த 600 வராகனை அவர் எடுத்துக்கொள்ளாமல், திருச்சி மிலிடேரிகளுக்கும் யுத்தத்தில் இறந்துபோன போர்ச் சேவகரின் பிள்ளைகளுக்காக ஸ்தாபித்த ஆதரிப்புப் பாடசாலைக்



கும் உபயோகப்படுத்தினார். சில காலத்திற்குப் பின் நவாபு அப்பாடசாலைக்காக 300 வராகன் கொடுத்தார்.

பிறகு சுவார்ச்சையர் 2 ஆ வராகன்போல் தண்டல் செய்து திருச்சிறுப்பள்ளிக் கோட்டையில் ஒரு பெரிய கோவிலைக் கட்டினார். அதற்கு 1765-ம் வருஷம் மார்ச்சு மீ 13-ம் உ அஸ்திபாரம் போடப்பட்டு மறுவருஷம் மே மீ முடிந்தது. பெந்தெகொஸ்தே பண்டிகையில் ஐயர் அதைப் பிரதிஷ்டை செய்து, அதற்கு கிறிஸ்தாலயம் எனப் பெயரிட்டார். அவர் இவ்வாலயத்தைக் குறித்து கர்மாளியாவுக்கு எழுதின கடிதமொன்றில்: "இதில் ஞாயிற்றுக்கிழமை 8 மணி முதல் 10 மணி வரைக்கும் தமிழருக்கும், 10 மணி முதல் இங்கிலீஷ்காரருக்கும், சாயங்காலம் 4 மணி முதல் போர்த்துகீசருக்கும் ஆராதனை செய்யப்பட்டு வருகிறது. நான் இங்கிலீஷ்காரருக்குச் செய்து வருகிற ஊழியத்திற்கு இதுவரைக்கும் சம்பளம் பெற்றவனல்ல. நான் சுயாதீனமாயிருக்க அபேட்சிக்கிறதினால் அவர்களிடத்தில் சம்பளம் பெற எனக்கு விருப்பமில்லை" என்றெழுதியிருந்தார்.

Christ Church.

கோயில் வேலை நடந்தேறி வருகிற வருஷத்தில் சுவார்ச்சையரின் விசேஷித்த இஷ்டராகிய தாமே ஐயர் தஞ்சாவூர்ச் சபைகளைப் பார்க்க வந்து, அங்கே திடீரென்று வியாதிப்பட்டு மரித்ததினால், ஐயர் மிகுந்த விசனத்திற்குள்ளாகி, திருச்சிறுப்பள்ளியிலிருந்து தஞ்சாவூருக்குப் போய், அடக்க சமயத்தில்: நமது சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்தான், அவனை எழுப்பப் போகிறேன் (யோவா. 11, 11) என்ற வாக்கியத்தின்பேரில் துக்கப் பிரசங்கம் செய்தார். விருத்தாப்பியரான வீடெபுரோக் ஐயர் அடுத்த வருஷத்தில் மரித்தார்.

1767-ம் வருஷம் திருச்சிறுப்பள்ளிக்கு வந்திருந்த உவில்லியம் சேம்பர்ஸ் துரை சுவார்ச்சையரைக் குறித்து எழுதிய பல இனிய சங்கதிகளில் அவரது புறம்பான தோற்றத்தையும் அன்றாட ஜீவியத்தையும் பற்றிச் சொல்லியது: நான் அவரைப் பார்க்கையில் சாதாரண வளர்த்தியிலும் சற்று நெட்டையரும், தைரிய புருஷரும், பேச்சில் யதார்த்தரும், மங்கலான சுருண்ட மயிர் உள்ளவரும், கபடற்ற உண்மை ஒழுக்கம் தயாளமுற்றவருமாய் இருந்தார். அவர் தமக்குக் கிடைத்த சொற்ப வருமானத்தைக் கொண்டு அநேக வேலைகளைச்

Opinion of W. Chambers about Schwartz.

செய்து வந்தார். அவருக்கு மாசவாரிச் சம்பளம் பத்து வ[ராக]ன். இதைக்கொண்டு அவர் காலட்சேபம் செய்யும்படி, துரைபதியின் உத்தரவினால் பழைய மசிக ராஜாவின் அரண்மனையிலே தன் கட்டில் போடவும் சாமான் யந்திரம் இருக்கவும் போதுமான ஒரு அறையில் சந்தோஷத்தோடு வாசம் பண்ணினார். சுதேசிகளின் முறைமைப்படி பாகஞ்செய்த ஒரு பாத்திரம் சாதமும் கறியும் அவருக்கு ஆகாரம். அவரதைத் தின்று கொண்டார். "கறுப்புக் கால்துத் துணியால் தைக்கப்பட்ட ஒரு சட்டை அவருக்கு ஒரு வருஷத்திற்குப் போதுமானதாயிருந்தது. அவர் உலக வஸ்துக்கள் யாவையும் மேற்கொண்டு தமது முழுப் பிரியத்தையும் சுவிசேஷ விர்த்தியில் வைத்திருந்தார். அவர் சுவிசேஷத்தைப் பட்டணங்களிலும் கிராமங்களிலும், அஞ்ஞானிகளுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் பிரசங்கித்து வருகிறார். மூன்று சுதேசக் கிறிஸ்தவர்கள் அவருக்கு உதவியாட்களாயிருக்கிறார்கள். இவர்களுக்கு அவர் சாப்பாடு போட்டு, தன் சொற்ப வருமானத்திலிருந்து அவர்களுக்குத் தேவையான யாவையும் கொடுத்து வருகிறார்" என்பதே. மேற்சொன்ன துரை அவரைப் பார்த்த அதே வருஷத்தில் சென்னைக் கவர்னர், சுவார்ச்சையர் திருச்சியிலிருந்த பட்டாளத்தில் நடத்தி வந்த தெய்வ ஊழியத்திற்காக வருஷவாரி ஆயிரம் ரூபாய் கொடுத்துவர உத்தரவளித்தார். ஐயரோ இதில் பாதியைத் தமக்காகவும் பாதியைச் சபைகளுக்காகவும் உபயோகித்து வந்தார். அவர் தாமெடுத்துக்கொண்ட தொகையில் தமக்கு ஒரு சிறு வீட்டையும், இங்கிலீஷ் தமிழ்ப் பாடசாலைக்காக ஒரு கட்டடத்தையும் கட்டினார்.

அவர் 1768-ம் வருஷ ஆரம்பத்தில் தரங்கைக்கு வந்து அங்கே சிலநாள் தங்கியிருந்து, மிஷியோன் வேலைக்கடுத்த பலகாரியங்களைக் குறித்துத் தமது சகோதரர்களோடு ஆலோசனை பண்ணி, தமிழ், ஜர்மானிய, போர்த்துகீஸ் பாஷைகளில் பிரசங்கம் செய்து, சந்தோஷத்தோடு திரும்பினார்.

S. P. C. K.

ஸி. அ. ஸி. சங்கத்தார் திருச்சிறாப்பள்ளியில் தங்கள் செலவிலே ஒரு மிஷியோனை ஸ்தாபிக்க விரும்பி, கோப்பநேகனிலிருந்த ஆலோசனைச் சங்கத்தாருக்கு எழுதி, அவர்கள் அனுமதி பெற்று, சுவார்ச்சையரை அவர் சம்மதத்தின் பேரில் தங்கள் மிஷியோனரியாக நியமித்துக்கொண்டார்கள் (1768). இம்மட்டும் டேனிஷ் மிஷியோன் சங்கத்தாரிடத்தில் சம்பளம்



வாங்கி வந்த சுவார்ச்சையர் இதுமுதல் ஸி. அ. ஸி. சங்கத்தாரிடத்தில் சம்பளம் வாங்குகிறவரானார். ஆகிலும், அவர் தமது மரண நாள் மட்டும் டேனிஷ் மிஷியோன் ஐர்மானரோடு சுவிசேஷ லூத்தரன் சபையின் ஐக்கியத்திலும், சிநேக சம்பந்தத்திலும் நிலைத்திருந்தார். அவர் அடிக்கடி தஞ்சாவூருக்கும் மற்றிடங்களுக்கும் போய், சபைகளை விஜாரித்துச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தார்.

ஹைதர் அலி இங்கிலீஷ்காரரோடு 1769-ம் வருஷ மூன்று மாசக்காலம் திருச்சிறாப்பள்ளிக்கு அருகில் போர் புரிந்தான். அப்போரில் காயப்பட்ட இங்கிலீஷ் போர்ச் சேவகருக்குச் சுவிசேஷத்தைக் கொண்டு ஆறுதல் சொல்லி வந்தார்.

1770-ம் வருஷ சுவார்ச்சையர் பிரயாசையால் அனேக அஞ்ஞானிகள் ஞானஸ்நானம் பெற்று, அனேக ரோமானித்தார் தமது சபையில் சேர்ந்தார்கள். அப்பொழுது ஞானஸ்நானம் பெற்றவர்களில் வாலிபனாகிய பண்டாரமொருவன் விசேஷித்தவன்.

The conversion of a Pandaram.

அவன் ஒருநாள் சுவார்ச்சையரைக் காவேரி யாற்றோரத்தில் கண்டு: நான் ஏழு வருஷ காலமாய்த் ஸ்தல யாத்திரை தீர்த்த யாத்திரை செய்து, பேர்போன கோயில்களைத் தரிசித்து, கீர்த்தி பெற்ற நதிகளில் மூழ்கியும், என் ஆத்துமத்திற்கு யாதொரு ஆறுதலும் கிடைக்கவில்லை. இந்துக்களின் பூசா விதிகளைப்பற்றி எனக்குச் சந்தேகமெழும்புகிறது. ரோமான் மார்க்கத்தான் ஒருவன் எனக்குப் பித்தளைச் சிலுவை யொன்றைக் கொடுத்தான். அதை நான் போகுமிடங்களிலெல்லாம் கொண்டு போய் வணங்கி வந்தேன். நான் இன்றைக்கு ஆற்றோரத்தினின்று சீரங்கத்திலுள்ள கோயிலைப் பார்த்தபோது, அதெல்லாமென்ன, அவைகளிலெல்லாம் பிரயோசனமென்னவென்றெண்ணிக் கொண்டிருக்குங்கால் உமது உபதேசியார் என்னைக் கண்டு எனக்குக் கிறிஸ்துமார்க்கத்தைக் குறித்துச் சொன்னார். உமது உபதேசஞ் செய்யும் தன்மை இன்னதென்பதை நான் இப்போது பார்க்க வேண்டியது. நான் அஞ்ஞானத்தில் பார்த்ததிலும் விசேஷித்தவைகளைக் கிறிஸ்துமார்க்கத்தில் பார்த்தால் நான் உடனே கிறிஸ்து மத அநுசாரியாவேன் என்றான். அவன் ஐயர் தனக்குச் சொன்ன யோசனையைக் கேட்டு, ஒவ்வொரு நாளும் ஞான உபதேசம் படித்தவர்களோடு சேர்ந்து, அவர்களுக்குச் சொல்லப்பட்ட புத்திமதிகளைக் கவனித்து வந்தான். கடைசியில் பண்டார

உடைகளையும் ருத்திராட்ச தாவடத்தையும் நீக்கி விட்டு, அதிக சாக்கிரதையோடு படித்து, ஐயர் தமது வேலைக்காரர்களோடு செய்யும் காலை மாலை ஜெபங்களுக்கு கிரமமாய் வந்து கொண்டிருந்தான். ஒரு இங்கிலீஷ் துரை அவனைக் குறித்து சுவார்ச்சையருக்கு, அவன் நடுச்சாமத்திலெழுந்து செபஞ் செய்ததை நான் சில தருணங்களிற் கேட்டேனென்று சொன்னார். அவன் ஞானஸ்நானத்தில் ஞானப்பிரகாசம் என்னும் பெயர் பெற்று, சுவார்ச்சையரால் உபதேசியாக்கப்பட்டு, தன் மரண பரியந்தம் அவருக்குப் பிரியமாயிருந்து, சில வருஷங்களுக்குப் பின் மரித்தான்.

1771-ம் வருஷம் கூடலூர் கெரிக்கே ஐயரும், தரங்கை சோலோப்பையரும் சுவார்ச்சையரைப் பார்ப்பதற்குத் திருச்சிராப்பள்ளிக்குப் போய், அவருடைய உழைப்பையும் பிரயாசைகளையுங் கண்டு, மிக்க எழுப்புதல் அடைந்தார்கள்.

1772-ம் வருஷம் திருச்சிராப்பள்ளியில் மருந்துக் கிடங்கு பற்றிக்கொண்டதால் ஐரோப்பியரும் சுதேசிகளுமான அனேகர் உயிர்ச்சேதமடைந்தார்கள், அனேகர் காயப்பட்டார்கள். வெடி மருந்துடன் அம்பாக்கித் தோட்டாக்களும் குண்டுகளும் ஆகாசத்திலெழும்பி, ஆலங்கட்டிபோல் விழுந்தன. ஐயர் வீட்டின் ஓடுகளும் உடைபட்டு அனேக குண்டுகள் ஐயரின் அறையில் அவரருகே விழுந்தும், கர்த்தருடைய கிருபையால் அவர் சேதமின்றிக் காக்கப்பட்டார்.

அந்த வருஷம் சுவார்ச்சையரின் பிரயாசையால் ஞானஸ்நானம் பெற்றவர்களில் நாம் கவனிக்கத்தக்க மூன்று முக்கிய பேர்கள் உண்டு: ஒருவர் பெயர் சத்தியநாதன். அஞ்ஞானத்தில் இவருக்குக் கற்பகம் என்கிற பெயர் இருந்தது. இவர் தகப்பனார் பெயர் அம்மையப்ப பிள்ளை. தகப்பன் இறந்துபோகவே, மைத்துனர் சிதம்பரம் பிள்ளை இவரை வளர்த்தார். பாலிய வயதில் இவர் திருச்சியில் பலமுறையும் உபதேசியார் செய்த பிரசங்கங்களைக் கேட்டு, இரட்சிப்பின் மேல் ஆசைகொண்டார். சுவார்ச்சையரை அவர் ஒரு முறை கண்டு, பயந்து விலகிப்போனார். ஐயரோ: மகனே, பயப்படாதே, நான் சீதள தேசத்தில் பிறந்ததால் என் சரீரம் வெள்ளையாயிருக்கிறது. நாம் ஒரே மந்தையின் ஆடுகள்; மந்தையில் கறுப்பாடுகளும் உண்டு, வெள்ளையாடுகளும் உண்டு; நாம் நல்ல மேய்ப்பரின் விசாரிப்புக்குள்ளிருந்து பிழைக்கிறோம்

Sattianaden & other Converts.



THE FIRST INDIAN PASTOR
AARON — ஆரோன் ஐயர்.

(28-ம் பக்கம் பார்க்க)

என்று துவக்கி, தெய்வ பராமரிப்பைக் குறித்துப் பேசினார். இப்படி அந்த வாலிபர் ஐயராலும், உபதேசியாராலும் சத்தியத்தைத் தீர அறிந்துகொண்டு, உத்தமபாளையம் என்ற தமதூருக்குப் போய், தமது தாயாரையும் கூட்டி வந்தார். கிறிஸ்துமார்க்க உபதேசங்களைக் கற்று, இருவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அந்த அம்மாளுக்குச் சாந்தாய் என்கிற பெயர் கொடுக்கப்பட்டது. பிறகு சத்தியநாதன் சுவார்ட்சையருக்கு உகந்த சேஷப்பிள்ளையும், மிஷியோனருக்கு மிகவும் பிரயோசனமான உபதேசியாரும், கடைசியாகச் சிறந்த போதகருமாகி, திருநெல்வேலி ஜில்லாவிலும் மற்றும் இடங்களிலும் வெகுவாய் உழைத்து, அநேக ஆத்துமாக்களைக் கர்த்தருடைய மந்தையிற் சேர்த்தார். — மற்றொருவர் பெயர் அபிஷேகநாதன். வாலிபரான இவர் சமயபுரமென்ற இடத்தில் சுவார்ட்சையர் பிரசங்கத்தைக் கேட்டதால், கிறிஸ்துமார்க்கத்திற் சேர விரும்பி, திருச்சினாப்பள்ளிக்கு வந்து, சிலநாள் ஐயரோடிருந்து உபதேசங் கேட்டு வருகையில், மருந்துக்கிடங்கில் அக்கினி பற்றிக்கொண்டது. இதனால் சுவர் இடிந்து அந்த வாலிபன்மேல் விழுந்து மூடிப்போட்டதுமன்றி இரண்டு பிணங்கள் அந்த ஆள்மேல் விழுந்து கிடந்தன. மறுநாள் அவர் தேகத்தைக் கண்டெடுத்து வைத்தியசாலைக்குக் கொண்டுபோனார்கள். வைத்தியர்: அவன் இறந்துபோவது நிச்சயம் என்று கூறினார். ஆகிலும், நாலுமாசக் காலத்தில் அவர் சுகப்பட்டு, மேற்கூறிய விபத்து, தான் ஐயருக்குத் தெரியாமல் திருச்சினாப்பள்ளியை விட்டுத் தன் ஊருக்குப் போகவேண்டுமென்றிருக்கையில் நடந்ததென்றும், அது தன் பாவத்திற்காக வந்த தண்டனையென்றும் அறிக்கையிட்டு, தெய்வ கிருபையை ஸ்தோத்திரித்து, ஞானஸ்நானம் பெற்றார். இவரும் உபதேசியாராகி நல்ல வேலைசெய்தார். — நாம் இங்கே சொல்ல விரும்பிய மூன்றாம் பேர்வழி இராயப்பன் என்ற ஒரு வயோதிகர். நூறு வயதுள்ளவராயிருந்த இந்த மனுஷன் ஞானஸ்நானம் பெற விரும்பி, ஆயத்த போதனைகளைச் சரியாய்க் கற்று, ஆவலாய் ஜெபித்து வந்தார். அவர் சில தினங்களுக்குப் பின் வியாதிப்பட்டபோது: நான் இயேசுநாதரை விசுவாசிக்கிறபடியால் ஞானஸ்நானம் பெறுமற் சாக எனக்குப் பிரியமில்லையென்று தெரிவித்து, அதைப் பெற்றுக்கொண்டார். அவர் சாகச் சமீபமாயிருக்கிறபோது ஐயரைப் பார்த்து: ஐயரே, நான் இப்போது பரதீசுக்குப் போகிறேன்,

90 வயதுள்ள என் பெண்சாதியும் அங்கே வந்து சேரும்படி பிரயாசப்படுங்கள் என்று சொல்லி, உடனே இறந்துபோனார். அவரை வெகு சிறப்பாய் அடக்கம்பண்ணினார்கள். அவர் விரும்பியபடி அவர் பெண்சாதியும் கிறிஸ்தவளாகி, பக்தியுள்ளவளாய் விளங்கி, சுவார்ச்சயரிடத்தில் நல்ல பெயர் வாங்கினள்.

1777-ம் வருஷத் துவக்கத்தில் தரங்கம்பாடிக்கு வந்த போலே ஐயர் அவ்வருஷ முடிவில் திருச்சிறாப்பள்ளிக்கு அனுப்பப்பட்டு, அங்கே சொற்ப வருஷகாலம் பயனுற வேலை செய்தார். அடுத்த 1778-ம் ௵ சுவார்ச்சையர் பாளையங்கோட்டைக்குப் போய், அங்கே மிஷியோனை ஸ்தாபித்து, திரும்பியபின் போலே ஐயருக்குத் திருச்சிறாப்பள்ளிச் சபையை ஒப்புவித்து விட்டு தஞ்சாவூருக்கு வந்து குடியேறினார்.

Pohle.

---

## ௩. தஞ்சாவூர் மிஷியோன்.

தஞ்சாவூரில் சுவிசேஷ ஒளி வீசுவதற்கு விசேஷித்த துணைக் கருவியாய் விளங்கினது ஆரென்றால், எளிய பஞ்சம ஜாதியில் பிறந்த இராயல் நாயக்கன் என்ற உபதேசியாரே. "பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தப் பராபரன் லோகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார்; இருக்கிறவைகளைத் தள்ளப் பராபரன் லோகத்தில் இழிகுலமானவைகளையும் அற்பமாயெண்ணப்பட்டவைகளையும் இல்லாதவைகளையும் தெரிந்துகொண்டார்" (க கொரி. 1, 27. 28) என்றபடி இராயல் நாயக்கனிடத்தில் நடந்தது. இவர் தஞ்சாவூர் இராசனைச் சேவித்த ஓர் சேர்வைக்காரர். ரோமான் சபையில் பிறந்து வளர்ந்து அர்ச்சியசிஷ்டர்கள் சரித்திரங்களை அதிகமாகவும் வேத சரித்திரங்களைக் கொஞ்சமாகவும் வாசித்திருந்த இந்த மனுஷன் பழைய புதிய ஏற்பாடுகளில் அடங்கிய பரிசுத்த சரித்திரங்களை வாசித்தறிய மிகவும் ஆசையாயிருந்தார். இப்படியிருக்கையில் அவர் இராசாவின் வேலையாகத் தஞ்சாவூரிலிருந்து 1725-ம் ௵ மாதேவிப்பட்டணத்திற்குப் போயிருந்தபோது, அங்கே சத்தியானந்தனென்னும்

Rayanaiken.



ஒரு ரோமான் பிச்சைக்காரனிடம் நான்கு சுவிசேஷங்களும் அப்போஸ்தலருடைய நடபடிகளும் அடங்கிய (தரங்கம்பாடி) புத்தகங்களைக் கண்டு, பிச்சைக்காரனுக்கு அநேக நாள் சாப்பாடு போட்டு, ஒரு தலைப்பாகையையும் இனாமாகக் கொடுத்து, அந்தப் புத்தகத்தை இரவலாக வாங்கி ஆவலாய்ப் படித்தார். முதல் துவக்கி யோவான் சுவிசேஷத்தின் பாதிமட்டும் ஓலையில் பிரதியும் பண்ணினார். வாசித்த வசனம் அவர் விசுவாசத்திற்கு எண்ணெய் போலாகி, அதை அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கச் செய்தது. 1726-ம் ௵ அவர் தரங்கைக்குச் சமீபமான திருக்கடையூருக்கு வந்தபோது ஒரு பிச்சைக்காரனிடம் தரங்கையில் பிரசுரமான ஒரு நிருபத்தைக் கண்டு, அதுவும் வேறு பல புத்தகங்களும் தரங்கை குருமாரில் ஒருவரால் கொடுக்கப்பட்டதென அறிந்து, அவற்றையும் அதிகப் பிரியமாய் வாசித்து, பிறகு தன் சகோதரரோடு தரங்கம்பாடிக்குப் போய் ஐயர்மாரைச் சந்தித்து, சுத்த சுவிசேஷ போதகங்களைக் கேட்டறிந்தார். ஆறுமாதக் காலம் ஆராய்ச்சி செய்து, தஞ்சாவூருக்குத் திரும்பிப் போய், விசுவாசத்தில் பலப்பட்டு, பாப்புமார்க்கக் குருட்டாட்டத்தை ஒழித்து, 1728-ம் ௵ தரங்கம்பாடிக்குத் திரும்பி வந்து, சுவிசேஷ சத்தான சபையில் சேர்ந்தார். இவரது உண்மையையும் சுறுசுறுப்பையும் கண்ட ஐயர்மார் 1729-ம் ௵ இவருக்கு உபதேசி ஊழியங் கொடுத்தார்கள். அவருடைய கேட்டுக்கொள்ளுதலுக்கிணங்கியே வால்த்தரையர் திருச்சபைச் சரித்திரமென்ற சிறந்த நூலை எழுதினார். இராயல் நாயக்கன் உபதேசியார் 40 வருஷகாலம் கர்த்தருக்கு உண்மையாய் ஊழியஞ் செய்து, தஞ்சை முதலிய அநேக இடங்களில் இரட்சணிய மூர்த்தி நாமத்தைப் பிரஸ்தாபித்து, 1771-ம் ௵: கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை யேற்றுக்கொள்ளுமென்று ஸ்தேவானைப் போல ஜெபித்து மரித்தார்.

இந்த இராயல் நாயக்கன் உபதேசியாராலும் இவர் போன்ற பஞ்சமராகிய சத்தியநாத உபதேசியாராலும் * சில

---

* 1727-ம் ௵ இராயல் நாயக்கன் தரங்கைக்கு வந்தபோது அவரோடு வந்த மூன்று சேவகர் நமது சபையில் சேர்ந்ததுமன்றி பிறையாற்றுக்கடுத்த குமாரமங்கலத்திலிருந்த பாப்பு மார்க்க உபதேசியின் மகன் ஒருவன் 15 ஆத்துமாக்களுள்ள 3 குடும்பங்களோடு நமது சபையிற் சேர்ந்தான். இந்த மனுஷனே மேற்குறித்த சத்தியநாத உபதேசியார்.

வருஷக்காலத்தில் அநேகர் கிறிஸ்தவர்களாவதற்குக் கர்த்தர் கிருபை செய்தார். இதைக் கேள்விப்பட்டவர்களும் கண்ணாற் கண்டவர்களுமான ரோமானித்தார் இராயல் நாயக்கருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் காட்டிய பகையும் விரோதமும் கொஞ்சமல்ல. ஏலாக்குறிச்சியிலிருந்த வீரமாமுனிவரும் ஜனங்களை மூட்டி விட்டுச் செய்த கொடுமைகள் அநேகம். மேற்கூறிய உபதேசிமாரோ கர்த்தருடைய பலத்தால் துன்பங்களைச் சாந்தத்தோடு சகித்து, தங்களைப் பகைத்தவர்களில் அநேகரையும் சபையிற் சேர்க்கக் கூடியவர்களானார்கள். அவர்கள் வேலைகளைக் கர்த்தர் ஆசீர்வதித்ததால் 1731-ம் வருஷம் இருந்த வெளிச்சபையார் தொகை 414: தஞ்சாவூர் வட்டத்தில் 99, மாதேவிப்பட்டண வட்டத்தில் 116, மாயூர வட்டத்தில் 177, மறவர் * நாட்டில் 22.

Pressier.

ஐரோப்பிய குருமாரில் முதல் முதல் தஞ்சை ராசனின் பேட்டி பெற்றவர் பிரெசிர் ஐயர். இவரை அனைப்பின் இராசா ஆரோன் உபதேசியார் மூலமாய் அழைப்பித்தபோது அந்த ஐயர் 1728-ம் வருஷம் பெப்புருவரி மீ வைத்தீஸ்பரன் கோயிலில் இராசாவைச் சந்தித்து, தம்மைப் பட்சமாயேற்றுக் கொண்ட அவருக்கும் அவருடைய பெரிய மனுஷருக்கும் சுவிசேஷ செய்தியைத் தெரிவித்தார். அப்படியே அரசன் அவரைத் தமது மகன் கலியாணத்திற்கு அழைத்தபோதும் செய்தார். ஆகிலும், தெருக்களில் அவர் பிரசங்கித்தபோது, அநேக ஜனங்கள், முக்கியமாய் துலுக்கர் அவரைத் தடுத்தார்கள். இராசா அவரை மிக வருத்தத்தோடு துலுக்கர் கைக்குத் தப்புவித்து, தமது சுய வாகனத்தில் அவரை அனுப்புவித்தார்.

பிரெசிர் ஐயர் தஞ்சாவூருக்குப் போய் வந்தபின் 25 வருஷகாலம் ஒரு ஐரோப்பிய மிஷியோனரியாவது அவ்வூருக்குப் போகக்கூடாதிருந்தது. 1753-ம் வருஷம் தரங்கை தென்மார்க்குத் துரைத்தனத்தாரால் அனுப்பப்பட்டுத் தஞ்சைக்குப் போன (Captain Sivers என்ற) ஒரு துரையோடு வீதெபுரோக் ஐயர் துபாஷியாகப் போய், இராசாவைக் கண்டு, அவரிடம் மிஷியோன் காரியங்களைக் குறித்துப் பேசினார். பின்

* 1730-ம் வருஷம் இராமநாதபுரம் சேதுபதியாகிய கத்ததேவன் ஐயர்மாரைக் கேட்டுக்கொண்டதினால் ஒரு உபதேசியார் மறவர் நாட்டுக்குப்போய், சுவிசேஷம் பிரசங்கித்தார்.



Widebrock.

வருஷங்களில் தஞ்சாவூரில் வசித்த சர்மானியராகிய பெர்க் (Berg) துரை மூலமாய் தரங்கை ஐயர்மார் தஞ்சாவூருக்கும், இராஜ அரமனைக்கும் தாராளமாய்ச் செல்லக்கூடியதாயிற்று. அத்துரையின் மனைவியும் தரங்கம்பாடிப் பெண்ணாயிருந்ததால் பரிசுத்த இராப்போசனம் வாங்கத் தரங்கம்பாடிக்குப் போக்குவரத்தாயிருந்ததுமன்றி, அவ்விருவர் பொருட்டு ஐயர்மார் பலமுறையும் தஞ்சாவூருக்குப் போய் வரநேரிட்டது. இந்தப் போக்குவரத்தால் அந்தச் சமஸ்தானத்து நாட்டுச் சபைகளுக்கு மிகுந்த ஆசீர்வாதமுண்டாயிற்று. ஆயினும், 1756-ம் வருஷம் தஞ்சாவூர் இராசாவுக்கும் தரங்கை தென்மார்க்குத் துரைத்தனத்தாருக்கும் யுத்தமுண்டானதால், ஐயர்மார் போக்கு வரத்துத் தடைபட்டது. தரங்கைக்குச் சமீபமாய்ப் பாளையம் போட்ட இராசாவின் சேவகரால் ஏழைக் கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த நஷ்டமுண்டானதுமன்றி, பொறையாற்றுக் கோவிலுக்கும் சேதமுண்டாயிற்று. போர் முடிந்த பின் 1757-ம் வருஷம் கோலோப் ஐயரும், 1761-ம் வருஷம் தாமே (Dame) ஐயரும் தஞ்சாவூருக்கும் திருச்சிறாப்பள்ளிக்கும் போய் வந்தார்கள்.

Schwartz.

இப்படியிருந்தும், சுவார்ச்சையரே முதல் முதல் தஞ்சையில் வசித்துச் சபைகளை ஒழுங்காக்கவும், பெருகப்பண்ணவும் அவசியமான வேலைகளையெல்லாம் செய்தபடியால், அவரையே தஞ்சைச் சபையின் ஆதி குரு என்னலாம். திருச்சிறாப்பள்ளி மிஷியோனை ஸ்தாபித்தவரும் அவரேயென்று பார்த்தோம். 1762-ம் வருஷம் அவரும் கிளேன் ஐயரும் கால் நடையாகப் பயணஞ்செய்து, வழிநெடுக அஞ்ஞானிகளுக்குப் பிரசங்கித்துக்கொண்டும், கிறிஸ்தவர்களுக்குப் புத்திமதி சொல்லிக்கொண்டும் தஞ்சாவூருக்குப் போனார்கள். அங்கே மேற்கூறிய பெர்க் துரை கட்டியிருந்த ஜெபவீட்டில் கிறிஸ்தவர்களைச் சேர்த்து, அவர்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்தினார்கள். பிறகு கிளேன் ஐயர் தரங்கைக்குத் திரும்பி விடவே சுவார்ச்சையர் திருச்சிறாப்பள்ளிக்குப் போய், * அதைத் தமக்கு வாசஸ்தலமாகத் தெரிந்துகொண்டு, அங்கிருந்து பல விடங்களுக்குஞ் சென்று மிஷியோன் வேலையை நடத்தினார்.

* திருச்சி மிஷியோனைப்பற்றிய அத்தியாயம் பார்க்க.

அவர் திருச்சியிலிருக்கையில் பலமுறையும் தஞ்சாவூருக்கு வந்து கிறிஸ்தவர்களைச் சந்தித்துப் போனதுண்டு. அவர் 1769-ம் வருஷம் தஞ்சைக்குப் போயிருந்தபோது துளசி மகா ராஜாவைச் சந்தித்து, மார்க்க விஷயங்களைக் குறித்து அவரோடு சம்பாஷித்து, ராஜா கேட்ட பல கேள்விகளுக்கும் விடை பகர்ந்தார். அவருக்குப் பலகார பட்சணம் கொடுத்தபோது, அவர் ஜெபஞ்செய்து சாப்பிட்டார். கிறிஸ்தவர்கள் பாடுகிற ஒரு பாட்டைப் பாடும்படி ராஜா கேட்க, ஐயர்: "என் நெஞ்சமே சுவாமி யடைக்கே" என்று துவக்கும் ஞானப் பாட்டைப் பாடினார். 1772-ம் வருஷம் இராஜா அவரை அழைப்பித்து, அவரோடு நெடுநேரம் சம்பாஷித்தார்.—பிறகு மேற்குறித்த பெர்க் துரை மகளுக்கும் ஒரு ஐரோப்பிய துரைக்கும் இராஜ சமுகத்தில் சுவார்ச்சையரால் விவாகம் நிறைவேற்றப்பட்டது. அதுமுதல் ஐயர் இராசாவைக் கண்டு பேச அதிக சமயம் அவருக்குக் கிடைத்தது. தஞ்சாவூர் ராஜா பகுதி கட்டத் தவறினபடியால் 1773-ம் வருஷம் ஆற்காட்டு நவாபு தஞ்சாவூரைப் பிடித்து, அரண்மனைப் பொக்கிஷங்களை யெடுத்துக் கொண்டான். அத்தருணத்தில் தஞ்சாவூரில் கட்டியிருந்த ஜெபவீடும் இடிக்கப்பட்டது. சுவார்ச்சையர் நவாபைக் கொஞ்ச நிலம் கேட்டும் அவன் கொடுக்கவில்லை. சண்டையும் பஞ்சமும் ஏழை ஜனங்களை வருத்தினபடியால், தயாள புருஷருமாய சுவார்ச்சையரிடம் அநேகர் வந்து சேர்ந்து ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்கள் வயிற்றுப் பசியால் வந்தாலும், சுவார்ச்சையர் முந்தி அவர்களைப் போதித்து, பின்பு சபையில் சேர்த்துக்கொண்டார். இரண்டுக்குப் பின் தஞ்சாவூர் சமஸ்தானம் நவாபின் வசத்தினின்று விடுதலையாகி, துளசி மகா ராஜாவுக்குக் கொடுக்கப்பட்டது. இச்சமயத்தில் இராஜா சென்னை கவர்னருக்கு எழுதியிருந்த வந்தனப் பத்திரத்தை சுவார்ச்சையர் இங்கிலீஷில் மொழிபெயர்த்தார். அதில் "ராமசுவாமி கடாட்சத்தினால்" தனக்கு அநுகூலம் கிடைத்ததென்று எழுதியிருந்ததை ஐயர் வாசித்து, விசனமுற்று: இது என்ன, தனக்குத்தானே ஒத்தாசை செய்துகொள்ளக் கூடாத ராமன் உங்களுக்கு உதவிசெய்திருக்கக் கூடுமோ என்று சொல்ல, ராசா: மெய்யான கடவுள் இதைச் செய்தார் என எழுதுங்கள் என்றார். ஆயினும், சமஸ்தான மீட்புக்காக அஞ்ஞானக் கோயில்களில் உற்சவங்கள் நடத்தப்பட்டன.

Schwartz & the Rajah.



என்றாலும், சுவார்ச்சையர் சிலுவையிலறையுண்ட கிறிஸ்துவைக் குறித்து அடிக்கடி ராஜாவுக்குச் சொல்லி வந்ததால் அவர் மனதில் உதைவுண்டாயிற்றென்று எண்ண இடமுண்டு. ஐயர் சில வருஷங்களுக்கு முன் தமிழில் இயற்றியிருந்த "விக்கிரகாராதனைக்காரருக்கும் கிறிஸ்தவனுக்கும் நடந்த சம்பாஷணை" என்ற நூலை மகாராஷ்டிர பாஷையில் மொழிபெயர்த்துக் கொடுக்கும்படி அரசன் அவரைக் கேட்டுக்கொண்டார். கேட்டுக்கொண்டபடி செய்ததில் விளைந்த பயன் வெளியாகவில்லை.

1777-ம் வருஷக் கடைசியில் போலே ஐயர் சுவார்ச்சையருக்கு உதவியாகத் திருச்சிக்கு மாற்றப்பட்டார். அடுத்த வருஷம் (1778) அந்தப் புதிய ஐயர் தமிழ்ப் பாஷையைக் கற்றுக்கொண்டாரென்று கண்டபின் சுவார்ச்சையர் திருச்சினாப்பள்ளிச் சபையை அவரிடம் ஒப்புவித்துத் தஞ்சாவூருக்கு வந்து, அதைத் தமக்கு வாசஸ்தலமாக்கினார்.

Sch. removed to Tanjore.

அவர் காலை மாலை ஜெபத்தில் வேதாகம விஸ்தரிப்பு செய்து, கிறிஸ்தவர்களுக்கும் புறமதஸ்தருக்கும் புத்திப் பிரசங்கம் செய்வது வழக்கம். இதனால் கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் அதிகரிக்கவும், அநேக அஞ்ஞானிகள் சத்தியத்தின் அறிவுக்கு வந்து, ஞானஸ்நானம் பெறவும் இடமுண்டாயிற்று. அநேகர் விக்கிரகாராதனை பாவமென்பதை அறிந்து அறிக்கையிட்டும், ஜாதி ஜனங்களுக்குப் பயந்து, திருச்சபையில் சேராதிருந்தார்கள்.

சுவார்ச்சையர் முகமதியர்களுக்கும் இந்துக்களுக்கும் பிரசங்கம் செய்த சமயங்களில் அவர்கள் கேட்ட கேள்விகளுக்குத் திட்டமும் தெளிவுமாக உத்தரவு சொன்னார். ஒரு சமயத்தில் ஒரு முகமதியன்: உம்முடைய ஜாதியென்னவென்று அவரைக் கேட்க, அவர்: உன்னைப்போல் நானும் ஒரு பாவி, ஆகையால் நீ ஜாதியைப்பற்றிக் கேள்வி கேட்பதைப் பார்க்கிலும், நாம் பாவமோசனமடையும் வழியைக் குறித்து விசாரிப்பது அதிக உத்தமம் என்றார்.—அவர் திருச்சியிலிருந்து தஞ்சாவூருக்குப் போகிற ஒருநாள், பிராமணனொருவன், அவர் என்ன வேலையாய்ப் போகிறார் என்று விசாரிக்க, அவர்: கிறிஸ்தவர்களுக்குப் புத்தி சொல்லப் போகிறேன் என்றார்; அதற்கவன்: அவர்களுக்கு அது ஏற்கனவே தெரியாதா என்று வினவ, அவர்: கெட்ட மரத்திற்குத் திரும்பத் திரும்பத் தண்

ணீர் வார்க்கவேண்டியதென்ன என்றார். — அரண்மனையில் அவரோடே பேசிக்கொண்டிருக்க ஒரு பிராமணன்: ஒரு பறையனைத் தொடுவது தீட்டென்று நினைக்கிறீரா என்று கேட்டான். அவர்: நிச்சயமாகவே தீட்டுத்தானென்றார். அவனோ: யார் பறையன் என்று கேட்க, அவர்: திருடன், பொய்யன், அவதூறு பேசுகிறவன், குடியன், விபசாரக்காரன், மமதையுள்ளவன், இவனெல்லாம் பறையன் என்றார். — ஐயையோ, அப்படியானால் நாங்களெல்லாரும் பறையர் தான் என்று சொல்லிக்கொண்டு பிராமணன் போய்விட்டான்.

1779-ம் வருஷ சுவார்ச்சையர் தஞ்சாவூர்க் கோட்டையிலே இங்கிலீஷ் போர்ச் சேவகருக்காக ஒரு தெய்வாலயங் கட்டத் தொடங்கி, அதற்குப் பொருளுதவி செய்யும்படி சென்னை கவர்னர் துரையைக் கேட்டுக்கொண்டார். கவர்னர் இதற்கு அனுகூலமாகத் தஞ்சை வாசியாகிய ஒரு துரைக்கு எழுதின கடிதத்தில் சுவார்ச்சையரைத் துரிதமாய்ப் பட்டணத்திற்கு அனுப்புவிக்கக் கோரினார். கோரிக்கைப்படி ஐயர் சென்னைக்குப் போனபொழுது, கவர்னர் அவரை நோக்கி: ஹைதர் அலி எங்களோடு போர்புரிய யத்தனிப்பதைக் குறித்து விசனப்படுகிறோம்; நீர் இந்துஸ்தானி பாஷையைச் செம்மையாய் அறிந்திருப்பதால் ஹைதர் அலியோடு நேரே சம்பாஷிக்கக் கூடியவரும், பண ஆசையற்றவரும், கூலிக்கு வேலை செய்யாதவருமாயிருப்பதை முன்னிட்டு உம்மை மைசூருக்கு அவனிடம் அனுப்பப் பிரியப்படுகிறேன் என்றார். ஐயர் சில நாள் தவணை கேட்டு, தமக்குப் போர்ந்த ஞானத்தை அருளும்படி கர்த்தரை நோக்கி ஜெபித்து, தமது பிரயாணத்தால் மிகுதியான உயிர்ச்சேதம் விலக்கப்படவும், அநேக புறமதஸ்தருக்குச் சுவிசேஷம் பிரசங்கிப்பதற்குச் சமயம் கிடைக்கவும் கூடியதெனத் தேர்ந்து, மைசூருக்குப்போக உடன்பட்டார். அவர் முந்தத் தஞ்சாவூருக்குப் போய் சபையைக் குறித்துச் செய்யவேண்டிய ஒழுங்குகளைச் செய்து

Sch. & Hyder Ali.

பின் சத்தியநாத உபதேசியாரைக் கூட்டிக்கொண்டு சீரங்கபட்டணத்திற்குப் போய், ஹைதர் அலியிடம் சமாதானப் பத்திரம் பெற்றுக் கொண்டு திரும்பினார். அவர் தூதுபோயிருந்த காலத்திலும் இடத்திலும் கிறிஸ்துவைக் குறித்து வெளியரங்கமாய்ப் பிரசங்கிக்கப் பயந்ததில்லை. ஹைதர் மகனாகிய திப்பு சுல்தான் தன் குருமார்கள் வித்துவான்களின் முன்னிலையில் சுவார்ச்சை



யரை வரவழைத்து: எங்கள் முகமது நபி பெரியவரோ, உங்கள் ஈசா நபி பெரியவரோ என்று கேட்க, ஐயர் பதட்டமாய் இன்னார் பெரியவரென்று சொல்லாமல், இருவருடைய சரித்திரத்தையும் யாவரும் ஒத்துக்கொள்ளத்தக்க விதமாக விபரமாய்ச் சொல்லிக்காட்டி, இவ்விருவரில் இன்னார் பெரியவர் என்று விவேகிகளாகிய நீங்களே நிதானித்து அறிந்து கொள்ளுங்கள் என்றார். எல்லாரும் அவருடைய சாமர்த்தியத்தையும் விவேகத்தையும் புகழ்ந்துகொண்டார்கள். ஹைதர் அவரோடு பட்சமாய்ச் சம்பாஷித்து, கடைசியாகத் தன்னோடு பெர்சிய பாஷையில் பேசக் கேட்டுக்கொண்டான். ஐயர் அவனிஷ்டப்படி செய்து: நான் தங்களிடம் தூதாய் வந்ததனால் இந்தத் தேசத்திற்கும், அரசன் குடிகளுக்கும் க்ஷேமகரம் உண்டாவதாக என்று சொன்னார். ஹைதர் அவரை இதற்காகப் புகழ்ந்து, அவருக்குப் பிரயாணச் செலவுங் கொடுத்தனுப்பினான். இத் தொகையைக் கொண்டு ஐயர் பிற்காலத்தில் தஞ்சாவூரிலே தர்மப் பள்ளிக்கூடமொன்றைக் கட்டினார். அப்படியே இங்கிலீஷ் கும்பினியார் கொடுத்ததையும் தாம் வாங்கிக்கொள்ளாமல், அதைத் திருச்சிராப்பள்ளியிலிருந்த போலே ஐயருக்குக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். அவர் விருப்பத்திற்கிசைந்து, போலே ஐயருக்கு வருஷாந்தரம் 300 வராகன் கொடுத்து வந்தார்கள். மேலும், தஞ்சாவூரிலிருந்த இங்கிலீஷ் பட்டாளத்தாருக்குக் குருவாயிருந்ததற்காகத் தமக்குக் கிடைத்த பதினாயிரம் ரூபாயையும் சுவார்ச்சையர் தமக்கென்று எடுத்துக் கொள்ளாமல், அதில் பாதியைத் தமது சிநேகிதராகிய யோவான் காஸ்பார் கோலோப்புக்குக் கொடுத்துவிட்டு, மறு பாதியை ஐந்து உபதேசிமாரின் சம்பளத்துக்காக வைத்துவைத்தார்.

அவர் கோட்டையில் கட்டத் தொடங்கின கோயில் வேலை முடிந்தபின் கோட்டைக்கு வெளியே தமக்கு ராஜா கொடுத்த விஸ்தாரமான பூமியில் தமிழ்ச் சபையாருக்காக மற்றொரு கோயிலைக் கட்டி, அதை அந்த வருஷத்துக் கிறிஸ்து பிறப்பின் பண்டிகையில் பிரதிஷ்டை செய்தார் (1780).

Church building.

அவர் ஞாயிற்றுக்கிழமையிலே கோட்டைக் கோயிலில் இங்கிலீஷ் ஆராதனை செய்தபின் வெளிக்கோயிலில் தமிழ் ஆராதனை நடத்திவந்தார்.

ஹைதர் தான் கொடுத்த வார்த்தைப்பாட்டை மீறி, 1780-ம் வருஷ இங்கிலீஷ்காரரோடு போர்தொடுத்துத் தேசத்

னைப் பாழாக்கி வந்தான். அவன் இங்கிலீஷ்காரரைக் கடும் பகையாய்ப் பகைத்தும், சுவார்ச்சையரை மிகவும் மதித்து, அவர் போக விரும்பும் எவ்விடத்திற்கும் அவரைத் தடையின்றி விடும்படி தன்னுடைய உத்தியோகஸ்தருக்கும் சேனைவீரருக்கும் உத்தரவு பண்ணினான். இதனால் யுத்தகாலத்திலும் ஐயர் எங்கும் பயணஞ்செய்து, சுவிசேஷம் பிரசங்கிக்கக் கூடியவராயிருந்தார். 1782-ம் வருஷத்தில் ஐதர் இறந்த பின்னும் திப்புசுல்தான் 1783-ம் வருஷ முடிவு மட்டும் யுத்தத்தைத் தொடர்ந்து செய்தான். அவன் அநேக ஊர்களைப் பிடித்து, விக்கிரகங்களை நிர்மூலமாக்கி, வீடுகளைக் கொளுத்தி, இத்தாக்களிலே ஆண்பிள்ளைகளைச் சிறைபிடித்து அநேகருக்குச் சொல்லொணாத் துப்பவேதனை விளைவித்தான். மூன்று வருஷகாலமாகச் சண்டையும் பஞ்சமும் பெருத்தபடியால், சுவார்ச்சையர் ஏற்கனவே யோசனைசெய்து, வேண்டிய தானியத்தை முன்னாடியே சேகரம்பண்ணி, கிறிஸ்தவர்களும் அஞ்ஞானிகளுமான அநேக ஏழைகளைப் பராமரித்தார். இராஜாவாவது கும்பினியாராவது தானியஞ் சம்பாதிக்கக் கூடாதிருந்தபொழுது, அவர்கள் சுவார்ச்சையரைக் கேட்டுக்கொண்டு, அவர் மூலமாய்த் தானியத்தைப் பெற்றுக்கொண்டார்கள். குடிகளுக்குச் சுவார்ச்சையரிடத்திலிருந்த விசுவாசம் ராஜாவினிடத்திலாவது கும்பினியாரிடத்திலாவது இருந்ததில்லை. தெய்வ கிருபையால் யுத்தகாலம் முடிந்து, திப்புக்கும் கும்பினியாருக்கும் சமாதானமாயிற்று.

இதற்குப் பின்னும் தஞ்சை சமஸ்தானம் சீரடைந்ததில்லை. துளசி மகாராஜா, தமது மகனும் பேரனும் இறந்து போனதினால் மிக மனமடிவாகி, ஜனங்களுக்குக் கொடுமை பண்ண ஆரம்பித்தார். புக்கிரு என்பவருக்குப் பின்பு வந்த பாபு என்கிற மந்திரியும் கொடியனாயிருந்து ஜனங்களை மிகவும் ஒடுக்கினான். இதனால் அநேக பிரஜைகள் திருச்சினாப்பள்ளிக்கும் காரைக்கால் முதலிய இடங்களுக்கும் வலசை வாங்கினார்கள். இவ்விஷயங்களை விசாரணைசெய்து, தஞ்சாவூரைச் சீர்படுத்தி, பிரஜைகளுக்கு நன்மை செய்யும்படி சென்னை ஆலோசனைச் சங்கத்தார் சில துரைமாரை ஒரு கமிட்டியாராக ஏற்படுத்தி, சுவார்ச்சையரை அவர்களுக்கு ஆலோசனைக்காரராயிருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள் (1786). அந்தக் கமிட்டியார் சமஸ்தானத்தை அரசனை விட்டு எடுத்துப்போடுவது உசிதமென்று நினைத்தும், சுவார்ச்சையர் இராஜாவுக்கா



கப் பரிந்துபேசி, இராஜாவுக்கும் புத்தி சொன்னதினால் சமஸ்தானத்தை ஒழுங்குக்குக் கொண்டுவந்தார். தமது சமஸ்தானத்தைவிட்டு வலசை வாங்கினவர்கள் திரும்பி வந்தால் அவர்களைத் தாம் பட்சமாய் நடத்துவதாகத் தெரிவிக்கும்படி இராஜா ஐயரைக் கேட்டுக்கொண்டார். ஜனங்கள் இராஜாவின் வாக்கை நம்பாதிருந்தும், ஐயர் முகத்துக்காகத் திரும்பி வந்தார்கள். அந்த வருஷத்திலே அவர்கள் காலந்தப்பிப் பயிரிட்டும், முந்தின வருஷங்களிலும் பதின்மடங்கான பலனை அடைந்தார்கள்.

சுவார்ச்சையர் 1778-ம் வருஷத்திலும், 1785-ம் வருஷத்திலும், ஆக இருமுறை பாளையங்கோட்டைக்குப் போயிருந்தார் (விபரம் திருநெல்வேலி மிஷியோனைப் பற்றிய அத்தியாயத்தில் சொல்லப்படும்). அவர் இரண்டாம் முறை போய்த் திரும்பும்பொழுது தம்மோடு அழைத்துவந்த 'வேதநாயகம் என்ற பாலியன் கர்த்தருடைய இராச்சியத்தில் மிகப் பயனுற உழைத்த கவிராயனானதால், பூர்வ மிஷியோனின் நற்பலனாக விளங்கின அவருடைய சரித்திரத்தையும் இங்கே சுருக்கிச் சொல்வது நலமாம்.

Poet Vedanayagam.

திருநெல்வேலி தேவசகாயம் பிள்ளை குமாரன் வேதநாயகம் என்பவர் பிறந்தது 1774-ம் ௵ செப்டெம்பர் ௴ 7 ௳. இவருக்கு ரோமான் சபையில் ஞானஸ்நானத்தில் கொடுக்கப்பட்ட நாமம் வேதபோதகம் என்பது. தகப்பனார் தன் குருவின் நாமத்தைச் சொல்லப்படாதென்று தன் மகனை வேதநாயகமென்று அழைத்துவந்தார். தகப்பன் சுவார்ச்சையர் தேவசகாயம் பிள்ளையைச் சுவிசேஷ சபையில் சேர்த்தபின் பாளையங்கோட்டைக்குப் போயிருந்த சமயத்தில் வேதநாயகனென்ற சிறுவன்மேல் பிரியமாகி, அவனைத் தம்மோடு தஞ்சைக்கு அழைத்துவந்தார். அப்போது அவருக்கு வயது பன்னிரண்டு.

வேதநாயகம் என்பவர் சுவார்ச்சையரிடத்தில் இரண்டு மூன்று வருஷகாலமாகப் பிரயோசனமான பல காரியங்களைப் படித்து வந்தபின், 1789-ம் ௵ தரங்கைக்கு அனுப்பப்பட்டார். அங்கே பள்ளிக்கூடம் நடத்திவந்தவர் டாக்டர் யோன் ஐயர். இவரிடத்தில் நாலு வருஷகாலமாக வேதசாஸ்திரம் முதலியவற்றைச் சுருக்கமாய்க் கற்று வந்ததுமன்றி கொஞ்சம் இங்கிலீஷ், கொஞ்சம் ஜெர்மன் வாசிக்கவும் படித்

ஆக்கொண்டார். பிறகு தஞ்சை சுவார்ச்சையரிடம் வந்து சேர்ந்து, தமது பதினொன்றாம் வயதில் அவ்விடமே உபாத்தியாயரின் உத்தியோகம் பெற்றார். இவரிடத்தில் அநேக பிள்ளைகள் படித்து முன்னுக்கு வந்தார்கள்.

அவர் தமக்குக் கொடுக்கப்பட்ட வரங்களைக் கர்த்தருடைய மகிமைக்கென்றே உபயோகித்தார் என்பதற்கு அவர் தமது இருபதாம் வயதுமுதல் சபைகளுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் உபயோகமாக இன்னமிருக்கிற பாடல்களும் தாள்களும் அடங்கிய சிறியதும் பெரியதுமான 120 புத்தகங்கள் சாட்சியாம். அவர் பாடல்களை உள்ளபடியே உணர்வுடன் அவற்றைச் சகல மதஸ்தருக்கு முன்பாகவும் வெளியரங்கமாய்ப் பாடிப் பிரசங்கித்து, கிறிஸ்துவைத் தைரியமாய் அறிக்கையிட்டுவந்தார். அவர் ஐம்பது வருஷ காலமாய்த் தபசுகாலமாகிய நாற்பது நாட்களில் தமது வீட்டின் முகப்பில் கிறிஸ்துவைச் சிலுவையில் அறையுண்டவராகத் தவறாமல் பிரசங்கிக்கிற வழக்கமுடையவராக விருந்தார். அவருடைய பாடல்களையும் பிரசங்கங்களையும் கேட்டு மகிழ்ந்த தஞ்சைச் சபையாரும் அப்படியே தரங்கை, சென்னை, திருச்சி முதலிய சபையாரும் அவரைக் கவிச்சக்கிரவர்த்தியாக அங்கீகாரம் செய்து, அவருக்குச் சுவிசேஷகவிராயப் பட்டஞ் சூட்டினார்கள்.

தஞ்சை சரபோஜிராஜா அவரை மிகவும் கனப்படுத்தி மாதச்சம்பளமும் கொடுத்துவந்தார். அவர் ராஜ உபகாரம்பெறுகிறவராயிருந்தும், அந்த அஞ்ஞான அரசன் ஒரு சமயத்தில் விக்கினேசுரன் பேரில் ஒரு பாடல்செய்யச் சாஸ்திரியாரைக் கேட்டுக்கொண்டும், இவர் அதற்குக் கொஞ்சமும் உடன்படாமல், அவர் கேட்டுக்கொண்டதை அல்லத்தட்டிவிட்டார்.

கிறிஸ்தவர்களுக்குள் நடமாடும் அஞ்ஞானச் சடங்குகள் அவருக்கு வெறுப்பானவை. இவைகளுக்கு விரோதமாய் அவர் சாஸ்திரக்கும்மியென்ற ஒரு நூலை இயற்றியிருக்கிறார்.

அவர் தமது ஆயுசின் காலமெல்லாம் ஜெபவீரராக விளங்கினார். அவர் வீட்டில் அந்தி சந்தி ஆராதனை தவறினதோ இல்லை. தமது வாழ்விலும் தாழ்விலும் பராபரனுடைய வசனமும் ஜெபமுமே அவர் கையாடிவந்த விசேஷித்த எத்தனங்கள்.

அவர் தமது முழுமனதோடும் சேவித்துவந்த பராபரனின் சந்நிதானம்போய்ச் சேர ஆயத்தமுள்ளவராயிருந்து, 1864 ௵ ஜனவரி மீ 24 உ காலை குடும்ப ஆராதனையில்



ஆசீர்வாதங்கூறி, அன்றுமாலையில் கர்த்தருக்குள் நித்திரையடைந்து, மறுதினத்திலே தஞ்சைக் கிறிஸ்தவ குருமார் சபையாரால் வெகுசிறப்பாய் அடக்கஞ்செய்யப்பட்டார்.

வேதநாயக சாஸ்திரியாரைப்போல் ஞானத்தகப்பன் சுவார்ச்சையரால் முன்னுக்குவந்த பலருள் முன்னேறிப் பாக்கியநாதபிள்ளை ஒருவர். இவர் லௌகீக உத்தியோகம்பார்த்தும், தமது இரட்சகருக்கு மகிமையும், அநேக ஏழைக் கிறிஸ்தவர்களுக்குப் பிரயோசனமுமாய் விளங்கினார்.

அப்படியே சர்போஜி ராஜா ராஜபதவிக்கு வந்ததும் சுவார்ச்சையரின் முயற்சியால் என்பது பின்வரும் சங்கதியால் தெளிவாம். துளசி மகாராஜாவுக்குப்பின் பட்டத்திற்கு உரிய பிள்ளை இல்லாமையால், அவர் ஒன்பது வயதுள்ள சரபோஜி என்கிற பிள்ளையைத் தத்தெடுத்துக்கொண்டு அந்தப் பிள்ளையாண்டானை சுவார்ச்சையர் விசாரணைக்கு ஒப்புவித்தார். ஐயரோ இதற்கு உடன்படாமல், இராஜாவின் சகோதரனாகிய அமர்சிங்கிடம் அவரை ஒப்புவிக்க யோசனை சொன்னார். இராஜா அதற்குச் சம்மதித்துப் பிள்ளையைத் தமது சகோதரனிடம் ஒப்புவித்த மூன்று தினங்களுக்குப்பின் மரித்தார். சென்னை கவர்னரோ துளசி ராஜாவின் சுவீகார ஏற்பாட்டை அங்கிகரியாமல், மேற்கூறிய அமர்சிங்கை ராஜாவாக்கினார். அமர்சிங்கு பட்டத்துக்கு வந்தவுடனே மிஷியோன் பள்ளிக்கூடமொன்றின் சம்ரட்சணைக்காக வருஷவாரி ஆயிரம் ரூபாய் வரும்படியுள்ள ஒரு கிராமத்தை இனாமாகக் கொடுத்தார்.

Serfojee Rajah.

1787-ம் வருஷம் சுவார்ச்சையருக்கு விசேஷித்த சந்தோஷத்தைக் கொடுத்த ஒரு சம்பவம் நடந்தது. அந்த வருஷம் ஜனவரி மீ 23 உ (எட்டுவயதுப் பிள்ளையாகத் தாம் சுவீகாரமெடுத்து வளர்த்த) யோவான் காஸ்பார் கோலோப் ஐயருக்குத் தரங்கம்பாடியில் அவர் குருப்பட்டம் கொடுத்ததே அச்சம்பவம். பட்டம் பெற்றவரின் தகப்பனாகிய பல்தாசார் கோலோப்பையர் ஐம்பது வருஷங்களுக்குமுன் அதே தேதியிலே தரங்கம்பாடித் துறைமுகத்தில் இறங்கினபடியால் சந்தோஷத்தோடு தெய்வாலயத்தில் வீற்றிருந்து கர்த்தரை ஸ்தோத்திரித்தார். அச்சமயத்தில் சுவார்ச்சையர்: என்குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையிலே பலத்துக்

J. Caspar Kohlhoff.

கொண்டிரு (2 தீமோ. 2, 1) என்ற வாக்கியத்தின்பேரில் பிரசங்கித்து, குருப்பட்டம் தரிப்பித்தார்.

பின்பு அவ்வாலிப குரு பிரசங்கத்தொட்டியிலேறி, கேட்டவர்களும் பிரமிக்கத்தக்க எழுப்புதலான பிரசங்கஞ் செய்தார். அதுமுதல் அவர் கர்த்தருக்குப் பிரியமான ஊழியனும், சுவார்ச்சையரின் தள்ளாமையில் அவருக்குத் தகுந்த உதவியுமாயிருந்தார். அவர் 57 வருஷகாலம் கர்த்தருக்கு உண்மையாயுழைத்தார்.

அமர்சிங்குராஜா தன் சகோதரனுடைய குமாரனாகிய சரபோஜியை மிகக் கொடுமையாய் நடத்திவருவதாக சென்னைக் கவர்னர் கேள்விப்பட்டதினால், அந்த ராஜகுமாரனையும் அவன் அதிகாரத்தாய்மாராகிய இராணிகளையும் பட்டணத்திற்கு அழைப்பித்து, அங்கே சுவார்ச்சையரின் விசாரணைக்குள்ளாக வைக்கத் தீர்மானித்தார். சுவார்ச்சையரோ 1793-ம் வருஷம் அவர்களோடே சென்னைக்குப் போய்ச் சிலகாலம் அங்கிருந்து, இராஜகுமாரனைத் தமது இஷ்டராகிய கேரிக்கே ஐயரின் விசாரணைக்கு ஒப்புவித்துத் திரும்பினார். சரபோஜி என்ற இராஜகுமாரனுக்கு ஐயர் எழுதின கடிதமொன்றில் அவருடைய ஆத்ம நன்மையையுங் கருதினவராய் பின்வருமாறு எழுதினார்: நீர் எல்லாவற்றிற்கு முந்தி ஒன்றானமெய்க்கடவுளின் தயவைத் தேடப் பிரயாசப்படும். அவருக்குச் சிநேகரானால் உமது காரியமெல்லாம் சித்தியாகும். நீர் அவரைவிட்டு விலகி, அவரைக் கோபப்படுத்தினால் எல்லாம் கேடாய்முடியும். நீர் அவரைநோக்கி ஒவ்வொரு நாளும் ஜெபியும். அவர் உமது ஜெபத்தைக்கேட்டு உதவிசெய்வார். கடவுள் உம்மைத் தமது பரிசுத்த ஆவியைக்கொண்டு பலப்படுத்தி ஆசீர்வதிப்பாராக என்று எழுதினார். சுவார்ச்சையர் கோரிக்கைப்படி சரபோஜி பட்டத்துக்குவந்தபின் அவர் கிறிஸ்தவனாகாதிருந்தும், கிறிஸ்தவர்களுக்கு வெகுவான நன்மை செய்தார். அவர் எப்பொழுதும் சுவார்ச்சையரைத் தமது தகப்பனாகவே மதித்துக் கனப்படுத்திச் சிநேகித்துவந்தார்.

சுவார்ச்சையர் காலக்கிரமத்தில் பலவீனப்பட்டவராயிருந்தும், தளராமுயற்சியோடு தமது ஊழியத்தை நிறைவேற்றி வந்தார். அக்காலத்தில் ஜர்மானியாவில் பரம்பின அவிசுவாசத்திற்காக அவர் நிரம்ப விசனமடைந்தும், தமது திடவிசுவாசத்தால் ஆறுதலடைந்துகொண்டார். அவர் 1795-ம் வருஷ

The last days of Sch.




எழுதின கடிதமொன்றில்: நமது விஷயங்கள் சங்கடமாயிலும் கர்த்தர் அதற்கான வழிகளை யறிவார். அவர் தமது திராட்சத் தோட்டத்திற்குத் தகுந்த ஆட்களையனுப்பக் கூடியவர். ஐயோ, உண்மையுள்ள வேலையாட்கள் எவ்வளவு சிலர். ஜர்மானியா தேசசபையின் நிலைமை எதார்த்தமாகவே பரிதாபமானது. அவர்கள் அப்போஸ்தலனாகிய பவுலும் மற்ற அப்போஸ்தலரும் பிரசங்கியாத சுவிசேஷமொன்றை நூதனமாய்க் கண்டுபிடித்தார்கள். அநேகர் கிறிஸ்து சம்பாதித்த இரட்சிப்பையும் பரிசுத்த ஆவி பாவிகளைப் பரிசுத்தமாக்குதலையும் பற்றிய உபதேசங்களை மறுக்கிறார்கள். எனக்கிப்போது எழுபதுவயது. கர்த்தர் இதுவரைக்கும் என்னைக் காப்பாற்றிச் சகல அபாயங்களிலுமிருந்து தற்காத்தார். இப்போதோ நான் அஞ்ஞானிகளுக்குப் பிரசங்கிக்கத் தொலைதூரம் பயணம்போகக் கூடாதவனானேன். ஆகிலும், நான் என் சாதாரண வேலைக் கோயிலிலும் பள்ளிக்கூடத்திலும் செய்துவருகிறேன். நான் தஞ்சாவூருக்கருகில் பலபக்கங்களிலும் சிதறியிருக்கிற கிறிஸ்தவர்களைப் பார்க்கக்கூடியவனாயிருக்கிறதற்காகப் பராபரனை ஸ்தோத்திரிக்கிறேன். நாளது தேதிவரைக்கும் ஞானஸ்நானம் பெற்ற அல்லது இராப்போசனம் வாங்கப் படித்துவருகிற ஆயத்தக்காரருக்கு காலையில் உபதேசிக்கிறேன். நான் எதுவரைக்கும் இவ்வேலையைச் செய்துவருவேனென்பது பராபரனுக்குத்தான் தெரியும். என் ஆயுள் அவர் கரத்தில் இருக்கிறது. நான் என் முதிர்வயதில் அப்பிரயோசகனாகாதபடி அவர் என் ஜெபத்தைக் கேட்டார். நான் அவர் நாமத்தைக் கிறிஸ்தவர்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் அறிவிக்க அவர் என்னைப் பலப்படுத்திவருகிறது பெரிய உபகாரம். சிலமாதங்களுக்குமுன் எனக்கு மாரடைப்புக் கண்டது; நான் அதினால் மரணத்தருவாயிலிருக்கிறதாக நினைத்தேன், கர்த்தரின் வருகைக்குத் தயாராய்க் காத்திருக்க அவர் தயவாய் எச்சரித்தார் என்றெழுதியிருந்தார்.

அவர் உடன்வேலையாளாகிய கேலேப்பையர் 1797-ம் வருஷம் அவருக்குச் சம்பவித்ததைக் குறித்து, அவர் மரணத்திற்குப்பின் எழுதியது: சுவார்ச்சையர் தமது வயோதிகத்தைச் சட்டைபண்ணாமல் 1797-ம் வருஷ ஜனவரி மீ ஆரம்பமுதல் அக்டோபர் மீ வரைக்கும் தமது தெய்வ ஊழியத்தைச் செய்து, தமது வாலிபத்தில் தளராமுயற்சியாயிருந்தார். அவர் ஞாயிறுதோறும் இங்கிலீஷிலும் தமிழிலும் ஆராதனை நடத்தி,

புதன்கிழமை பொர்த்துகீசருக்கும் இவ்விடத்திலுள்ள 51-ம் பட்டாளத்தைச்சேர்ந்த கர்மானிய யுத்தவீரருக்கும் பிரசங்கித்துவந்தார். அவர் அனேகவிசை திருச்சிறாப்பள்ளிக்குப் போனதுமன்றி தஞ்சாவூருக்கு ஆறுமைல் தூரத்திலுள்ள வல்லத்திற்கும் அடிக்கடி பயணம்போய், அவ்விடத்திலுள்ள பட்டாளத்தின் ஒரு பங்காருக்கும் அஞ்ஞானிகளுக்கும் சுவிசேஷத்தை அறிவித்துவந்தார். அவர் காலை மாலை யாராதனைகளில் ஒரு ஞானப்பாட்டில் சில கவிகளைப் பாடிச் சுவிசேஷத்தை விஸ்தரித்து, ஆரம்பம்போல் அதை முடிப்பது வழக்கம். அவர் தமிழ்ப் பிள்ளைகளுக்கு பிரதிதினம் ஒருமணிநேரம் கிறிஸ்து மார்க்க உபதேசங்களைப் புகட்டிவந்தார். கிறிஸ்தவர்கள் பிள்ளைகளும் விசேஷமாய் அவர் தெய்வ ஊழியத்துக்காளாக்கினவர்களும் அறிவிலும் தெய்வபத்தியிலும் விர்த்திக்க அவரதிக ஆவலுடையவராயிருந்து, தமது ஜீவியகாலக்கடைசியில் இவர்கள் உபயோகத்திற்காகக் கிறிஸ்துமார்க்கப் பிரதம விஸ்தரிப்பென்னும் ஓர் நூலை வரைந்தார். வயதுமுதிர்ச்சியால் அவர் சக்திகுன்றிப் பெலன்குறைந்தாலும் தமது சபையார் மெய் வேத அறிவில் தேர்ச்சியடைவதற்குச் செய்யவேண்டிய சமஸ்த முயற்சியையுந் தளரா ஊக்கத்தோடு செய்துவந்தார். அவர் தமது சபையாரைச் சந்திப்பதில் அதிகப் பிரியமாயிருந்து, அவர்கள் நித்திய நன்மையைக்குறித்து அவர்களிடத்திற் பேசி, அவர்களிடத்திற் காணப்பட்ட பழுதுகளுக்காக அவர்களைக் கண்டித்து, கிறிஸ்துமார்க்கத்துக் கிசைய நடக்க அவர்களுக்குப் புத்திசொன்னார். நல்ல தாய்தகப்பன்மார் தங்கள் அருமைப் பிள்ளைகளை விட்டுச் சிலகாலம் எங்கேயாவது போயிருந்து வீட்டிற்கு வந்தால், அப்பிள்ளைகள் அவர்களைச் சூழ்ந்துகொள்ளும் வண்ணமாய்க் கிறிஸ்தவர்களின் பிள்ளைகள் சுவார்ச்சையரைக் கண்டவுடன் அவரைச் சூழ்ந்துகொள்ளுவார்கள். அவர் அவர்களுக்குப் பராபரனைப் பற்றியும் தங்கள் பெற்றோருக்குச் செய்யவேண்டிய கடமையைப்பற்றியும் போதிப்பது விநோத காட்சியாயிருக்கும்.

உபதேசிமார் ஒவ்வொரு நாளுந் தாங்கள் கிறிஸ்தவர்கள் பாப்புமார்க்கத்தார் அஞ்ஞானிகளிடத்திற் செய்த வேலையைப் பற்றியும் அதனாலுண்டான பிரயோசனத்தைக் குறித்தும் அவருக்கு ரிப்போர்ட்டு செய்வார்கள். சுவார்ச்சையரே அவர்கள் தங்கள் வேலையைப் புத்தியோடும் உண்மையோடும் செய்வதற்கான ஏற்பாடுகளை அவர்களுக்குத் தெரிவிப்பார்.



CHR. FR. SCHWARTZ — கி. பி. சுவார்ச்சையர்.

(50-ம் பக்கம் பார்க்க)

அவர் ஜீவியத்தின் கடைசி மாதங்களில் அவர் பலம் குறைந்துபோயிற்று. அவர் அந்நாட்களில் தாம் எதிர்பார்த்திருக்கிற நித்திய பாக்கியத்தைக் குறித்துச் சந்தோஷமாகப் பேசுவார். அவருக்கு 1797-ம் வருஷம் அக்டோபர் ௴ 17-ம் ௳ கண்ட தொண்டைக் கம்மலும் சளிப்பும் அவர் வியாதிக்கு ஆரம்பம். எத்தனையோ வைத்தியம் பார்த்தும் அவருடைய சுகம் திரும்பிவரவில்லை. அவர் தமது வருத்த வேளைகளில் முறையிட்டவரல்ல, எப்போதும் பொறுமையும் அமைதலுமாய்த் தமது நோவைச் சகித்தார். அவருக்கு மிகுந்த வேதனையுண்டாயிருந்த ஒருநாள்: கர்த்தர் என்னைத் தம்மிடம் அழைத்துக்கொள்ளச் சித்தமானால் நலம், அவருக்கு என்றென்றைக்கும் துதியுண்டாவதாக என்றார். அவர் தமது வியாதிகாலத்திலும் காலை மாலை ஜெபத்தைத் தாமே நடத்தி, வேத விஸ்தரிப்புச் செய்யத் தவறாதிருந்தார். தம்மைப் பார்க்கவந்த பேர்களோடு அவர் செய்த சம்பாஷணை அவருடைய விசுவாசத்தையும் பக்திவைராக்கியத்தையும் விளக்கப்பண்ணிற்று. நவம்பர் ௴ 23-ம் ௳ சரபோஜிராஜா * அவரைப் பார்க்க வந்தபோது, ஐயர் அவரை மிகப் பிரீதிகரமாயேற்றுக்கொண்டு, அவருக்குச் சொன்னதென்னவெனில்:

நான் உமக்காக அதிகப் பிரயாசப்பட்டேன்; என்னைக் கடவுள் எடுத்துக்கொண்டபிறகு நீர் வேடிக்கை விநோதங்களிலும், ஆடம்பரத்திலும் உமது காலத்தைக் கழிக்காதேயும். என் மரணத்திற்குப் பிறகும் நீர் கிறிஸ்தவர்களைச் சிநேகியும். அவர்கள் தீமைசெய்தால் தண்டியும், அவர்கள் நன்மைசெய்தால், அவர்கள் தகப்பனும் உபகாரியுமாயிரும். தன் இராச்சியத்தின் விர்த்தியையும் தன் பிரஜைகளின் க்ஷேமத்தையும் கோரி நீதி நியாயஞ் செய்வது அரசன் கடமை. நீர் விக்கிரகாராதனையை விட்டு, மெய்யான கடவுளை வணங்க அவர் உமக்குப் பலம் கொடுப்பாராக. நீர் வேத புத்தகத்தை வாசிக்

---

* சென்னையில் படித்துக்கொண்டிருந்த சரபோஜி தஞ்சைக்குத் திரும்பி வந்து மிசியோன் கம்பவுண்டுக்குச் சமீபமான ஒரு பங்களாவில் வாசஞ் செய்து, சுவார்ச்சு, கோலோப் என்ற ஐயர்மாரிடத்தில் படித்துக்கொண்டிருந்தார். அமர்சிங்கு ராஜா பல மோச தந்திரங்களினால் அபகரித்துக்கொண்ட பட்டத்திற்கு சரபோஜியே சரியான பாத்தியஸ்தர் என்கிற தீர்ப்பும் வந்து விட்டது. சுவார்ச்சையர் மரித்த மூன்று மாசங்களுக்குப் பின் அத்தீர்ப்பு நிறைவேற்றப்பட்டது.

ஜெரிச. நீர் உமது அடியாரத ஆத்துமத்தைக் குறித்துக் கவலையுள்ளவராயிரும் என்பதே.

ஐயர் வியாதிப்பட்டிருந்த காலத்தில் அவரோடு இராப்பகலாயிருந்தவர்கள் கோலேப்பையரும் ஜேனிக்கே ஐயருந்தான். ஐயர் விரும்பினபடி டிசம்பர் மீ 23-ம் உ ஜேனிக்கே ஐயர் அவருக்குப் பரிசுத்த இராப்போசனங் கொடுத்தார். மறுவருஷம் பெப்ருவரி மீ சுவார்ச்சையரின் இடதுகாலில் வெடிகுலையென்னும் இரணமுண்டாகி அதனால் மிகவும் அவஸ்தைப்பட்டார். அவர் காலங் குணமாகுமென்று கேள்விப்பட்டு தரங்கன்பாடி செமர் ஐயர் சென்னை கேரிக்கே ஐயர் இருவரும் போலே ஐயர் முதலியவர்கள் அவரைப் பார்க்க வந்து, அவருடைய சம்பாஷணைகளால் மிகுந்த எழுப்புதல் அடைந்தார்கள். கேரிக்கே ஐயர் அவரை நோக்கி: கர்த்தருடைய இராச்சியம் இத்தேசத்தில் பரிபாலனமாகுமா என்று கேட்டதற்கு அவர்: மிகுந்த உபத்திரவத்தினாலும் பிரயாசையினாலும் ஆகும் என்றார். தஞ்சாவூர்ச் சபையைக் குறித்துக் கேட்டதற்கு: அவர்களெல்லாரும் கரையேறும்படி நீங்கள் பிரயாசப்படுங்கள் என்றார்.

1798-ம் வருஷம் பெப்ருவரி மீ 13-ம் உ அவர் அதிக பலவீனப்பட்டிருந்தும், தம்மைப் பார்க்க வந்து தம்மைச் சூழ்ந்திருந்த ஐயர்மார் உபாத்திமார்களோடு 'என் ஜீவன் கிறிஸ்து தாமே' என்ற ஞானப்பாட்டைப் பாடி, தம்மைத் தாழ்த்தித் தமது மீட்பரை உயர்த்திப் பேசி: அவர் என்னை இப்பூமியில் இன்னம் சிலகாலம் வைத்திருக்கச் சித்தமானால், நான் சந்தோஷமாய் ஏழைகள் கோயாவிகளுக்குக் கர்த்தருடைய வசனத்தைச் சொல்லுவேன். ஆகிலும் அவர் சித்தத்தின்படி ஆகக்கடவது. அவர் என்னைத் தமது திருவுளத்தின்படி ஏற்றுக்கொள்வாராக. சத்தியபரனாகிய கர்த்தராகிய தேவரீர் என்னை மீட்டுவிட்டீர், உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்றார்.

பிறகு யாவரும் 'இரத்தங் காயங் குத்தும்' என்ற ஞானப்பாட்டைப் பாடினபோது அவரும் சேர்ந்து பாடி, சற்றுநேரம் இளைப்பாறி, தம்மைத் தாக்கச் சொல்லி, தமது வாயைத் திறந்து ஆவியை விட்டு, நித்திய மனைக்குப் பாகதி அடைந்தார். அப்பொழுது அவருக்கு வயது 72. அவர் தமது ஆயுசகாலமெல்லாம் விவாகமில்லாதிருந்து, 48 வருஷகாலம் மிஷி

Death of Schwartz.



யோனரியாக உழைத்தார். இதில் 20 வருஷகாலம் தஞ்சாவூரில் வேலைசெய்து, 'ராஜகுரு' என்றும், 'தகப்பன்' என்றும், 'மாமுனிவர்' என்றும் பெயர் பெற்று, ஏறக்குறைய 3ஆ பேருள்ள ஒரு மந்தையை அங்கே சேர்த்தார். இவரைப்போல் கீர்த்தி பெற்ற குருமார் வெகுசிலர். அவர் மரித்த மறுதினத்தில் அவருடைய தேகம் அவர் கட்டிய மிஷியோனாலயத்தில் சரபோஜிராஜனும், அவர் பிரஜைகளான திரள் கூட்டமும் பார்க்க, அடக்கம் பண்ணப்பட்டது. அன்று சாயங்காலம் கோயிலில் கூடிவந்த சபையாருக்கு கேரிக்கே ஐயர்: இதோ நான் மரணமடைகிறேன்; ஆனால் பராபரன் உங்களோடிருப்பார் என்று யாக்கோபு என்ற கோத்திர பிதா தன் குமாரன் யோசேப்புக்குச் சொன்ன வார்த்தையின் பேரில் வெகு உருக்கமான துக்கப் பிரசங்கம் செய்தார்.

அவருக்கு ஞாபகசின்னமாக சென்னை துரைத்தனத்தார் சென்னைமாநகர் கோட்டைக் கோயிலில் விசேஷமாய்ச் சித்திரித்த ஒரு வெள்ளைச் சலவைக்கற் சாசனத்தை வைத்தார்கள். சரபோஜி ராஜாவும் தமக்குச் சுவார்ச்சையர் செய்த உபகாரங்களுக்காக நன்றியறிதலைக் காண்பிக்கும் பொருட்டு வெகு அலங்கிர்தமான சித்திரவேலை நிறைந்த வெள்ளைக்கல் ஞாபகசின்னமொன்றைத் தஞ்சைக் கோட்டைக் கோயிலில் ஏற்படுத்தி வைத்தார்.

சுவார்ச்சையரோடு தஞ்சாவூர்ச் சபையின் சிறப்புக்கும் செழிப்புக்கும் முடிவு வந்தது. இவருக்குப் பின் அச்சபையை விசாரித்து நடத்தினவர் யோ. கா. கோலேப்பையர்.

---

## ௫. திருநெல்வேலி மிஷியோன்.

பாளையங்கோட்டையிலிருந்த ஒரு அங்கிலேய தத்திகட்டிடயிலிடத்தில் அஞ்ஞானக் கணக்கப்பிள்ளை ஒருவன் இருந்தான். இவன் திருச்சிராப்பள்ளிக்கு வந்திருந்த ஒரு சமயத்தில் சுவார்ச்சையர் பிரசங்கத்தைக் கேட்டு, கிறிஸ்துமார்க்கத்தில் சேர விருப்பங்கொண்டிருந்தான். ஆயினும் அவன் அங்கே தரித்திருந்து உபதேசம் பெறாமல், பாளையங்கோட்டைக்குத் திரும்பிப் போய்விட்டான். அங்கே அவன் தமது ஞானோபதேசத்தின் ஐந்து ஆதி அத்தியாயங்களைக் கற்றுக்கொண்டு

தன் விருப்பத்தைத் தன் எஜமானுக்குத் தெரிவித்து, அந்தத் துரை கையிலேயே ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டு, சவரிமுத்து என்கிற பெயரைப் பெற்றான். இந்தச் சவரிமுத்து திருச்சிறுப்பள்ளியில் ஒரு கிறிஸ்தவளை விவாகஞ் செய்து கொண்டு, பாளையங்கோட்டையில் வசித்து, அங்குள்ள ஜனங்களுக்குச் சத்தியவேத புத்தகத்தை வாசித்துக் காட்டிவந்தான். (இதைச் சுவார்ச்சையர் தமது 1771-ம் வருஷத்துத் தினக் குறிப்புப் புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.) இதுவே திருநெல்வேலி மிஷியோனின் அற்பசொற்பமான ஆரம்பம்.

Savarimuttu.

1778-ம் ஆண்டு பாளையங்கோட்டையிலிருந்த ஒரு ஐரோப்பியனின் விவாககாரியத்தை நிறைவேற்றும்படிக்கும், அந்த ஊரிலும் மதுரையிலும் இருந்த சில குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படிக்கும் சுவார்ச்சையர் பயணப்பட்டுப் போனார். அவர் போகும் வழியிலே தச்சநல்லூர் (தச்சநூர்) என்ற இடத்திலிருந்த ஒரு சிப்பாய்ப் பட்டாளத்தில் நமது சபையைச் சேர்ந்த ஏறக்குறைய அறுபது கிறிஸ்தவர்களைக் கண்டு, அவர்களுக்குப் புத்தி பிரசங்கம் செய்து, பின்னேகனைப் பரிசோதித்தபின் பாளையங்கோட்டை சேர்ந்தார்.

Schwartz.

அங்கே அவர் சில பிள்ளைகளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கவேண்டியிருந்த ஒரு நாள் ஒரு பிராமண ஸ்திரீ தன் சுவிகாரப் பிள்ளையோடு வந்து, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள விரும்பினாள். இவள் தஞ்சாவூர் அரண்மனையில் உத்தியோகம் பார்த்த ஒரு பண்டித பிராமணனின் விதவை. புருஷன் மரித்தபின் அவள் அப்பொழுது தஞ்சையிலிருந்த லிற்றில்டன் (Lyttleton) என்ற அங்கிலேய உத்தியோகஸ்தனுக்கு வைப்பாட்டியானாள். அந்தக் காலத்திலே அவள் சுவார்ச்சையரிடம் வந்து தனக்கு ஞானஸ்நானம் கொடுக்கக் கேட்டும், அவள் பாவத்தின் நிலைத்திருக்குமட்டும் ஞானஸ்நானம் கொடுப்பதில்லை என்று அவர் மறுத்துவிட்டதுமன்றி, மேற்கூறிய துரைக்கும் புத்திசொன்னார். அவ்விருவரும் பாவத்திற் பிழைத்துவந்தார்கள். வந்தும், அந்தத் துரை சத்திய வேத விஷயங்களை அவளுக்குப் போதித்து, தன் ஆஸ்தி பாஸ்திகளை எல்லாம் அவளுக்குக் கொடுத்துவிட்டு மரித்தான். அவனுடைய மரணத்திற்குப் பின் இச்சமயத்தில் அந்த ஸ்திரீ

Clarinda.



ஐயரைப் பாளையங்கோட்டையிற் கண்டு, மறுபடியும் தன் விருப்பத்தைத் தெரிவித்தாள். அவர் அவளுடைய நடவடிக்கை காரியாதிகளைக் குறித்துத் திருப்தியாகி, அவளை ஞானஸ்நானஞ் செய்வித்து, அவள் வேண்டுகோளின்படி அவளுக்குக் 'கிளாரிந்தா' என்று பெயரிட்டார். தாமரும் ராகாபும் இயேசு நாதருடைய வம்ச அட்டவணைக்குட்பட்டது போல், கிளாரிந்தாள் நாமமும் திருநெல்வேலி மிஷியோன் சரித்திரத்திற்குட்பட்டுத் தேவகிருபைக்குச் சாட்சியாக விளங்கி நிற்கிறது. இது முதல் திருநெல்வேலியில் சபை பெருகும் என்கிற உறுதியும் திடமுமான நம்பிக்கை சுவார்ச்சையருக்கு உண்டாயிற்று. இதை அவர் பொலே ஐயருக்கும் தெரிவித்தார்.

அடுத்த வருஷம் பொலே ஐயர் பாளையங்கோட்டைக்கு ஒரு கலியாண முகாந்திரமாய்ப் போனபொழுது, பிரசங்கம் செய்து, கிளாரிந்தாளின் வேலைக்காரனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அவருக்கும் அந்த அம்மாளைக் குறித்து நல்லபிப்பிராயமிருந்தது. சுவிசேஷ பிரசங்கிகளுக்கு அவள் வீடு தங்குமிடமாயிற்று. சிதறியிருக்கும் கிறிஸ்தவர்களை விசாரிக்கும்படி சுவார்ச்சையர் திருச்சிறுப்பள்ளிக்குத் தெற்கே 40 மைல் தூரத்திலிருக்கும் திருப்பத்தூரில் சவரிமுத்து உபதேசியாரை நியமித்து வைத்தார்.

Pohle.

1780-ம் வருஷத்தில் பாளையங்கோட்டையில் ஒரு சிறியான சபையும், சபைப்பும் ஏற்பட்டதாகத் தோன்றுகிறது. அவ்வருஷத்தில் அங்கிருந்த நமது சபை அந்த டாப்பின்படி ஆத்துமாக்கள் 39. இவர்களில் பிராமணத்தி ஒன்று; வடுகன் 1; பரத்தி 1; வண்ணான் 1; பறையன் 1; இடையன் 1; வெள்ளாளர் 6; சவளக்காரர் 2; பணிக்கன் 1; தட்டார் 3; பள்ளன் 1; மறவன் 1; செட்டி 1; பலபட்டடை 18. குறிக்கவன் 1; ஆறுபேருள்ள வெள்ளாளக் குடும்பம் திருநெல்வேலிப் பட்ட பிள்ளையினது. இவர் ரோமான் சபை கவிராயர் தேவசகாயம் பிள்ளையினது. இவர் ரோமான் சபையிலிருந்து லுத்தரன் சபையிற் சேர்ந்தவர். அவர் குமாரர் பிரபல்லிய சுவிசேஷ கவிராய வேதநாயக சாஸ்திரியார். இவர் சரித்திரம் தஞ்சை மிஷியோன் சரித்திரத்தைப் பற்றிய அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறது.

1783-ம் ஆண்டு சுவார்ச்சையர் தஞ்சாவூரைவிட்டு வெளியே போயிருக்குங் காலத்தில், இரண்டு ரோமானித்தார் திரு

செல்வேலியிலிருந்து தஞ்சாவூருக்கு வந்து, தங்களைச் சபை சேரக் கர்த்தர் சபையில் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டார்கள். அவர்களுக்குத் தாவீது இராயப்ப சட்டையர் ஆயத்த உபதேசம் செய்தார். அவர்கள் தங்களுக்கொரு சட்டையரை அனுப்புவிக்கக் கேட்டுக்கொண்டார்கள். இதற்குள் சவரிமுத்துச் சபையும் திருப்பிவிட்டதால், சொக்கநாதன் அம்மான் தன் தந்தைபுத்திரனை அவரிடம் ஒப்புவித்து, பாளையங்கோட்டைக்கு ஒரு சட்டையரை அனுப்பக் கேட்டுக்கொண்டான். தாவீது ஐயர் அவர்கள் விண்ணப்பத்தைப் பெற்றவுடனே, விசுவாசியென்ற பஞ்சம உபதேசியார் அவர்களுக்குப் போதுமென்று சொல்லியனுப்பினார்கள். சுவார்ச்சையரோ தஞ்சை ஞானப்பிரகாசம் உபதேசியாரையும், பிறகு அவர் மருமகனாகிய இராயப்ப சட்டையரையும் அங்கே அனுப்பினார் (1784 ஆம் ஜூலை மீ). அவர்கள் செப்டம்பர் மீ தசரத்து வந்தபோது, அஞ்ஞானிகளும் ரோமானியருமான 180 ஆத்துமாக்களைச் சபையில் சேர்த்ததாகத் தெரிவித்தார்கள், ...விலிருந்து சமுக சபையைச் சேர்ந்தவர்களான அனேக பிறர்கள் அப்பொழுது இருந்தார்கள். அந்தக் காலத்து ஞானஸ்நானம் பெற்றிருந்த ரோமானியரும், அஞ்ஞானிகளும் 31 பேர், ... பிள்ளைகளும் ... சேர்க்கப்பட்ட பிறர்கள் 80. பாளையங்கோட்டைக்குத் தெற்கே தெரிசனையென்ற ஊரில் 24 ஆத்துமாக்கள். இவை சாணார் குடும்பங்கள் 2; இவர்களே அந்த ஜாதியாரில் முதல் முதல் திருச்சபையில் சேர்ந்தவர்கள்.

Pastor Rayappen.

1785-ம் ஆண்டு கிளாரிந்தா இரண்டு அரைமாளிகை உதவி பெற்று பாளையங்கோட்டையிலிருந்த ஐரோப்பியர் சுதேசக் கிறிஸ்தவர்களின் தேவாலயமென்று கட்டத் தொடங்கின கோயிலைப் பிரதிஷ்டை செய்யும்படி சுவார்ச்சையர் அந்த வருஷம் ஆகஸ்டு மீ (2-ம் விசை) புறப்பட்டுப் போனார். அவர் முந்த ராமநாதபுரத்துக்குப் போய், அங்கொரு இங்கிலீஷ் பாடசாலையை ஸ்தாபித்தார். அந்தப் பள்ளிக்கூடம் இன்னும் செழிப்பியும், அவர் மந்திரியும் தங்கள் பிள்ளைகளை அனுப்பினார்கள். ஐயர் அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, சதுரங்கப்பட்டணத்துக்குப் போய் அங்கிருந்த டச்சுக்காரருக்கு மத்ரு

Palamcottah Church.



8. 36-ன் பேரில் ஒரு பிரசங்கம் செய்தார். பிறகு பாளையங்கோட்டைக்குப் போய், புதுக்கோயிலைப் பிரதிஷ்டை செய்து, மூன்று வாரம் அங்கே தங்கியிருந்து, வெகுவான புத்திபோதனைகள் செய்து, எண்பது பேருக்குப் பரி: இராப்போசனம் பரிமாறினார். அவர் திரும்பித் தஞ்சாவூருக்கு வரும்போது மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட பிச்சைமுத்தின் மகனையும், தேவசகாயம் பிள்ளை மகன் வேதநாயகம் என்பவனையும் தம்மோடு அழைத்து வந்தார். இதுவே அவர் பாளையங்கோட்டைக்குச் செய்த கடைசி பயணம். இதற்குப்பின் அவர் சத்தியநாத உபதேசியாரைத் தென்னாட்டுக்குக் காயமான உபதேசியாராக நியமித்தார். தெய்வபக்தியும் விடாமுயற்சியும் பொருந்திய சத்தியநாத உபதேசியாருடைய வேலைகளைக் கர்த்தர் ஆசீர்வதித்ததால், வருஷா வருஷம் சபை பெருகிக்கொண்டே வந்தது. 1790-ம் ஆண்டு பாளையங்கோட்டைச் சபையிலிருந்த ஆத்துமாக்கள் 300. தாவீது இராயப்ப சட்டையர் சமயா சமயங்களில் வந்து, மேல் விசாரணை செய்துகொண்டு போனார். இவரும் விருத்தாப்பியராகி விட்டதால், இப்பொழுது அங்கே நிலைவரமாய்க் குடியிருந்து மிஷியோன் வேலையை நடத்தக் கூடிய ஒரு ஐரோப்பிய குருவை நியமிப்பது நன்மையென்று கி. அ. வி. சங்கத்தாருக்குக் கண்டது. அவ்வாறு நியமிக்கப்பட்ட குரு ஜேனிக்கே ஐயர்*. இவர் 1759-ம் ஆண்டு பெர்லின் நகரத்தில் பிறந்து, ஹால்லே வித்தியாசாலையில் வேதசாஸ்திரம் கற்று, 1787-ம் ஆண்டு வெர்னிகரோதேயென்ற இடத்தில் குருப்பட்டம் பெற்று, 1788-ம் வருஷம் சென்னையில் கரையிறங்கி, தரங்கம்பாடி வழியே தஞ்சாவூருக்கு வந்தார். அங்கே அவர் சுவார்ச்சையர் உதவியால் தமிழ் படித்து, மிஷியோன் வேலைசெய்ய ஆரம்பித்தார். அவர் 1791-ம் ஆண்டு செப்தெம்பர் மீ வரைக்கும் தஞ்சாவூரில் வேலை பார்த்தார். அதற்கு முந்தின 1790-ம் ஆண்டு டிசம்பர் மீ 26 உ சத்தியநாத உபதேசியாருக்கு லுத்தரன் திருச்சபை முறைப்படி தஞ்சாவூரிலே சுவார்ச்சு, கோலாப், ஜேனிக்கே என்ற ஐயர்மாரால் குருப்பட்டம் கொடுக்கப்பட்டது. பட்டம் கொடுத்தபின் சுவார்ச்சையர் அவரைப் பாளையங்கோட்

Jaenicke.

* இவரோ, தமது வியாதியினால் பாளையங்கோட்டையில் தரித்திருக்கக் கூடாதேபோயிற்று.

டைக்கு அனுப்பினார். அவர் போய் அங்கே உண்மையாய் உழைத்ததால் 1791-ம் வருஷம் அக்டோபர் மாசத்திற்குள் பாளையங்கோட்டைச் சபையார் தொகை 383 ஆயிற்று. அந்த மே 16-ல் ஜேனிக்கே ஐயர் பாளையங்கோட்டைக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே அவர் பத்து மாசக்காலம் தங்கி, இங்கிலீஷிலும் தமிழிலும் அநேக பிரசங்கங்கள் செய்து, 60 அஞ்ஞானிகளுக்கு ஆயத்த போதனை செய்து ஞானஸ்நானங் கொடுத்தார். "திருநெல்வேலி நாட்டிலே கொஞ்சகாலத்திற்குள் கிறிஸ்துமார்க்கம் பரம்புமென்பதற்கு ஐயமில்லை" என்பது அவர் நிச்சயித்திருந்த நம்பிக்கையால் அக்காலத்தில் எழுதிவைத்த மக்களைவரைக்கு. அவரும் சத்தியநாத ஐயரும் வெல்லையூருக்குச் சுற்றுப்புறங்களுக்குப் போய், முந்திச் சுவிசேஷ வசனத்தைக் கேட்டிராத வெகு ஜனங்களுக்கு அதைப் பிரசங்கித்தார்கள். கேட்டவர்களில் அநேகர் பாளையங்கோட்டைக்கு வந்து, ஞானஸ்நானம் பெற்றார்கள், பின்னும் ஞானஸ்நானம் பெறவிரும்பினவர்கள் அநேகர்.

1792-ம் வருஷத்தின் துவக்கத்தில் ஜேனிக்கே ஐயர் திருவாங்கோட்டிலுள்ள மிஷனரி மட்டும் போய், அங்குள்ளவர்களுக்கும் பாய்ந்த மார்க்கத்தாருக்கும் சுவிசேஷத்தைத் தெரிவித்து, பெப்ருவரி மீ பாளையங்கோட்டைக்குத் திரும்பி வரவே, சத்தியநாத ஐயர் மேற்கேயுள்ள இடங்களுக்குப் போய் இரட்சணிய விசேஷத்தைக் கூறினார். அக்காலத்தில் ஜேனிக்கே ஐயர் மலைக்காய்ச்சலால் மிகுந்த சங்கடப்பட்டார். இந்தக் காய்ச்சலோடே அவர் தூத்துக்குடி, மணப்பாடு, பத்தருப்புரம் முதலிய இடங்களுக்குப் போய்க் கிறிஸ்தவர்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் பிரசங்கித்து, செப்டெம்பர் மீ தஞ்சாவூருக்கு வந்து சேர்ந்தார். அவருக்குக் கண்டிருந்த மலைக்காய்ச்சல் அவரைப் பாளையங்கோட்டைக்குப் போகாமற் பண்ணிற்று. இந்தக் காலமெல்லாம் சத்தியநாத நாட்டையரே தென்னாட்டுச் சபையை விசாரித்து வந்தார். குறித்த பெப்ருவரி மீ 19-ல் ஜேனிக்கே ஐயர் பாளையங்கோட்டைக்கு வந்து, அங்கே பலநாள் உழைத்தார். 1795-ம் வருஷம் இராமநாதபுரத்தில் சிலர் ஞானஸ்நானம் பெற விரும்பினதால், சத்தியநாத ஐயர் அங்கே போய் மூன்று மாதம் தங்கியிருக்க வேண்டியதாயிற்று. ஜேனிக்கே ஐயருக்குக் காய்ச்சல் கண்டும், நாட்டையர் இருமுறையும் அவர் பாளையங்கோட்டையை விடவில்லை. அவர் திரும்பியபின் புறப்பட்டுத் தஞ்சாவூருக்கு வந்து, தரங்கம்பாடியிலுள்ள சகோதரரோடு மிஷியோன்



வேலைகளைக் குறித்து ஆலோசிக்கும்படி அவ்விடம் சென்றார். அங்கிருந்து திரும்பிய பின்னும் சுரம் அவரை விடவில்லை.

அவருக்குப் பதிலாக ரொட்லர் ஐயர் (Rottler) சிலகாலம் தெற்கே போயிருந்து, சபையை விசாரித்துத் திரும்பினார். 1796-ம் வருஷம் ஆயத்தக்காரருக்குப் படித்துக் கொடுப்பதற்கு ஒரு ஆள் வேண்டுமென்று சத்தியநாத ஐயர் கேட்டபொழுது சுவார்ச்சையர் தாவீது என்ற ஒருவரை நியமித்துப் பாளையங்கோட்டைக்கு அனுப்பினார். இந்த தாவீது உபதேசியார் சாணாக் கிறிஸ்தவர்களில் முதல் முதல் உபதேசியாராகி, கர்த்தருக்கு மகிமையும் அநேக ஆத்துமாக்களுக்குப் பிரயோசனமுமாக உழைத்தவர். அவர் சிறுவயதில் காலாடியாய்த் திரிந்து, தஞ்சாவூருக்கு வந்து, உபதேசம் பெற்று, அங்கே கோலோப்பையரால் ஞானஸ்நானம் பெற்றார். அவர் விஜயராமபுரம் என்ற தமது பிறந்தகத்துக்குத் திரும்பியபின் தம் சொந்த ஜாதியாரைக் கிறிஸ்துவண்டை கொண்டுவர மிகவும் பிரயாசப்பட்டுச் சித்தியும் பெற்றார். இவருடைய முயற்சியாலே தான் 'முதலூர்' என்ற முதல் கிறிஸ்தவ கிராமம் உண்டாயிற்று (1799). அது ஏற்பட்டபொழுது அங்கே இருந்தவர்கள் 28 பேர், இப்பொழுதோ ஆயிரத்து முன்னூற்றுக்குக் குறையாது.

ஜேனிக்கே ஐயர் வரவர பலட்சயப்பட்டதால், கெரிக்கே ஐயர் அவர் சுகத்தைக் கருதினதினாலும், அங்கே ஜேனிக்கே ஐயர் முயற்சியால் கட்டப்பட்டிருந்த கோயிலைப் பிரதிஷ்டை பண்ணும் நோக்கமாகவும் 1800-ம் வருஷம் பெப்ருவரி மீ அவரை இராமநாதபுரத்துக்கு அழைத்துக்கொண்டு வந்தார். இதனால் அவர் சுகம் அடைவாய் விர்த்தியாயிற்றென்றே சொல்லவேண்டும். ஆயினும், கோயில் பிரதிஷ்டையில், ஜேனிக்கே ஐயரை ஆரம்ப ஜெபம்செய்யக் கேட்டுக்கொண்டபொழுது, அவர் அதற்குச் சம்மதித்துச் செபஞ் செய்கையில், மேலிட்ட மன உணர்ச்சியும் தளர்ச்சியுங் கூடி அவர் கைகால்களை நடுங்கப்பண்ணவே, அவர் கோயிலைவிட்டு வெளியே போய்விட்டார். அவ்விருவரும் ராமநாதபுரத்திலிருந்து தூத்துக்குடி, மணப்பார், பாளையங்கோட்டை, மதுரை என்ற இடங்களைச் சந்தித்தார்கள். ஜேனிக்கே ஐயர் ராமநாதபுரம், நாகபட்டணம், தரங்கம்பாடி என்ற ஊர்களுக்குப் போகவேண்டுமென்ற நோக்கமாய் மதுரையில் தங்கிவிட்டார்.

1800-ம் வருஷம் பெரிய வெள்ளிக்கிழமையன்று தஞ்சாவூர் வந்து சேர்ந்தார். அவருடைய வியாதியும் பாடும் அதிகரித்

ஆம், அவர் மே மீ 10-ம் உ பொற்ற ஆசாரத்தைப் போலவே புறப்பட்டு தமது சகோதரனாகிய கேரிக்கே, ஜெனிக்கே ஐயர்களோடு சமாதானமாய், அன்று தாம் மரிக்கப் போகிறதை க் தெரிவித்தார். காது மணிக்கு [illegible]

Jaenicke's Death.

[illegible]; 6 மணிக்குச் சற்று முன்பாகத்தான் [illegible] அவர் முகத்தில் புன்னகை அமைய, கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அப்பொழுது அவருக்கு வயது 41. அவர் மிஷனெரியாய் உழைத்தது 13 வருஷம். அவர் தமது [illegible] சரீரத்தோடு புதைக்கப்பட்டிருக்கிறது.

அவர் மரிக்குமுன் 1806-ம் [illegible] தென்னிந்தியாவில் [illegible] சத்தியநாத ஐயரே [illegible] வந்தார். [illegible] புறப்புச் சபையிலும் [illegible] சந்தடி [illegible] அவர் அநேக [illegible]

Sattianadan.

[illegible] சபைகள் [illegible] 1802-ம் ஆண்டு கேரிக்கே ஐயரும், அவருடைய கோலன்ப்ரென்னரும் தென் நாட்டுக்கு வந்து, சபை விசாரணை செய்து, ஏராளமானபேர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள். கேரிக்கே ஐயர் ஒரு மாதத்தில் 1800 பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தாராம். 1778-ம் வருஷமுதல் 1806-ம் வருஷமட்டும் ஞானஸ்நானம் பெற்ற குழந்தைகள் 284, பெரியோர்கள் [illegible] 4234. ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு [illegible] உண்டான [illegible] தொகையல்ல.

சத்தியநாத ஐயர் தென்னாட்டிலிருந்த சபைகளைத் [illegible] தஞ்சாவூர்க் கட்சி என்றும், திருநெல்வேலிக் கட்சி என்றும் சபையில் கட்சிப்பிரிவினை உண்டாயிற்று, கோலன்ப்ரென்னருக்கும் சத்தியநாத ஐயருக்கும் சொந்தம் [illegible] இருந்தும் [illegible] மனமற்று, தம்மைத் தஞ்சாவூருக்கு மாற்றிவிடக் கேட்டுக்கொண்டார். அவர் விருப்பத்தின்படி 1805-ம் வருஷம் [illegible] தஞ்சாவூருக்கு அழைப்பிக்கப்பட்டு, [illegible] [illegible] பலமுறையடி. [illegible] 1815-ம் ஆண்டு தமது [illegible] 25-ம் வருஷ [illegible], காம் [illegible] தமது [illegible] பிர வேசித்தார்.



சத்தியநாத ஐயர் தஞ்சைக்குத் திரும்பியவுடனே அவரிடத்திற்கு வேறொரு குருவும் நியமிக்கப்படவில்லை. தஞ்சை ஞானப்பிரகாச உபதேசியார் சபைகளை விசாரித்து வந்தார். சிலகாலத்திற்குப்பின் ரிங்கல்தௌபே (Ringeltaube) ஐயர் சபை விசாரணையை ஒப்புக்கொண்டார்.

---

முதல் நூறு வருஷங்களில் டேனிஷ் ஹால்லே மிஷியோனில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் தொகை (கிறிஸ்தவர்களின் குழந்தைகள் உட்பட)

| | | |
|---|---|---|
| தரங்கம்பாடி, மாயூரம், தஞ்சாவூர் | 1707 — 1806 ... ... | 23,014 |
| சென்னை | 1727 — 1806 ... ... | 4,465 |
| கடலூர் | 1737 — 1806 ... ... | 2,104 |
| திருச்சிராப்பள்ளி | 1762 — 1806 ... ... | 2,463 |
| திருநெல்வேலி | 1778 — 1806 ... ... | 4,518 |
| | ஆக மொத்தம். | 36,564 |

---

இப்படியாக இந்தக்காலப் பகுதியில் தரங்கை சுவிசேஷ ஊழியம் நிலைபெற்று ஆர்க்காட் மிஷியோன் தரங்கம்பாடி கல்யாவில் தெற்கே, தமிழ் நாட்டின் எப்பாகத்திலும் செழித்தோங்கியது மன்றி, தமிழ் நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் திருவாங்கோடு பரியந்தம் ஓடிப் பரம்புவதற்கும் காத்தார் என்று பார்க்கிறோம். ஆயினும், 1806-ம் வருஷம் தரங்கை மிஷியோனின் முதலாம் சதாப்த மகோற்சவம் தரங்கையில் சிறப்பாய்க் கொண்டாடப் பட்டதில்லை. இதற்கு அப்பொழுதே தரங்கை சபைகளிலன்றி, அநேகமாய் வெளிச்சபைகளிலன்றி, டேனிஷ் அதி பதிகளின் பக்திக் குறைவா லுண்டான நாஸ்திகமே காரணம்.

## 3. நலிவு காலம் (1806 - 1840 *).

### க. தரங்கை மிஷியோன்.

இந்தக் காலப் பகுதியின் ஆரம்பத்தில் தரங்கைச் சபைகளையும் பள்ளிக்கூடங்களையும் விசாரித்துவந்தவர் பேர்பெற்ற யோனேயர். அவர் 42 வருஷகாலம் வேலைசெய்து, 1813-ம் வருஷம் மரித்து எருசலேம் கோயில் உத்தரான பூமியில் அடக்கம் பண்ணப்பட்டார். அவர் உயிரோடிருக்கும்பொழுதே கெம்மரர் ஐயர் வந்தார். இவர் 1767-ம் வருஷம் ஷ்வாபேன் என்ற நாட்டில் பிறந்து, ஹால்லே பட்டணத்தில் வேத சாஸ்திரம் படித்து, 1789-ம் வருஷம் குருப்பட்டம் பெற்று, இந்தியாவுக்குப் போதகராய் அனுப்பப்பட்டார். அவர் வருகிறவழியில் கன்னம்பிக்கை முனையண்டை கப்பற் சேதப்பட்டதினால் பெரிய ஆபத்தில் அற்புதமாய்க் காக்கப்பட்டு, கொழும்பு வழியாய் 1791-ம் வருஷம் தரங்கைக்குச் சேர்ந்தார். அவருக்குப் பின் 1801-ம் வருஷம் தரங்கைக்கு வந்த ஷ்ரைவோகல் (Schreyvogel) என்பவர் அங்கே உபதேசியாராயிருந்து 1813-ம் வருஷம் குருப்பட்டம் பெற்றும், 1826-ம் வருஷத்தில் நமது மிஷியோனையும் சபையையும் விட்டு, இங்கிலீஷ் சபையில் சேர்ந்துபோனதால், அவ்வருஷமுதல் 1837-ம் வருஷமட்டும் கெம்மரர் ஐயர் ஒருவரே தனித்து வேலைசெய்ய வேண்டியதாயிற்று. புதிய மிஷியோனரிகளும் வரவில்லை. காரணம் தாய்நாட்டின் தேசத்தையும் சபையையும் ஆட்கொண்ட அவிசுவாசமே.

A. F. Caemmerer.

இதினால் மனம் வேதனைக்குள்ளான ஹால்லே பிரதம கின்ச் (Professor Freylinghausen) பண்டிதர், தரங்கைக்கு அனுப்பத்தக்க குருமார் கிடைப்பதில்லை என்று சொல்லி, ஒரு கடிதத்தில் எழுதினது என்னவெனில்: நமது மிஷியோன் ஆரம்பித்த காலத்திலேயே மிஷியோனரிகள் அகப்படுவது வருத்தமாயிருந்தது. இக்காலத்திலோ அதிக வருத்தமாயிருக்கிறது. காரணம், தற்காலத்தச சாஸ்திரிகள் சுவிசேஷத்துக்கு விரோதமான எண்ணங்களை இளைஞருக்குப் புகட்டி

* வெளிச்சவைகளில் 1806—1826 மட்டுமே.



வருகிறார்கள். இதனால், இந்தியாவுக்கு வேண்டிய போதகரைத் தெரிந்துகொள்ளுவதில் எங்கே மோசம் போகிறோமோ என்று அஞ்சவேண்டியதாயிருக்கிறது. தத்துவ சாஸ்திரத்துக்குரிய சன்மார்க்கம் இரட்சிப்புக்குப் போதும் என்கிற எண்ணத்தை அந்தரங்கத்தில் நம்புகிற ஒரு போதகனை நாம் தெரிந்துகொள்வோமாகில், அவன் அஞ்ஞானிகளுக்குத் தன் சித்தாந்தத்தைப் போதிப்பானேயன்றி வேறல்ல என்பதே. இதைப்பற்றி கவார்ச்சையர் தாமும் தமது விருத்தாப்பியத்தில் மனநோவோடு சொன்னதை யேற்கனவே தெரிவித்திருக்கிறோம்.

இந்த அவிசுவாச காலத்துக்கு ஒத்திருந்தது தரங்கையிலிருந்த டேனிஷ் அரசாங்கத்தார் குணமும். "பழையகுருடி கதவைத் திறடி" என்றதுபோல், அதிகாரிகளுக்கும் ஐயர்மாருக்கும் பழையபடி மனஸ்தாபம், போராட்டம். சுதேசிகளுக்குள் கிறிஸ்தவர்களின் நடபடிகள் அஞ்ஞானிகளுடையதிலும் கேவலமென்று துரைத்தனத்தார் முறையிட்டு, மிஷியோனரிகளைக் குறைவுபடுத்திப் பேசினார்கள். ஐயர்மார்களோ அஞ்ஞானிகள் தங்களுக்குள்ளாக பயார் பக்கமாய்ப் பேசி, அஞ்ஞானிகள் ஜாதி நியாயப்படி சேரிகளைச் சேர்க்கவும், அதிகாரிகள் கிறிஸ்தவர்களின் நடபடிகளைப் பார்க்கிலும் சுதேச கிறிஸ்தவர்களின் நடபடிகள் அதிக சீராயிருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது நியாயமல்ல என்பதாகவும் நியாயம் சொன்னார்கள்.

அதிகாரிகளாயிருந்த லிந்த்கிரீன் (Lindgreen) ரேலிங் (Rehling) என்ற இருவரும் கூடிக்கொண்டு ஐயர்மார்பேரில் குறை கூறுகிற கிறிஸ்தவர்களைத் தட்டிக்கொடுத்து, பிரியாது கொண்டுவரத் தூண்டிவிட்டார்கள். அப்படியே தியாகப்பன் என்ற ஒரு கிறிஸ்தவன், ஐயர்மார் தன் பிதிரார்ஜிதத்தைப் பிடுங்கிக்கொண்டதாகவும், கெம்மரர் ஐயர் தன்னை நாலனைப் அறைந்ததாகவும், யோனேயர் ஒரு ஸ்திரீயைத் தன் கையால் அடித்ததாகவும் பிரியாது செய்தான். பிதிரார்ஜிதச் சங்கதி முற்றிலும் பொய். தியாகப்பன் அத்துதப்பி துஷ்டத்தன்மையாய்ப் பேசினதால் கெம்மரர் ஐயர் அறைந்ததும், ஒரு பெரிய பொல்லாப்புக்கு விலக்கிக் காக்கும்படி யோனேயர்

Disputes.

ஒரு ஸ்திரீயைச் சொற்ப தண்டனைக்குள்ளாக்கினதும் மெய். விசாரணையில் உபதேசிமாரும் அனேக சுதேசிகளும் ஐயர்மாருக்குச் சார்பாய்ப் பேசினதால் ரேலிங் துரை அவர்களைக் கடுமையாய் நடத்தினார். அவர்கள் முறையிட்டுக்கொண்டதன்பேரில் வேறு நியாயாதிபதியைக் கொண்டு விசாரணை செய்யப்பட்டது. சுதேசிகள் நியாயாதிபதியின் பயமுறுத்தலுக்கு அஞ்சி, முன் சொன்னதையெல்லாம் மாற்றிச் சொல்லி, அபராதத்திற்கு ஆளானார்கள். இதனால் ஐயர்மார் மனஸ்தாபப்பட்டுச் சோர்வடைந்தார்கள். யோன்னையர் சீமைக்குப் போகப் பயணப்பட்டுச் சென்னப்பட்டணம் வரையில் சென்று, கப்பலில்லாமையால் தரங்கைக்குத் திரும்பிவிட்டார். சதோற்சவ வருஷம் இந்த லட்சணமாயிருந்தது. இங்கிலீஷ் இலாகாவில் * குதூகலமாய்ச் சபைகளில் கொண்டாடப்பட்ட முதலாம் சதோற்சவம் தரங்கன்பாடி எல்லைக்குள் வெளியரங்கமாய் நடக்கக் கூடாமற்போயிற்று. "இதனால் நாங்கள் மனமடிவானோம், கோயிலுக்கு வருவோரைக் காணோம், ஞானஸ்நானமும் திருவிராப்போசனமும் அசட்டைக்குள்ளாயின" என்று ஐயர்மார் 1807-ம் வருஷ எழுதினார்கள். அக்காலத்து ஐயர்மார்களும் வேத சாஸ்திர ஆராய்ச்சியைப் பார்க்கிலும் வேறு சாஸ்திரங்களின் ஆராய்ச்சியை அதிகமாய் நாடினதாக ஹால்லே நகரில் பிரசுரமான அவர்கள் அறிக்கைகளால் தெரியவருகிறது. ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் தாபர சங்கம சாஸ்திர ஆராய்ச்சி செய்த அனேக கல்விமான்களுக்கும் அந்த ஐயர்மார்களுக்கும் வெகு அந்நியோந்நியம். தாபர சாஸ்திரத்தில் ரொட்லர் ஐயரும், சங்கியற்கைச் சாஸ்திரத்தில் யோனையரும், பட்சி சாஸ்திரத்திலும் பூச்சியிலக்கணத்திலும் ஜோன் ஐயரும் கீர்த்திவந்தரானார்கள்.

1808-ம் வருஷ தரங்கன்பாடியை இங்கிலீஷ்காரர் பிடித்துக்கொண்டார்கள். அதுமுதல் சில வருஷகாலம் நடந்துகொண்டிருந்த சண்டைகளினாலும் தென்மார்க்கு தேசத்திற்கும் தரங்கன்பாடிக்கும் கடிதப் போக்குவரத்து நின்றுபோயிற்று. வியாபாரம் வெகுவாய் விழுந்துபோயிற்று. டேனிஷ்,

* "In the English Missions it (the hundredth anniversary of the Mission) was solemnized by a special service." - Fenger's History of the Tranquebar Mission p. 301.



காரில் அனேகர் சீமைக்குப் போய்விட்டார்கள். கிறிஸ்தவர்களில் அனேகர் பிழைக்க வழியற்று, சென்னை முதலிய பெரிய நகரங்களில் போய்க் குடியேறினார்கள். மீந்திருந்த கிறிஸ்தவர்கள் பட்ட சங்கடம் அதிகம். இந்தச் சங்கடத்தில் சென்னை துரைத்தனத்தாருடைய பொருள் உதவியோடு கொஞ்சம் கடன்பட்டு, ஐயர்மார் மிஷியோனை நடத்தி வந்தார்கள். (இந்தக் கடனை டேனிஷ் ராஜாங்கத்தார் பிற்பாடு செலுத்தி விட்டார்கள்.) இக்காலத்தில் நன்றி மறவாத தஞ்சாவூர் ராஜாவும் உதவிபுரிந்தார். யோனையர் விருத்தாப்பியத்தினால் தளர்ந்துபோய், கடைசியாய்ப் பார்வையையும் இழந்து, மரணத்தை ஆசித்து, அதிக உபத்திரவமில்லாத முடிவையருள ஜெபஞ்செய்துகொண்டிருந்தார். கர்த்தர் அவருடைய ஜெபத்தைக் கேட்டு, 1813-ம் வருஷ செப்டெம்பர் மீ 1-ம் உ அவரைத் தம்மிடம் அழைத்துக்கொண்டார். அந்த வருஷத்தில் சவரிராயன் என்ற உபதேசியாருக்குத் தரங்கையில் குருப்பட்டம் கொடுக்கப்பட்டது. தஞ்சையில் அபிஷேகம்பெற்ற புராதன சுதேச குருமாருள் இவரே கடைசியானவர். இவர் 1817-ம் வருஷ இறந்துபோனார். அந்த வருஷத்தில் இந்தியாவெங்கும் வியாபித்த விஷ பேதியினால் உண்டான ஜனசேதம் மிகுதி. இதனால் தரங்கையிலும் மற்றிடங்களிலும் கிறிஸ்தவர்களின் தொகை வெகுவாய்க் குறைந்து போயிற்று.

Pastor Saweerayen

யோனையர் தாம் கண்ணும் கருத்துமாய்ப் பார்த்து வந்த பள்ளிக்கூடங்களை விசாரிப்பதற்கு, [illegible]ருந்த கர்மானிய குருமாரைத் தரங்கைக்கு அனுப்பும்படி, இங்கிலாந்தில் புதிதாய் ஏற்பட்ட சர்ச் மிஷியோன் சங்கத்தாரைக் கேட்டு எழுதியிருந்தார். அப்படியே அவர்கள் 1814-ம் வருஷ ரேனியுஸ் (Rhenius), ஷ்நாரே (Schnarre) என்ற ஐயர்மாரையும், 1820-ம் வருஷ பேரன்புருக் (Bärenbruck) ஐயரையும் அனுப்பினார்கள். பேரன்புருக் ஐயர் * பள்ளிக்கூடங்களை ஒப்புக்கொண்டும், விருத்தாப்பிய தசையிலிருந்த கெம்மரர் ஐயருக்கு

C. M. S.

* பேரன்புருக் ஐயர் 1825-ம் வருஷ தரங்கன்பாடியை விட்டுப் பெயர்ந்து, தமது சங்கத்தார் (C. M. S.) உத்தரவுப்படி மாயூரத்தில் மிஷியோன் வேலைசெய்தார்.

சபை விசாரணையும் பாரமாயிருந்ததால் 1820-ம் ௵ தரங்கை பொறையாற்றுச் சபைகளை மாத்திரம் வைத்துக்கொண்டு, அதற்கப்புறத்தே தமது விசாரணைக்குள்ளிருந்த (நாங்கூர், மணிக்கிராமம், வசிஷ்டர்குடி முதலிய இடங்களிலுள்ள) 1300 கிறிஸ்தவர்களை 11 உபதேசிமார் 11 சிறு கோயில்கள் முதலியவற்றோடு கிறிஸ்தவ அறிவு விர்த்தி சங்கத்தாருக்கு ஒப்புவித்துவிட்டார். 1824-ம் ௵ டேனிஷ் துரைத்தனத்தார், இனிமேல் மிஷியோன் அஞ்ஞானிகளைத் திருப்புகிற வேலையை நிறுத்தி, பள்ளிக்கூடங்களை மாத்திரம் அபிவிர்த்தி செய்து வரவேண்டியதென்று ஏற்பாடு பண்ணி, கொல்லேஜியத்தார் சம்மதத்தையும் பெற்றுக்கொண்டார்கள். கெம்மரர் ஐயர் ஒரு வார்த்தையும் எதிர் பேசவில்லை.

District congregations of Tranquebar delivered to S. P. C. K.

அப்பால், ஸீயோன் கோயில் குருவானவரே மிஷியோன் விசாரணையும் செய்யவேண்டுமென்று 1825-ம் ௵ மே மீ 18-ம் உ ராஜ உத்தரவு பிறந்தது. அப்படியே இரண்டு வேலையையும் சேர்த்து, 1829-ம் ௵ முதல் 1835-ம் வருஷமட்டும் மேல் (Möhl) ஐயரும், 1837-ம் ௵ முதல் 1843-ம் வருஷமட்டும் குனுத்சன் (Knudsen) ஐயரும் பார்த்து வந்தார்கள். மேல் ஐயர் காலத்தில் தரங்கை மிஷியோனின் உட்சீரும் புறச்சீரும் குலைந்துபோயிற்று. அந்த ஐயர் கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுக்கும் பிரசங்கங்களைச் செய்தார். பள்ளிக்கூடங்களில் இரட்சகரையும் இரட்சிப்பையும் குறித்துப் பேசுகிற வேத வாக்கியங்களைத் தள்ளி, அஞ்ஞானிகளும் 'ஆம்' என்று சொல்லக் கூடிய வாக்கியங்களாய்ச் சேர்த்துக்கொடுத்துப் படிப்பிக்கப்பண்ணினார். ஆசிரிப்புச் சாலையிலிருந்த அநேக பிள்ளைகள் அனுப்பிவிடப்பட்டார்கள். அச்சுக்கூடமும் சகல தொழில் சாலைகளும் தொலைந்துபோயின. பல ஜெபவீடுகளும், பள்ளிக்கூடங்களும் மூடப்பட்டன. பலர் ரோமான் சபையிற் சேர்ந்தார்கள். சிலர் அஞ்ஞானிகளாய்ப் போனார்கள். கெம்மரர் ஐயர் 1837-ம் ௵ அக்டோபர் மீ 22-ம் உ பரகதியடைந்தார். அப்பொழுது தரங்கைச் சபை "திராட்சத் தோட்டத்திலுள்ள ஒரு குச்சுப்போலேயும், வெள்ளரித்தோட்டத்திலுள்ள ஒரு குடிசையைப் போலேயும்" நிர்ப்பந்த கோலமாய்த் தனித்திருக்கலாயிற்று.

Knudsen.

---



## உ. வெளிச் சபைகள்.

கிறிஸ்தவ அறிவு விர்த்தி சங்கத்தார் ஆதரவில் சுவி. லுத்தரன் ஐயர்மார் சென்னை, திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி முதலிய இடங்களில் சபைகளையும் பள்ளிக்கூடங்களையும் ஸ்தாபித்து, விசாரித்து, சுவிசேஷ வேலையும் செய்து வந்தார்களென்று முன் பார்த்தோம். ஆயினும், மேலே சொல்லியபடி, ஜர்மானியாவிலும் டென்மார்க்கிலும் அவிசுவாசம் பரவவே, இந்த ஐயர்மார்களுக்குப்பின், அவர்களுடைய வேலையைத் தொடர்ந்து நடத்த லுத்தரன் சபை ஐயர்மார்கள் வரக்கூடாதேபோயிற்று. தரங்கம்பாடிக்கு வந்த சங்கடமே மற்றத் தேசங்களுக்கும் வந்தது.

ஜர்மானியா, டென்மார்க் முதலிய தேசங்களிலுள்ள லுத்தரன் சபைகளிலிருந்த மிஷியோன் கிரியைக்கான பக்தி வைராக்கியம் அற்றுப்போகிற காலத்தில், அந்த வைராக்கியம் இங்கிலாந்து தேசத்தில் அதிகரித்தது. பதினெட்டாம் நூற்றாண்டில் பல அங்கிலேய மிஷியோன் சங்கங்கள் ஏற்பட்டு, இந்தியாவுக்குச் சுவிசேஷ போதகரை அனுப்பக் கர்த்தர் ஏவிவிட்டார். 1701 ௵ லண்டன் மா நகரத்தில் இங்கிலீஷ் சபையின் விசுவாச அறிக்கையின்மேல் அஸ்திபாரப்பட்டதாய் ஏற்பட்டு பரதேசங்களிலும் மிஷியோன் வேலை செய்துவந்த சுவிசேஷ பிரபலிய சங்கத்தார் (Society for the Propogation of the Gospel in Foreign parts) இந்தத் தேசத்திலும் தங்கள் மிஷியோனை ஸ்தாபிக்க விரும்பினார்கள். அவர்களுக்குக் கிறிஸ்தமார்க்க அறிவு விர்த்திச்சங்கத்தார் (S. P. C. K.) தங்கள் ஆதரிப்பிலிருந்த சபைகள் பள்ளிக்கூடங்கள் யாவையும் ஒப்புவிக்க 1825 ௵ தீர்மானித்து, அத்தீர்மானத்தையும் மறுவருஷம் நிறைவேற்றினார்கள். இதனால் அம்மட்டும் சுவி. லுத்தரன் விசுவாச அறிக்கைக்கொத்த போதனை பெற்று சுவிசேஷ லுத்தரன் முறைமைப்படி ஆராதனை செய்துவந்த 8352 கிறிஸ்தவர்களும், 141 உபாத்திமார் உபதேசியாரும், 1232 மாணாக்கருள்ள பள்ளிக்கூடங்களும் தங்களுக்கே தெரியாமல் தாய்ச்சபையாகிய லுத்தரன் சபையை விட்டு அங்கிலேய அத்தியட்ச சபைக்குட்படலாயிற்று.

S. P. G.

அப்பொழுது தஞ்சாவூரில் (64 வயதுள்ள) கோலோப்பையரும், அப்ரோ ஐயரும், சென்னப்பட்டணத்தில் (80 வய

னுள்ள) ரொட்லர் ஐயரும், கூடலூரில் ரோசன் (Rosen) ஐயரும், திருச்சிருப்பள்ளியில் ஷ்ரைவோகல் ஐயரும் இருந்தார்கள். இவர்களில் ரொட்லர், ஷ்ரைவோகல் ஐயர்மார் அங்கிலிக்கானர் முறைமைப்படி அத்தியட்சரால் குருப்பட்டம் பெற்றுக் கொண்டார்கள். தஞ்சாவூரில் கோலோப்பையர் வாக்குச் செல்லுமட்டும் அதிக மாறுதல் உண்டானதில்லை. அவர் தமது விசுவாசத்தில் மாறியிருந்தும், செம்மார் ஐயர் செய்ததுபோல் தமது மகனை இங்கிலீஷ்சபைப் போதகத்துக்கு ஒப்புவித்தார். லுத்தரன் சபையின் பழையமுறைமைகளும் ஒழுங்குகளும் மாறி, இங்கிலீஷ் சபையின் புதியமுறைமைகளும ஒழுங்குகளும் ஏற்பட்டபொழுது சபைகளில் உண்டான கலக்கமும் குழப்பமும் கொஞ்சமல்ல.

"குருக்களும் பகைவராணர் கோயிலும் வேறதாயிற்
றிக்கமே எங்கே, நின்றாய் எம்மையாள் யேசுநாதா"

என்று வேதநாயக சாஸ்திரியாரோடு தஞ்சாவூர்ச் சபைகளுக்கு நலிட்டது. ஆகிலும், பழைய சந்ததியொழிந்து புதிய சந்ததி தலையெடுக்க, எல்லாம் அமரிக்கைக்கு வந்தது.

Tinnevelly.

திருநெல்வேலியிலிருந்த சபைக் காரியம் என்னவென்று கேட்போம். ஹல்லே பட்டணத்தில் வேத சாஸ்திரங்கற்று, லண்டன் மிஷியோன் சங்கத்தாரின் ஊழியத்திற்குட்பட்ட ரிங்கல்தெளபே ஐயர் சத்தியநாதநாட்டையருக்குப்பின் 1806-ம் ஹூ முதல் 1809-ம் ஹூ வரையில் திருநெல்வேலிச் சபைகளை விசாரித்து வந்தார். 1811-ம் ஹூ அங்கே பயங்கரமான கொள்ளைநோய் வியாபித்தபொழுது தகுந்த மேற்பார்வையில்லாமையால் வெகு கிறிஸ்தவர்கள் மறுதலித்துப் போனார்கள். இதற்குப் பின்பு ஐந்து வருஷச் சரித்திரம் நமக்குத் தெரியாது. 1816-ம் வருஷம் பாளையங்கோட்டை வழியே பம்பாய் நகரத்திற்குப்போன அங்கிலேய சபையின் அத்தியட்சராகிய மிடில்ட்டன் (Bishop Middleton) செய்த ஏற்பாட்டின்படி பாளையங் கோட்டைக்கு சாப்ளாகை நியமிக்கப்பட்ட ஹாப் (Hough) ஐயர் சுதேசக் கிறிஸ்தவர்களையும் 1821-ம் வருஷமட்டும் விசாரித்து வந்தார். அந்தக் கிறிஸ்தவர்கள் கர்மாவிய * அதாவது லுத்தரன் முறைமைப்படி ஆரா

* See Rev. J. Hough's letter in the report of the S. P. C. K. 1819 — 1820 page 163.



தனை செய்துவந்ததாக அந்த ஐயர் தாமியற்றிய மிஷியோன் சரித்திரத்தில் எழுதியிருக்கிறார். அந்த ஐயர் சர்ச்சு மிஷியோன் சங்கத்தாரைக் கேட்டுக்கொண்டதன்பேரில் லுத்தரன் முறைமைப்படி அபிஷேகம் பெற்ற ரேனியுஸ் (Rhenius), ஷ்மிட் (Schmid) என்ற ஐயர்மார் 1820-ம் ஹூ திருநெல்வேலிக்கு அனுப்பப்பட்டார்கள். ரேனியுஸ் ஐயர் பிரசங்க வேலையும், ஷ்மிட் ஐயர் பள்ளிக்கூட வேலையும் நடத்தினார்கள். அவர்கள் காலத்தில் ஏராளமான பேர் சபையில் சேர்ந்தார்கள். போதக விஷயத்திலும் ரேனியுஸ் ஐயருக்கும் அவரை வேலைகொண்ட சங்கத்தாருக்கும் ஒவ்வாமை கண்டு அவரைத் தள்ளும்படி செய்தார்கள். அவர் காலத்தோடே அந்தச் சபைகளின் பழைய தன்மை மாறிப்போயிற்று. 1825-ம் வருஷம் கி. அ. வி. சங்கத்தார் சுவிசேஷ பிரபலிய சங்கத்தாருக்குச் சபைகளை ஒப்புவித்தபொழுது அங்கே 4161 கிறிஸ்தவர்களும், 210 மாணாக்கரும், 32 உபதேசிமாரும், 15 உபாத்திமாரும் இருந்தார்கள். * *

இப்படியே தரங்கையில் உதயமான சுவிசேஷ வெளிச்சம் தமிழ் நாட்டின் எத்திசையிலும் பரம்பிற்று. என்றாலும், அதை இத்தேசத்திற்கு அனுப்பி வைத்த லுத்தரன் சபை விசாரணைத் தளர்ச்சியானதினால், இங்கே சேர்க்கப்பட்ட சபை நலிவடைந்து, அந்நியர் கைக்குள்ளாகும் நிலைமையைப் பெற்றது.

* * Vide Digest of the S. P. G. Records page 533.

## II.

# தரங்கை மிசியோன் நூதன சரித்திரம்.

## க. லைப்சிக் மிசியோன் தாய்ச் சங்கம்.

இந்தச் சங்கம் ஒரு தனி மனுஷன் முயற்சியாலுண்டானதல்ல. இது ஐரோப்பாவிலுள்ள லுத்தரன் திருச்சபையின் ஏகோபித முயற்சியெனல் தகுதியாம். புத்தி விஞ்ஞானக் கேட்டில் அமிழ்ந்து கிடந்த லுத்தரன் சபைக்குக் கர்த்தர் இரங்கி, சுத்த சுவிசேஷ போதகரை யெழுப்பி, சுவிசேஷ எக்காளத்தைத் தொனிப்பித்ததால் அது புது உயிரடைந்ததின் பலனில் ஒன்று இந்த மிசியோன் சங்க ஏற்பாடு. சர்வ சாஸ்திர சாலைகளிலும் பிரசங்க மேடைகளிலும் சுத்த போதகத்தைத் தைரியமாய்க் கூறி அறிக்கையிட்ட மகான்களில் முக்கியமானவர்கள் ஹார்லெஸ் (Harless), ஷைபெல் (Scheibel) ருடல்பக் (Rudelbach), லேயே (Loehe) முதலியவர்கள். முன்னமே லுத்தர் சாஸ்திரியார் பாப்புமதக் குப்பைக்குள் மறைந்துகிடந்த திவ்ய வேத சத்தியங்களை வெளிக்குக் கொணர்ந்ததுபோல, இவர்கள் புத்தி விஞ்ஞானக் குப்பையை விலக்கி, சுத்த சத்தியப் பொக்கிஷங்களை வெளிக்குக் கொணர்ந்ததுமன்றி, அஞ்ஞான இருளில் நடக்கும் ஆத்துமாக்களுக்கு இவைகளைப் பிரசங்கிப்பது சுவிசேஷ சபையின் கடமையென்றும் தெரியக் கொடுத்தார்கள்.

Revival in Germany.

இவ்வாறு அவர்கள் தெரியக்கொடுத்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பாகத்தில், மிசியோன் வேலை எல்லாப்புரோட்டெஸ்டான்ற் சபைகள் ஒன்றுகூடிச் செய்யத்தக்கதென்கிற அபிப்பிராயமிருந்ததால், லுத்தரன் சபையினால் ஆளாகிப் போதனையும் அபிஷேகமும் பெற்ற குருமார் சர்ச்சு மிசியோன், லண்டன் மிசியோன் சங்கத்தாரின் ஊழியத்துக்குட்பட்டு இத்தேசத்திற்கு வந்தார்கள். இது ஆரம்பத்தில் ஒருவாறு சரிப்பட்டு வந்தும், பழைய லுத்தரன் தமிழ்ச் சபைகள் அங்கிலேய சுவிசேஷ பிரபல்லிய சங்கத்தார் விசாரணைக்குட்பட்டபின் சரிப்படாதேபோயிற்று. சர்ச்சு மிசியோன் சங்கத்தாருக்கும் ரேனியுஸ் ஐயருக்கும் 1835-ம் ௵ ஒவ்வாமையுண்டானபோது இது பிரத்தியட்சமாகி, சர்மானிய லுத்தரன்



சபைகளில் கலக்கத்தையுண்டுபண்ணிற்று. அங்கிலிக்கானரான மிசியோன் சங்கங்கள், தங்கள் சபையின் விசுவாசத்திற்குச் சார்பாயிருந்து தங்கள் முறைமைப்படி அபிஷேகம் பெற்ற பேர்களையே மிசியோனரிகளாகத் தெரிந்துகொள்வது நியாயமெனத் தீர்மானித்தார்கள். இத்தீர்மானம், ரேனியுஸ் ஐயர் படித்து வெளிப்பட்ட பெர்லின் செமினெரியில் வேத சாஸ்திரம் கற்ற மாணாக்கருக்குத் தெரிய வந்தபோது அவர்கள் திரேஸ்தன் நகரிலுள்ள மிசியோன் * சிநேகிதர்களுக்கு 1836-ம் ௵ ஜூலை ௴ ஒரு விண்ணப்பமெழுதி: லுத்தரன் மிசியோனரிகளாய் அஞ்ஞானிகள் நடுவே வேலைசெய்ய விருப்பமுள்ள புத்திரருக்கு லுத்தரன் சபை வேலைகொடுக்க முடியாதோ என்று கேட்டார்கள். இதுவே திரேஸ்தன் நகரில் மிசியோனூழியத்திற்கு வாலிபரை ஆளாக்கும் செமினெரி ஸ்தாபகமாவதற்கும், சுவிசேஷ லுத்தரன் விசுவாச அறிக்கைகளில் ஆதாரப்பட்ட பிரத்தியேகமான ஒரு மிசியோன் சங்கம் ஏற்படுவதற்கும் காரணமாயிற்று. இச்சங்கத்தின் முதற் கூட்டம் 1836-ம் ௵ ஆகஸ்டு ௴ 17-ம் ௳ நடந்தது. அச்சங்கத்திற்கு ஐன்சீடல் பிரபு (Graf von Einsiedel) தலைவராயிருந்தார். மற்று அங்கத்தாரில் வெர்மெல்ஸ்கிர்க் (Wermelskirch) ஐயர் விசேஷித்தவர். இவர் (1836—42-ம் ௵) திரேஸ்தன் செமினெரியின் தலைமைப் போதகாசிரியராயிருந்தார். மாணாக்கர் சர்வகலாசாலைப் போதனையில் பங்குபெறக்கூடும்படி 1848-ம் ௵ அந்த செமினெரி லைப்சிக் பட்டணத்திற்கு மாற்றப்பட்டது. அதுமுதல் திரேஸ்தன் மிசியோன் சங்கம் என்கிற பெயர் போய், லைப்சிக் சுவிசேஷ லுத்தரன் மிசியோன் சங்கம் என்கிற பெயர் வந்தது. அதன் காரியக் கர்த்தாக்களாகிய கொல்லேகியும் சங்கத்தார் லைப்சிக் நகரத்தைத் தங்கள் கூட்டத்தலமாக்கினார்கள். மிசியோன் உபகாரிகளும் சிநேகிதர்களும் வருஷத்தில் ஒருமுறை பரிசுத்த ஆவியின் பண்டிகைக்கடுத்த புதன்கிழமையில் லைப்சிக் பட்ட

Lutheran Mission.

Dresden Seminary.

* 1819-ம் ௵ ஆகஸ்டு ௴ 16-ம் ௳ திரேஸ்தன் நகரில் ஒரு மிசியோன் சங்கம் ஏற்பட்டிருந்தது. இச்சங்கத்தார் போதகவித்தியாசத்தைப் பெரிதுபண்ணாத பாசல் மிசியோன் சங்கத்தாருக்கு உதவிசெய்து வந்தார்கள்.

னைத்திற் கூடிவந்து, மிஷியோன் பண்டிகை கொண்டாடி, புது ஐயர்மாரை அனுப்பி, மிஷியோனுக்கடுத்த முக்கிய சங்கதிகளைக் குறித்து ஆலோசனை செய்கிற ஏற்பாடும் நடந்தேறி வருகிறது.

லேட்சிக் நகரில் நமது மிஷியோனுக்கடுத்த காரியாதிகளை நடத்தும் முகாமை டிரெக்தரைப் பொறுத்தது. நமது மிஷியோனுக்கு இதுமட்டும் தகுதியான டிரெக்தர்கள் கிடைத்திருப்பது தெய்வ கிருபையே. இவர்களில் முந்தினவர் பெயர் கிரௌல் சாஸ்திரியார். சுத்த போதக வைராக்கிய புருஷராகிய இவரது முயற்சியால் நமது மிஷியோன் முழு லுத்தரன் திருச்சபையின் மிஷியோனாயிற்று. அவர் கல்விக் களஞ்சியமும், பாஷா வல்லவருமாயிருந்தார். அவர் பிறந்தது 1814-ம் ஞு பெப்ருவரி மீ 6-ம் வ. நமது மிஷியோனின் டிரெக்தரானது 1844-ம் ஞு. அவர் நமது மிஷியோன் நலத்தைக் கருதி 1849-ம் ஞு இத்தேசத்திற்கு வந்து, 1853-ம் வருஷமளவும் இங்கிருந்து பல பாஷைகளைக் கற்று, சபைகளை விசாரித்து பல பிரயோசனமான ஏற்பாடுகளைச் செய்தார்.

Mission Directors.

Graul.

அவர் சீமைக்குத் திரும்பிய பின், கர்மானியா, ருஷியா, தென்மார்க்கு, நோர்வே, சுவேதன் வட அமெரிக்கா முதலான தேசங்களிலுள்ள லுத்தரன் சபைகளெல்லாம் நமது மிஷியோனுக்கு உதவிசெய்யும்படிக்கான முயற்சிகளைச் செய்தார். அவர் டிரெக்தர் வேலையை ஒப்புக்கொண்ட வருஷத்தில் நமது மிஷியோனுக்கு வரவு ஏறக்குறைய 6000 டாலர். பத்து வருஷத்திற்குப்பின் கொஞ்சங்குறைய 24,000 டாலர். அதற்கு இரண்டு வருஷத்திற்குப்பின் (1856-7 ஞு) 39,000 டாலர் சேர்க்கப்பட்டது. அவர் டிரெக்தர் வேலையை விடுகிற வருஷத்தில் ஏறக்குறைய 50,000 டாலர் சேர்க்கப்பட்டது. மேலும், மிஷியோன் வேலை சரியாய் நடந்தேறுவதற்கு திறமையுள்ள மிஷியோனரிகள் அவசியமென அவர் உணர்ந்து, பக்தியிலும் அறிவிலும் சிறந்த பேர்களை மிஷியோனரிகளாக்கப் பிரயாசப்பட்டார். இதற்காகச் சர்வகலா சாஸ்திர சாலையில் கற்றுத் தேறின வாலிபர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களுக்கு இங்கிலீஷ், சமஸ்கிருதம், முக்கியமாய்த் தமிழ்ப்பாஷை, இந்துமதக் கொள்கை, மிஷியோன் வேலைக்கடுத்த விஷயங்கள், இவைகளில் போதனை செய்து, இத்தேசத்தில் வேலைசெய்வதற்குப் பக்கு



வப்படுத்தினார். 1860-ம் வருஷமளவும் பயனுற உழைத்து நமது மிஷியோனை நடத்தி வந்த இந்த மகானுபவர் 1864-ம் வருஷம் நொவம்பர் மீ 13-ம் வ மரணமடைந்து பரம இளைப்பாறுதலுக்குட் பிரவேசித்தார்.

கிரவுல் சாஸ்திரியாருக்குப்பின் (1860-91) டிரெக்தர் உத்தியோகத்தை வகித்தவர் ஹார்தெலாந்து சாஸ்திரியார். சுத்த போதக விசுவாசியும், தயாள புருஷரும், சாந்தகுணசாலியும், சிறந்த புத்திமானுமாகிய இவர் 31 வருஷக்காலம் மிஷியோனை நடத்தினதால் விளைந்த நன்மை மிகுதி. அவர் இத்தேசத்திற்கு இரண்டு முறை வந்தார். முதல்முறை வந்தது 1867-ம் ஞு. அப்பொழுது அவர் நமது மிஷியோன் ஸ்தலங்களையெல்லாம் சுற்றிப் பார்த்து, சபைகள் சுயாதீனமடைவதற்கு ஆதாரமாகிய பல நல்லொழுங்குகளை ஏற்படுத்தினார். சபைப்பொக்கிஷம், ஏழைப்பொக்கிஷம் ஏற்பாடுகள் நமது மிஷியோன் சபைகளில் பொதுப்பட அனுஷ்டானத்திற்கு வந்தது அக்காலந்தொட்டே. மேலும், நமது செமினேரிக்கும், மற்றப் பாடசாலைகளுக்கும் அடுத்த பல திருத்தங்களும் ஒழுங்குகளும் அப்பொழுது செய்யப்பட்டன.

Hardeland.

அவர் இரண்டாமுறை இத்தேசத்திற்கு வந்தது 1876-ம் வருஷம். "இங்குள்ள லுத்தரன் மிஷியோனரிகளில் 5 பேர் நமது சபையிலும் மிஷியோனிலும் கண்ட குறைவுகளினால் இடறலடைந்து இனி நமது மிஷியோனில் உழைக்கத் தங்களுக்கு மனதில்லை என்று தெரிவித்ததே" அவர் இத்தேசத்திற்கு வந்த முகாந்திரம்.* அவர் வந்து பேசினதால், சொல்லப்பட்ட ஐந்துபேரில் ஒருவர் நமது மிஷியோன் சம்பந்தத்தை விடாமல் அதில் நிலைத்திருக்க இடமுண்டாயிற்று. அவர் வருகையும், இனிய பிரசங்கங்களும், அன்பான சம்பாஷணைகளும் அநேகர் விசுவாசத்தைப் பலப்படுத்துவதற்கு ஏதுவாயின.

அவர் டிரெக்தராயிருந்த காலத்திலே லேப்சிக் நகரத்தில் நமது மிஷியோன் சம்பந்தமாய் ஒரு புதிய செமினேரி ஏற்படுத்தப்பட்டு, அதனின்று அநேக ஐயர்மார் வெளியேறக் கர்த்தர் கிருபை செய்தார். அன்றியும் நமது மிஷியோன் நலத்தைக் கோரும் உபகாரிகளின் தொகையும், அவர்களின் நன்கொடைத் தொகையும் அவர் காலத்தில் ஏறக்குறைய மும்ம

* 1876-ம் ஞு பெப்ருவரி மாச அருணோதயம் பார்க்க.

டன்கு பெருகின. அவர் 1903-ம் வரு அக்டோபர் மீ 11-ம் உ கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அதுமுதல் டிரெக்டராயிருப்பவர் வொன் சுவார்ச்ச சாஸ்திரியார். மிஷியோன் வேலைத்தையே கண்முன்வைத்து ஊக்கமாய் உழைக்கும் இந்தப்போதகர் 1893 வரு அக்டோபர் மீ இத்தேசத்திற்கு வந்து, நமது சபைகளின் நடுவே ஆறுமாசக் காலம் சஞ்சரித்து தளராமுயற்சியோடு தமிழ்நாடெங்கும் சுற்றித்திரிந்து, மிஷியோன் ஸ்டேஷன்களை விசாரணை செய்தார். அவர் சென்னையில் கூடிய தமிழ்நாட்டுச் சுவிசேஷ லுத்தரன் 3-ம் பொதுக்கூட்டத்தில் கூடவிருந்தார். அவருடைய வரவால் நமது மிஷியோனில் புதிய ஊக்கமும் பலமும் உண்டாகஏதுவாயிற்று. அப்படியே தாய்ச்சங்கத்தின் உபதலைவராகிய டக்: ஹெல்ஷர் (Dr. Hölscher) சாஸ்திரியார் 1903 வரு ஜூலை மீ இத்தேசத்திற்கு விஜயம் செய்ததனாலும் விசேஷித்த ஆசீர்வாதங்களுண்டாயின. *

v. Schwarz.

இத்தேசத்தில் நெடுங்காலம் உழைத்த ஐயர்மாருள் டக்: சீனியர் கோர்தேஸ் ஐயர் 1870-ம் வருஷமுதற்கொண்டும், டக்: ஹார்துமன் ஐயர் 1889-ம் வருஷமுதற்கொண்டும் தாய்ச்சங்கத்தின் அங்கத்தினரானதால் உண்டான நன்மை மிகுதி.

## உ. லைப்சிக் மிஷியோன் ஆரம்ப வேலை (1840 - 1856.)

இந்த நமது மிஷியோன் டேனிஷ் ஹாலே மிஷியோனைப் போல் அஞ்ஞானிகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதினால் தன்வேலையை ஆரம்பிக்கவில்லை. கர்த்தர் அதன் ஆரம்பத்தை வேறுவகையாய் நடத்தினார். ஹாலே பட்டணத்திலிருந்து அனுப்பப்பட்டவர்களில் கடைசி குருவாகிய கெம்மரர் ஐயர் 1837 வரு அக்டோபர் மீ 22 உ தரங்கையில் மரித்தார். அவர் மரணமடையக் கொஞ்சக்காலத்துக்குமுன் கர்ம-

* இதை நாம் அச்சிடும் சமயத்தில், மேற்படித் தாய்ச்சங்கத்தின் பிரதிநிதியாக, லைப்சிக் வேதசாஸ்திர வித்தியாசாலைப் போதகருமாகிய லோமன் (Lohmann) ஐயர் நமது நடுவே வந்திருக்கிறார்.



னியாவுக்கு எழுதின கடிதத்தில்: சகல மிஷியோன்களுக்கும் மகுடமாகிய தரங்கைச் சுவிசேஷ மிஷியோன் முற்றிலும் சேதமடைவதற்கான மோசத்தில் இருக்கிறது; அது நசிந்துப்போகாதிருக்க வேண்டுமானால் நீங்கள் உதவி புரிவது அத்தியாவசியம்; அதற்குப் பணமல்ல, வேலையாட்களே முக்கியம் என்று எழுதினார். இதையும் இதுபோன்ற கூப்பாடுகளையும் முன்னிட்டு டிரெஸ்டன் மிஷியோன் சங்கத்தார் தரங்கைக்கு கோர்தேஸ் (C. H. Cordes) ஐயரைத் தங்கள் பிரதம மிஷியோனரியாக அனுப்பினார்கள். அவர் 1840-ம் வரு டிசம்பர் மீ 27 உ சென்னையில் கரையிறங்கினார். அங்கிருந்தவர்கள் அவரைப் பலவாறுகத் தடுத்தும் அவர் தரங்கைக்கு வந்தார். இங்கே மிஷியோன் விசாரணை செய்துவந்த டேனிஷ் கோயில் டேனிஷ் குருவாகிய குனுட்சன் (Knudsen) ஐயர் மிகுந்த அன்போடு கோர்தேஸ் ஐயரை ஏற்றுக்கொண்டு, டிரெஸ்டன் மிஷியோன் சங்கத்தார் காலத்தால் செய்த நன்றிக்காக வெகுவாய்ச் சந்தோஷப்பட்டார். சரித்திர சம்பந்தத்தினாலும், சபைப்பெருக்கத்தினாலும் பெயர்பெற்றிருந்த தரங்கை நமது வேலையை ஆரம்பிப்பதற்குத் தகுந்த இடமெனக் கண்ட கோர்தேஸ் ஐயர் முந்தக் குனுட்சன் ஐயருக்கு உதவியாக வேலைசெய்தார். அவர் 1841 வரு மார்ச்சு மீ 2 உ கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பின்னின 2-ம் ஞாயிற்றுக்கிழமையில் பிறையாற்றிலே தமது முதல் தமிழ்ப் பிரசங்கத்தைச் செய்தார். பிறகு கோட்டை எருசலேம் கோயிலிலும் பிரசங்கித்தார். அவர் துவக்கத்தில் தமது பிரசங்கங்களை இங்கிலீஷில் முன்ஷிக்குச்சொல்லி, தமிழில் மொழிபெயர்ப்பித்து அதை வாசித்தார். வருஷக்கடைசியில் பண்டிகை காலங்களிலே அதிகமாய்ப் பிரசங்கிக்க வேண்டியதாயிற்று. 1842-ம் வரு திரித்துவத்தின் பண்டிகைக்குப் பின்னின 9-ம் ஞாயிறுமுதல் 18-ம் ஞாயிறுவரையில் இரு கோயில்களிலேயும் தமிழில் பிரசங்கித்ததுமன்றி, 3 ஆயத்தப் பிரசங்கங்களைச் செய்து, ஆகஸ்டு மீ 12 உ 19 பிள்ளைகளைத் திடப்படுத்தி, 13 உ பாவசங்கீர்த்தன ஆராதனையும், 14 உ நற்கருணை ஆராதனையும் செய்து, 136 பேருக்கு பரி. இராப்போசனம் பரிமாறினார். அவரது பட்டாபிஷேகத்தின் 2-ம் வருஷமாகிற 1842 வரு பெப்ருவரி மீ 26 உ ஒரு அஞ்ஞான ஸ்திரீக்கும் அவள் மகனுக்கும் ஞான

Cämmerer's death.

Cordes, in Tranquebar.

ஸ்நானம் கொடுத்தார். 1843-ம் ஹு குனத்சன் ஐயர் வியாதிப்பட்டுச் சீமைக்குப் போனதால், கோர்தேசையரே மிஷியோன் விசாரணைக்குப் பொறுப்பாளியானார்.

1845-ம் ஹு டேனிஷ்காரர் தரங்கன்பாடியை இங்கிலீஷ்காரருக்கு விற்றபோது அங்கிருந்த கவர்னர்: ஜர்மானியருக்கிருந்த மிஷியோன் ஆலயமும் இறைமையும் அற்றுப்போன இக்காலத்தில் கோர்தேஸ் ஐயர் தரங்கை மிஷியோனைப் பணக்கார சங்கமாகிய சுவிசேஷ பிரபல்ய சங்கத்திற்கு ஒப்புவிப்பது உசிதமென்று யோசனை சொன்னார். சென்னையிலிருந்த ஸ்பென்சர் கண்காணியார் அதுகயின்னேபோலான தரங்கன்பாடியைத் தாம் ஒப்புக்கொண்டு பரிபாலிக்க மனதாயிருப்பதாகக் கடிதமெழுதித் தெரிவித்தார். தரங்கை லுத்தரன் சபையாரோ தங்கள் சரீரத்தை அங்கிலேயருக்கு ஒப்புவித்துவிட்டதுபோல் தங்கள் ஆத்துமத்தையும் அவர்களுக்கு ஒப்புவித்துவிடாமல், தங்களை லுத்தரன் சபையின் விசுவாசத்தில் நிலைப்பிக்கவும், டிரெஸ்டன் மிஷியோன் விசாரணைக்குத் தங்களைக் கையளிக்கவும் வேண்டுமென்று டென்மார்க்காரருக்கு மனுப்பண்ணிக்கொண்டார்கள். அவர்கள் மனுப்படியே தரங்கை பிறையாற்றுச் சபைகள் 1847-ம் ஹு டிரெஸ்டன் மிஷியோன் சங்கத்தாருக்கு ஒப்புவிக்கப்பட்டன. இது நடப்பதற்கு இரண்டு வருஷங்களுக்குமுன் (1845) மாயூரத்தில் வேலைசெய்த சர்ச் மிஷியோன் சங்கத்தார் அந்தச் சேகரத்தை விட்டுப் பெயர்ந்துபோகத் தீர்மானிக்க, அங்கிருந்த மிஷியோன் தோட்டத்தையும் கட்டடங்களையும் விற்றுப்போட மனதாயிருந்ததால், அவற்றை குண்டூர் கலெக்டர் ஸ்டோக்ஸ் (Stokes) துரை முதலியவர்கள் வாங்கி, லைப்சிக் (டிரெஸ்டன்) மிஷியோனுக்கு இனமாகக் கொடுத்தார்கள். இப்படியே தரங்கை மாயூரச் சேகரங்கள் நமது மிஷியோன் தன் வேலையைச் செய்வதற்கு ஆரம்ப ஸ்தலங்களாயின.

Tranquebar sold to the British.

1849-ம் ஹு இத்தேசத்தில் பழைய டேனிஷ் மிஷியோனுக்குச் சொந்தமாயிருந்த தோட்டங்களும் கட்டடங்களும் லைப்சிக் மிஷியோன் அநுபவத்துக்கு விடப்பட்டன. இப்படியே லைப்சிக் மிஷியோன் சங்கத்தார் சுத்தபோதக விசுவாசத்திலும், தேசப்பிரமாணத்திற்குப் பொருந்திய உடன்படிக்கையினாலும் பழைய டேனிஷ் ஹால்லேமிஷியோன் சங்

Danish H. Mission delivered to L. E. L. M.



கத்தாருக்கு வாரிசுகளாக அங்கிகரிக்கப்பட்டார்கள். அன்றியும், டென்மார்க்கு ராஜாங்கத்தார் நாளதுவரையில் இச்சங்கத்திற்குப் பொருள் உதவியும் செய்துவருகிறார்கள்.

பழைய மிஷியோனைப்போலவே இந்தப் புதிய மிஷியோனும் தன்வேலையைத் தரங்கையில் ஆரம்பித்து, தமிழ்நாடெங்கும் பரம்பவேண்டியதா யிருந்தது. ஆகையால் கோர்தேஸ் ஐயர், புத்திவிருத்தியான போதகங்களால் சீர்குலைந்திருந்த தரங்கைச் சபையையும், பள்ளிக்கூடங்களையும் சீருக்குக் கொண்டுவருவது அவர் முதல்வேலையாயிற்று. அவர் ஒப்புக்கொண்ட சபையின் ஆத்துமாக்கள் 1500, பள்ளிக்கூடங்கள் 14, பள்ளிக்கூடமாணாக்கர் 650, உபதேசிமார் 5, உபாத்திமார் 16. அவர் தமிழ்ப்பாஷையை நன்றாய்க் கற்று, சுத்த சுவிசேஷ போதகத்தைத் திட்டமும் தெளிவுமாய்ப் பிரசங்கித்தது மன்றி, பள்ளிக்கூடங்களில் லுத்தரன் ஞானோபதேசமும் வேத சரித்திரங்களும் போதிக்கப்படவும், காலை மாலை ஜெபங்கள் கிரமமாய் நடக்கவும் கண்டிப்பான ஏற்பாடு செய்தார்.

Cordes, head of the Mission.

1856-ம் ஹு தரங்கை மிஷியோன் மூன்றும் ஜூபிலி சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. பலவிடங்களிலுமிருந்து அனேகக் கிறிஸ்தவர்கள் தரங்கன்பாடிக்கு வந்தார்கள். தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரும் தமது கற்றுச்சொல்லிகளான பாடகரோடு வந்திருந்து அக்கொண்டாட்டத்தைச் சிறப்பித்தார்.

Tranquebar M. jubilee.

அவ்வருஷமளவும் தரங்கை மிஷியோன் சம்பந்தமாக வந்த ஐரோப்பிய குருமார் 14. இவர்களில் ஜூபிலிகாலத்தில் இத்தேசத்தில் இருந்தவர்கள் 8 பேர். ஏனெனில் ஷ்மைசர் (Schmeisser) ஐயர் 1848-ம் ஹு இறந்துபோனார், 4 பேர் மிஷியோன் சம்பந்தத்தைவிட்டுச் சீமைக்குத் திரும்பிப் போனார்கள், ஒக்ஸ் (Ochs) ஐயர் உத்தரவின்மேல் சீமைக்குப் போயிருந்தார்.

1856-ம் வருஷத்திற்குள் தரங்கைச்சபை (பிறையாறு உள்பட) தொகை விருத்தியாயிருந்தது. 1840-ம் வருஷமளவும் தரங்கை ஞானஸ்நான டாப்பில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஞானஸ்நானங்கள் 10 749 அத்தொகை 1855-ம் ஹு 12,765 ஆயிற்று. இதற்கு முக்கிய காரணம் இரு மஞ்சுரா ஜம் பூதனார் கிராமங்களில் அனேக அஞ்ஞானிகள் ஞானஸ்

ஞானம்பெற்றதே. இது முக்கியமாய் மீலியுஸ் (Mylius) ஐயரின் பிரயாசையாலானது. அவர் 1847 ௵ முதல் 1849-ம் வருஷமட்டும் இங்கே நன்முயற்சியோடு உழைத்தார்.

இந்த ஆரம்பகாலத்தில், நாம் ஏற்கனவே தெரிவித்தபடி மாயூரமும் (1845), அமெரிக்கன் மிஷியோனால் விட்டுவிடப்பட்ட புதுக்கோட்டையும் (1846), சென்னை (1848), திருச்சிநாப்பள்ளி (1850), தஞ்சாவூர் (1851) பட்டணங்களும் நமது மிஷியோன் சேகரங்களாயின. இச்சேகரங்களில் 1850 வருஷமுதல் 1855 வருஷமட்டும் ஞானஸ்நானம்பெற்ற அஞ்ஞானிகள் 1356.

ஆகவே, யூபிலி (1856) வருஷத்தின் ஆரம்பத்தில் நமது மிஷியோன் கிறிஸ்தவர்களின் தொகை 4166. இவர்கள் மத்தியிலே வேலைசெய்த சுதேச ஊழியர்: 2 பிரசங்கிமார், 20 உபதேசிமார், 22 உதவி உபதேசியார். பள்ளிக்கூடங்களின் தொகை 38, அவைகளில் படிப்பித்த உபாத்திமார் 41, படித்தமாணாக்கர் 1031.

மேற்கூறிய பள்ளிக்கூடங்களில் விசேஷித்தவை: இங்கிலீஷ் தமிழ்ப் பாடசாலையாகிய கூடிய சென்னை செமினெரி, தரங்கை பெண்பாடசாலை, பிறையாற்றுப் பெண்பாடசாலை, மாயூரம், சென்னை சதுரங்கபட்டணத்திலிருந்த ஆரம்பப் பள்ளிக்கூடங்கள், புதுக்கோட்டை இங்கிலீஷ் தமிழ்ப் பாடசாலை.

லைப்சிக் மிஷியோனின் ஆரம்ப வேலையின் ஏற்பாடாக நாம் தொகுத்துச் சொல்லிய அச்சேகரங்கள் பள்ளிக்கூடங்களின் சங்கதிகளைப் பின்னால் சற்று விபரமாய்ப் பேசுவோம். ஆயினும், கர்த்தருடைய நாமத்தில் தொடங்கிய இந்த மிஷியோன் வேலையை அவர் ஆசிர்வதிக்கச் சித்தமாயிருந்தாரென்பது மேற்கூறிய விசேஷங்களால் தெளிவாம்.

---

## ௩. மிஷியோன் விசாரணைக்கும் விர்த்திக்குமான கூட்டங்கள்.

ஆரம்பத்தில், கோர்தேஸ் ஐயர் தனிமையில் மிஷியோன் விசாரணையை நடத்திவந்தார். அநேக ஐயர்மார் வரத்தொடங்கியபின் சமயாசமயங்களில் மிஷியோன் சங்கதிகளைப்



பேசி ஒழுங்கு செய்யும்படி 1846-ம் ௵ முதல் கொன்பரன்ஸ் சங்கம் (Missionary Conference) ஏற்பாடாயிற்று. ஐயர்மார் தொகை இன்னம் அதிகரிக்கவே, அவர்கள் பல தூரசேகரங்களிலிருந்து அடிக்கடி கொன்பரன்ஸ் கூட்டத்திற்கு வரக்கூடாமையால், 1858 ௵ (Missionary Church Council) என்ற ஆலோசனைச் சங்கம் தரங்கையில் ஏற்படுத்தப்பட்டது.

*M. Conference.*

அதன் தலைவர் சீனியர் என்கிற பட்டமுடையவராய் அதை நடத்தி வந்தார். முதல்சீனியர் கோர்தேஸ் ஐயர் (1858-1869). இரண்டாவது சீனியர் கார்ச்சையர் (1869-1887), மூன்றாவது சீனியர் கிரெம்மர் ஐயர் (1887-1889), நாலாவது சீனியர் பம்பரின் ஐயர்; இவரே தற்காலவரையில் ஆலோசனைச் சங்கத்தின் தலைவர். இவருக்கு 1902-ம் வருஷமுதல் பிரோவ்ஸ்டர் (Propst) என்கிற பட்டம்.

*Ch. Council.*

ஆலோசனைச் சங்கம் ஏற்பட்ட 1858-ம் வருஷமுதல் ஐயர்மார் வருஷந்தோறும் ஜனுவரி அல்லது பெப்ருவரி மாசத்தில் தரங்கையில் கூடிவந்து, மிஷியோன் நடபடிகளை ஆலோசனைச் சங்கத்தலைவரால் கேட்டறிந்து, மிஷியோனின் க்ஷேமத்துக்கான விசேஷங்களைக் குறித்து யோசித்து, அவசியமான ஏற்பாடுகளையும் தீர்மானங்களையும் செய்வதற்கான ஒழுங்கு பண்ணப்பட்டது. இப்படிக் கூடுகிற வருஷாந்திரக் கூட்டம் சர்மானிய பாஷையில் நடந்தேறும். இதற்கு சினோட் என்று பெயர்.

*German Synod.*

இந்த சர்மானிய சினோட் கூட்டத்திற்கு முந்தின இரண்டு தினங்களில் சுதேச குருமாரும் சேர்ந்து, தங்கள் ஜனக்கட்டுக்கும் சபைகளின் நலத்துக்குமேற்ற பலவிஷயங்களைப் பேசுகிறதற்கான குருக்களின் தமிழ்க்கூட்டம் 1864-ம் ௵ ஏற்படுத்தப்பட்டது.

*P. Conference.*

1887-ம் வருஷம் தமிழ்நாட்டுச் சுவிசேஷ லுத்தரன் திருச்சபையின் பொதுக்கூட்டம் கூடிவர ஏற்பாடாகி, முதலாம் பொதுக்கூட்டம் தஞ்சாவூரிலும், இரண்டாம் பொதுக்கூட்டம் (1890) திருச்சிநாப்பள்ளியிலும், மூன்றாம் பொதுக்கூட்டம் (1893) சென்னையிலும், நாலாம் பொதுக்கூட்டம் (1896) தரங்கையிலும், ஐந்தாம் பொதுக்கூட்டம்

*Tamil Synod.*

(1899) நாகபட்டணத்திலும், ஆறும் பொதுக்கூட்டம் (1902) சீர்காழியிலும், ஏழாம் பொதுக்கூட்டம் (1905) தஞ்சாவூரிலும் கூடிவந்தது. மூன்று வருஷத்திற்கு ஒருமுறை கூடிவருகிற இந்தப் பொதுக் கூட்டத்திற்கு அக்கிராசனபதியாகிய ஆலோசனைச் சங்கத்தலைவரும், சர்மானிய சினோட் கூட்டத்தார் தெரிந்துகொள்ளும் 3 ஐரோப்பிய குருமாரும், சுவீடிஷ் மிசியோன் காரியதரிசியும் சுதேச குருமார் யாவரும் மூகாமைச் சங்கம் ஏற்பட்டிருக்கும் சபைகளின் ஸ்தானபதிகளும் வருவார்கள். இதில் கூடிவந்தோருக்கு எழுப்புதலான ஆராதனைகள் நடப்பதுமன்றி, தலைவரால் சென்ற மூன்று வருஷத்து ரிப்போர்ட்டு வாசிக்கப்படும். பொதுப் பொக்கிஷங்களின் கணக்குகள் விபரிக்கப்படும். விசுவாசத்திற்கும் சன்மார்க்கத்துக்கும் அடுத்த விஷயங்களைப்பற்றி உபந்நியாசிக்கப்படும். சபைகளின் அபிவிர்த்திக்கான பலசங்கதிகள் பேசித் தீர்மானிக்கப்படும்.

---

## ௪. லைப்சிக் மிசியோன் சேகரங்கள்.

### 1. தரங்கை.

#### ௧. தரங்கைச் சபை.

Tranquebar.

நாம் ஏற்கனவே பார்த்தபடி டேனிஷ் ஹல்லே மிசியோன் கடைசி குருவாகிய கெம்மரர் ஐயர் மரணத்திற்குப் பின் தரங்கைச் சபையை விசாரித்து வந்த குருச்சன் ஐயரிடத்திலிருந்து கோர்தேஸ் ஐயர் அதை 1843-ம் ௵ மே ௴ ஒப்புக்கொண்டு 1870-ம் ௵ வரையில் அதை நடத்தி வந்தார். அவர் செய்த ஆரம்ப வேலைகளை முன்னமேயே தெரிவித்திருக்கிறோம். அவருடைய விசாரணையில் தரங்கைச் சபை விருத்தியடைந்து வந்ததென்பது நிச்சயம். சபையில் சுயாதீனமும் சுயபரிபாலனமும் உண்டாவதற்கான முதல் முயற்சி அவரால் செய்யப்பட்டது. அவரது முயற்சியின் பலனாக 1849-ம் வருஷத்திலே எருசலேம் பெத்லகேம் சபைகள் சேரவில் பொக்கிஷம் சேர்க்கத் தொடங்கினார்கள். அவைகள் சேர்த்த தொகையோ ஒரு பொக்கிஷ வைப்பாக வைக்கப்படாமல் அப்போதைக்கப்போது கோவிலுக்கென்றும் கோவி



லூழியருக்கென்றும் செலவழிக்கப்பட்டது.* ஆயினும், 1868. வருஷம் டிரெக்டர் ஹார்தெலாந்து ஐயர் தரங்கையில் கூடிய ஐயர்மார் கூட்டத்தில் சபைப் பொக்கிஷ சட்டங்களை ஏற்படுத்தியபின் தரங்கைச் சபையே மற்ற சபைகளுக்கு முந்திக்கொண்டு ஒழுங்காய் மாதாந்த வீதம் சேர்க்க ஆரம்பித்தது. இசனலும், கொல்லேயும் சங்கத்தார் உதவியினாலும் சபைப் பொக்கிஷம் அதிகரித்து 1881-ம் வருஷத்திலேயே சுயபரிபாலன சபையாகத் தொடங்கிற்று. 1891-ம் ஆண்டிலோ அது சபை குரு, கோயிலூழியர் சம்பளத்தை, மிசியோன் உதவியும், போதகராதரிப்புப் பொதுப்பொக்கிஷ உதவியுமின்றி கொடுக்கக் கூடியதாயிற்று.

1865-ம் ஆண்டளவும் கோர்தேஸ் ஐயர் தனிமையாக தரங்கைச் சபையை விசாரித்து வந்தார். அவ்வருஷத்திலோ ஆ. ம. சாமுவேல் ஐயர் அவருக்கு உதவியாளராகி, வியாதியினிமித்தம் பென்ஷன் பெற்ற 1880-ம் வருஷமட்டும் தரங்கைச் சபையை உண்மையாய் விசாரித்து வந்தார். 1879-ம் வருஷக்கடையில் ஞா. சாமுவேலையர் சபை குருவாகி 1891 வருஷமட்டும் அதைச் சுவார்ச்சையர் மேல் விசாரணையில் நடத்தி வந்தார். அவ்வருஷம் ஞானாபிஷேகம் ஐயர் சபை குருவானார். அவர் சுகவீனத்தின் பொருட்டு மாற்றப்பட்டபின் (1892 முதல்) வே. தேவசகாயம் ஐயர் தரங்கைச் சபையை விசாரித்து வருகிறார்.

Velipaleyam.

தரங்கைச் சேகரத்தின் கிராமச் சபைகளில் முக்கியமானவை மூன்று: வெளிப்பாளையம், சந்திரப்பாடி, பெரியமாணிக்கப்பங்கு. இந்த மூன்று இடங்களிலும் நெடுநாளாகப் பள்ளிக்கூடங்கள் கிரமமாய் நடந்துவந்தும், சமீபகாலத்தில் இரண்டு பள்ளிக்கூடங்கள் பிள்ளைகள் குறைவால் மூடப்பட்டுப்போயிற்று. வெளிப்பாளையத்தில்

---

* In 1849 the congregations of the old Danish Mission in Tranquebar made a hopeful beginning unto self-exertion in the same direction, & if all the money which our congregations have contributed in our time for the support of their poor & for other congregational purposes were counted together, it would make a pretty large sum. — *Second Eng. Report 1870.*

பூர்வத்திலேயே சபையாரால் கட்டப்பட்ட ஒரு ஜெபவீடு உண்டு. அதில் புதன்கிழமைதோறும் ஜெபம் நடந்து வருகிறது. தரங்கையில் பிழைப்புக்குக் கஷ்டமாயிருப்பதால் தெளிப்பாளையத்துக் கிறிஸ்தவர்களில் அனேகர் பலவிடங்களிலும் சிதறிப்போயிருக்கிறார்கள். தற்காலத்தில் சில ஏழைக் குடும்பங்கள் மாத்திரம் அங்குண்டு. இவர்களில் பலர் ஐரோப்பியர் வீட்டில் வேலை செய்கிறவர்கள். ஆரம்பத்தில் சந்திரப்பாடி கிறிஸ்தவர்கள் மிகுந்திருந்த இடம். அங்கிருந்த

Sandrapali.

கிறிஸ்தவ குடும்பங்களிலிருந்து சாமிநாதன், ம. பாக்கியம், ஜெ. ஆரோக்கியம் என்ற குருமாரும், பிறைபாறு சாந்தப்பிள்ளை, நாலக ஐயாப்பிள்ளை முதலிய பிரக்கியாதியான சபையாரும் வெளிப்பட்டார்கள். உத்தியோக முகாந்திரத்தால் அங்கிருந்த வெகுபேர் வெளியேறவே, தமிழரான கிறிஸ்தவ குடும்பங்கள் அங்கில்லாமல் போயின. தற்காலம் அங்கே சேரியில் சில ஏழைக் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். 1865-ம் ஞு அங்கே கட்டப்பட்ட கோயில், சபைக் குறைவால் இடிக்கப்பட்டுப் போய், 1900-ம் ஞு புதுக்கிறிஸ்தவர்கள் உண்டானபோது மறுபடியும் கட்டப்பட்டு, முந்தின கோயிலைப்போல் உயிர்த்தெழுதலின் கோயில் என்ற பெயரைப் பெற்றது.

பெரியமாணிக்கப்பங்கு பள்ளியாச்சிகள் நிறைந்த இடம். அந்த ஜாதியான கிறிஸ்தவர்கள் நெடுநாளாக அங்கேயிருந்தும், அவர்கள் அஞ்ஞானிகளின் கட்டுப்பாட்டைப் பெரிதாய்

Periamanickapangu.

எண்ணிக் குருமாருக்கு அடிக்கடி சஞ்சலத்தை யுண்டுபண்ணுகிறவர்களாயிருந்தார்கள். அந்தக் கிராமத்தில் 1852-ம் ஞு கட்டப்பட்ட ஜெபவீடு 1880-ம் ஞு மழையினால் இடிந்துபோகவே, அந்த வருஷத்தில் ஒரு அழகிய தேவாலயம் கட்டப்பட்டு, கர்மேல் தேவாலயம் எனப் பெயர் பெற்றது. பெரியமாணிக்கப்பங்கு கிறிஸ்தவர்களில் பலர் சென்னைக்கு வந்து சைவாங்கி, கல்வியிலும் நாகரீகத்திலும் அதிகரித்து, சபைக்கு அலங்காரமான அங்கங்களானார்கள்.

தரங்கை வட்டம் சபையார் தொகை 651. அச்சபையின் கோயில் பொக்கிஷக் கையிருப்புத் தொகை ரூபாய் 10,109. இந்தியாவிலுள்ள புரோட்டெஸ்டாண்டு மிஷியோன் கோயில்களிலெல்லாம் முதலாவதாகிய தரங்கை புது எருசலேம் கோயில் 1877-ம் வருஷம் கேரல் ஐயரால் புதுப்பிக்கப்பட்டது.



DR. GRAUL — கிரவுல் சாஸ்திரியார்.

(94-ம் பக்கம் பார்க்க)

அதற்கு 1886-ம் வருஷம் சபையாரில் ஒருவராது சுய செலவில் உயர்வாசனங்கள் சவதரிக்கப்பட்டன.

Karikal.

காரைக்கால்: இது பிராஞ்சு லாசகாலில் உள்ள வியாபாரப்பட்டணம். இங்கே பூர்வம் ஆரோன் நாட்டையரால் சேர்க்கப்பட்ட ஒரு சபையிருந்தது. டேனிஷ் மிஷியோன் கலிவடைந்த காலத்தில் விசாரிணைக் குறைவால் பலர் ரோமான் சபையில் சேர்ந்தும், பலர் மருளவிழுந்தும் போனார்கள். மீதியாயிருந்த பேர்களை 1820-ம் ஆடு செம்மரர் ஐயர் சுவி. பிர. சங்கத்தாருக்கு ஒப்புவித்தார். ஆயினும் இப்பொழுது அங்கே சேர்ந்திருக்கும் சபையை முன்போலவே தரங்கைச் சபையின் ஒரு குமாரத்தியென்னலாம்.

தரங்கையிலின்று பிழைப்பின் நிமித்தம் காரைக்காலில் குடியேறியிருந்த இரண்டொரு லுத்தரன் சபைக் குடும்பங்களைச் சமையாசமயங்களில் போய் விசாரித்து வந்த சபை குருவாகிய ஞா. சாமுவேலையர் கர்த்தருடைய ஒத்தாசையால் அவ்விடத்தில் ஒரு சபையைச் சேர்க்க முயன்றார். அந்த பிராஞ்சு லாக்கா பிரசைகளான 10 பேர் 1885-ம் ஆடு மே மீ 1-ம் உ தரங்கை எருசலேம் கோயிலில் ஞானஸ்நானம் பெற்றார்கள். 1885-ம் ஆடு கோயில்பத்தென்ற இடத்தில் தரங்கைக்கு வரும் ரஸ்தா ஓரத்தில் ஒரு மனைக்கொல்லை வாங்கப்பட்டு, அதில் 1886-ம் ஆடு ஒரு சிறு கோயிலும் கட்டப்பட்டது. அதன் பெயர் ஏபேன் எசேர். பிராஞ்சு லாக்காவிலுள்ளதும், வற்கனவே கிறிஸ்தவர்கள் இருப்பதுமான பூவம் என்ற கிராமமும் காரைக்காலோடு சேர்ந்து 1891-ம் ஆடு முதல் காரைக்கால் வட்டம் பிரத்தியேகச் சேகரமாயிற்று. அப்போதப்போது இரண்டொரு அஞ்ஞானிகள் ஞானஸ்நானம் பெற்றதுமன்றி, ரோமானித்தாரில் இரண்டொருவரும் சபையில் சேர்ந்ததால் சபை பெருகத் தொடங்கிற்று. 1896-ம் 97-ம் வருஷங்கள் பஞ்சகாலமாயிருந்ததால் அனேகர் ஞானஸ்நானம் பெற்றார்கள். இதனால் மேலைகாசாகுடி, வரிச்சுடர்குடி என்ற இடங்களில் சிறு சபைகள் சேரவுவாயிற்று. 1901-ம் ஆடு மேலை காசாகுடியில் கூரைக்கட்டான ஒரு சிறு கோயில் கட்டி, அதற்கு அற்புதநாதர் கோயிலென்று பெயரிடப்பட்டது. காரைக்கால் வட்டத்தில் தற்சமயம் இருக்கிற கிறிஸ்தவர்கள் தொகை 169. அவர்களுடைய கோயில் பொக்கிஷக் கையிருப்பு ரூபாய் 172.

## உ. செமினேரி.

இத்தேசத்தில் மிசியோன் வேலை சரியாய் நடந்தேறுவதற்கு இத்தேசத்தாரான மிசியோனூழியர் மிகவும் அவசியமெனக் கண்ட சீகன்பால்க் சிரேஷ்டர் மிசியோனூழியரை ஆளாக்குவதற்கான செமினேரிப் பாடசாலையை ஸ்தாபித்த விஷயத்தை ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம். கோர்தேஸ் ஐயர் தரங்கைக்கு வருகிற காலத்தில் அப்பாடசாலை இருந்ததில்லை. ஆகையால் அவர் குளுக்சன் ஐயரோடும், டேனிஷ் இராஜாங்க ஆலோசனைக்காரரான ஹிம்ரோத் துரையோடும் யோசனைபண்ணி, ஒரு செமினேரியை ஸ்தாபிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அதற்கு ஒரு கட்டடம் தேவையாயிருந்ததால், இப்பொழுது பிறையாற்றில் ஐரோப்பிய குரு குடியிருக்கும் மிசியோன் வீட்டை ஏலத்தில் வாங்கப் பார்த்து 500 ரூபாய் வரையில் உயர்த்திக்கேட்டார். சுப்பராயலு நாயுடு என்ற ஒரு இந்து தனவான் அதை 550 ரூபாய்க்குக் கேட்டு, வாங்கிவிட்டார். பிறகு நமது கிறிஸ்தவர்களில் ஒருவருடைய முயற்சியால் மேற்கூறிய தனவான் அதைத் தாம் வாங்கிய விலைக்குக் கோர்தேஸ் ஐயருக்கு விற்றுப்போட்டார். 1842-ம் வரு பெப்ருவரி மீ 12-ம் உ கிரயசாசனம் செய்யப்பட்டது. அந்த வருஷம் செப்டெம்பர் மீ 11-ம் உ சாயங்காலம் செமினேரி திறப்பதற்கு ஆயத்தமாக அந்த வீட்டிலே ஜெபக்கூட்டம் நடந்தது. அதில் கும்பகோணம் லண்டன் மிசியோன் குருவாகிய நிம்மோ ஐயர் யோவான் 10, 27-30 ஐ விஸ்தரித்தார். மறுதினமாகிய 12-ம் உ திங்கள் கிழமை காலமே குளுக்சன், நிம்மோ என்ற ஐயர்மாரும் சில மூப்பியமான கிறிஸ்தவர்களும் வந்திருக்கையில், 'அதிசயங்களை' என்ற ஞானப்பாட்டைப் பாடினார்கள். கோர்தேஸ் ஐயர் மத்தேயு முதலாம் அதிகாரத்தை எடுத்து, வாக்கியம் வாக்கியமாய் பிள்ளைகளை வாசிக்கச் சொல்லி, வேதசரித்திரம் படிக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்திப் பேசினார். பிறகு குளுக்சன் ஐயர் செமினேரியின் அவசியத்தைக் காண்பிக்கும் சில வார்த்தைகளைப் பேசி, ஒரு சுருக்க ஜெபம் செய்து ஆசீர்வாதங் கூறினபின்,

Seminary opened by Cordes.

| | |
|---|---|
| இப்போ சந்தேகமற | இனி நான் உம்மையே |
| நான் ஆமேன் என்கிறேன், | முன்னிட்டு உண்மையாக |
| நான் வேண்டினதைத் தர | என் வேலை செய்வேனாக, |
| போதீர் என்றறிவேன்; | துணை நீர் கர்த்தரே |



என்ற கவியைப் பாடி செமினேரி வேலையை ஆரம்பித்தார்கள்.

அதில் ஆரம்பத்திலே சேர்ந்த மாணாக்கர் 23. இவர்களில் 19 பேர் கிறிஸ்தவர்கள் 4 பேர் அஞ்ஞானிகள். 19 கிறிஸ்தவ பிள்ளைகளில் 13 பேர் ஏதுமற்ற ஏழைப்பிள்ளைகளாயிருந்ததால் அவர்கள் போசனத்திற்காகவும் ஏற்பாடுபண்ணி, ஒரு சமையல்காரனையும் நியமித்தார்கள். மாணாக்கருக்குக் கோர்தேஸ் ஐயரோடு இரண்டு உபாத்திமார் போதனை செய்தார்கள்.

1845-ம் வரு ஜுன் மீ வரையில் செமினேரி கோர்தேஸ் ஐயர் விசாரணையில் இருந்தது. அவருக்குச் சபை வேலை அதிகப்பட்டதால் சுவார்ச்சையர் அதன் விசாரணையை ஒப்புக்கொண்டு 4½ வருஷகாலம் அதை நடத்தினார். இதற்குள் கோர்தேஸ் ஐயர் சீமைக்குப் போய்த் திரும்பினார். செமினேரியைக் கோட்டையிலிருந்த அங்கிலோ தமிழ்ப் பாடசாலையோடு சேர்த்து நடத்துவது உசிதமென்று கோர்தேஸ் ஐயர் இல்லாத காலத்தில் ஐயர்மார் தீர்த்திருந்தார்கள். அங்கிலோ தமிழ்ப் பாடசாலையை விசாரித்து வந்த ஐபி துரை (Eibye) 1849-ம் வரு அக்டோபர் மீ ஆரம்பத்தில் அதை அப்பெல்ட் (Appelt) ஐயரிடம் ஒப்புவித்து, அந்த மீ 29-ம் உ இறந்துபோனார். முன் செய்யப்பட்ட தீர்மானத்தின்படியே, பிறையாற்றிலிருந்த செமினேரி கோட்டைக்கு மாற்றப்பட்டு, அங்கிருந்த அங்கிலோ தமிழ்ப் பாடசாலையோடு சேர்ந்ததாய் 1850-ம் வரு ஜனுவரி மீ 7-ம் உ திறக்கப்பட்டது. பிறையாற்றுச் செமினேரியிலிருந்த மாணாக்கர் 43, இவர்களில் ஆதரிப்புச் சாலைக்குட்பட்டோர் 21. கோட்டைப் பள்ளிக்கூட மாணாக்கர் 46, புதிதாய்ச் சேர்ந்தோர் 5 பேர். ஆகவே கலந்த மாணாக்கர் தொகை 94. இவர்கள் மூன்று வகுப்பாய்ப் பிரிக்கப்பட்டார்கள். கோர்தேஸ் ஐயர் எருசலேம் கோயிலுக்கு எதிரிலுள்ள மிசியோன் வீட்டில் வசித்து, செமினேரியை விசாரித்து, உயர்ந்த வகுப்பில் வேதசரித்திரம், ஞானோபதேசம், லத்தீன், கர்மானிய பாஷைகளைப் படிப்பித்து வந்தார். ஐபி துரை இறந்தது முதல் காலியாய்ப் போன நந்தவனத் தோட்டத்தில் உள்ள வீட்டிலே வசித்த அப்பெல்ட் ஐயரால் மாணாக்கரின் ஆதரிப்புக் கூடம் விசாரிக்கப்பட்டது.

J. M. N. Schwarz.

சுதேச கிறிஸ்தவர்களில் தகுந்த பேர்களை குருமாராக்க வேண்டுமென்பதே செமினெரியை ஏற்படுத்துவதில் கோர்தேஸ் ஐயருக்கிருந்த முக்கிய நோக்கம். இதற்காக, அவர் சீமைக்குப் போய்த் திரும்பினபின், கொன்பரன்ஸ் கூட்டத்தார், சாமுவேல், நல்லதம்பி என்கிற இரண்டு பேரை 1849-ம் ௵ மே ௴ 31-ம் ௳ தெரிந்துகொண்டார்கள். சாமுவேல் என்பவர் ஆரோன் நாட்டையர் சந்ததியாரான மதுரவாசகம் பிள்ளை குமாரன்.

I. Divinity Class.

இவர் ஆரம்பமுதல் கோர்தேஸ் ஐயரின் பிரிய சிஷனாயிருந்து போதகவிஷயங்களில் மிகத் தேறினவர். நல்லதம்பி என்பவரோ காஸ்பார் கோலோப் ஐயரால் தஞ்சாவூரில் ஞானஸ்நானம் பெற்ற ஒரு பூசாரியின் மகன். இவர் கூடலூரிலே இங்கிலீஷ் மிஷியோனிலும், கும்பகோணத்தில் லண்டன் மிஷியோனிலும் உபதேசியாராயிருந்து சபை வேலையில் அநுபவ முதிர்ந்தவர். இந்த இரண்டு பேருக்கும் சுவார்ட்ஸ, மீவியுஸ் என்ற ஐயர்மார் வேத சாஸ்திரத்திற்குரிய போதனை செய்தார்கள். 1850-ம் ௵ கோர்தேஸ் ஐயர் போதக சாஸ்திரமும், ஆத்ம விசாரணை சாஸ்திரமும் (Dogmatics and Pastoral Theology) கற்பித்தார். 1851-ம் ௵ மார்ச்சு ௴ 28-ம் ௳ அவர்கள் பரீட்சை கொடுத்து, பிரசங்கிமாராக்கப்பட்டார்கள். அவ்விருவருக்கும் 1860-ம் ௵ ஜுன் மாசம் 27-ம் தேதி தரங்கையில் குருப்பட்டம் கொடுக்கப்பட்டது.

1852-ம் ௵ கிறிஸ்தியான், ஆரோன், சாலொமோன் என்றவர்களுக்கு வேதசாஸ்திரம் கற்பிக்கத் தீர்மானித்தும், பல முகாந்திரங்களால் சரிப்படாமற் போயிற்று. அவர்கள் மிஷியோன் வேலை கற்றுக்கொள்ளும்படி ஐயர்மாருக்குச் சேதப்பிள்ளைகளாக நியமிக்கப்பட்டார்கள்.

Appelt.

சபையில் காணப்பட்ட ஜாதி வித்தியாச விஷயமாய் ஐயர்மாருக்குள் உண்டான ஒவ்வாமையின் நிமித்தம் கோர்தேஸ் ஐயர் 1857-ம் ௵ சீமைக்குப்போவதற்கு அவசியம் நேரிட்டதால் செமினெரி விசாரணை அந்த வருஷம் செப்டெம்பர் மாசமுதல் அப்பெல்ட் ஐயருக்கு ஒப்புவிக்கப்பட்டது. அவர் அந்த 1858-ம் ௵ பெப்ருவரி ௴ மட்டும் விசாரித்து வந்தார்.

அப்பொழுது கலந்த செமினெரியும் இங்கிலீஷ் பள்ளிக்கூடமும், தகுந்த மிஷியோனூழியரை ஆளாக்கப் போதுமான



நிலையில் இல்லாமையால், அதை அச்சிருக்குக் கொண்டுவரும் படிக்கான சாமர்த்தியமுடைய ஒருவரைத் தேடுவது சங்கத்தாரின் விசேஷித்த கவலையாயிருந்தது.

Stachlin.

பேர்பெற்ற ஸ்டேலின ஐயரே அதற்குத் தகுந்தவரென்று கிரவுல் சாஸ்திரியார் கண்டுபிடித்தார். அந்த ஐயர் 1858-ம் ௵ மார்ச்சு ௴ செமினெரி விசாரணையை ஒப்புக்கொண்டார். கல்வித் திறமையும், போதக சமர்த்தும், விசாரணைச் சக்தியும் பொருந்திய ஸ்டேலின் ஐயரால் செமினெரி வகுப்புகளிலும் இங்கிலீஷ் பள்ளிக்கூட வகுப்புகளிலும் விசேஷித்த விர்த்தி காணப்பட்டது. ஜாதி வித்தியாச கலகத்தால் 38 மாணாக்கருள்ளதாய்க் குறைந்துபோன பாடசாலை மூன்று வாரத்திற்குள் 84 மாணாக்கருள்ளதும், 8 மாசத்துக்குள் 150 மாணாக்கருள்ளதுமாயிற்று. 1859-ம் ௵ அனேக உபதேசிமாரும் உபாத்திமாருமாய் வெளியேறினார்கள். அடுத்த வருஷத்தில் 4 பேர் உபதேசிமார் வகுப்பிலும் 18 பேர் உபாத்திமார் வகுப்பிலும் படித்தார்கள்.

ஸ்டேலின் ஐயர் விசாரணைக்குள் ஒரு வேதசாஸ்திர வகுப்பும் ஏற்பட்டு, அதில் படித்தவர்களில் 5 பேர் பிரசங்கிமாராக வெளிப்பட்டார்கள். இவர்களில் 1864-ம் ௵ ஏப்ரில் ௴ 12-ம் ௳ இறந்துபோன பாக்கியநாத பிரசங்கியார் தவிர மற்ற நால்வருக்கும் 1865-ம் ௵ பெப்ருவரி ௴ 19-ம் ௳ தரங்கையில் குருப்பட்டம் கொடுக்கப்பட்டது.

Doederlein.

அவர்கள் ஞானேந்திரம், சாமிதாசன், கிறிஸ்தியான், பாக்கியம் என்ற ஐயர்மாரே. இயல்பாக நமது மிஷியோன் நடபடிகள் நடக்கும் மந்தகதிக்கும் ஸ்டேலின் ஐயருக்குரிய தீவிரகதிக்கும் சரிப்படாமல் போனதால், அவர் 1865-ம் ௵ செப்டெம்பர் ௴ நாகைக்கும், * அங்கிருந்த டேடர்லைன் ஐயர் செமினெரிக்கும் மாற்றப்பட்டார்கள்.

டேடர்லின் ஐயர் செமினெரியை ஒப்புக்கொண்டபோது அதனோடு சேர்க்கப்பட்டிருந்த அங்கிலோ-தமிழ்ப் பாடசாலை வைப்பர் ஐயருக்கு ஒப்புவிக்கப்பட்டது. (சென்ட்ரல் பாடசாலையைப் பற்றிய அத்தியாயம் பார்க்க). அப்பொழுது செமினெரி வகுப்புகள் தற்சமயம் அச்சுக்கூடமிருக்கும் கட்ட

* 1866-ம் ௵ ஜுலை ௴ ஸ்டேலின் ஐயர் சீமைக்குத் திரும்பிப் போய்விட்டார்.

டத்தின் பின்னறைகளில் படிப்பிக்கப்பட்டன. அதற்கு மேற்கிலுள்ள பங்களாவில் ஒரு புதிய வேதசாஸ்திர வகுப்பு ஏற்படுத்தப்பட்டது. 1869-ம் ௵ மே ௴ அவ்வகுப்பினின்று 4 பிரசங்கிமார் வெளிப்பட்டார்கள். இவர்களில் ஆசீர்வாத பிரசங்கியாருக்கும் பொன்னப்ப பிரசங்கியாருக்கும் 1874-ம் ௵ ஜூன் ௴ 7-ம் ௳யிலும், ஜே. கா. தாவீதுப் பிரசங்கியாருக்கு 1876-ம் ௵ அக்டோபர் ௴ 8-ம் ௳யிலும், அமிர்தம் பிரசங்கியாருக்கு 1877-ம் ௵ டிசம்பர் ௴ 16-ம் ௳யிலும் குருப்பட்டம் கொடுக்கப்பட்டது.

1870-ம் ௵ தேடர்லேன் ஐயர் சீமைக்குப் போனதால், உயர்ந்த செமினேரி புரும்ஸ்திராண்டு ஐயர் விசாரணைக்கும், தாழ்ந்த வகுப்பு ஷெப்பர் ஐயர் விசாரணைக்கும் உள்ளாயிற்று.

Blomstrand & Schaeffer.

1872-ம் ௵ ரி. ஹார்துமன் ஐயர் செமினேரியின் தலைவராய் நியமிக்கப்பட்டு, பிரிந்த வகுப்புகளை ஒன்றாய்ச் சேர்த்துப் பிறையாற்றுக்குக் கொண்டுபோனார். செமினேரியில் படித்து வெளியேறும் உபாத்திமார் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்படக் கூடும்படி சர்க்கார் சம்பந்தமான ஒரு போதனாபயிற்சிக் கூட்டத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் அக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

Haedmann.

செமினேரி பிறையாற்றுக்குப் போன சமயத்திலேயே ஒரு வேதசாஸ்திர வகுப்பு ஹார்துமன் ஐயரால் ஆரம்பிக்கப்பட்டது. துவக்கத்தில் அதில் ஆறு பேர் சேர்ந்தும், சில மாசங்களுக்குப் பின் ஒருவர் வியாதியால் வகுப்பை விட்டுவிட நேரிட்டது. மற்ற ஐந்துபேரில் வகுப்பு முடியுமுன் இருவர் இறந்துபோக, ஏ. தேவசகாயம், ஞா. ஞானமுவேல், த. பி. பெரியநாயகம் என்ற மூன்றுபேர் மாத்திரம் 1876-ம் ௵ பிரசங்கிகளாய் வெளிப்பட்டார்கள். இவர்களுக்கு 1878-ம் ௵ அக்டோபர் ௴ 31-ம் ௳ குருப்பட்டம் கொடுக்கப்பட்டது.

1876-ம் ௵ ஹார்துமன் ஐயர் சீமைக்குப் போனதால் புரும்ஸ்திராண்டு ஐயர் (பெர்க்ஸ்தெத் ஐயர் உதவியுடன்) செமினேரியை நடத்தி வந்தார்.

Ihlefeld.

1878-ம் வருஷத் துவக்கமுதல் செமினேரி கலுபெல்டையர் விசாரணைக்குட்பட்டது. இவர் செமினேரியில் வழக்கமாய் ஏற்பட்டிருந்த வகுப்புகளையன்றி, 1879-ம் ௵ ஒரு உபதேசிமார் வகுப்பையும்



ஸ்தாபித்தார். அதற்கு 14 பேர் அழைக்கப்பட்டார்கள். ஒரு வருஷத்திற்குப் பின் இவர்களில் 8 பேர் உபதேசிமார்களாக மாற்றப்பட்டார்கள். 6 பேர் வேத சாஸ்திர வகுப்பில் படித்து, 1881-ம் ௵ டிசம்பர் ௴ 16-ம் ௳ பிரசங்கிமார்களாக வெளிப்பட்டார்கள், அவர்களில் ஞா. தேவசகாயம், தே. தாவீது என்றவர்கள் 1884-ம் ௵ பெப்ருவரி ௴ 3-ம் ௳யிலும், வே. ம. அந்தோனி ஞானபிஷேகம் என்றவர்கள் அதே வருஷம் அக்டோபர் ௴ 12-ம் ௳யிலும், ஞா. தேவாசீர்வாதம் என்றவர் 1886-ம் ௵ பெப்ருவரி ௴ 14-ம் ௳யிலும் குருப்பட்டம் பெற்றனர்.

1882-ம் ௵ ஜனுவரி ௴ கலுபெல்டையர் மறுபடியும் ஒரு உபதேசியார் வகுப்பை ஆரம்பித்தார். அந்த வகுப்பினின்று 7 பேர் டிசம்பர் ௴ உபதேசிமாராக வெளிப்பட்டார்கள். அவர்களோடு படித்த மற்ற ஆறுபேர் வேதசாஸ்திர வகுப்பில் சேர்க்கப்பட்டார்கள். இந்த ஆறுபேரும் 1884-ம் ௵ டிசம்பர் ௴ 16-ம் ௳ பிரசங்கிமாராக அனுப்பப்பட்டார்கள். இவர்களில் ஈசாக்கு, மானுவேல் என்பவர்கள் 1887-ம் ௵ அக்டோபர் ௴ 2-ம் ௳யிலும், வே. தேவசகாயம், ஆ. சாலொமோன், யாக்கோபு, சா. சாமுவேல் என்றவர்கள் 1890-ம் ௵ டிசம்பர் ௴ 14-ம் ௳யிலும் குருப்பட்டம் பெற்றார்கள்.

Pamperrien.

கலுபெல்டையர் செமினேரியை ஏழு வருஷகாலம் நடத்தியபின் 1885-ம் ௵ மார்ச்சு ௴ அதைப் பம்பரீன் ஐயருக்கு ஒப்புவித்துச் சீமைக்குப் போனார்.

பம்பரீன் ஐயர் காலத்திலேதான் செமினேரியை யொட்டிய (டிரெய்னிங்) உபாத்திமைப் பாடசாலை சர்க்கார் அங்கீகரிப்புக்கும் விசாரணைக்கும் உள்ளாயிற்று (1887). அவர் செமினேரியின் சாதாரண வகுப்புகளையன்றி, 1887-ம் ௵ ஒரு உபதேசிமார் வகுப்பையும் 1890-ம் ௵ ஒரு உபதேசிமார் வகுப்பையும் ஏற்படுத்திப் படிப்பித்தார்.

1891-ம் ௵ ஜனுவரி ௴ அவர் செமினேரியை கேரிங் ஐயரிடம் ஒப்புவித்து ஜூலை ௴ சீமைக்குப் போனார்.

Gehring.
Seminary - Jubilee.

1892-ம் வருஷம் செப்டெம்பர் ௴ 11. 12 தேதிகளில் செமினேரியின் முதலாம் ஜூபிலி வெகு சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. இதற்காகப் பல சேகரங்களிலிருந்தும் செமினேரியின் பழைய புதிய மாணாக்கரான அநேக மிஷியோனரியர் வந்து

ருந்தார்கள். அவர்களால் ஒரு யூபிலிப் பொக்கிஷமும் சேர்க்கப்பட்டது. இது சம்பந்தமாய் தரங்கை எருசலேம் கோயிலில் நடந்த ஆராதனையிலே கேரிங் ஐயர் 1 மோ. 30, 9. 10-ன் பேரில் எழுப்புதலான பிரசங்கம் செய்தார்.

1900-ம் வருஷத் துவக்கமட்டும் செமினேரிப் பாடசாலை கேரிங் ஐயர் விசாரணையில் இருந்தது. அவர் ஒன்றின்பின் ஒன்றாய் இரண்டு வேத சாஸ்திர வகுப்புகளுக்குப் படிப்பித்தார். முந்தின வகுப்பிலிருந்து பிரசங்கிமாராக வெளிப்பட்டவர்கள் 8 பேர். இவர்களில் மூவருக்கு 1896-ம் ௵ வருஷத் துவக்கத்திலும் ஐந்துபேருக்கு மறு வருஷத்திலும் குருப்பட்டம் கொடுக்கப்பட்டது. மற்ற வகுப்பினின்று பிரசங்கிமாராக வெளியேறின ஆறுபேரில் ஐந்துபேர் 1902-ம் ௵ ஜனுவரி ௴ குருப்பட்டம் பெற்றார்கள். 1896-ம் ௵ சென்றிரல் பாடசாலை சேர்ச்சாழிக்கு மாற்றப்பட்டதால், பிறையாற்றிலிருந்த செமினேரி தரங்கைக் கோட்டைக்கு (2-ம் முறை) மாற்றப்பட்டது.

கேரிங் ஐயருக்குப்பின் பிரேளிக் ஐயர் செமினேரி விசாரணையை ஒப்புக்கொண்டார். புறமதஸ்தருக்குச் சுவிசேஷம் அறிவிப்பதில் விசேஷித்த நாட்டமும் ஆவலுமுடைய இவரால் 1902-ம் ௵ மே ௴ சுவிசேஷகர் வகுப்பொன்று ஏற்படுத்தப்பட்டது. அந்த வகுப்பார் வெளியேறிய பின் 1903-ம் ௵ உபதேசிமார் வகுப்பு சேர்க்கப்பட்டது. இதில் படித்தவர்கள் அடுத்த வருஷம் மாற்றப்பட்டார்கள்.

Froelich.

பிரேளிக் ஐயர் பலவீனமாகி, 1905-ம் வருஷத் துவக்கத்தில் சீமைக்குப் போகவேண்டியதாயிருந்ததால், செமினேரி விசாரணை மைனர் ஐயருக்கு ஒப்புவிக்கப்பட்டது. * 1904-ம் வருஷத் துவக்க முதல் ஒழுகைமங்கலத்தில் ஒரு புதிய வேதசாஸ்திர வகுப்பு சேம ஐயர் விசாரணையில் ஆரம்பமாகி, நடத்தப்பட்டு வருகிறது. அதில் 12 பேர் வசனத்தின் ஊழியத்திற்கென்று ஆயத்தப்படுத்தப்பட்டு வருகிறார்கள். சென்ற 64 வருஷக்காலமாய் செமினேரியினால் நமது மிஷியோனுக்கு

Meynet, Zehme.

* செமினேரி டிரெக்தருக்கு உதவியாயிருந்த சுதேச குருமார் அநேகர். அவர்களுள் அநேக வருஷகாலம் அதில் வேலை செய்தோர் யாக்கோபையர், ஞா. சாமுவேல் ஐயர்.



மிருந்த பயன் விளையப்பண்ணின கர்த்தர் அதை இனிமேலும் பரிபூரணமாய் ஆசீர்வதித்துக் காப்பாற்றுவாராக.

---

## ரு. அச்சுக்கூடம்.

பூர்வ ஐயர்மார் ஒரு அச்சுக்கூடத்தைத் தரங்கையில் ஏற்படுத்தியிருந்தார்கள். 1712-ம் ௵ இங்கிலாந்திலிருந்து முதல் அச்சியந்திரமும், அடுத்த வருஷத்தில் சர்மானியாவிலிருந்து முதல் தமிழ் அச்செழுத்துக்களும் வந்த சங்கதியை முன்னமே தெரிவித்திருக்கிறோம். இந்த அச்சுக்கூடம் நூறு வருஷத்துக்கு அதிக காலம் இருந்தது. கடைசி அச்சுக்கூடத் தலைவராகிய பெக்கர் (Becker) என்பவர் 1817-ம் ௵ இறந்துபோனார். கோர்தேஸ் ஐயர் வருகிற காலத்தில் தரங்கையிலே அச்சுக்கூடம் இருந்த வீடும் தெரியாமற் போயிற்று.

Danish M. Press.

லேப்ஸிக் மிஷியோன் சங்கத்தார் மறுபடியும் ஒரு அச்சுக்கூடத்தை ஸ்தாபிக்கும்படி 1860-ம் ௵ ஹோபுஷ் துரையை இத்தேசத்திற்கு அனுப்பினார்கள். அவர் அந்த வருஷம் செப்டெம்பர் ௴ வந்து சேர்ந்தும், அவர் கொண்டுவந்த அச்சியந்திரம், பிசகாய் கல்குத்தாவுக்கு அனுப்பிவிடப்பட்டது. சில மாசங்களுக்குப் பின் அது தரங்கம்பாடிக்கு வந்து சேர்ந்தது. 1861-ம் ௵ மார்ச்சு ௴ 30-ம் ௳ முதல் திருத்தக் காகிதம் (Proof sheet) வெளிப்பட்டது. அதில் அச்சிடப்பட்ட முதற் புத்தகம் லூத்தர் சாஸ்திரியாரின் ஞானோபதேசக் குறிப்பிடம் (13-ம் பதிப்பு). அதுமுதல் அநேக பிரயோசனமான நூல்கள் இந்த அச்சுக்கூடத்தினின்று வெளிப்பட்டன. *

L. M. Press established by Hobusch.

1858-ம் ௵ முதல் புத்தகப் பிரசுரிப்புக்கென்று நியமிக்கப்பட்ட புளும்ஸ்திராண்டு ஐயர் அச்சுக்கூடத்தில் பல பழைய நூல்களைத் திருத்தி அச்சிட்டதுமன்றி, பல புதிய நூல்களைத் தாமே மொழிபெயர்த்துப் பிரசுரித்தும் வந்தார்.

* முதல் முதல் அச்சுக்கூடமும் ஹோபுஷ் துரை குடியிருப்புத் தலமுமாயிருந்த கட்டடம், இப்பொழுது செமினேரி அப்பியாசப் பள்ளிக்கூடமாயிருக்கும் வீடே. இது 1860-ம் ௵ நொவம்பர் ௴ 20-ம் தேதி வாங்கப்பட்டது.

நமது புத்தக டாப்பைப் பார்த்தால், அவரும் மற்றேரும் எழுதிய நூல்கள் இவையென அறிந்துகொள்ளலாம். 1863-ம் ௵ ஜூலை ௴ முதல் நமது அச்சுக்கூடத்திலிருந்து 'அருணோதயம்' என்னும் பத்திரிகை பிரசுரமாகி வருகிறது. ஏறக்குறைய பதினைந்து வருஷகாலம் இப்பத்திரிகை புளும்ஸ்திராண்டு சாஸ்திரியாராலும், 1878-ம் ௵ முதல் 1885-ம் வருஷமட்டும் சலபெல்டையாராலும் பிரசுரமாகி வந்தது. பிறகு ஐயர்மார் விசாரணையில் ஞா. சாமுவேல் ஐயரால் பதிப்பிக்கப்பட்டு வருகிறது. இதையன்றி ஏறக்குறைய நாற்பது வருஷகாலமாய் தரங்கை மிஷியோன் பஞ்சாங்கம் பிரசுரமாகி வருகிறது. புளும்ஸ்திராண்டு சாஸ்திரியார் இத்தேசத்திற்கு வந்தது முதல் முப்பது வருஷகாலமாய்த் தமது ஜெனன தேசத்திற்குப் போகாமல், இங்கே உழைத்ததால் மிகுந்த பலவீனமாகி, கட்டாயத்தால் 1885-ம் ௵ சீமைக்குப் போய், 1887-ம் ௵ அக்டோபர் ௴ 17-ம் ௳ கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவர் மரித்தும், அவர் பிரசுரித்த நூல்களால் இன்னும் பேசுகிறவராயிருக்கிறார்.

Literary Department.

ஹொபுஷ் துரை இருபத்தைந்து வருஷகாலம் அச்சுக்கூடத் தலைவராயிருந்து, அதை நல்ல நிலைமையில் வைத்திருந்தார். ஏறத்தாழ அதன் வரவைக்கொண்டே செலவு நடக்கும்படிக்கான விதமாய் அதை நடத்தி வந்ததால் மிஷியோனுக்கு அதிகப் பாரமாயிராதபடிக்குப் பார்த்தார். (அச்சுக்கூடத் தலைவரின் வேலையோடு மிஷியோன் பொக்கிஷதாரி வேலையும் சேர்ந்திருந்தது.) அவர் சுகவீனப்பட்டுச் சீமைக்குப் போயிருக்கும் காலத்தில் இங்கு வேலைபார்த்தவர்களில் கால், பைசனர்தஸ், காபீஸ் ஐயர்மார் விசேஷித்தவர்கள். 1886-ம் ௵ ஹொபுஷ் துரை சீமைக்குப் போனதுமுதல் அது பலருடைய விசாரணைக்கும் உள்ளாயிருந்தது. 1890-ம் வருஷமுதல் 1903-ம் வருஷமட்டும் அதை நடத்தினவர் மென்னிக் (Maennig) துரை. அவர் சீமைக்குப் போனதுமுதல் 1905-ம் வருஷம் ஆகஸ்டு மாசமளவும் கெல்ட்டே துரை அச்சுக்கூடத் தலைவராயிருந்தார். மென்னிக் துரை திரும்பியபின் மிஷியோன் பொக்கிஷதாரி வேலையைப் பார்ப்பதே அவருக்குப் போதுமான வேலையாயிற்று. இந்த நாலாம் யூபிலி வருஷத்தில் அது ஒரு சுதேச குருவின் விசாரணையில் இருக்கிறது.

---



## 2. பொறையாறு.

### க. பொறையாற்றுச் சபை.

1746 ௵ பிரதிஷ்டையான பொறையாற்று பெத்லேகேம் கோயில் தரங்கன்பாடியைச் சேர்ந்த நாட்டுச்சபைகள் கூடிவந்து ஆராதனைசெய்யும் இடமாயிருந்தது. பெரிய பண்டிகைகளின் காலத்தில் தூரத்திலும் சமீபத்திலும் இருந்த சுற்றுப்பேட்டைக் கிறிஸ்தவர்கள் அங்கேவந்து, சிலநாட்களாய்த் தங்கி, உபதேசம் பெற்று, கர்த்தருடைய பந்திக்குச் சேர்ந்து, சந்தோஷமாகத் தங்கள் வீடுகளுக்குத் திரும்புவார்கள். 1820 ௵ நாட்டுச்சபைகள் கி. அ. வி. சங்கத்தாருக்கு ஒப்புவிக்கப்பட்டபின் இவ்வழக்கம் நின்றுபோயிற்று. இப்பொழுது பொறையாற்றுக் கஸ்பாவிலும், அதற்குச் சமீபமான கிராமங்களிலுமுள்ள கிறிஸ்தவர்கள் மாத்திரம் அங்கே ஆராதனை செய்து வருகிறார்கள்.

Porayar.

லைப்சிக் மிஷியோன் சங்கத்தார் இங்கே வேலைசெய்ய ஆரம்பித்த காலத்தில் கோர்தேஸ் ஐயர் ஒருவர் மாத்திரம் இருந்ததால், பெத்லேகேம் கோயிலில் பெரும்பாலும் உபதேசிமாரே ஆராதனை செய்துவந்தார்கள். 1841 ௵ மிஷியோன் வீடு வாங்கப்பட்டது. மறுவருஷம் அங்கே செமினேரி ஸ்தாபகமாயிற்று. 1846 ௵ நொவம்பர் ௴ 22 ௳ சுவார்ச்சையர் (J. M. N. Schwarz) பொறையாற்றுச் சபை விசாரணையை ஒப்புக்கொண்டபொழுது அது எருசலேம் சபையைவிட்டுப் பிரத்தியேகமான சேகரமாயிற்று. 1847-ம் ௵ முதல் 49-ம் ௵ மட்டும் இந்த மிஷியோனில் உழைத்த மிலியுஸ் (A. Mylius) ஐயர் வேலையைக் கர்த்தர் ஆசீர்வதித்ததால் திருவெஞ்ஞானம், பூசனூர் என்ற கிராமங்களில் அநேகர் ஞானஸ்நானம்பெற்றுச் சபையில் சேர்ந்தார்கள். 1849 ௵ அவ்விரண்டிடங்களிலும் ஜெபவீடுகள் கட்டப்பட்டன. முந்த கூரைக்கட்டாயிருந்த அவைகள் பிற்காலத்தில் ஓடுபோட்ட கட்டடங்களாயின. பஞ்சவருஷமாகிய 1851 ௵ வொல்பு (A. F. Wolff) ஐயரால் பொறையாற்று வட்டத்தில் 404 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்களில் பலர் குறவர். ஆயினும், இவர்களில் அநேகர் பிற்காலத்தில் மருளவிழுந்தார்கள்.

பிறையாற்றைச் சேர்ந்த கிராமங்களில் நாம் மேலே சொன்ன திருமெஞ்ஞானம் பூசஞானராயன்றி, தில்லையாளி, சீமேயோன்சேரி, மேட்டுச்சேரி, இச்சிலடி விசேஷித்தவை. மேட்டுச்சேரியிலும் இச்சிலடியிலும் கற்கட்டடங்களான ஜெபவீடுகள் உண்டு. பெத்லகேம் கோயிலுக்குச் சமீபமான கடுதாசிப் பட்டடை என்ற இடத்திலும் அநேக கிறிஸ்தவர்கள் குடியிருக்கிறார்கள். இந்தக் கிராமக் கிறிஸ்தவர்களெல்லாரும் பஞ்சமர்.

Villages.

கஸ்பா பிறையாற்றில் சில பூர்வகிறிஸ்தவ குடும்பங்கள் உண்டு. இதர குடும்பங்கள் வேறிடங்களிலிருந்து வந்த மிஷியோனாரியருடையவை.

முற்கூறிய ஐயர்மாரைத் தவிர இந்த வட்டத்தை விசாரித்து வந்தவர்கள் கிம்மர், ஷான்ஸ், கிறால், பைசனர்த்ஸ், கெம்பு என்றவர்கள். ஹெப்பர், பம்பரின் ஐயர்மார் விசாரணையிலும் இது சிலகாலம் இருந்தது. 1890 ௵ முதல் இது மறுபடியும் பைசனர்த்ஸ் ஐயர் விசாரணையில் இருக்கிறது. 1892-ம் ௵ குமிழந்திடல் என்ற கிராமத்திலே முன் பள்ளிக்கூடம் கட்டியிருந்த இடத்தில் மறுபடியும் ஒரு பள்ளிக்கூடங்கட்ட ஆரம்பித்தபொழுது அஞ்ஞானிகளால் துன்பமும், நியாயந் தேடினதில் மிகுந்த செலவும் நேரிட்டது. நியாயங் கிடைக்கவில்லை. பைசனர்த்ஸ் ஐயருக்கு உதவியாக யாக்கோபையர் வேலைபார்த்து வருகிறார். இவர்கள் பிரயாசையைக் கர்த்தர் ஆசீர்வதித்ததால் சபையில் ஆத்துமாக்கள் தொகை அதிகப்பட்டிருக்கிறது. இப்பொழுது பிறையாற்றுச் சேகரத்திலுள்ள கிறிஸ்தவர்கள் தொகை 1529. சபைப்பொக்கிஷ கையிருப்பு 8365 ரூ. சுதேசகுருவின் சம்பளத்தில் ஒருபாகம் சபைப் பொக்கிஷத்திலிருந்து கொடுக்கப்படுகிறது.

நெடுநாளாய்ப் பழுதுபட்டிருந்ததும், நடுத்தூணால் தாங்கப்பட்டு அலங்காரக்குறைவாயிருந்ததுமான பெத்லகேம் கோயில் கிறால் ஐயரால் புதுப்பிக்கப்பட்டது (1872). பெத்லகேம் சபையாரில் ஒருவர் தமது சுயசெலவில் வாங்கிக் கொடுத்த மூன்று மணிகள் தொங்கும்படிக்கான அலங்காரக் கோபுரமொன்று (1884 ௵ அஸ்திபாரம் போடப்பட்டு) 1887 ௵ கட்டி முடிந்தது.

Bethlehem church.



பிறையாறு கஸ்பாவில் ஊருக்கு அலங்காரமும் ஏழைகளுக்குப் பிரயோசனமுமாக ஸ்தாபிக்கப்பட்டிருப்பது "அம்புஜம்மாள் சத்திரம்" எனப் பெயர்பெற்ற ஒரு தர்மசாலை. இது பூர்வம் ஆரோன் ஐயர் வம்சத்தைச் சேர்ந்த ஆரோன் தாவீது தம்பிசாமிபிள்ளை யென்ற தாசில்தார் தமது செலவிலே தமது சமுசாரத்தின் பெயரால் கட்டியது. 1868 ௵ செப்டெம்பர் ௴ 8 ௳ பிரதிஷ்டையாயிற்று. இதற்கு நான்குவேலி நிலமும், சொற்ப ரொக்கமும் ஆதாரமாய் வைக்கப்பட்டு, பெத்லகேம் சபையின் ஐரோப்பிய குருவைத் தலைவராயுடைய ஒரு தர்மசங்கத்தார் விசாரணையில் இருக்கிறது. தினந்தோறும் 12 ஏழைகள் இதில் கிரமமாய் உதவிபெறுகிறார்கள். சமயாசமயங்களில் ஏழைப் பிரயாணிகளுக்கும் உபகாரம் கொடுக்கப்படுகிறது.

Chatram.

---

## உ. தொழிற் பாடசாலை.

இது பிறையாற்று வட்டத்திற்குட்பட்ட எருக்கட்டாஞ்சேரியில் உள்ளது.

1860 ௵ மார்ச்சு ௴ 30 ௳ தரங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட அச்சுக்கூடத்தை ஒட்டி ஒரு தொழிற்சாலை ஏற்பட்டது. அதில் அச்சுக்கூடத்துக்கேயுரிய பலவேலைகளைச் சில பிள்ளைகள் கற்றுக்கொண்டதுடன் வேறு சிலர் தச்சுவேலை, தையல்வேலை, கொல்லத்துவேலை முதலியன கற்றார்கள். 1864-ம் ௵ நெசவுவேலை அப்பியாசமும் ஆரம்பித்தது. 1865-ம் ௵ நொவெம்பர் மாசத்தில் நீல்சன் என்ற டேனிஷ் தச்சர் நமது மிஷியோன் வேலைக்குட்பட்டதால் சில பிள்ளைகள் தச்சுவேலையில் விர்த்தியடைய ஏதுவாகியும், அவர் 1868 ௵ நமது மிஷியோன் சம்பந்தத்தை விட்டதோடு தொழிற்கூடவேலையும் நின்றுபோயிற்று. ஆயினும், கைத்தொழில் விர்த்தி நமது சபைகளின் புறம்பான விர்த்திக்கு அவசியமென்கண்டு நமது பெரியோரின் அனுமதிபெற்று கிறால் ஐயர் 1874 ௵ ஒழுகமங்கலத்தில் தொழிற்சாலையைத் திரும்பவும்

Industrial school.

ஏற்படுத்தினார். ஆரம்பமுதல் தற்காலமளவும் அதில் விர்த்தி யாகி வருகிறது முக்கியமாய்த் தச்சுவேலை. 1874-84 ௵ நெசவு வேலையும் நடந்தது. 1877-ம் ௵ சீட்சுமன் துரை தொழிற்சாலை விசாரணையை ஒப்புக்கொண்டு அத்தொழிற் பாடசாலையை எருக்கட்டாஞ்சேரிக்குக் கொணர்ந்தார். அது முதல் கருமான்வேலையும் நடந்து வந்தது. 1878-80 ௵ பாய்நெசவு நடந்தது. 1882-ம் ௵ கைத்தொழிற்கூடம் கட்டப்பட்டது. இதற்கு கவர்ன்மெண்டார் கொடுத்த பொருள் உதவி 700 ரூபாய். நமது தொழிற் பாடசாலை 1887-91 ௵ ரிசல்ட் கிராண்டு பெற்றுச் சர்க்கார் விசாரணைக்குள்ளும் இருந்தது. துரை உத்தரவுபெற்றிருந்த காலங்களில் பற் பல ஐயர்மார் அதை விசாரித்துவந்தார்கள். 1903-ம் ௵ சீட்சுமன் துரை சீமைக்குப் போனதுமுதல் அது சூல்தஸ் (Schulz) துரை விசாரணையில் இருக்கிறது. இப்பொழுது அதில் நடக்கும் வேலை தச்சுவேலை மாத்திரமே. அதில் தொழில் கற்கும் மாணாக்கர் 30.

Grahl, Zietzschmann.

---

## 3. மணிக்கிராமம்.

Manikramam.

காவேரிப்பட்டணத்தையடுத்த இந்தக் கிராமத்திலுள்ள சபை முற்றிலும் பஞ்சமர் சபையே. இது 1848-ம் வருஷமுதல் நமது மிஷியோன் சேகரமாயிருக்கிறது. 18-ம் நூற்றாண்டில் டேனிஷ்-ஹால்லே மிஷியோன் ஐயர்மாரால் மணிக்கிராமத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த லுத்தரன் சபை தரங்கம்பாடியைச் சேர்ந்த மற்ற கிராமச் சபைகளோடு அங்கிலேய அத்தியட்ச சபையாய்ப் போன வயணத்தை முற்கனவே தெரிவித்திருக்கிறோம். அங்கிலிக்கானர் சபைக்குள்ளாயும் அந்தச் சபையாரில் அனேகருக்கு லுத்தரன் சபையின் பேரிலிருந்த பிரியம் முற்றிலும் அற்றுப்போகவில்லை.

தரங்கம்பாடிக்குப் பழையபடி ஜர்மானிய குருமார் வந்து, பழைய லுத்தரன் போதகங்களைப் போதிக்கிறதாக அறிந்தபோது அந்த லுத்தரன் சபையில் மறுபடியும் சேர வேண்டுமென்கிற விருப்பம் தமிழ் நாட்டில் இருந்த அனேக



கிறிஸ்தவர்களுக்கு உண்டானதுபோல் இவர்களுக்கும் உண்டாயிற்று. அங்கிலிக்கானரான குருமார் மணிக்கிராமச் சபையாரிற் சிலரை லுத்தரன் சபையாரோடு விவாக சம்பந்தம் செய்யப்படாதென்று நிர்ப்பந்தித்தபோது அவர்கள் அங்கிலிக்கானர் சபையை விட்டுப் பிரிவதற்கான ஒரு புறக்காரணமும் கிடைத்தது. அவர்களில் 130 பேர் தரங்கைக் கொன்பரன்ஸ் சங்கத்தாருக்கு ஒரு விண்ணப்பமெழுதி, தங்களை லுத்தரன் சபையில் சேர்த்துக்கொள்ளக் கேட்டுக்கொண்டார்கள். இவர்களில் சிலர் இங்கிலீஷ் ஐயர்மாரின் பலவித முயற்சியால் தடைப்பட்டும், பெரும்பாலார் தங்கள் விண்ணப்பத்திற்கிசைய லுத்தரன் சபையில் சேர்ந்தார்கள். 1852-ம் வருஷமுதல் அது தனிச் சேகரமாகி தரங்கம்பாடியில் இருந்த ஐயர்மாரால் விசாரிக்கப்பட்டு வந்தது. அவர்களில் முதல் முதல் மணிக்கிராமச் சபைக்கு விசாரணை குருவாக நியமிக்கப்பட்டவர் ஷ்மைசர் ஐயர். அவர் மரித்தபின் மீவியுஸ் ஐயரும் அவருக்குப் பின் அப்பெல்ட் ஐயரும் அதை விசாரித்து வந்தார்கள். பிறகு சுவார்ச்சையரும் அவருக்குப் பின் வொல்பு ஐயரும், பிறகு ஹார்டுமன் ஐயரும் அதை நடத்தி வந்தார்கள். 1862-ம் ௵ அங்கே ஒரு கோயில் கட்டப்பட்டு, அதற்கு சீயோன் என்று பெயரிடப்பட்டது. 1866-ம் ௵ வருஷ முதல் 1884-ம் வருஷமட்டும் அதன் விசாரணை குருவாயிருந்தவர் புரூம்ஸ்கிராண்டு ஐயர். இவர் விசாரணை காலத்தில் பழுதாய்ப் போன பழைய கோயிலை யிடித்துப்போட்டுப் புதுக் கோயில் ஒன்று கட்டப்பட்டு (1882) முந்தினதைப்போலவே சீயோன் என்கிற பெயரைப் பெற்றது. அவ்வருஷத்தில் இருந்த சபையார் தொகை 404.

புரூம்ஸ்கிராண்டு ஐயருக்குப் பின் சீனியர், கிரெம்மர் ஐயர் விசாரணைக்குள் 1885-ம் வருஷமுதல் சா. சாமுவேல் பிரசங்கியார் மணிக்கிராம வாசியாகி, அவ்வட்டத்து சபையைப் பயனுற நடத்தி, 1890-ம் ௵ குருப்பட்டம் பெற்று, இன்னமும் அதன் குருவாயிருக்கிறார். கிரெம்மர் ஐயருக்குப் பின் முறையே ஹேர்பெர்க், நேதர், ரீகர், மத்தேஸ், பிரேவிச், மைனர், என்ற ஐயர்மார் ஒருவர் பின் ஒருவராய் அதன் மேல் விசாரணைக்காரரானார்கள்.

மணிக்கிராமத்தைச் சேர்ந்த கிராமங்களில் முக்கியமானவை 4. அவற்றுள் பெருந்தோட்டம் என்ற கிராமத்தில் கிறிஸ்

ஸமார்க்கத்திற் சேர்ந்த வெட்டியாரக் குடும்பங்களுக்கும் இவர்கள் போதகராகிய எா. சாமுவேல் ஐயருக்கும் 1891-ம் வருஷ அஞ்ஞான மிராசுதார்களால் பெருந் துன்பமுண்டாயிற்று. உலக அதிகாரிகளால் நியாயம் கிடைக்கவுமில்லை. அவ்வூரில் 1896-ம் வருஷம் ஒரு ஜெபவீடு கட்டப்பட்டு, கல்வாரி ஆலயம் என்ற பெயருள்ளதாய்ப் பிரதிஷ்டையாயிற்று.

Persecution.

அன்றியும், 1896-ம் வருஷ கீழப்பெரும்பள்ளத்தில் ஞானஸ்நானம் பெற்றுச் சபையில் சேர்ந்த வெட்டியார ஜனங்கள் தாங்கள் தலைமுறை தத்துவமாய் அநுபவித்து வந்த மிராசு மானியம் முதலியவற்றைத் தோற்று, மிகுந்த கஷ்டத்திற்குள்ளானார்கள். அவர்களுக்காக மிஷியோனுபகாரிகளால் மாணாந்தங் காட்டில் அடைக்கலபுரம் என்னும் அடைக்கல ஸ்தலம் ஏற்பாடாகி, 1898-ம் வருஷ அதில் அடைக்கலநாதர் பெயரால் ஒரு ஜெபவீடும் கட்டப்பட்டது.

மணிக்கிராம வட்டத்திலுள்ள கிறிஸ்தவர்கள் தொகை 583. இவர்கள் சபைப் பொக்கிஷக் கையிருப்பு ரூபாய் 1775.

---

## 4. மாயூரம்.

பூர்வம் ஆரோன் முதலிய ஐயர்மார் வேலைசெய்த மாயூரத்தில் கலிகாலத்திலே மிஷியோன் வேலை ஆரம்பித்தவர் பேரன்புருக் ஐயர் (1823). இவர் பெர்லின் நகரில் வேதசாஸ்திரங்கற்றுச் சர்ச் மிஷியோன் சங்கத்தாரால் இத்தேசத்திற்கு அனுப்பப்பட்டவர். இவர் குருகாடு என்ற இடத்தில் மனை வாங்கி, மிஷியோனரியின் குடியிருப்பு, பள்ளிக்கூடம் முதலியவற்றிற்கு வேண்டிய கட்டடங்களைக் கட்டினார். தரங்கை மிஷியோன் தாழ்வடையத் துவக்கினதால், சர்ச் மிஷியோனால் புது உயிர் உண்டாகுமென நம்பி, அவரும் அவருடைய தோழர்களாகிய ரைநப்டர் (1828), லிங்கேவா (1832) என்ற ஐயர்மாரும் அனேக பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து, இதன் வழியே மிஷியோன் வேலையை நடத்த முயன்றார்கள். தரங்கை யோவான் வளயாத சீஷரில் ஒருவராகிய ஜான் தேவசகாயம் என்பவர் அவர்களுக்கு விசேஷித்த உதவியாளராயிருந்தார். பேரன்புருக் 1832-ம் வருஷம் ஜெர்மனி தேசத்திற்குத் திரும்பிய பின்னும்

Mayavaram, C. M. S.



ஹார்தலாங்கு சாஸ்திரியார்.

(95-ம் பக்கம் பார்க்க)

வேலை நன்றாய் நடந்தது. 1835-ம் வருஷம் 21 பள்ளிக்கூடங்களில் 1500 மாணாக்கர் படித்தார்கள். அம்மட்டும் 78 அஞ்ஞானிகள் ஞானஸ்நானம் பெற்று, 10 ரோமானிஸ்தர் சபையிற் சேர்ந்தார்கள். ஆயினும், அதற்குமேல் அந்த மிஷியோன் செழித்தோங்கவில்லை. பள்ளிக்கூடங்கள் நசித்து, மற்ற வேலைகளும் விழத்துவக்கினதால், மாயூர மிஷியோனைக் கைவிட்டு, அதன் தோட்டம் துறவு கட்டடங்கள் யாவையும் விற்றுப்போடச் சர்ச்சு மிஷியோன் சங்கத்தார் தீர்மானித்தார்கள். அஞ்ஞானிகள் அவற்றை வாங்குவதற்கு எத்தனமாயிருக்கையில், அங்கிருந்த கிறிஸ்தியான் சாந்தப்பபிள்ளை யோசனையின்படி, குன்டூர் கலெக்ட்டர் ஸ்டோக்ஸ் துரை வாங்கி, தெலுங்கு நாட்டில் மிஷியோன் வேலைசெய்யும் நோக்கமாய் அங்கு வந்திருந்த நமது மிஷியோன் ஐயர்மார்களாகிய ஒக்ஸ், சுவார்ச்சு என்ற குருமார்ருக்கு ஒப்புவித்தார். அப்பொழுது அவ்விரண்டு ஐயர்மாரும் தமிழ்நாட்டுக்குத் திரும்பினார்கள்.

Ochs. ஒக்ஸ் ஐயர் 1845-ம் வருஷம் ஜனுவரி மீ 18-ம் உ மாயூரம் போய், பெப்ருவரி மீ 2-ம் உ கோர்தேஸ் ஐயரோடு அந்தச் சேகரத்தை ஒப்புக்கொண்டார். இதனோடு நமது மிஷியோனுக்கு விசேஷித்த க்ஷேமகாலம் தொடங்கினதால், ஐயர்மாரும் மிஷியோன் உபகாரிகளும்: கர்த்தர் நம்மிடத்தில் பெரிதானவைகளைச் செய்தார் என்று சொல்லிக் களிகூர்ந்தார்கள். அப்பொழுது மாயூரத்திலிருந்த சபையின் ஆத்துமாக்கள் 25; பள்ளிக்கூடங்கள் 3; மாணாக்கர் 120.

அங்கே வெகு முயற்சியாய் வேலைசெய்து 1847-ம் வருஷம் டிசம்பர் மீ 12-ம் உ ஏழைப் பஞ்சம பெண்களுக்காக ஒரு ஆசரிப்புப் பாடசாலையை ஏற்படுத்தி நடத்தி வந்த ஒக்ஸ் ஐயர் சபையில் உண்டான ஜாதி வித்தியாச கலகத்தின் நிமித்தமும், அவ்விஷயத்தில் லேய்ப்சிக் மிஷியோன் சங்கத்தாரின் கோட்பாடுகளுக்கு ஒத்துவரா மனமற்றிருந்ததாலும் இந்த மிஷியோனின் சம்பந்தத்தை விட்டுப் பிரிந்துபோகவே, 1859-ம் வருஷம் ஆகஸ்டு மீ 29-ம் உ முதல் மாயூர வட்டம் சுவார்ச்சையர் விசாரணைக்குள்ளாயிற்று. அவர் ஒப்புக்கொண்டிருந்த காலத்திலே 1290 கிறிஸ்தவர்கள் இருந்த அந்த வட்டத்தில் (சீர்காழி உட்பட) பத்து வருஷங்களுக்குள் 1765 கிறிஸ்தவர்கள் இருக்கத்தக்கதான ஆசீர்வாதம் உண்டாயிற்று. ஒக்ஸ் ஐயர்

Schwarz.

தொடங்கின கோயில் கட்டடம் சுவார்ச்சையரால் முற்று பெற்று, 1864-ம் வருஷம் மே மீ 18-ம் உ இம்மானுவேல் தெய்வாலயம் என்ற பெயருள்ளதாகப் பிரதிஷ்டையாயிற்று. சுவார்ச்சையருக்கு வட்ட விஜாரணையில் விசேஷித்த உதவியாயிருந்தவர் ம. பாக்கியம் ஐயர். அக்காலத்தில் மாயூரம் வட்டத்தைச் சேர்ந்திருந்த சீர்காழி, ம. பாக்கியம் ஐயர் பிரயாசையால் பிரத்தியேகமான வட்டமாயிற்று.

கோர்தேஸ் ஐயர் சீமைக்குப் போனபின் சுவார்ச்சையர் ஆலோசனைச் சங்கத்தின் தலைவராகித் தரங்கைக்கு வந்ததால் 1871-ம் வருஷமுதல் மாயூரம் மயர் ஐயர் விஜாரணைக்குள்ளாயிற்று. இவர் ஐந்து வருஷம் அங்கே சுறுசுறுப்பும் கண்டிப்புமாய் வேலை பார்த்தபின் 1876-ம் வருஷம் எப்ரில் மீ

Mayr.

9-ம் உ அந்த வட்டத்தை வன்ஸ்கே ஐயருக்கு ஒப்புவித்து திருச்சிறுப்பள்ளிக்குப் போனார். அந்த வருஷம (சீர்காழியைச் சேர்த்து) மாயூர வட்டத்துக் கிறிஸ்தவர்கள் 1687. மயர், வன்ஸ்கே ஐயர்மாருக்கு உதவிகுருவாயிருந்தவர் பொன்னப்பன் ஐயர். இவர் சிலகாலம் கோயமுத்தூருக்கு மாற்றப்பட்டிருந்தும், திரும்பவும் மாயூர வட்டத்துக்குக் கொணரப்பட்டு, அதன் கிராமச் சபைகளில் விசேஷித்ததாகிய பனம்பள்ளியில் வைக்கப்பட்டார்.

1880-ம் வருஷம் மார்ச்சு மீ மத்தியில் வன்ஸ்கே ஐயர் காபிஸ் ஐயரிடம் மாயூர வட்டத்தை ஒப்புவித்துச் சீமைக்குப் போனார். அந்த வருஷக் கடைசியில் (சீர்காழியை விலக்கி) அந்த வட்டத்துச் சபையார் தொகை 983. காபிஸ் ஐயருக்கு உதவியாளாயிருந்தவர் தே. காலேப் பிரசங்கியார். காபிஸ் ஐயர் காலத்தில் பனம்பள்ளிக் கிராமத்தில் ஒரு வைத்திய சாலை ஏற்பட்டது. அதில் யோசுவா என்பவர் வைத்தியம் செய்து வந்தது ஏழைக் கிறிஸ்தவர்களுக்குப் பிரயோசனமாயிருந்ததுமன்றி, புறமதஸ்தருக்குள் சுவிசேஷ வசனம் பிரசங்கிப்பதற்குப் பெரிய உதவியாகவும் இருந்தது. இவரே குற்றாலத்திலும் ஒரு வைத்திய சாலையை ஏற்படுத்தினார். * அப்பொழுது மாயூர் வட்டத்திலிருந்த நமது கிறிஸ்தவர்கள் (சீர்காழி உள்பட) 3481.

---

* இந்த வைத்திய சாலைகள் நீடித்திருக்கவில்லை.



அதற்குமேல் கிங்கல் ஐயர் மாயூர வட்டத்தை ஒப்புக்
கொண்டார். அவருக்கு உதவியாக முந்து ஞா. தேவசகாயம்
ஐயரும், பிறகு தே. சாலொமையரும் வேலை பார்த்தார்கள். அந்த
வட்டத்தில் நல்ல வேலைசெய்து வந்த கிங்கல் ஐயர் 1891-ம்
வருஷம் மே மாசம் 27-ம் உ விஷபேதியால் இறந்துபோக,
அவரது மைத்துனராகிய மைனர் ஐயர் அந்த வட்டத்துக்
குருவாகி 1895-ம் வருஷமட்டும் அங்கே வேலை பார்த்தார்.
கொஞ்சக்காலம் பிரோளிக் ஐயர் விசாரணைக்குள்ளிருந்த அந்த
வட்டம் சேமே ஐயர் விசாரணைக்குள்ளாயிற்று. மைனர்,
பிரோளிக், சேமே ஐயர்மாருக்கு உதவியாயிருந்தவர் சாலொ
மோன் ஐயர். 1901-ம் வருஷமளவும் மாயூரத்தில் உழைத்த
சேமே ஐயரால் ஏராளமான ஜனங்கள் ஞானஸ்நானம் பெற்று
சபையில் சேர்ந்தார்கள். அவ்வருஷ முடிவில் அந்த வட்டத்
தில் இருந்த கிறிஸ்தவர்கள் 1416. இவருக்குப்பின் ஷேனீர்
ஐயரும் அவருக்குப்பின் மத்தேசல் ஐயரும் அந்த வட்டத்தின்
விசாரணை குருவானார்கள். மத்தேசையருக்கு உதவியாயிருப்
பவர் ஜே. தா. தாவீதையர். இப்பொழுது அந்த வட்டத்தி
லுள்ள கிறிஸ்தவர்கள் 1200. சபைப் பொக்கிஷக் கையிருப்பு
ரூபாய் 2680.

1901-ம் வருஷம் மார்ச்சு மாசம் 4-ம் உ கொத்தலைமேட்
டில் இயேசுவினாலயப் பிரதிஷ்டையும், அதே வருஷம் செப்
டெம்பர் மாசம் 27-ம் உ பனம்பள்ளியில் உலகரட்சகர் கோ
யில் பிரதிஷ்டையும் நடந்தது.

பெரும்பாலும் பஞ்சமரான கிறிஸ்தவர்கள் வசிக்கும்
மாயூர வட்டத்திற்குள் மூன்று கிளைச்சேகரங்கள் உண்டு.
முந்தினது பனம்பள்ளி. இது சுதேச குருமார் தொகைக்
குறைவால் தற்சமயம் ஒரு உபதேசியார் விஜாரணையிலிருக்கி
றது. அந்தச் சேகரத்துச் சபையார்
705. இரண்டாவது மணல்மேடு.
Sub-stations.
இது 1882 ஆம் ஜனுவரி மீ 15 உ யில்
சீர்காழி வட்டத்திலிருந்து பிரிந்து, ஒரு சுதேசகுருவின் ஸ்தா
னமாக்கப்பட்டது. அதற்கு அப்பொழுது நியமிக்கப்பட்ட
வர் பொன்னப்பன் ஐயர். அவருக்குப்பின் வே. தேவசகா
யம் ஐயர். இவர் 1892 ஆம் தரங்கைக்கு மாற்றப்பட்டது
முதல் 1905-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் வரையில் அதை
விசாரித்தவர் க. தேவசகாயம் ஐயர். அந்தவட்டத்துச் சபை
யார் தொகை 465. அது தற்சமயம் ஞா. முத்துசாமி ஐயர்

விசாரணையில் இருக்கிறது. மூன்றாவது இனைச் சேகரம் குற்றாலம். இதைச் சேர்ந்த முக்கியசபை தேரிழந்தூரில் உள்ளது. இதில் புதிதாய்க் கட்டப்பட்ட கோயில் 1897-ம் வருஷம் நவம்பர் மாதம் 29-ந் தேதி பிரதிஷ்டையாயிற்று. 1902-ம் வருஷமுதல் இங்கே ஒரு சுதேசகுரு வசிக்கும்படி ஏற்பாடு. தற்சமயம் அதன் சுதேசகுரு ஜெ. ஆரோக்கியம் ஐயர். இவருடைய விசாரணைக்குட்பட்ட ஆத்துமாக்கள் 431.

---

## 5. சீர்காழி.

### க. சீர்காழி சபை.

முற்றிலும் மாயூர வட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமமாக மாத்திரம் கணக்கிடப்பட்ட சீர்காழியில் ம. பாக்கியம் ஐயர் முயற்சியை ஆசீர்வதித்த கர்த்தருடைய கிருபையினாலே சபை பெருகினதால் 1868-ம் வருஷமுதல் அது தனிச்சேகரமாயிற்று. அதே வருஷத்தில் ஏப்ரில் மாசம் வாங்கப்பட்ட மனைக் கொல்லையில் சுதேச குருவுக்காக ஒரு வீடு கட்டினார்கள். அதில் 1871-ம் வருஷக்கடைசியிலே பாக்கியம் ஐயர் குடியேறினார். அந்தவருஷம் அடித்த புசலிலே தோட்டம் துறவுகளுக்கும், கூரை வீடுகளுக்கும் வெகுசேதம். சேதப்பட்ட ஜெபவீட்டிற்குப் பதிலாக பாக்கியம் ஐயர் ஒரு கற்கட்டடம் கட்டினார். அது 1875-ம் வருஷம் டிசம்பர் மாசம் 15 தேதி பிரதிஷ்டையாயிற்று. 1881-ம் வருஷம் சீர்காழி வட்டம் இரண்டு சேகரங்களாய்ப் பிரிக்கப்படத் தக்கதான பெருக்கமடைந்தது. 1885-ம் வருஷம் மார்ச்சு மாசம் 25-தேதி சீர்காழியில் ஒருபெரிய கோயிலுக்கு அஸ்திவாரம் போடப்பட்டது. இது 1887-ம் வருஷம் ஜூலை மாசம் 28-ல் பிரதிஷ்டையாகி, சீகன்பால்க் ஜூபிலி தெய்வாலயம் எனப் பெயர் பெற்றது. இது காபிஸ் ஐயர் முயற்சியால் ஆரம்பமாகி, விக்கல், தேனர்பெர்க் ஐயர்மாரால் தொடர்ந்து நடத்தி முற்றுப் பெற்றது.

Shiyali.

Z. Jubilee church.

இந்தப் புதுக்கோயில் பிரதிஷ்டையாகிற காலத்தில் பள்ளிக்கூடவிஷயமாக ஒரு புதுமுயற்சி செய்யப்பட்டது. ஏற்



அவ்வூரில் ஏற்பட்டிருந்த பென்விண்டன் ஸ்கூல் என்ற பாடசாலையை பாக்கியம் ஐயர் தமது மேல்விசாரணையில் ஏற்றுக்கொண்டார். இதுவே பின்னாலே சென்ட்ரல் பாடசாலையைச் சீர்காழி கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு ஆதாரமாயிற்று. 1896-ம் வருஷம் தரங்கை சென்ட்ரல் ஸ்கூலை சீர்காழிக்கு மாற்றினதை முன்னிட்டு அந்த வட்டத்திற்கு ஒரு ஐரோப்பிய மிஷியோனரியை நியமித்தார்கள். முதல் முதல் நியமிக்கப்பட்டவர் சாந்தகிரீன் ஐயர். அவர் சீமைக்குப் போயிருந்த காலத்தில் புருன்ஸ்திரான்ட் ஐயர் வேலைபார்த்தார். 1900-ம் வருஷம் உண்டான பஞ்சத்தில் வெகுபேர் ஞானஸ்நானம் பெற்றும், மிச்சமானவர்கள் மருளவிழுந்தார்கள். மறுபடியும் சாந்தகிரீன் ஐயர் சீர்காழி வட்ட குருவாயிருந்து, ஈசாக்கையர் உதவியுடன் வேலை பார்த்து, 1902-ம் வருஷம் மதுரைக்கு மாற்றப்பட்டார். குரோசே ஐயர் சீர்காழிச் சபையைச் சிலகாலம் விசாரித்தார். தற்சமயம், சீர்காழிவட்ட குரு ஹைக்மன் ஐயர்; அவருக்கு உதவி குரு தி. யோசேப்பையர்.

ஹைக்மன் ஐயர் விசாரணையில் திருப்புன்கூரிலே ஒரு கோயில் கட்டப்பட்டு, 1901-ம் வருஷம் அக்டோபர் மாசம் 31-ம் தேதி பிரதிஷ்டையாயிற்று. திருப்புன்கூர் சேகரத்துச் சபையார் தொகை 576. இவர்களையன்றி சீர்காழி வட்டத்திலுள்ள கிறிஸ்தவர்கள் 425. மாயூர வட்டத்தைப்போலவே, இந்த வட்டத்திலும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் பஞ்சமர். சபைப் பொக்கிஷக் கையிருப்பு ரூபாய் 2225.

Tirupungur.

---

### உ. சீர்காழி சென்ட்ரல் ஸ்கூல்.

சீகன்பால்கு கிரேஸ்டர் 'கந்தவனம்' என்று அவர் காலத்தில் பெயர்வழங்கின இடத்தில் தமக்கு ஒரு வாசஸ்தலம் ஸ்தாபித்திருந்தார். இந்த வீடு தற்காலம் தரங்கை செமினேரி பாடசாலை கம்பவுண்டுக்குள் இருக்கிறது. இந்தவிடத்தில் அவர் ஒரு தமிழ்ப் பாடசாலையை ஏற்படுத்தி நடத்திவந்தார். இந்த தமிழ்ப் பாடசாலை 1716-ம் வருஷம் மிஷியோன் ஊழியர்களைத் தயார்செய்யும் பொருட்டு ஏற்பட்ட செமினேரியோடு

Central school

சேர்க்கப்பட்டன. இந்தப் பாடசாலை பிரெசிர், வால்தர் பூர்வ மிஷியோனரிமார்கள் காலத்தில் மிகவும் சிறப்பாக தமிழ் கவிசேவ சபையின் முதல் நாட்டையானவர், டேனிஷ் கவர்ன்மெந்தில் அவிபாஷிகராய காவியேல்பி சீரை, சுவிசேட கவிராய வேதநாயக சாஸ்திரியார், யேசுதாசு அன்னாயியார் முதலிய அக்காலத்தில் சிறந்த மனிதர்களை நன்கு போதித்துக் கீர்த்தியடைந்தது. தமிழ் வாலிபர்களைப் படிப்பித்து ஆளாக்கும் பொருட்டு இந்த நாட்டில் ஏற்பட்ட எந்தப் புரொட்டெஸ்தாந்தப் பள்ளிக்கூடங்களிலும் இதுவே அதிபூர்வமானது.'

இந்தப் பாடசாலையில் தமிழ் அறிவு செம்மையாய்ப் புகட்டப்பட்டதுமன்றி முத்துக் கோத்ததுபோல் கண்ணைப் பகட்டத்தக்க திருந்திய கையெழுத்தும் பயிற்றப்பட்டது. சென்ற நூற்றாண்டின் கடைசியில் டாக்டர் யோன் ஐயர் இந்தத் தமிழ்ப்பாடசாலையுள் இங்கிலீஷ் படிப்பை முதல்வரவிட்டார். இவர் இந்த ஆங்கிலோ தமிழ்ப்பாடசாலையைத் திருத்திச் சிறப்பிக்க அரியமுயற்சிகள் செய்தார். அவ்வாறு சிறந்த அந்த ஆங்கிலோ தமிழ்ப் பாடசாலைதான் இக்காலத்துச் சென்றிரல் பாடசாலை முளைத்துக் கிளம்புவதற்கு வித்தாயிருந்தது. 1802-ம் வருஷம் தரங்கைக்கு வந்திருந்த சரபோஜி மன்னவன் யோன் ஐயர் பாடசாலையைக் கண்டு வியந்ததுமல்லாமல் அவருடன் இரண்டுமணி நேரகாலம் பிரீதிகரமான சம்பாஷணைசெய்து களித்ததாகவும் தெரியவருகிறது. ஆயினும், அக்காலத்திலும் 19-ம் நூற்றாண்டின் முற்பாதியிலும் பாடசாலைகளின் விர்த்தி மிகத் தாழ்ந்த தரத்திலிருந்தது என்பது மறக்கப்படாது. சென்ற நூற்றாண்டின் பிற்பாதியில் லேப்சிக் இத்தரண் மிஷியோனால் மேற்படி பூர்வபாடசாலை கைதூக்கப்பட்டு, ஆதரிக்கப்பட்டபின்பே அது நாளொருவண்ணம் அதி சீக்கிரத்தில் நல்ல விர்த்தியடையத் துவக்கி, தற்காலத்திலுள்ளபடி மேன்மையடைந்தது. இந்தச் சங்கத்தின் முந்தின மிஷியோனரியாகிய வேலியர் கோர்தேஸ் ஐயர் 1842-ம் வருஷம் பிறையாற்றில் ஏற்படுத்தின செமினரி 1850-ம் வருஷம் தரங்கையிலிருந்த மேற்படி ஆங்கிலோ தமிழ்ப்பாடசாலையோடு சேர்க்கப்பட்டு, அங்கே நல்லமாதிரியாய்த் தேர்ந்திருந்தது. 1856-ம் வருஷம் இந்த ஆங்கிலோ தமிழ்ப்பாடசாலை சர்க்கார் உபகாரம் பெறும்பொருட்டு சர்க்கார் விசாரணைக்கு ஒப்புவிக்கப்பட்டது. இந்நிலைமையில் 1858-ம் வருஷம் அந்



தப் பாடசாலையை வி. ஸ்தேலின் ஐயர் ஒப்புக்கொண்டு நடத்தினார். கல்வியை அபிவிர்த்தி செய்வதிலும் பாடசாலையின் தரத்தைத் திருத்தி உயர்த்துவதிலும் இந்த நிபுணன் பெருஞ்சாமார்த்தியங் காட்டியுழைத்தார். அவருக்குப்பின் அந்தப்பாடசாலையை நடத்தும் பொருட்டு வந்த ஹைப்பர் ஐயர் 1864-ம் வருஷம் முதல் அவரைப்போலவே ஊக்கமும் புத்தி நுட்பமுடையவருமாயிருந்து இந்தப் பாடசாலையை மேலும் மேலும் திருத்தி, 1867-ம் வருஷம் மெற்றிக்யுலேஷன் பரீட்சைக்கு இரண்டுபெயரை அனுப்பினார். அவ்விருவரும் பரீட்சையில் தேறினது இந்தப் பள்ளிக்கூடத்துக்குக் கிடைத்த முதல் கீர்த்தாப்பு. நாளதுதேதிவரையில் மேற்படி சென்றிரல் பாடசாலை நூற்றுக்கதிகமான வாலிபர்களை மெட்ரிக்யுலேஷன் பரீட்சையில் தேற்றியிருக்கிறது. அவர்களில் அநேகர் கனகசபை வாலிபர்கள். 1883-ம் வருஷம் முதல் 1888-ம் வருஷமட்டும் மேற்படி பாடசாலை இரண்டாந்தரக் காலேஜாக உயர்த்தப்பட்டு சென்னைச் சர்வகலாசாலை F. A. பரீட்சைக்கு 7 பெயரை அனுப்பித் தேற்றிவிட்டது. அதன் பின் மாணாக்கர் குறைவினால் காலேஜ் வகுப்புகள் மூடவிடப்பட்டன. பாடசாலை நன்னெறிகளையும் சிறந்த ஒழுங்குகளையும் வழுவாது கடைப்பிடித்து நடக்குந் திறமையுள்ள வித்தியர்ஹுஸலரான ஹைப்பர் ஐயர் 1890-ம் வருஷம் பரம இளைப்பாறுதலுள் பிரவேசித்தபின்பு, பல ஐயர்மார் அவர் கிழித்த கோட்டிலே சுற்றுத்தாழ இன்று இந்தப் பள்ளிக்கூடத்தை நடத்திவந்திருக்கிறார்கள். இதன் தலைமை உபாத்திமார்களில் முக்கியமானவர்கள் (Charles Hensman என்ற) சம்புப்பிள்ளை, அ. பாக்கியம்பிள்ளை, மா. தே. மாசிலாமணிபிள்ளை என்பவர்கள். இந்தப்பாடசாலை இருப்புப்பாதை சம்பந்தமான ஒரு இடத்தில் இருப்பது உசிதமெனப் பெரியோர் தீர்த்து அதைச் சீர்காழிக்குக் கொண்டுபோக உத்தரவுசெய்தார்கள்.

சீர்காழியில் புதிதாய்க் கட்டப்பட்ட சிறந்த பாடசாலைக் கட்டடம் 1896-ம் வருஷம் ஜூன் மாதம் 24 தேதி பிரதிஷ்டையாகவே, அன்றுமுதல் சென்றிரல் பாடசாலை சீர்காழி பென்னிங்டன் பாடசாலையோடு சேர்க்கப்பட்டு, வேலைநடந்தேறி வருகிறது. தற்சமயம் அதன் விசாரணைத்தலைவர் ரி. ஹாந்தமன் ஐயர்; தலைமை உபாத்தியாயர் ராமையர் 1905-ம் வருஷம் நொவம்பர் மாதம் இறந்துபோனார். அவரது இடத்திற்குத் தற்சமயம் நியமிக்கப்பட்டிருக்கிற சிவராவென்ற உபாத்

ரியாயரும் அவரைப்போல் பிராமணரே. இந்த நூற்றில் வருஷத்தில் மாணாக்கர் தொகை மூன்றுமுறைப் பெருகியிருக்கிறது இசந்துப் போட்டியாக இந்துக்கள் ஏற்படுத்தியிருக்கும் பாடசாலையால் மொத்த இடையூறிருக்கும், பள்ளிக்கூடம் விருத்தியடைந்தே வருகிறது.

---

## 6. கும்பகோணம்.*

தரங்கை மிஷியோன் ஆரம்பகாலத்தில் ஸ்ரீரோனிகாட்டையர் முதலியவர்களின் பிரயாசையால் இங்கே அநேகர் ஞானஸ்நானம் பெற்றார்கள். 1735-ம் வருஷம் 35 ஆத்துமாக்கள் உள்ள ஒரு சிறிய அஞ்ஞானசபை கும்பகோணத்திலும் இருந்தது. கி. பி. சுவார்த்சையர் காலத்தில் பெருவாய் விருத்தியடைந்த இச்சபையும் சுற்றுப்புறங்களில் இருந்த பெரிதும் சிறிதுமான சபைகளும் பிற்காலத்தில் சாவி. பிரபலிய சங்கத்தார் விசாரணைக்குள்ளாயின. பிறகு, இவ்வூரில் வேலை செய்யத் தொடங்கினவர்கள் லண்டன் மிஷியோன் சங்கத்தார். அச்சங்கத்தின ஐயர்மாருள் சேன்வாயன் என்ற பெயர்பெற்ற சிம்மோ ஐயர் இந்துக்களுக்குச் சுவிசேஷம் பிரசங்கிப்பதில் வைராக்கிய புருஷராய் விளங்கினார்.

* Kumbakonam.

1844-ம் வருஷம் சர்ச் மிஷியோன் சங்கத்தார் மாயூரத்தைவிட்டதுபோல 1852-ம் வருஷம் லண்டன் மிஷியோன் சங்கத்தார் கும்பகோணத்தை விட்டுவிட்டார்கள். அவர்கள் விசாரணைக்குள்ளிருந்த கிறிஸ்தவர்கள் நமது சபையில் சேர மனதாயிருந்தும், அச்சங்கத்தார் தங்கள் கட்டடங்களை ஜாதிவித்தியாசம் பார்க்கிற லுத்தரன் மிஷியோனுக்கு விற்கப்படாதென்றுசொல்லிவிட்டார்கள். லண்டன் மிஷியோன் சங்கத்தார் கைவிட்ட 71 கிறிஸ்தவர்களை 1852-ம் வருஷம் மார்ச்சு மாசம் ஒக்ஸ் ஐயர் லுத்தரன் சபையில் ஏற்றுக்கொண்டு, மாயூரம் வட்டத்தோடு சேர்த்து விசாரணைசெய்துவந்தார். அப்பொழுது கும்பகோணத்தில் உள்ள நமது சபைக்கு ஆலயமாய் இருந்தவர் சின்னகோட்டை சிரஸ்தேதார் கிறிஸ்தியான், சந்தப்ப பிள்ளை.

1856-ம் வருஷம் மார்ச்சு மாசம் 1-ம் டெ. கும்பகோணம் பிரத்தியேகமான சேகரமாக்கப்பட்டது. அப்பொழுது அங்



இருந்த சபையார் தொகை 87. மாயூரத்தில் வசித்த மைஷல் (Meischel) ஐயர் அதன் முதல் குருவானார். அந்தக்காலத்தில் ஆராதனை பேட்டைத்தெருவில் சிலகாலம் உபதேசியார் வீட்டிலும், நெடுநாளாக சாந்தப்ப பிள்ளை வீட்டிலும் நடந்தேறி வந்தது. கும்பகோணம் வட்டத்தைச் சேர்ந்த அம்மன் பேட்டையிலும் நெடுவாயிலும் 2 வீடுகள் ஆராதனை நடத்தி றார்கள். ஐரோப்பிய குருவுக்கான குடியிருப்புத் தலம் 1860-ம் வருஷம் வாங்கப்பட்டது. 1867-ம் வருஷம் அங்கே வன்ஸ்கே ஐயர் வாசஞ்செய்யத் தொடங்கினது முதல், கும்பகோணத்தில் சுவிசேஷ பிரசங்கம் முன்னிலும் அதிகமாய்த் தொனிக்க இடமுண்டாயிற்று. சற்றேறக்குறைய 11 வருஷகாலம் அவருடைய விசாரணையில் இருந்தபின், கும்பகோணம் சேரிங் ஐயரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. அப்பொழுது அவர் யேற்காட்டுச் சேகரத்தையும் சேர்த்துப் பார்த்தார். 1882-ம் வருஷம் அவர் இரங்கூனுக்கு மாற்றப்பட்டதால் கும்பகோண வட்டம் மறுபடியும் வன்ஸ்கே ஐயரின் விசாரணைக்குள்ளாகி 1887-ம் வருஷமட்டும் அவர் விசாரணையில் இருந்தது. அந்த வருஷக் கடைசியில் அந்த வட்டத்து கிறிஸ்தவர்கள் தொகை 381. பிறகு அந்த வட்டத்தை கேஷிங் ஐயர் ஒப்புக்கொண்டார். அவரது விசேஷித்த முயற்சியாலும் பிரயாசையாலும் அங்கே கட்டப்பட்ட கோயில் 1904-ம் வருஷம் ஜுன் மாசம் 15-ம் டெ. பிரதிஷ்டையாகி, திருச்சிலுவைக் கோயில் என்கிற பெயர் பெற்றது. இப்பொழுது அந்த வட்டத்தின் குருவாயிருப்பவர் பைத்தான் ஐயர். அந்த வட்டத்து கிறிஸ்தவர்கள் தொகை 324. சபைப் பொக்கிஷக் கையிருப்பு ரூபாய் 613.

---

## 7. நாகபட்டணம், திருவாரூர்.*

1859-ம் வருஷம் ஆரம்பித்த தென் இந்தியா இருப்புப்பாதை வேலையை முன்னிட்டு நாகபட்டணத்திற்கு மற்றசேகரங்களிலிருந்து லுத்தரன் கிறிஸ்தவர்கள் வந்து குடியேறினதால் அவ்விடத்தில் நமக்குச் சபையுண்டாயிற்று. அங்கே மிஷியோனரியர் முதல் முதல் நியமிக்கப்பட்டது 1862-ம் வருஷத்தில். ரெயில்வே கம்பவுண்டுக்குச் சமீபமான ஒரு குடி

* Negapatam.

யிருப்புத்தலத்தை 1863-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் வாங்கி அதில் ஆராதனை நடத்தப்பட்டுவந்தது. சிலகாலம் தரங்கையோடும், சிலகாலம் தஞ்சையோடும் சேர்ந்து விசாரிக்கப்பட்ட நாகைச்சபைக்கு, ஸ்தலகுருவாக முதல்முதல் நியமிக்கப்பட்டவர் தேடாஸென் ஐயர், அவர் அதை 1864-ம் வருஷம் 15-ம் தேதி ஒப்புக்கொண்டார். அவ்வருஷமுடிவில் அந்த வட்டத்துச்சபையார் தொகை 197. அவருக்குப்பின் சிலகாலம் ஸ்தேலின் ஐயர் அந்தச் சபையின் குருவாயிருந்தார். 1866-ம் வருஷம் ஜூலை மாதம் ஸ்தேலின் ஐயர் சீமைக்குப் போக, மயர் ஐயர் அந்தவட்டத்தை ஒப்புக்கொண்டார். அவர் வேலைபார்த்த ஐந்துவருஷ காலத்தில் சபைவிருத்திக்கான பலநல்ல ஏற்பாடுகள் நடந்ததுமன்றி, ஒரு புதுக்கோயில் கட்டுவதற்கும் ஒரு சபைக்கூட்டத்தில், ஒழுங்கு செய்யப்பட்டது. ஏனெனில் அப்பொழுது ஒரு வீட்டில் ஆராதனை நடந்துவந்தது. சபைவிருத்தி விஷயத்தில் ஆரம்பமுதல் உழைத்தவர் கனகப்பன் ஐயாப்பிள்ளை.

மயர் ஐயர் சீமைக்குப் போயிருக்கையில் புதுக்கோட்டையில் வசித்த கால் ஐயர் சிலகாலமும், வள்ஸ்கே ஐயர் சிலகாலமும் இச்சபையை விசாரித்து வந்தார்கள். மயர் ஐயர் திரும்பியபின் அவரது விசேஷித்த முயற்சியாலும், ஐயாப்பிள்ளையின் பிரயாசையாலும் சபைச்செலவில் ஒரு கோயில் கட்டப்பட்டு 1872-ம் வருஷம் ஏப்பிரில் மாசம் 3 தேதி பிரதிஷ்டையாகி, திரியேகதேவாலயமெனப் பெயர்பெற்றது. பிரதிஷ்டைகாலத்தில் அங்கே குருவாயிருந்தவர் பைசனர்தல் ஐயர். அவருக்குப்பின் ருபெர்ட் ஐயர் அங்கே வேலைபார்த்தார். ஆசீர்வாதம் பெர்க்ஸ்டெட் என்ற ஐயர்மார் விசாரணையிலும் இச்சபை சிலகாலம் இருந்தது. 1878-ம் வருஷமுதல் 1888-ம் வருஷமட்டும் நாகைச்சபைக்கு ஸ்தலகுருவாயிருந்தவர் ஜே. ஏ. தாலீசையர். அவர்காலத்தில் கீரைக்கொல்லைத் தெருவில் பள்ளிக்கூடம் கட்டப்பட்டது. நாகையில் முதலைச்சங்க ஏற்பாடானது 1881-ம் வருஷம். சிலகாலம் வெதப்பர் ஐயரும், சிலகாலம் பம்பரின் ஐயரும் நாகைக்கு மேல்விசாரணைக்காரரா யிருந்தார்கள். பம்பரின் ஐயர் முயற்சியால் கல்லறைத்தோட்டம் கிடைத்தது. 1889-ம் வருஷம் முதல் மூன்று வருஷகாலம் சாக்கையர் நாகபட்டணத்தின் சபைகுருவாயிருந்தார்.

Trinity church.



1892-ம் வருஷம் மோன் ஐயர் ஸ்தலகுருவாகி 3 வருஷம் வேலைபார்த்து நமது மிஷியோன் சம்பந்தத்தை விட்டதும் பிரேனிக் ஐயர் சபைகுருவானார். பின் 1894-ம் வருஷம் அவர் சபையை விஜாரித்துவந்த ஐந்துவருஷகாலத்தில் முன் பலமுறையும் நேரிட்ட அசமாதானம் நீங்கி, ஒருவித அமைதலுண்டாயிருந்தது. இவருக்குப்பின் கொஞ்சக்காலம் ஷெனர் ஐயரும், அவருக்குப்பிறகு யேகர் ஐயரும் நாகைச்சபையை விசாரித்தார்கள். தற்சமயம் அது எல்லைவன் ஐயர் விசாரணையில் இருக்கிறது. அந்த வட்டத்துச் சபையார் தொகை 195. சபைப்பொக்கிஷக் கையிருப்பு ரூபாய் 8558.

Tiruvalore.

நாகபட்டணத்துக்கடுத்த கிளைச்சேகரம் திருவாரூர். வெதப்பர் ஐயர் விஜாரணையில் 1880-ம் வருஷம் ஒரு ஜெபவீடுகட்ட ஒரு சிறு மனைக்கட்டு வாங்கப்பட்டது. 1889-ம் வருஷமுதல் 1905-ம் வருஷமுடிவுமட்டும் தாலீசையர் திருவாரூரில் வாசஞ்செய்து, அதையும், அதற்குச் சமீபத்திலுள்ள சபைகளை விசாரிப்பதுடன் அஞ்ஞானிகளுக்குள் சுவிசேஷவேலை நடத்துவதைத் தமது முக்கியவேலையாகச் செய்துவந்தார். அவருடைய பிரயாசையால் திருவாரூரில் சுவிசேஷ பிரசங்கத்திற்காக இரட்சகர் மடமென்ற ஒரு ஜெபவீடும் (1899) சுதேசகுருவின் குடியிருப்புத்தலமும் (1901) அவரால் ஸ்தாபிக்கப்பட்ட மூன்று பஞ்சவுதரிக்கப்பட்டது. அந்தவட்டத்தில் உண்டு. அதிலுள்ள கிறிஸ்தவர்கள் 122. சபைப் பொக்கிஷம் ரூபாய் 592. சம்பாடசாலைகள்

---

## 8. தஞ்சாவூர்.

Tanjore.

“இராஜகுரு” வெனப் பெயர்பெற்ற தகப்பன் கி. பி. சுவார்ச், கோலோவென்ற ஐயர்மாரால் சுவி. லூத்தரன் திருச்சபையின் போதனை பெற்றவர்களாகிய தஞ்சைச் சபையார் 1826-ம் வருஷம் அங்கிலிக்கானர் மிஷியோன் விசாரணைக்குட்பட்டபின் அவர்களில் பலருக்கு லூத்தரன் சபை நாட்டம் இன்னம் இருந்ததால், பூர்வ பிதாக்களைப்போல் போதிக்கும் சர்மானிய குருமார் புதிதாய்வந்த மிஷியோன் வேலை

செய்வதை அறிந்தபோது, இந்தப் புதிய மிஷியோனில் சேர வேண்டுமென்கிற அவா உதித்தது.

1849-ம் வருஷம் தஞ்சாவூர்ச் சபையாரில் பலர் மேற்கூறிய விருப்பமடங்கிய விண்ணப்பத்தோடு தரங்கைக்கு வந்தார்கள். அவர்கள் காரியாதிகளை நேரில் பார்த்துவரக் கிரௌமர் ஐயரும், வேறிரண்டு ஐயர்மாரும், கும்பகோணம், திருவையாறு, தஞ்சாவூர் என்ற இடங்களுக்குப்போய், விண்ணப்பக்காரர்களைக் கண்டுபேசி, அவர்கள் லுத்தரன் சபையின் விசுவாச அறிக்கைகளை ஒப்புக்கொண்டு, கோயில் பள்ளிக்கூடங்களின் ஆதரிப்புக்கு உதவிசெய்கிற பட்சத்தில் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார்கள். *

ஏற்கனவே மாயூரத்திலே லுத்தரன் சபையில் சேர்ந்து வேலை பார்த்துவந்த தஞ்சைத் திருச்செல்வ உபாத்தியார் கும்பகோணம் 1850-ம் வருஷம் தஞ்சாவூருக்குப் போனபோது, இராஜேந்திரம் உபாத்தியார் குடும்பத்தோடுசேர்ந்து, லுத்தரன் முறைமைப் பிரகாரம் தன் வீட்டில் ஆராதனை வைத்துவந்தார். 1851-ம் வருஷம் ஜுலாய் மாதம் 9 தேதி வொல்வையர் அங்கே ஆராதனை வைத்து இரண்டு பிள்ளைகளை ஞானஸ்நானம் பண்ணுவித்து, ஐந்துபேருக்கு நற்கருணை பரிமாறினார். ஆராதனைக்கு வந்தவர்கள் 36 கிறிஸ்தவர்கள். அக்டோபர் மாதம் 20 தேதி ஞானேந்திரம்பிள்ளையும், அவருடைய மருமகனார் (சிவாஜிராஜா உபாத்தியாராயிருந்த) சுவிசேஷமுத்துப்பிள்ளையும் விண்ணப்பமெழுதி லுத்தரன் சபையிற் சேரவேண்டுமென்கிற தங்கள் விருப்பத்தைத் தெரிவிக்க, 1852-ம் வருஷம் ஜனுவரி மாசம் யோ. மி. ஃ. சுவார்ச்சையர் தஞ்சாவூருக்குப்போய் ஒரு வாரம் ஜனங்களுக்கு உபதேசம்பண்ணி, 18 தேதி ஞாயிற்றுக்கிழமையில் சுவிசேஷமுத்துப்பிள்ளை வீட்டிலே தேவாராதனைசெய்து ஐம்பது பேருக்குக் கர்த்தருடைய இராப்போசனம் கொடுத்தார். அதே வருஷத்தில் வேறுபலரும் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் அவ்வருஷம் தஞ்சை வட்டத்துக் கிறிஸ்தவர்களின் தொகை 108. அவர்களை விசாரிக்கும் வேலை ஞானேந்திரம் உபதேசியாருக்குக் கொடுக்கப்பட்டது. ஆராதனை சுவிசேஷமுத்துப்பிள்ளை வீட்

* விண்ணப்பக்காரர்களில் முக்கியமானவர்கள்:- மேட்டுப்பட்டி அருணாசலம்பிள்ளை, திருச்செல்வம்பிள்ளை, இராஜேந்திரம்பிள்ளை, பாக்கியம் உபாத்தியார்.



டைச்சேர்ந்த அவருக்குச் சொந்தமான ஒரு கூரைக் கட்டடத்தில் நடந்துவந்தது. அதிலே சந்நியாசி உபாத்தியார் என்னப்பட்ட கிறிஸ்தியான் உபாத்தியார் பள்ளிக்கூடம் நடத்திவந்தார். 1852-ம் வருஷத்திலேயே பூதலூர் சபை சேர்ந்தது. வருஷா வருஷம் சபையினுக்குமக்கள் கூடுதலானதால் அந்த வட்டத்துக் கிறிஸ்தவர்களின் தொகை 1854-ம் வருஷம் 257 ம், 1856-ல் 443 ம் ஆயிற்று.

இவ்வாறு பெருகின சபையை விசாரிப்பதற்கு ஸ்தல குரு அப்பொழுது இருந்ததில்லை. 8 வருஷகாலமாய் சுவார்ச்சையர் ஒருவராய் மேற்கு வட்டங்கள் என்னப்பட்ட தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கோயமுத்தூர் என்ற வட்டங்களை அலைந்து திரிந்து விசாரணை செய்துவந்தார்.

குருவானவரின் குடியிருப்புக்காக 1858-ம் ளு நொவம்பர் மீ 1 உ ஒரு சிறுவீடு வாங்கப்பட்டது. அதில் முதல்முதல் குடியிருந்தவர் கிட்டேல் ஐயர். அவர் அவ்வருஷம் டிசம்பர் மாசமுதல் அடுத்தவருஷம் ஆகஸ்டு மாசம் வரையில் அதில் இருந்தார். மற்றொரு புதியவீடுகட்ட ஆரம்பித்தவுடனே அவர் திருச்சிராப்பள்ளிக்குப் போனார்.

1860-ம் ளு தஞ்சாவூர் தனிச்சேகரமாக்கப்பட்டு, அக்டர்லோனி ஐயர் விசாரணையில் வைக்கப்பட்டது. அந்த வருஷ ஆரம்பத்தில் இருந்த சபையார் தொகை 476. வெளிக்கிராமங்கள் 14. அந்தப் போதகர் ஆராதனை நடப்பதற்கும், பள்ளிக்கூடம் வைப்பதற்கும் மிஷியோன் கம்பவுண்டில் ஒரு கட்டடம் கட்டினார். அது 1860-ம் ளு ஆகஸ்டு மீ 30 தேதி பிரதிஷ்டையாயிற்று.

Ouchterlony
I. Stationarius.

பழைய மிஷியோனரியாகிய ஹொல்ட்ஸ்பெர்க் (Holtzberg) ஐயர் முதலியவர்கள் புதுப்பட்டியில் கட்டியிருந்த ஒரு ஜெபவீடு 1861-ம் வருஷத்திலும், பள்ளியக்கிரகாரத்தில் இருந்த ஒரு ஜெபவீடு அடுத்தவருஷத்திலும் வாங்கப்பட்டது அம்மாக்காடு, குடிக்காடு, விஷ்ணம்பேட்டை, திருப்பூந்துருத்தி, திருவையாறு, பட்டுக்கோட்டை என்ற இடங்களில் சபைகள் சேரச்சேர புதுமனைக்கட்டுகள் வாங்கி, புதிதாக ஜெபவீடுகள் பள்ளிக்கூடங்களைக் கட்டினார்கள்.

1869-ம் ௵ தஞ்சாவூரில் பெண்பாடசாலை கட்டின அதே வருஷம் ஜூன் ௴ 20-ம் ௳ புதிய பெரியகோவில் கட்டும்படி அஸ்திபாரம் போடப்பட்டது. அதைக் கட்டுவதில் அக்டர்லோனி ஐயர் வெகு பிரயாசப்பட்டு 1871-ம் ௵ முடித்தார். மேற்றாவானன் ஆலயம் என்னப்பட்ட அந்தக்கோயில் அவ்வருஷம் ஏப்ரில் ௴ 26-ம் ௳ வெகுசிறப்பாய் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

Church built.

அக்டர்லோனி ஐயர் (சீமைக்குப் போயிருந்த காலந் தவிர) 1880-ம் வருஷமளவும் தஞ்சாவூர்ச் சபையைப் பொறுமையும் பட்சமுமாய் விசாரித்துவந்தார். அந்த வருஷக் கடைசியில் இருந்த தஞ்சாவூர் வட்டக் கிறிஸ்தவர்கள் (அனேக் காடு உட்பட) 1030. அக்காலத்தில் தஞ்சைச் சபையில் உழைத்த சுதேச குருமாரில் நல்லதம்பி ஐயரும், ஞானேந்திரம் ஐயரும் விசேஷித்தவர்கள்.

அக்டர்லோனி ஐயருக்குப்பின் தஞ்சாவூர்ச் சபையை விசாரித்தவர்களில் அதிக காலமாய் அங்குழைத்தவர்கள் டப்பரின், பேவ்லர் என்ற ஐயர்மார். சபை பரம்பவும், திருந்தவும், பள்ளிக்கூடங்கள் விர்த்தியாகவும் இந்த ஐயர்மார் பட்ட பிரயாசை அதிகம். இவர்களுக்குப்பின் ஹொட்ஃரீசர், குளூகே, க்லோட்சே, ஸைகார்ட் முதலியவர்கள் அங்கே வேலை பார்த்தார்கள்.

தஞ்சாவூர் பெண் பாடசாலைக்காகவும் அதை மேல்விசாரணைசெய்யும் ஐரோப்பிய தியர்க்கோனி அம்மாள் குடியிருப்புக்கென்றும் பிரத்தியேகமான ஒரு கட்டடம் கட்டப்பட்டு 1900-ம் ௵ ஏப்ரில் ௴ 29-ம் ௳ பிரதிஷ்டையாயிற்று. *

தற்காலம் அங்கிருக்கிறவர் ஷைப்பா ஐயர். சபைகுரு தே. சாமிநாதையர். ஆத்துமாக்களின் தொகை 997. சபைப் பொக்கிஷ கையிருப்பு ரூபாய் 8380.

* தஞ்சாவூரில் அதிகமாய் வேலைபார்த்த சுதேச குருமார், மேற்சொன்ன இருவரையன்றி கிறிஸ்தியான், ஆசீர்வாதம், பொன்னப்பன் என்ற ஐயர்மார்களே.



## 9. திருச்சிறுப்பள்ளி, மேட்டுப்பட்டி.

லேப்சிக் மிசியோன் இத்தேசத்தில் வேலைசெய்ய வருமுன் திருச்சிறுப்பள்ளியில் இருந்த சுவிசேஷசபை லுத்தரன் குருவாகிய கி. பி. சுவார்ச்சையர் ஸ்தாபித்து, போலே ஐயர் (1778-1818) வளர்த்ததென அறிவோம். அச்சபையார் 1826-ம் வருஷமளவும் லுத்தரன் சபை முறைமைப்படி ஆராதனைசெய்து, லுத்தரன் ஞானப்பாட்டுகளைப் பாடி, லுத்தரன் ஞானோபதேசத்தைப் படித்து வந்தார்கள். "அவர்கள் லுத்தரன் ஞானப்பாட்டுகளைப் பாடும்மட்டும் லுத்தரன் ஆவி அவர்களைவிட்டு ஒழியாது" என்று ஒரு அங்கிலிக்கான குரு புலம்புகிறார். அத்தவட்டாரத்துச் சபைகளை ஒப்புக்கொண்ட அங்கிலிக்கானரான ஐயர்மார் "லுத்தரன் புளித்தமாவை" அவர்களிலிருந்து விலக்க முயன்று, ஆராதனை முறைமையை மாற்றி, பாவசங்கீர்த்தன முறைமையை ஒழித்து, தங்கள் சபை முறைமைப்படி ஆராதனைசெய்யவும் சபையில் தலைகாட்டிக்கொண்டிருந்த ஜாதிவித்தியாசத்தை நியாயப்பிரமாணக் கொடுமையால் ஒழிக்கவும் தொடங்கினபொழுது திருச்சிக் கிறிஸ்தவர்களில் அனேகர் தாய்ச்சபையாகிய லுத்தரன் சபையை நினைத்து அதன்பேரில் தவனமுள்ளவர்களாயிருந்தார்கள். லேப்சிக் மிசியோன ஐயர்மார் வருகையை அறிந்தவுடனே அவர்களில் சிலர் ஒரு உபதேசியார் மூலமாய்த் தங்கள் விருப்பத்தை 1850-ம் ௵ ஜனுவரி ௴ புதுக்கோட்டைக்கு வந்த வொல்ப் (Wolff) ஐயருக்குத் தெரிவித்தார்கள். அந்த ஐயர் அந்திய சபையாரைச் சேர்ப்பதில் சாவதானமாயிருக்கக் கருதி, அவர்கள் தங்கள் விருப்பத்தையும், அதற்கேதுவும் காரணங்களையும் தரங்கை கொன்பரன்ஸ் சங்கத்தாருக்கு எழுதித் தெரிவிக்கும்படி யோசனை சொன்னார். அவர்களும் அவ்வாறு செய்தார்கள்.

Trichinopoly.

தெய்வாதீனமாய் அக்காலத்தில் டிரெக்டர் கிரவுல் சாஸ்திரியார் (Dr. Graul) இத்தேசத்திற்கு வந்திருந்தார். 1850-ம் வருஷம் மே மாசம் 13-ம் தேதி கூடின ஐயர்மார் அவரையும் வைத்துக்கொண்டு, வேறு சபைகளிலிருந்து நமது சபையில் சேர மனதாயிருக்கும் கிறிஸ்தவர்களைக் குறித்துச் சில முக்கிய தீர்மானங்களைச் செய்தார்கள். சாதிவித்தியாசமுகாந்தரத்தினால் அல்ல, லுத்தரன் சபையின் போதகத்தின்

மேல் பிரியப்பட்டவர்களாய் வந்து, அதன் அறிக்கைகளுக்கும் முறைமைகளுக்கும் தங்களைக் கட்டுப்படுத்தும் பேர்களை மாத்திரம் சேர்க்கவேண்டு மென்பது அத்தீர்மானங்களின் சாரம்.


1850-ம் வருஷம் ஆகஸ்டு மாசம் வொல்ப்பையர் புதுக்கோட்டைக்கு மறுபடியும் போனபொழுது, முறையே இங்கிலீஷ் சபையாரான நாலு குடும்பத்தாரும், ரோமான் சபையாரான இரண்டு குடும்பத்தாரும் கையொப்பமிட்ட இரண்டு விண்ணப்பங்கள் அங்கே வந்திருந்தன. இது விஷயத்தை நேரில் விசாரித்துப் பார்க்கும்படி ஐயர் திருச்சிக்குப் போனார். தரங்கம்பாடி தஞ்சாவூர் கிறிஸ்தவர்களின் வம்சத்தாரான மூன்று குடும்பத்தலைவர்கள் தாங்கள் இங்கிலீஷ் சபையை விட்டுத் தங்கள் தாய்ச்சபையான லூத்தரன் சபைக்கு வருவதாகத் தெரிவித்தார்கள். ஜாதி வித்தியாசப்பேச்சு ஒன்றுமில்லை. அவர்கள் மறுபடியும் நிர்க்காலோசனை செய்து மறுபடியும் கொன்பரென்ஸ் கூட்டத்தாருக்கு விண்ணப்பம் எழுதும்படி அவர்களுக்கு ஐயர் புத்தி சொன்னார்.

அந்த விண்ணப்பம் வந்தபின் செப்டெம்பர் மீ 20-ம் உ கோர்தேஸ் ஐயர் பிரவுல் சாஸ்திரியாரோடே திருச்சிக்குப் போய், விண்ணப்பக்காரர்களை இங்கிலீஷ் குருவுக்கு முன்னிலையில் வைத்துக்கொண்டு பேசினபின் 23-ம் உ ஞாயிற்றுக்கிழமை அவர்களை லூத்தரன் சபையில் ஏற்றுக்கொண்டார். அப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் 14 பேர். இதுவே திருச்சியில் இப்பொழுது இருக்கும் லூத்தரன் சபையின் ஆரம்பம்.

J. M. N. Schwarz.

1851-ம் ஞு முதல் 1859-ம் வருஷமளவும் திருச்சிறுப்பள்ளிவட்டம் மற்ற மேற்குவட்டங்களோடேசேர்ந்து சுவார்ச்சையரால் விசாரிக்கப்பட்டது. அவர் 1854-ம் ஞு திருச்சியில் குடியேறினார். அவர் மேற்கு வட்டங்களை ஒழுங்குப்படுத்தி விர்த்திக்குக் கொண்டுவர வெகுவாய்ப் பிரயாசப்பட்டார். 1859-ம் வருஷக்கடைசியில் திருச்சிவட்டத்துக்கிறிஸ்தவர்களின்தொகை 590.

சுவார்ச்சையர் மாயூரத்துக்கு மாற்றப்பட்ட பின்னும் திருச்சிறுப்பள்ளி அவருடைய விசாரணையில் சிலகாலம் இருந்தது. அவருக்குப்பின் 1866-ம் வருஷமட்டி வரையில் ஐரோப்பியரில் செர்லின், வன்ஸ்கே என்ற ஐயர்மாரும், சுதே



H. C. CORDES — கோர்தேஸ் ஐயர்.

(97-ம் பக்கம் பார்க்க)

சிகளில் ஆ. ம. சாமுவேல், சாமிதாசன், ஞானேந்திரம் என்ற ஐயர்மாரும் திருச்சியில் வேலைசெய்தார்கள்.

1866-ம் வருஷம் ஜுன் மாசம் 8 தேதி முதல் அந்த வட்டம் ஹரந்துமன் ஐயர் விசாரணைக்குள்ளாயிற்று. அவர் கொள்ளட நதியை நடுவெல்லையாக வைத்து திருச்சி வட்டத்தை வடக்கு வட்டம் தெற்கு வட்டமென இரண்டு பிரிவுகளாய்ப் பிரித்தார். மேட்டுப்பட்டியை மத்தியஸ்தானமாயுடைய வடக்கு வட்டம் ஒரு சுதேச குருவின் விசாரணையிலிருந்தது. 1863-ம் வருஷ முதல் ஆ. ம. சாமுவேலையரும், 1865-ம் ௵ ஏப்ரில் ௴ முதல் சாமிதாசனையரும் மேட்டுப்பட்டியில் வசித்து வேலைபார்த்தார்கள். இவர்களுக்குப்பின் மேட்டுப்பட்டிக்குக் குருவாக வந்து தமது மரணநாள் மட்டும் அங்கிருந்து உழைத்தவர் கிறிஸ்தியானையர்.

திருச்சிறுப்பள்ளியைத் தலைமையாக உடைய தெற்கு வட்டம் ஐரோப்பிய குருவுக்குட்பட்டிருந்தது. ஐயர் வசித்தது வாடகை வீடு. ஆராதனைத்தலமும் அப்படியே. 1855-ம் வருஷம் சிந்தாமணிப்பிள்ளை வீட்டை ஒத்திக்கு வாங்கியும், 1865-ம் வருஷம் அதைக் கிரயத்துக்கு வாங்கியும் ஆராதனை வைத்து வந்தார்கள்.

சவெச்டர் பான்பெரி (Banbury) ஐயர் தயவால் 1869-ம் ௵ மைலன் சந்தைக்குச் சமீபத்தில் இப்பொழுது கோயில் கட்டியிருக்கும் இடம் கிடைத்தது. 1870-ம் வருஷம் டிசம்பர் ௴ 28 ௳ ஹரந்துமன் ஐயரால் கோயிலுக்கு அஸ்திபாரம் போடப்பட்டு வெகு முயற்சியோடு கட்டப்பட்டது.

1871-ம் ௵ பள்ளிக்கூடம் புதிதாய்க் கட்டப்பட்டபின் மாணாக்கர் தொகை பெருகிற்று. ஆசிரியப் பாடசாலை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. 1872-ம் ௵ அவரைப் பிறையாற்றுச் செமினேரிக்கு மாற்றினதால், கால் (O. Kahl) ஐயர் அதை ஒப்புக்கொண்டு வெகு சிரத்தையோடு வேலைபார்த்து வருகையில் 1874-ம் ௵ ஜுலை ௴ 28 ௳ மரித்து, கொத்தங் குறையுமாயிருந்த அந்தக் கோயிலுக்குள் அடக்கம் பண்ணப்பட்டார். பிறகு அங்கு வந்த ஷெப்பர், வில்சொம், முக்கியமாய் மயர் என்ற ஐயர்மார் அதிக சிரத்தையோடு கட்ட வேலையை நடத்தி, பலவிதத்திலும் பெருகி வந்த சபைக்குப் பிரயோசனமும் ஊருக்கு அலங்காரமுமான சீயோன் கோயிலை முடித்தார்கள். 1878-ம் ௵ ஏப்ரில் ௴ 11 ௳ அந்தக்

Zion church.

செய்வாலயத்தின் பிரதிஷ்டை சிறப்பாய் நிறைவேறிற்று. அப்பொழுது சபை குருவாயிருந்தவர் கெப்லர் ஐயர். கோவில் பிரதிஷ்டையான வருஷத்திலே திருச்சிறாப்பள்ளி வட்டத்தில் இருந்த ஆத்துமாக்கள் 840. உறையூரில் சேர்ந்த அகதிப் பெண்களுக்காகவும் ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடம் ஏற்பட்டாயிற்று.

1879-ம் வருஷமுதல் பெசன்பெட் ஐயர் திருச்சிறாப்பள்ளி வட்டத்துக்குக் குருவானார். மற்ற வட்டங்களிலிருந்து அநேகர் அங்கே குடியேறினதால் அங்கே சபை பெருகிற்று. 1886-ம் ௵ பெசன்பெட் ஐயர் மாயாவரப்பட்டிச் சீமைக்குப் போனபடியால் உடனேயே உடைந்தார்.

பிறகு கோர்ஸ் ஐயர் 1886-ம் ௵ ஏப்ரில் ௴ அந்த வட்டத்தை ஒப்புக்கொண்டார். சில காலம் கமனர் ஐயரும் அவருக்கு உதவியாயிருந்தார். சத்தியபட்டி கோவில் அவர் காலத்தில் கட்டப்பட்டது. அவருக்குப்பின் அவரது மருத்துவர் டச்செல்த் ஐயர் 1889-ம் வருஷமுதல் 1896-ம் வருஷமளவும் அந்த வட்டத்தில் வேலைசெய்தார். அம்மட்டில் வர்த்தக வீட்டில் குடியிருந்து வந்த ஐயமாருக்கு அவர் காலத்தில் ஒரு பிரசங்க பங்களா கட்டப்பட்டு 1893-ம் வருஷம் ஜனுவரி ௴ 22 ௳ பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1896-ம் ௵ மார்ச்சு ௴ சீசர் ஐயர் அந்த வட்டத்தை ஒப்புக்கொண்டு 5 மாசங்களாய் வேலைபார்த்து வந்தார். பிறகு பேஸ்லர் ஐயர் 1896-ம் ௵ ஆகஸ்டு மாசமுதல் விசாரணை ஒப்புக்கொண்டு 1898-ம் ௵ ஏப்ரில் ௴ 22 ௳ சென்னை வைத்திய சாலையில் மரித்தார். பேஸ்லர் ஐயருக்குப் பின் சேகுறின் ஐயர் அந்த வட்டத்தை விசாரித்து வந்தார். இவருக்குப் பின் மறுபடியும் 1901-ம் ௵ மார்ச்சு மாசமுதல் டச்செல்த் ஐயர் அந்த வட்ட விசாரணையை ஒப்புக்கொண்டு நடத்திவருகிறார்.

1902-ம் ௵ பெப்ருவரி ௴ 16 ௳ அநாதப் பெண்களுக்கும் மிஷன் விதவைகளுக்கும் அடைக்கல ஸ்தானமும் குடித்தன அப்பியாசக்கூடமுமாயிருக்கும்படிக்காக ஒரு கட்டடம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஒரு

Widows' Asylum. ஐரோப்பிய ஸ்திரீ அம்மாள் விசாரணையிலிருக்கிறது. இக்கட்டடம் மறைந்த ஸ்ரீ கெம்ப் (Kemp) அம்மா காட்டு மிஷியோனுக்கு எழுதிவைத்த மரணசாசன தனமெய்த்தட்டு. இப்பொழுது திருச்சிறாப்பள்ளித் தெற்கு வட்டத்துச் சபையார் தொகை 803. சபைப்பொக்கிஷக் கையிருப்பு ரூபாய் 7180.



மேட்டுப்பட்டியைத் தலைமையாயுடைய வடக்கு வட்டத்துக் கிறிஸ்தவர்கள் தொகை 483. சபைப் பொக்கிஷம் ரூபாய் 2360. கிறிஸ்தியானையர் பிரயாசையால் மேட்டுப்பட்டியில் ஒரு கோயில் கட்டப்பட்டது. மிகாயேல் கோயில் என்னப்பட்ட அந்த தெய்வாலயத்திற்கு 1883-ம் ௵ மே ௴ 23 ௳ பிரதிஷ்டை நடந்தது. மற்றக் கிராமச் சபைகளும் விர்த்தியானதால் சச்சம்பட்டியில் 1887-ம் ௵ மார்ச்சு மாசம் 21 ௳ ஒரு கோயிலுக்கு அஸ்திபாரம் போட்டு அடுத்த வருஷம் செப்டெம்பர் ௴ 5 ௳ கட்டடம் முடிந்து 5 தேதி பிரதிஷ்டையாயிற்று. அதற்கு இரட்சகர் கோயிலென்று பெயரிட்டார்கள். அந்தக் கிராமத்தில் ஞானஸ்நானம் பெற்ற செளராஷ்டிரரான செட்டிகளுக்காகக் குடியிருப்புத் தலம் ஏற்பட்டிருக்கிறது.

Moetupatty.

மறு வருஷம் அன்னமங்கலத்தில் ஒரு கோயிலுக்கு அஸ்திபாரம் போடப்பட்டது. அது 1891-ம் ௵ முடிந்து ஆகஸ்டு ௴ 26 ௳ பிரதிஷ்டையாகி, அபிஷேககர்த்தராலயமென்னும் பெயர் பெற்றது. இந்த வட்டத்துக் கிறிஸ்தவர்கள் அநேகமாய்ச் சேர்வைக்காரர்.

கிறிஸ்தியானையர் 1895-ம் வருஷம் ஆகஸ்டு ௴ 12 ௳ இறந்துபோனபின் தோ. தானியேல், ஆபிரகாம் என்ற சுதேச குருமார் மேட்டுப்பட்டியை விசாரித்தார்கள். இப்பொழுது கு. சாமுவேல் ஐயர் அங்கே சபை குருவாயிருக்கிறார்.

## 10. புதுக்கோட்டை.

தொண்டமான் ராஜாவின் ஆளுகைக்குட்பட்ட புதுக்கோட்டையில் முதல் முதல் மிஷியோன் வேலையை ஆரம்பித்தவர்கள் சென்னையில் ஏற்பட்ட "இந்திய மிஷியோன சங்கத்தார்." இவர்கள் வேலை துவக்கினது 1836-ம் ௵. அங்கே சுவிசேஷ வேலை செய்தவர்களில் விசேஷித்தவர் சாவீது பிள்ளை என்பவர். அங்கே ஆரம்பித்த மிஷியோன் வேலைக்கு இராசாவும் அனுகூலஞ்செய்து, முக்கியமான இரண்டு கிராமங்களில், கிராமம் ஒன்றுக்கு 2000 குழி சர்வமானியமாக விட்டுக் கொடுத்தார். வேலை நடத்தினவர்கள் முற்றிலும்

Pudukotah.

சுதேசிகளாயிருந்ததால், வேலை விழுந்து மிசியோன் சங்கமும் 1845-ம் வரு ஒழிந்துபோயிற்று, அவ்வருஷத்தில் அமெரிக்கன் மிசியோன் சங்கத்தார் அதை ஒப்புக்கொண்டு நடத்தினார்கள். அவர்களும் மதுரை ஜில்லாவில் மாத்திரம் தங்கள் ஊழியத்தை நடப்பிக்கக் கருதிப் புதுக்கோட்டை மிசியோனை லேப்சிக் மிசியோன் சங்கத்தாருக்கு 1848-ம் வருஷம் டிசம்பர் மீ 16 உ ஒப்புவித்தார்கள்.

ஆரம்பத்தில் அந்த வட்டம் ஓக்ஸ், ஷ்மைசர், வொல்பு என்ற ஐயர்மார் விசாரணையில் இருந்தது. பிறகு 1852-ம் வருஷமுதல் 1855-ம் வருஷமட்டும் அது சுவார்ச்சையர் பார்வையில் இருந்தது. அதற்குமேல் அக்டர்லோனி ஐயர் அதை ஒப்புக்கொண்டார். இவரே புதுக்கோட்டையைத் தமக்கு வாசஸ்தலமாக்கின முதல்குரு. அவர் அங்கே 1860-ம் வரு. வியாதிப்படும் மட்டும் ஒரு கூரை வீட்டில் குடியிருந்தார். அக்காலத்தில் புதுக்கோட்டை மேற்பாகத்திலும், முத்துக்காட்டிலும் புதுச்சபைகள் உண்டாயின. 1861-ம் வருஷமுதல் 1867-ம் வருஷமட்டும் அதை நேர்லிங் (Nerling) ஐயர் ஒப்புக்கொண்டு நடத்தினார். பிறகு மூன்று வருஷக்காலம் ஹேந்துமன் ஐயரும், அவருக்குப்பின் 1872-ம் வருஷமளவும் கால் (O. Kahl) ஐயரும் விசாரித்து வந்தார்கள். 1862-ம் வரு புதுக்கோட்டையில் கட்டத்தொடங்கின மிசியோன் பங்களா ஒரு பிராமணன் மோசத்தால் வெகுநாள் வேலைசெய்யப்படாமல் நின்றுபோயிருந்து, காலையர் முயற்சியால் கட்டிமுடிந்து, 1871-ம் வருஷம் ஜனுவரி மீ 18 உ பிரதிஷ்டையாயிற்று. 1872-ம் வருஷமுதல் 1876-ம் வருஷமட்டும் சொர்ன (Zorn) ஐயரும் அவருக்குப்பின் 7 வருஷக்காலம் பேஸ்லர் ஐயரும் அந்தச் சேகரத்தை நடத்திவந்தார்கள். 1883-ம் வருஷமுதல் 1900-ம் வருஷமட்டும் 6 ஐயர்மார் ஒருவர்பின் ஒருவராய் அங்கிருந்தார்கள்.

1900-ம் வருஷக்கடைசியில் பெக்சல் ஐயர் புதுக்கோட்டைக்குப்போய்க் குடியேறினார். மறுவருஷம் குன் மீ அது சுவேதிஷ் வட்டமாயிற்று. அங்கிருந்த இங்கிலீஷ் பள்ளிக்கூட சம்பந்தமாய் ஒரு ஆதரிப்புச்சாலை 1903-ம் வரு) கட்டிமுடிந்தது. அந்த லோயர் செக்கண்டேரி இங்கிலீஷ் பாடசாலை ஹைஸ்கூலாக உயர்த்தப்பட்டு 1904-ம் வருப் ஹொய்மன் (Dr. Heumann) சாஸ்திரியார் விசாரணையில் வைக்கப்பட்டது. அதே வருஷத்தில் புதுக்கோட்டைக் கோயில் சற்றுப் பெரிதாக்கப்பட்டது. அடுத்த வருஷத்தில் ஒரு புதிய மிசியோன் பங்களா முடிவாயிற்று. 1906-ம் வரு ஜனுவரி மீ 6 தேதியாகிய மகிமை விளங்குதலின் பண்டிகையன்று அங்கே ஒரு புதுக்கோயிலுக்கு அஸ்திபாரம் போடப்பட்டது. இதைத் தரங்கை மிசியோன் இரண்டாம் சதாப்த மகோத்சவ ஞாபகசின்னமாய்க் கட்டி சீயோன் கோயிலெனப் பெயரிடத் தீர்மானித்திருக்கிறார்கள்.



தற்சமயம் புதுக்கோட்டையில் உள்ளக் கிறிஸ்தவர்கள் 321. சபைப்பொக்கிஷக் கையிருப்பு ரூபாய் 1074.

---

## 11. அணைக்காடு.

Aneikadu.

பூர்வம் கோலோப்பையரால் ஸ்தாபிக்கப்பட்டு சுவி. பிர. சங்க மிசியோனுக்குட்பட்டிருந்த சபையின் அவயவங்களில் 56 பேரை தஞ்சை அக்டர்லோனி ஐயர் 1861-ம் வரு ஜூன் மாசம் 21 உ சுவி. லூத்தரன் சபையில் ஏற்றுக்கொண்டதால், அணைக்காட்டில் நமது மிசியோன் ஸ்தாபிக்கப்பட்டு, தஞ்சாவூர் சேகரத்தைச் சேர்ந்திருந்தது. ஆரம்பத்தில் வெகுகாலமாய் அச்சபை உபதேசிமார் விசாரணையில் இருந்துவந்ததால் அதிக விர்த்தியடையாதிருந்தது. 1861-ம் வருஷமுதல் 1874-ம் வருஷத்திற்குள் 54 பேர்போல் சபையை விட்டுப் போனார்கள். பிறகு சவெல்டையர் முயற்சியால் அநேகர் சேருவதற்கு இடமாயிற்று.

அதற்கு முதல் முதல் கஸ்பாவில் வாசஞ்செய்யும் சபை குருவாக நியமிக்கப்பட்டவர் க. தேவசகாயம் ஐயர். அவர் 1879-ம் வருஷமுதல் 1883-ம் வருஷமளவும் அங்கே வேலை பார்த்தார். அவருக்குப்பின் அந்தச் சபைக்குக் குருவாக வந்த முதல் ஐரோப்பியர் கேஷிங் ஐயர்.

1901-ம் வரு மே மீ 23 தேதிமுதல் சுவேதிஷ் மிசியோன் சேகரங்களில் ஒன்றாகி புளும்ஸ்திராண்டையர் விசாரணைக்குட்பட்டது. இவருடைய பிரயாசையால் ஒரு அழகிய புதிய கோயில் அமைந்து, 1903-ம் வரு மார்ச்சு மீ 10 உ பிரதிஷ்டையாயிற்று.

அனைக்காட்டு வட்டத்து குருவானவர் வசிப்பதற்கான பங்களாவுக்கு 1905-ம் வரு ஜூலை மீ 3 உ அஸ்திபாரம் போடப்பட்டது. புதுக்கட்டடத்தின் கிரகப்பிரவேசம் 1906-ம் வருஷம் ஜனுவரி மீ 12 உ நடந்தது. அந்நாள்முதல் வட்டத்துக் குருவாகிய பிரிக்கோலம் ஐயர் அனைக்காட்டை விட்டுப் பட்டுக்கோட்டையில் வசிக்கிறார். அனைக்காட்டுச் சபை புதிய சபை ஒழுங்கை ஒப்புக்கொண்ட முதலாமைச் சங்கமுள்ள சபைகளில் ஒன்று. அதிலுள்ள ஆத்துமாக்களின் தொகை 266. சபைப்பொக்கிஷம் ரூ. 4706. ஏறக்குறைய யாவரும் ஒரே ஜாதியாரும், குடித்தனக்காரருமாயிருக்கிறார்கள்.

---

## 12. கோயமுத்தூர்.

சுவிசேஷ லூத்தரன் மிஷியோன் வேலை கோயமுத்தூரில் ஆரம்பித்தது 1856-ம் வரு. அவ்வாண்டில் சுவார்ச்சையர் செய்த ரிப்போர்ட்டின்படி வேறு சபைகளிலிருந்து நமது சபையில் சேர்ந்தவர்கள் 130, ஞானஸ்நான ஆயத்தக்காரர் 50. 1860-ம் வருஷமளவும் அந்தச் சேகரத்திற் குடியிருக்கும் குரு ஏற்படவில்லை. அந்த வருஷந்தான் நல்லதம்பி கர்ட்டையரை அங்கே அனுப்பினார்கள். அவ்வூரில் ஸ்தல குருவாயிருந்த முதல் ஐரோப்பிய குரு ஷான்ஸ் (Schanz) ஐயர் (1863). 1865-ம் வரு நமது மிஷியோனில் சேர்ந்த ஹொமே ஐயர் மறுவருஷத்தில் கோயமுத்தூர் வட்டத்துக்கு குருவானார். 1863-ம் வரு அங்கே வாங்கியிருந்த தோட்டத்தில் 1867-ம் வரு ஒரு பள்ளிக்கூடம் கட்டப்பட்டு, கோயிலாகவும் உபயோகிக்கப்பட்டு வந்தது. 1868-ம் வரு ஐயர் வீடு கட்டப்பட்டது. பிறகு சுண்டக் கோயமுத்தூர் என்ற கிராமத்தில் வெகுபேர் ஞானஸ்நானம் பெற்றதால் 1869-ம் வரு அங்கேயும் ஒரு கோயில் கட்டப்பட்டது. ஆகிலும், அவர்கள் பிற்காலத்தில் மருளவிழுந்தார்கள். வெள்ளளூர், பொள்ளாச்சி, விருத்லேப்பட்டி, முதலிய கிராமங்களிலும் சிறு ஜெபவீடுகளும் பள்ளிக்கூடங்களும் உண்டாயின. திருப்பூரிலும் அதற்குச் சமீபமான அனுப்பர்பாளையம் என்ற கிராமத்திலும்

Coimbatore.

Yercaud.



அநேக அஞ்ஞானிகள் ஞானஸ்நானம் பெற்றார்கள். 1862-ம் வருஷமுதல் ஐயர்மாருக்கு வெயில்கால சுகஸ்தலமாயேற்பட்ட ஏற்காடு என்ற மலைச்சேகரம், ஏற்கனவே ஹொமே ஐயருடைய வாழ்விஸ்தலமாயிருந்ததால், அது கோயமுத்தூர் வட்டத்தோடு சேர்த்து விசாரிக்கப்பட்டது. அங்கே 1867-ம் வருஷம் ஒரு கோயில் கட்டப்பட்டது.

1872-ம் வருஷக்கடைசியில் ஹொமே ஐயர் வியாதிப்பட்டுச் சுகுசார சகிதம் சீமைக்குப் போகையில கோயமுத்தூர் வட்டத்தை அக்டர்லோனி ஐயரிடம் ஒப்புவித்தார். அப்பொழுது சபையின் ஆத்துமாக்கள் 427. இவர் அதை சாமுதேரின் ஐயருக்கு ஒப்புவிக்க, அவர் விசாரணையில் அது 1881-ம் வரு சீமைக்குப் போம் அளவும் இருந்தது. 1880-ம் வருஷத் துவக்கத்தில் பொள்ளாச்சி ஜெபவீடு பிரதிஷ்டையாயிற்று.

அதே வருஷத்தில் கோயமுத்தூர் சபை புதிதாய் ஏற்பட்ட சபையொழுங்கை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்தது. இச்சபை யொழுங்கின்படி அந்தச் சேகரத்திற்கு முதற் சபை குருவாயேற்பட்டவர் ஆசீர்வாதம் ஐயர். 1883-ம் வரு அக்டோபர் மீ 5-ம் உ மரித்த இவருக்குப் பின் அங்கே வேலைசெய்த சபை குருக்களில் பெரியநாயகம் ஐயர் நெடுநாள் அங்கே உண்மையாயுழைத்தார். அவர் காலத்திலே ஹோர்பெர்க் ஐயர் மேல் விசாரணையில், 'கிறிஸ்துநாதர் ஆலயம்' என்ற அழகிய கோயில் கட்டி முடிந்து 1892-ம் வரு நொவம்பர் மீ 10-ம் உ பிரதிஷ்டை ஆயிற்று. இக்கட்டடச் செலவுக்காகச் சென்ற 11 ஆ ரூபாயில் சபையார் சற்றேறக்குறைய பாதியை உற்சாகமாய்ச் செலுத்தினார்கள். ஹோர்பெர்க் ஐயர் கட்டடவேலையில் உழைத்த உழைப்பினால் மிகுந்த வியாதிப்பட்டுச் சீமைக்குத் திரும்பினார். பெரியநாயகம் ஐயரும் பலவிதத்திலும் சங்கடமும் சஞ்சலமும் அடைந்து, வியாதியாகி, 1895-ம் வரு மார்ச்சு மீ 7-ம் உ இறந்துபோனார்.

Christ Church.

ஹோர்பெர்க ஐயருக்குப் பின் 1899-ம் வருஷமட்டும் பெங்சல் ஐயர் விசாரணை குருவும், பெரியநாயகம் ஐயருக்குப் பின் 1902-ம் வருஷமட்டும் இ. யோசேப்பு ஐயர் சபை குருவுமாக வேலைபார்த்தார்கள். பிறகு யோகான்சன், மத்தேஸ், ஹொப்மன் என்ற ஐயர்மார் ஒருவர்பின் ஒருவராய் கோயமுத்தூர் வட்டத்தை விசாரித்தார்கள். இப்பொழுது வெளி வட்டத்தில் அஞ்ஞானிகளுக்குள் அசைவுண்டாயிருப்பதால் அவர்க

ளுக்குள் அதிக வேலை நடக்கக் கருதி, அந்த வட்டத்தை இரண்டாய்ப் பிரித்து, கோயமுத்தூர் சேகரத்தை ஷாகார்ட் ஐயருக்கும், உடுமலைப்பேட்டைச் சேகரத்தைத் ஹொப்மன் ஐயருக்கும் ஒப்புவித்திருக்கிறார்கள். சுயபரிபாலன சபையாகிய கோயமுத்தூர் உள்ளூர்ச் சபைக்குக் குருவாயிருப்பவர் தேவப்பிரியம் ஐயர். கோயமுத்தூர் வட்ட முழுமையிலும் (உடுமலைப்பேட்டையுள்பட) இருக்கும் கிறிஸ்தவர்கள் தொகை 683. சபைப் பொக்கிஷம் ரூபாய் 14,458. (இதில் கோயமுத்தூர் கிறிஸ்தவர் சபைக்குரியது ரூபாய் 11,066.)

Udumalapet.

## 13. சென்னபட்டணம்.

ஷுல்ச்சே, பாலரீச, கேரிக்கே முதலிய லுத்தரன் ஐயர்மார்களால் சென்னையில் சேர்க்கப்பட்ட சபைகள் லுத்தரன் சபைகளாயிருந்ததால், தரங்கை முதலிய இடங்களிலிருந்து சென்னைக்கு ஜீவனார்த்த முகாந்திரமாய்ச் சென்ற கிறிஸ்தவர்கள் அங்கிருந்த சபையோடு சேர்ந்திருந்தார்கள். 1826-ம் வருஷ் சுவி. பிரபல்லிய சங்கத்தார் விசாரணைக்குட்பட்டும், அங்கே கடைசி ஹேஸ்லே மிஷியோனரியாகிய ரோட்லர் ஐயர் உயிரோடிருக்கும் மட்டும் எல்லாம் அமைதலாயிருந்தது. அவர் பொதுவான ஜெப புத்தகத்தை மொழிபெயர்த்து அதன்படி தேவாராதனை செய்யத் தொடங்கினாரேயன்றி, வேறு மாற்றங்கள் செய்யவில்லை. இதையே பொறுக்கமாட்டாதிருந்த சபையார் நடுவே, ரோட்லர் ஐயரின் மரணத்திற்குப்பின் (1836), ஒருபக்கம் நியாயப்பிரமாணப்போக்கில் காரியாதிகளைச் சேர்ப்பித்த வேண்டுமென்கிற அபிப்பிராயமுடையவர்களும், மறுபக்கம் அங்கிலேய அத்தியட்ச சபையின் போதகங்களையும் சடங்காசாரங்களையும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்கிற அபிப்பிராயமுடையவர்களும் புகுந்து நெருக்கவே, ஜாதி வித்தியாச விஷயத்தில் பழமையைப் பிடித்துக்கொண்டிருந்தவர்களும், போதக விஷயத்தில் பூர்வ லுத்தரன் ஐயர்மாரை அனுசரித்து நின்றவர்களும் மனவருத்தமடைந்து, 1846-ம் வருஷம் புரசைச் சுயாதீன தமிழ்ச்சபை யென்று பிரிந்து, சொந்த

Madras.



க்கு ஒரு செப்புத்தறை வாங்கி, அடைக்கலம் பிள்ளை என்பவரைத் தங்களுக்கு உபதேசியாராக நியமித்துக்கொண்டு, ஒரு வீட்டில் ஆராதனை செய்து வந்தார்கள். தொகையில் 400 பேராகிய இவர்கள் 2 வருஷகாலம் இப்படிச் செய்து வந்தார்கள். புதிய ஐயர்மாரின் கடுமை பொறுக்கமாட்டாத சிலர் பாப்புமதத்திலும், சிலர் ஒருத்துவ மார்க்கத்திலும், சிலர் அஞ்ஞானத்திலும் விழுந்தார்கள்.

Pursewaukam.

புரசை சுயாதீன தமிழ்ச் சபையைச் சேர்ந்தவர்கள் தங்கள் நடுவே வந்திருந்த டிரெக்தர் கிரௌல் சாஸ்திரியார் மூலமாய் 1847-ம் வருஷம் ஆகஸ்டு மீ 26-ம் உ தரங்கை லுத்தரன் மிஷியோன் கொன்பரன்ஸ் சங்கத்தாருக்குத் தங்கள் விஷயாதிகளை யெழுதி, தங்களைச் சேர்த்து ஆதரிக்க ஐயர்மாரை அனுப்புவிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். கொன்பரன்ஸ் சங்கத்தார் மெத்த சாவதானத்தோடு அவர்கள் சங்கதிகளையெல்லாம் விசாரித்து "ஏழு கேள்விகள்" மூலமாய் அவர்களிடம் வாக்குறுதி வாங்கினார்கள். அந்த ஏழு கேள்விகளுக்கு உத்தரவாக அவர்கள் கொடுத்த உறுதிமொழியின் சாரம்:

(1) அந்தச்சபை போதகத்திலும் நடக்கையிலும், லுத்தரன் திருச்சபை போதிக்கிறபடியே தேவ வசனத்துக்குத் தன்னை முற்றிலும் கீழ்ப்படுத்தவும்;

(2) ஒரு பஞ்சம உபதேசியின் தள்ளுதலையும் தங்களைப் பிரத்தியேகமான ஒரு சங்கமாக எண்ணுதலையும் பற்றிய முந்தின தீர்மானங்களை ரத்துசெய்யவும்,

(3) தெய்வாலயத்திலும், முக்கியமாய் திரு இராப்போஜனப் பந்தியிலும் ஜாதி வித்தியாசம் பாராதிருக்கவும்,

(4) தரங்கம்பாடி சங்கத்தார் தங்களால் கூடிய அளவு மாத்திரம் கிருபையெத்தனை பரிமாறுதலுக்கு ஏற்பாடு செய்வதை அங்கீகரிக்கவும்,

(5) கோவில் கட்டடம், கோவிலூழியர் சம்பளம் முதலிய விஷயங்களுக்குத் தேவையான செலவுக்காக ஒழுங்காய்க் காணிக்கை செலுத்தவும்,

(6) சங்கத்தார் குறிக்கிறபடி சுயாதீன காரியங்களில் செலுத்தும் காணிக்கைகளைக் கோயில் பொக்கிஷமாய்ச் சேர்க்கவும்,

(7) சபையின் ஏழைகளைத் தன் சுய செலவில் பராமரிக்கவும் சம்மதிக்கிறது என்பதே.

இவ்வுறுதிமொழியின் பேரிலே புரசபாக்கத்துச் சபையை அந்நரன் சபையில் சேர்த்துக் கொள்ளுகிறதென்று 1848-ம் ௵ செப்டெம்பர் ௴ சங்கத்தார் தீர்மானித்து, அக்டோபர் ௴ கிரெம்மர் ஐயரை அதற்குக் குருவாக நியமித்து அனுப்பினார்கள்.

Kremmer.

அந்த அருமைப் போதகர் அக்டோபர் ௴ 30-ம் ௳ தரங்கையை விட்டுப் புறப்பட்டு, நொவம்பர் ௴ 6-ம் ௳ பட்டணம் போய்ச் சேர்ந்தார்.

அவர் அந்தச் சபையை ஏற்றுக்கொண்டு, பத்துவருஷகாலம் மிகுந்த கஷ்டத்தோடு அதை நடத்திவந்தார். அவர் ஆரம்பத்தில் குடியிருந்தது சத்திரமாய்ச் சுதேசிகள் குடியிருக்கும் வீடு. அதிலேதான் ஆராதனையும் நடந்து வந்தது. பிறகு அதிக சௌகரியமான வீடு குடிக்கூலிக்குப் பிடிக்கப்பட்டது.

1856-ம் ௵ டிசம்பர் ௴ 6-ம் ௳ அடைக்கலநாதர் கோயிற் கட்டடம் முடிந்து பிரதிஷ்டையாயிற்று. இந்தக் கட்டட வேலையில் விசேஷித்த சிரத்தை யெடுத்துக்கொண்டவர்கள் சொரணம் பிள்ளையும், இராசப்பிள்ளையும். அதே தோட்டத்தில் 1858-ம் ௵ அக்டோபர் ௴ 31-ம் ௳ பள்ளிக்கூடக் கட்டடத்திற்குப் பிரதிஷ்டை நடந்தது. ஜெப வீரராகிய கிரெம்மர் ஐயர் ஊழியத்தால் உண்டான பயன் கொஞ்சமல்ல. அவர் தமது பயணங்களில் செய்த பிரசங்கங்களால் சதுரங்கப்பட்டணத்தில் 1854-ம் ௵ ஒரு சபை சேர்ந்தது.

Adeikalanather Church.

1858-ம் வருஷக் கடையிலே அவர் சென்னபட்டணத்து விசாரணையைக் கெல்பர் (Kelber) ஐயரிடம் ஒப்புவித்து விட்டுத் தரங்கைக்குப் போனார். கெல்பர் ஐயரோ சீக்கிரத்தில் வியாதிப்பட்டுச் சீமைக்குப் புறப்பட்டதால் சென்னைச் சபை சிலகாலம் சுவார்ச்சையர் பார்வையிலும் சிலகாலம் தேடர்லேன், மயர், ஷரென்ஸ் ஐயர்மார் பார்வையிலும் இருக்கவேண்டியதாயிற்று. தேடர்லேன் ஐயர் காலத்தில் (1862-ம் ௵ செப்டெம்பர் ௴ 19-ம் ௳) ஐயர்மார் குடியிருப்புக்கென்று ஒரு வீடு வாங்கப்பட்டது.

சீமைக்குப்போன கிரெம்மர் ஐயர் திரும்பி வந்தபின் 1865-ம் ௵ அவர் சென்னை அடைக்கலநாதர் சபையை மறுபடியும் ஒப்புக்கொண்டார். அதுமுதல் பத்துவருஷக்காலம் அங்கே உண்மையாயுழைத்துச் சபையில் மிகுந்த ஆசீர்வாதத்



தை உண்டுபண்ணினார். * பிறகு அவர் சீமைக்குப் போம்பொழுது சென்னை ஈலபெல்டையர் விசாரணைக்குள்ளாயிற்று. 1876-ம் 77-ம் வருஷப் பஞ்சத்தில் சென்னைக்கு மேற்கிலுள்ள வளர்புரம், நயப்பாக்கம், கூத்தப்பாக்கம் என்ற கிராமங்களிலிருந்து சீவனத்துக்காகப் பட்டணத்திற்கு வந்த ஜனங்கள் ஈலபெல்ட் ஐயரால் கிறிஸ்துமார்க்க உபதேசம் பெற்று, ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டார்கள். பஞ்சந் தெளிந்து அவர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பினதால் அவர்களே காஞ்சீபுரம் தாலுக்காவில் முதற் சபைகளானார்கள்.

ஈலபெல்டையர் 1878-ம் ௵ பொறையாற்றுச் செமினேரிக்கு மாற்றப்பட்டதால், சீமைக்குப் போய்த் திரும்பின ஹார்த்மன் ஐயர் சென்னைச் சபையை ஒப்புக்கொண்டார். அவருக்கு அங்கே பல இடையூறுகள் உண்டாகியும் 1887-ம் வருஷமட்டும் அங்கேயே வேலைசெய்தார். அவர் அங்கிருந்த காலத்தில் சென்னைச் சபையிலே போதுமான தொல்லைகள் இருந்ததால் வெளிக் கிராமங்களில் வேலைகள் அதிகமாய் நடக்கக் கூடாதிருந்தது. ஆயினும் அவர் முந்திச் சேர்ந்திருந்த சபைகளைச் சிதறவிடாமற் காத்து வந்தார். அவருக்கு உதவி குருவாக அபிரகாம் ஐயரும், பிறகு தே. தாவீதையரும் புரசபாக்கத்தில் வேலை பார்த்தார்கள். இராயபுரத்தில் விடிவெள்ளிக் கோயில் கட்டப்பட்டது அவர் காலத்தில் தான். அது 1882-ம் ௵ அக்டோபர் ௴ 15-ம் ௳ பிரதிஷ்டையாயிற்று.

* Rayapuram Morning Star church.

முன் அங்கிருந்த செல்வராய பிள்ளை கோயில் விஷயத்திலும் சபை விஷயத்திலும் சிரத்தையுள்ளவராயிருந்ததுபோல அவர் பிள்ளைகளும், விசேஷமாய்த் தம்பிப்பிள்ளை யென்பவரும் சிரத்தையுள்ளவராய் ஹார்த்மன் ஐயருக்குத் துணை நின்றார்கள்.

ஹார்த்மன் ஐயருக்குப் பின் சென்னைக்குவந்த பல ஐயர்மாருள் அங்கே அதிககாலம் வேலைசெய்து, செங்கற்பட்டு ஜில்லாவில் சுவிசேஷ பரம்புதலுக்கு விசேஷித்த கருவியாயிருந்தவர் 1887-ம் ௵ அந்த வட்டத்தை ஒப்புக்கொண்ட காபிலே ஐயர். புரசையில் ஐரோப்பிய குருமாருக்குத் துணையாய் நின்று வேலைசெய்த சுதேச குருமார் அனேகர். அவர்களுள் அதிக காலமாய் அங்குழைத்தவர் ஞா. தேவசகாயம் ஐயர். இவரே புதிய

---

* அவருக்கு உதவியாக கிரால், குருபெர்ட் என்ற ஐயர்மாரும் சிலகாலம் வேலைசெய்தார்கள்.

சபையொழுங்கின்படி புரசபாக்கத்துக்கு முதற் சபை குருவாகி விசாரித்து வருகிறார். (1889) காலதுவரையில் அச்சபையை விசாரித்து வருகிறார். சபைப் புரசபாக்கச் சேகரத்தின் சபையார் தொகை 962. சபைப் பொக்கிஷம் ரூபாய் 14,000.

இராயபுரம் விடிவெள்ளிக் கோயிற் சபை ஐரோப்பிய குருவின் விசாரணைக்குட்பட்ட சுதேச குருவினால் நடத்தப் படுகிறது. அதில் இப்பொழுது குருவாயிருப்பவர் ஈசாக்கை யர். சபையார் தொகை 247. சபைப் பொக்கிஷம் ரூ. 7611.

---

## 14. செங்கற்பட்டு ஜில்லா.

லைப்சிக் மிஷியோன் சம்பந்தமாய் செங்கற்பட்டு ஜில்லாவில் வேலை ஆரம்பித்தவர் கிரெம்மர் ஐயர். 1848-ம் வருஷம் அவர் சென்னை புரசபாக்கம் சபையின் குருவானபின் பிரயாணங்களில் அவர் செய்த பிரசங்கவேலையினால் சதுரங்கப்பட்டணத்தில் ஒரு சபையை 1854-ம் வருஷத்தில் சேர்த்தார். 1876-ம் 77-ம் வருஷ பஞ்சத்தில் காஞ்சீபுரத் தாலுக்கா நயப்பாக்கம், வளர்புரம், கூத்தப்பாக்கம் என்ற கிராமங்களிலிருந்து வந்த ஜனங்களைப் போதித்து ஞானஸ்நானங் கொடுத்து, சபையில் சேர்த்தவர் சலெபெல்டு ஐயர். இதற்குப் பின் பத்துவருஷகாலமாய்ப் புதிய சபைகள் அவ்வளவாய்ச் சேர்ந்ததில்லை. 1887-ம் வருஷம் புரசபாக்கம் சபையின் விஜாரணை குருவான காபிஸ் ஐயர் கிராமங்களில் செய்த சுவிசேட வேலையைக் கர்த்தர் ஆசீர்வதித்ததால் 1889-ம் 1890-ம் வருஷங்களில் அநேகர் ஞானஸ்நானம் பெற்றார்கள். இப்படியே சென்னைக்கு வெளியே சபைகள் பெருகத் துவக்கினதால், 1891-ம் வருஷம் செங்கற்பட்டு சேகரம் சென்னையினின்று பிரித்துப் பிரத்தியேகமாக்கப்பட்டு, அத்தோடு சதுரங்கபட்டணம், காஞ்சீபுரம், கூத்தப்பாக்கம் ஆகிய ஊர்களும் சேர்க்கப்பட்டன. அந்த வட்டத்தை விஜாரணை செய்த குருமார் வாடகை வீட்டில் குடியிருந்ததால், 1897-ம் வருஷம் மிஷியோனுக்குச் சொந்தமான பங்களா ஒன்று கட்டப்பட்டது. அதில் இப்பொழுது இருக்கிறவர் கனைஷேர் ஐயர்.

Chinglepuṭ.

சீமைக்குப் போயிருந்த காபிஸ் ஐயர் திரும்பி வந்து ஆலோசனைச் சங்கத் தலைவராகச் சிலகாலம் வேலை பார்த்தபின்



1893-ம் வருஷம் சென்னை வட்டத்தை மறுபடியும் ஒப்புக்கொண்டு ஸ்ரீபெரும்பூதூருக்குச் சமீபமான வளர்புரம், நயப்பாக்கம், மப்பேடு, கொண்டாஞ்சேரி என்ற புதுக்கிராமச் சபைகளை விஜாரணை செய்ததுமல்லாமல் விசேஷமாகத் திருவள்ளூர் தாலுக்காவில் சுவிசேஷ வேலை ஆரம்பித்தார்.

தேவதயவால் 1893-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் உ திருவள்ளூர் தாலுக்காவின் அஞ்ஞானிகளில் முதல் 42 பேருக்குப் பட்டரைப்பெரும்புதூரில் ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டது. அப்படியே 1894-ம் வருஷம் நவம்பர் மாதம் 18-ம் உ கன்னங்குளத்தில் அநேக அஞ்ஞானிகளுக்கும், 1895-ம் வருஷம் ஜூலை மாதம் 12-ம் உ பாண்டூர் அஞ்ஞானிகளில் பலருக்கும், கைவண்டூரில் அநேக அஞ்ஞானிகளுக்கும் ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டது. ஆக 1893-ம் வருஷமுதல் 1901-ம் வருஷமட்டும் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 3000-க்கு அதிகம். இந்தக் கிறிஸ்தவர்கள் வசித்த கிராமங்களை திருவள்ளூர், ஸ்ரீபெரும்புதூர், ஆர்க்கோணம், என்ற மூன்று சேகரங்களாகப் பிரித்து, மூன்று* சுதேச குருமாருடைய பார்வையில் வைத்து, திருவள்ளூர் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபமாய் ஐரோப்பிய குருவுக்கு வாசஸ்தானம் ஏற்படுத்தலாயிற்று. காபிஸ் ஐயர் 1901-ம் வருஷம் சீமைக்குப் போகும்போது திருவள்ளூர் வட்டத்தைத் தனிச் சேகரமாக்கி, கேப்ளர் ஐயர் விசாரணைக்கு ஒப்புக்கொடுத்தார். திருவள்ளூர் குருவின் வீடு 1901-ம் வருஷம் ஜூலை மாதம் 5-ம் உ கிரகப்பிரவேசமாகவே, கேப்ளர் ஐயர் அதில் வசிக்கலானார்.

Tiruvallore.

இதுவும் ஒரு குருவின் விசாரணைக்கு மிஞ்சின விஸ்தீரணமான சேகரமென்று மேலாவிவர்கள் கண்டு, பாண்டூர் வட்டத்தை ஏற்படுத்தி, அவ்வூரைத் திருவள்ளூரின் 14 கிராமங்களுக்கும் மத்திய ஸ்தலமாக்கினார்கள். சீமைக்குப்போன காபிஸ் ஐயர் 1903-ம் வருஷம் திரும்பி வந்து, பாண்டூர் மிஷன் பங்களாவை 1904-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 8-ம் உ பிரதிஷ்டை செய்து, அதுமுதல் இப்புதிய சேகரத்தை விஜாரணை செய்து வருகிறார்.

Pandur.

---

* தற்சமயம் திருவள்ளூரில் ஞா. தேவசகாயம் II ஐயரும், ஸ்ரீபெரும்பூதூரில் ப. அருளப்ப ஐயரும் வேலை பார்க்கிறார்கள்.

இந்த வட்டத்திலே மற்ற வட்டங்களுக்கு வித்தியாசமாய் நடந்திருக்கிற ஒரு முக்கிய விசேஷம் அங்குள்ள பஞ்சம கிறிஸ்தவர்கள் வேலைசெய்து முன்னுக்கு வரும்படிக்கான கருத்தோடு கனகவல்லிபுரம், பாண்டூர், கைவண்டூர், கன்னங்குளத்தை என்ற கிராமங்களில் மிசியோனுக்குப் பூஸ்திதிகள் ஏற்பட்டிருப்பதே. அவர்கள் சரீரப் பிழைப்புக்குள்ள குறைவுகளால் அவர்கள் ஆத்தும சுகத்துக்குப் பங்கம் வராது தடுப்பதே மேலோர் இவ்வழியில் புகுந்த நோக்கம். இதனால் ஒருவாறு நன்மை விளைந்தும், அதிக நன்மை விளையக் கூடியதாயிருந்தும், ஆரம்பமுதல் மழைக்குறைவினால் மிகுந்த சங்கடம் உண்டாகியிருக்கிறது. ஒரு கிருஷித் தொழிற்பாடசாலை கட்டடம் 1905-ம் வருஷம் ஆரம்பித்து, இந்த பூமியின் வருவாயில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இப்பாடசாலையினால் நமது ஏழைக் கிறிஸ்தவர்கள் பயனடைவார்களென்று நம்புகிறோம்.

Mission Farms.

பாண்டூர், திருவள்ளூர், ஸ்ரீபெரும்புதூர், ஆர்க்கோணம் [illegible]ப்பட்டுச் சேகரங்களிலுள்ள நமது கிறிஸ்தவர்களின் மொத்தத் தொகை 3471. அவர்கள் சேர்த்திருக்கிற சபைப் பொக்கிஷ மொத்தம் ரூபாய் 682.

---

## 15. ஈரோடு, எற்காடு.

ஈரோடு வட்டம் 1888-ம் வருஷம் ஏற்படுத்தப்பட்டு, முதல் முதல் ஹோர்பர்க் ஐயருக்கு ஒப்புவிக்கப்பட்டது. அப்போது ஈரோடு கஸ்பாவில் இருந்த சுவி. லுத்தரன் சபைக் குடும்பங்கள் 3. சுற்றுக்கிராமங்கள் உள்பட முழு வட்டத்திலும் இருந்த நமது கிறிஸ்தவர்களின் தொகை 149.

Erode.

ஆரம்பத்தில் ஐயர் குடியிருப்புக்காக ஒரு சிறு பங்களாவை வாங்கி அதிலே சங்கடத்துடன் தேவாராதனை நடத்தி வந்தார்கள். பிறகு பள்ளிக்கூடம் ஒன்றைக்கட்டி அதில் ஆராதனையும் நடக்கும்படி ஹோர்பர்க் ஐயர் ஏற்பாடு செய்தார்.

அவருக்குப்பின் அங்கே வந்தவர் ரீகர் ஐயர். அவர் விசாரணையிலிருந்த கிறிஸ்தவர்கள் 167.



ஈரோடுக்குச் சமீபமான பெரிய அக்கிரகாரம் என்ற கிராமத்தில் பெரிய சாந்தகிரீன் ஐயரால் ஞானஸ்நானம் பெற்ற ஒரு கிறிஸ்தவ சக்கிலியன் குடியிருந்தான். மிகுந்த வியாதியாயிருந்த அவனை ஹோர்பர்க் ஐயர் அடிக்கடி சந்தித்துவந்தார். அச்சமயங்களில் அவர் அங்கிருந்த மற்றச் சக்கிலியர்களுக்கும் சுவிசேஷம் பிரசங்கித்ததால், பிற்பட்டு அவர்களுக்குள் அசைவுண்டாகி அவர்களில் பலர் சேர ஏதுவாயிற்று.

ஹோர்பர்க், ரீகர் என்ற ஐயர்மாருக்குப்பின் பெக்சல், யோகான்சன், ஹைமர், ஷேபர், பவர், புளும்ஸ்திராண்டு என்ற ஐயர்மார் அந்த வட்டத்தை விசாரித்து வந்தார்கள். யோகான்சன் ஐயர் முயற்சியால் 1899-ம் வருஷம் ஒரு சௌகரியமான பங்களா கட்டி முடிந்ததுமன்றி ஊருக்குள் ஒரு புதிய பள்ளிக்கூடமும் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பொழுது அது (இளைய) ஹொமேருஸ் ஐயர் விசாரணையிலிருக்கிறது. தற்சமயம் ஈரோடு வட்டத்திலுள்ள கிறிஸ்தவர்கள் தொகை 175. பள்ளிக்கூடங்கள் 4: ஈரோடு கஸ்பாவில் இரண்டும், கிராமங்களில் இரண்டும். சபைப் பொக்கிஷம் ரூபாய் 1353. சிலகாலமாய் ஈரோடு வட்டத்தோடு ஏற்காடும் சேர்ந்திருக்கிறது. (கோயமுத்தூர் சரித்திரம் பார்க்க) அந்தச் சபையிலுள்ள ஆத்துமாக்கள் 91. சபைப் பொக்கிஷம் ரூபாய் 1579.

---

## 16. தென் ஆர்க்காடு ஜில்லா.

ஆதி ஐயர்மாரால் கடலூரில் சபை உண்டான வயணத்தை முந்தனவே தெரிவித்திருக்கிறோம். ஆயினும், கடலூரைச் சார்ந்த தூக்கணாம்பாக்க வாசியாகிய ஒரு விருத்தாப்பியன் 1851-ம் வருஷம் ஏப்ரில் மீ 27-ம் உ கிரெம்மர் ஐயரால் சென்னையில் ஞானஸ்நானம் பெற்றதே கடலூரில் லைப்சிக் மிசியோன் வேலையின் ஆரம்பமாம். அதுதொட்டு அதே கிராமத்தில் பலரும் ஞானஸ்நானம் பெற்றுச் சபையில் சேர்ந்தார்கள். அன்றியும் வெகுகாலத்துக்கு முன் தரங்கையிலிருந்து வந்து கடலூரிலும் புதுச்சேரியிலும் குடியேறியிருந்த சில கிறிஸ்தவர்கள் சென்னையிலிருந்து தரங்கம்பாடிக்குப் பயணமாய்ப் போகிற கிரெம்மர் ஐயரைக் கண்டு தங்கள் சங்கதியை

Cuddalore.

அவருக்குத் தெரிவித்து, தங்களைச் சபையில் ஏற்று விசாரணை செய்யும்படி கேட்டுக்கொள்ள, அவர் அப்படிப்பட்டவர்களை 1853, 54-ம் வருஷங்களில் ஏற்றுக்கொண்டார். ஆகவே 1856-ம் வருஷத்தில் சதுரங்கப்பட்டணம் உள்பட கூடலூர் வட்டத்தில் இருந்த கிறிஸ்தவர்கள் 170. 1854-ம்

Sadras.

வருஷமுதல் சதுரங்கப்பட்டணத்தில் வாசஞ்செய்து, அங்கிருக்கும் கோயிலைக் (1855) கட்டின பயர்லேன் ஐயர் 1857-ம் வருஷம் மார்ச்சு மீ முதல் கூடலூரிலேயே வசித்து, அந்த வட்டத்தை விசாரிக்கத் துவக்கினார். தேவதயவால் அவருடைய வேலை ஆசீர்வாதம் பெற்று, சபை பெருகிற்று. பள்ளிக்கூடமும் முன்னுக்கு வந்தது.

ஆயினும், ஆராதனைக்குத் தகுந்த இடமும், கல்லறைத் தோட்டமும் இல்லாமல் சங்கடப்பட்டார். பேரயிடமெல்லாம் அஞ்ஞானிகளும் ரோமானித்தாரும் இடையூறு செய்தார்கள். கடைசியாக, செம்மண்டலமென்னும் நகர்ப்புறத்தில் காடாய்க்கிடந்த ஒரு துண்டு நிலம் சர்க்கார் உதவியால் கிடைத்தது. ஐயர் காட்டையழித்து, தமது குடியிருப்புக்காக ஒரு கூரைவீட்டைக்கட்டி 1859-ம் வருஷம் குடியேறினார். அதேவருஷம் கர்த்தர் பிறந்த பண்டிகையில் கோயில் கட்டடத்தையும் பிரதிஷ்டைசெய்யக் கூடியதாயிற்று. அதன்பக்கத்தில் கல்லறைத்தோட்டமும் ஏற்படுத்தப்பட்டது.

Semmandalam.

பிற்பட்டு, கூரைவீடு மெத்தைவீடும், கோயில் மணிக்கூண்டு கோபுரமுள்ளதுமாகக் கர்த்தர் கிருபைசெய்தார். சபையில் அனேக அஞ்ஞானிகளும் ரோமானித்தாரும் சேர்ந்தார்கள். கூடலூருக்கு வெளியேயும் கர்த்தர் மிஷியோன் வேலையை வாய்க்கப்பண்ணினார். சிதம்பரத்துக்கடுத்த கிராமங்களில் அஞ்ஞானிகள் 40 பேரும் 50 பேருமாக வந்து உபதேசமடைந்து ஞானஸ்நானம் பெற்றார்கள். கூடலூர் வட்டத்துக் கோயில் தஸ்தாவேசுகளின்படி 1857-ம் வருஷமுதல் 1870-ம் வருஷமட்டும் ஞானஸ்நானம் பெற்ற அஞ்ஞானிகள் 700, ரோமான் சபையைவிட்டு வந்தவர்கள் 200.

சபை பெருகப்பெருக, வட்ட விசாரணை குருவின் வேலையும் அதிகரித்ததால், முந்திச் சதுரங்கப்பட்டணத்தைச் சென்னைவட்டத்தோடு சேர்த்து, பிறகு சிதம்பரத்தை பிரத்தியேகமான வட்டமாக்கினார்கள். இதனால் அப்பொழுது கூடலூர்



வட்டத்துக் கிறிஸ்தவர்களின் தொகை 200 ஆயிற்று. ஆயினும், 1872. 73. 77. 78-ம் வருஷங்களில் அனேக ஜனங்கள் ஞானஸ்நானம்பெற்றுச் சபையில் சேர்ந்தார்கள். பயர்லேன் ஐயருக்குப் பின்வந்த பல ஐயர்மார்களில் ஹெரே ஐயர் அநேக வருஷகாலம் (1876 - 86) வசித்து கிறிஸ்தவர்கள் நடுவிலும் அஞ்ஞானிகள் நடுவிலும் அதிகவேலை செய்தார். தென் ஆற்காடுக் கலெக்டர் கீட் துரை பண்ருட்டியில் தமது செலவில் மிஷியோன் வேலைக்காக கட்டியிருந்த பங்களா, கோயில், பள்ளிக்கூடம் முதலிய கட்டடங்களை 1886-ம் வருஷம் நமது மிஷியோனுக்கு வெகுமதியாகக் கொடுத்ததால், அதுமுதல் அங்கேயும் நமது ஐயர்மார் திருப்பணிசெய்து வருகிறார்கள். அது தற்சமயம் கூடலூர் வட்ட விசாரணை குருவுக்குட்பட்டிருக்கிறது. அங்கிருக்கும் நமது கிறிஸ்தவர்கள் 65. — தற்சமயம் கூடலூர்வட்டத்திலுள்ள கிறிஸ்தவர்கள் 454. சபைப் பொக்கிஷம் ரூபாய் 2699.

Panruti.

சிதம்பரம் பிரத்தியேகமானது 1866-ம் வருஷத்தில். அங்கு வருஷத்தோடொரு ஆராதனை நடத்தப்பட்டதும் ஒரு சிறுகோயில் கட்டி அதில் ஆராதனை நடத்தப்பட்டது. அந்தச் சேகரத்தை எல்லமில் நிலைக்குக் கொண்டுவருவதற்கு வொல்லையர் மிகவும் பிரயாசப்பட்டார். அவர் முந்தக் குடியிருந்தது ஒருசத்திரத்தில். பிறகு அவர் ஒரு மிஷியோன் பங்களாவைக் கட்டத்துவக்கி 1869-ம் வருஷம் அக்டோபர் மீ முடித்தார். மன்னார்குடி, தி. யோசேப்பையர் விசாரணையில் இருக்கும் விருத்தாசலம், தென்னூர், ஆண்டிமடம், இவைகள் சிதம்பர வட்டத்திலுள்ள கிராமங்களில் விசேஷித்தவை. வொல்லையர் 1884-ம் வருஷம் மரிக்கும்போது அந்த வட்டத்திலுள்ள கிறிஸ்தவர்களின் தொகை 893.

Chidambaram.

அவருக்குப்பின் அது பல ஐயர்மார் விசாரணையில் இருக்கிறது. இப்பொழுது அந்தவட்டத்துக்கு விசாரணைகுருவாயிருப்பவர் R. ஷோமேருஸ் ஐயர். இப்பொழுது சிதம்பரவட்டத்தில் மேற்கூறிய வெளிவட்டங்கள் உள்பட சபையார்தொகை 1419. சபைப் பொக்கிஷம் ரூபாய் 2329.

விழுப்புரமும் கூடலூர் வட்டத்திலிருந்து பிரிந்த புதுச்சேகரமே. ஷெப்பர் ஐயர் கூடலூர் வட்டத்தை விசாரித்து வருகிறகாலத்தில் விழுப்புரத்திலே அனேக ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, அவர்களைச் சபையிற் சேர்த்

தார். நாள்வட்டத்தில் பெருகிவந்த சபையைக் கூடலூரி லிருக்கிற ஐயர் விசாரிப்பது கஷ்டமாயிருந்ததால் அதைப் பிரத்தியேக வட்டமாக்குவது உசிதமென்று சீமைச்சங்கத்தார் 1874-ம் வருஷம் தீர்த்தார்கள். அப்பொழுது அங்கிருந்த கிறிஸ்தவர்கள் 230. திண்டி வனத்தை மத்திய ஸ்தானமாக்கி, பைச னர்த்ஸ் ஐயர் அதை விசாரிக்கிறதென்று ஏற்பாடு செய்தும், தகுந்த இடமில்லாமையால், அவர் கூடலூரில் இருந்தே விசாரிக்க வேண்டியதாயிருந்தது.

Villupuram.

1879-ம் வருஷம் புரூஜோட்டே ஐயர் விழுப்புரம் விசாரணை குருவாகி, 1894-ம் வருஷம் தாம் பென்ஷன் பெற்றுச் சீமைக்குப் போகிறவரையில் அங்கே வசித்தார். அவரால் ஞானஸ்நானம் பெற்றுச் சபையில் சேர்ந்தவர்கள் ஏராளம். 1875-ம் வருஷ முதல் 1894-ம் வருஷமட்டும் அந்த வட்டத்தில் ஞானஸ்நா னம் பெற்றவர்கள் 800 க்கு அதிகம். ஆயினும், இப்பொழுது அங்கிருக்கும் கிறிஸ்தவர்கள் 595. சபைப் பொக்கிஷம் ரூ. 413. புரூஜோட்டே ஐயருக்குப்பின் அந்த வட்டத்தை விசாரித்த மதேசன் ஐயர் புதுக் கிறிஸ்தவர்களிடத்திலும் மிஷியோனரி யரிடத்திலும் வெகு உண்மைத்தாழ்ச்சியைக் கண்டு விசனமுற் றார். இவர் காலத்தில் விழுப்புரத்திலே மிடில்ஸ்கூல் ஸ்தாபக மாயிற்று. அவருக்குப் பின் வெஸ்மேருஸ் ஐயர் அங்கே மாற் றப்பட்டார். அவரால் பாடசாலைக் கட்டடம் கட்டப்பட்டது. இப்பொழுது அந்த வட்டம் ரீகர் ஐயர் விசாரணையில் இருக் கிறது.

---

## 17. மதுரை.—விருதுப்பட்டி.

பூர்வம் தரங்கை மிஷியோன் ஆரோன் முதலிய சுதேச குருமாரும், கி. பி. சுவார்ச்சையர் முதலிய ஐரோப்பிய குரு மாரும் பாண்டிய நாட்டிற்குப் பலமுறை வந்து போனதும், அங்கே சுவி. லுத்தரன் கிறிஸ்தவர்கள் இருந்ததும் உண்டு. சிலகாலத்துக்குப் பின் யாழ்ப்பாணத்து அமெரிக்க மிஷி யோனரிகளும், S. P. G. ஐயர்மார்களும் மதுரைக்கு வந்து அங்கே வேலை தொடங்கினார்கள். 1855-ம் வருஷம் S. P. G. ஐயர் மார் மதுரையை விட்டு இராமநாதபுரம் சீமைக்குப் போய்விட

Madura.





வே, மதுரையில் அமெரிக்கன் மிஷியோன் மாத்திரமே வேலை செய்யும்படியாயிற்று.

இப்படியிருக்க, திருச்சிராப்பள்ளியில் நமது மிஷியோன் ஸ்தாபகமான பின், அங்கிருந்த நமது கிறிஸ்தவர்களில் பலர் மதுரைக்கு வந்து குடியேறினார்கள். அன்றியும், திண்டுக்கல் லுக்குச் சமீபமான பஞ்சம்பட்டியில் ஒரு சிறு சபை உண்டா யிருந்தது. இவர்களுடைய ஆத்தும விசாரணை திருச்சிவட் டத்துக் குருவுக்குட்பட்டேயிருந்தது. இக்காலத்தில் அமெ ரிக்கன் மிஷியோனில் அதிருப்தி யடைந்திருந்த நிலக்கோட் டைக் கிறிஸ்தவர்களில் சிலர் நமது சபையில் சேர விரும்பி, விண்ணப்பம் அனுப்பினார்கள். ஐயர்மார் சங்கத்தாருக்கு இருபுறத்து நியாயங்களையும் கேட்டறிந்தபின், ஹர்துமன் ஐயர் 1868-ம் வருஷம் ஜூலை மீ 16 ௳ மூன்று குடும்பங்களைச் சபையில் ஏற்றுக்கொண்டார். அதுமுதல் மதுரை திருச்சிவட்டத்துக் கிளைச் சேகரமாயெண்ணப்பட்டது. மது ரைக்கும் திருச்சிராப்பள்ளிக்கும் அக்காலத்தில் இருப்புப் பா தைச் சம்பந்தம் இல்லாதிருந்தும், ஹர்துமன் ஐயர் அடிக்கடி அவ்விடம் வந்து ஆத்தும விசாரணை செய்துபோனார். அப் பொழுதான் ஜெயிலில் இருந்த குரப்பகவுண்டர் என்ற ஒரு ஜமீன்தாருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். இந்த ஜமீன் தாரோ ஆரம்பத்தில் மெய்விசுவாசியாய்த் தோன்றியும் முடிவு பரியந்தம் கிறிஸ்துமார்க்கத்தில் நிலைத்திருக்கவில்லை. ஹர்துமன் ஐயர் வேலையில் அவருக்கு உதவியாளாயிருந்தவர் கிறிஸ்தியானையர்.

1872-ம் வருஷம் திருச்சியில் ஹர்துமன் ஐயரின் இடத்துக்கு வந்தவர் காலேயர். இந்த குருவோ 2 வருஷத்தில் இறந்துபோயும், அக்குறுகிய காலத்திலே நன்றாயுழைத்தார். காலேயருக்குப்பின் திருச்சிக்கு வந்த வில்கென்ஸ் ஐயர் மதுரை யில் குடியிருந்து அதைப் பிரத்தியேக சேகரமாய் விசாரிக்க உத்தரவு பெற்று, 1875-ம் வருஷ ஆரம்பத்தில் அவ்விடம் வந்து ஒரு வாடகை வீட்டில் குடியிருந்தார். மதுரைக் கண் பாகில் ஏற்கனவேயிருந்த நமது சபையார் இரண்டே வீத வைகள். 1874-ம் வருஷம் சில பேர் சபையிற் சேர்ந்தார்கள். 1875-ம் வருஷமுடிவில் ஐயரும் உபதேசியாரும் உள் பட மதுரையில் சபையார் தொகை 30. பஞ்சம்பட்டி, அம்மா பட்டி, நிலக்கோட்டை, செம்பட்டி, அத்திப்பட்டி, ராமநாத புரம் என்ற சுற்றுக் கிராமங்களில் இருந்தவர்களைச் சேர்த்

தால் 96 ஆகும். வில்கொம் ஐயர் அங்கிருந்தது ஒரு வருஷ காலந்தான். பிறகு அவர் வேறு சில ஐயர்மாரோடு நமது மிஸியோன் சம்பந்தத்தை விட்டுச் சீமைக்குத் திரும்பினார்.

இதனால் மதுரைவட்டம் மறுபடியும் திருச்சினாப்பள்ளி ஐரோப்பிய குருவாகிய மயர் ஐயரின் விசாரணைக்குள்ளாயிற்று. சுதேசகுருவாகிய சாமிநாதையர் மதுரையில் வசித்து சபைவேலை பார்த்துவந்தார். அவர் திருநெல்வேலியில் இருந்த நமது கிறிஸ்தவர்களையும் விசாரித்து வந்தார்.

மயர் ஐயர் சீக்கிரத்தில் திருச்சி, மதுரை விசாரணையை விட்டு, 1877-ம் ஆண்டு மார்ச்சு மீ இரங்கூனுக்குப்போக உத்தரவாயிற்று. அவர் இரங்கூனிலிருந்து ஜூன் மீ திரும்பி வந்து, கிரெம்மர் ஐயருக்கு மேற்படி வட்டங்களை ஒப்புவித்தார். மயர் ஐயர் மதுரையை விசாரித்தது சொற்பகாலமாயினும், அவர் சில" ஆத்துமாக்களைச் சபையில் சேர்க்கக்கூடியதாயிற்று.

உண்மையுள்ள ஊழியருமாகிய சாமிநாதஐயர் 1877-ம் ஆண்டு அக்டோபர் மீ 25 உ விஷபேதியால் மரித்தார். அவருக்குப்பின் ஆசீர்வாதம் ஐயர் திருச்சியில் இருந்த கிரெம்மர் ஐயருக்கு உதவியாக மதுரையில் வேலைபார்த்தார். 1878-ம் ஆண்டு மே மீ முன்போல் மதுரை ஒரு ஐரோப்பிய குரு வசிக்கும் சேகரமாகி, கிரெம்மர் ஐயர் அவ்விடம் வந்து சேர்ந்தார். முப்பது வருஷத்து அநுபவமுள்ள உழைப்பாளியாகிய அவர் 1884-ம் வருஷமளவும் அந்த வட்டத்தில் செய்த வேலையால் மிகுந்த ஆசீர்வாதமுண்டாயிற்று.

Villages.

விசேஷமாய் 1878-79-ல் உண்டான பஞ்சத்திலே நடுக்கோட்டை, காடனேரி, செம்பட்டி, பேரையூர், வண்டியூரி, வண்ணான் குளம் முதலிய இடங்களில் சற்றேறக்குறைய 800 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். செழித்த காலத்தில் வசனத்தை அசட்டை செய்கிறவர்களைக் கர்த்தர் பஞ்சகாலத்தில் தட்டி எழுப்புகிறார். இந்தக் காலத்தில் கிரெம்மர் ஐயருக்கு உதவியாக மூத்த பெரியநாயகம் ஐயரும், பிறகு அமிர்தம் ஐயரும் அனுப்பப்பட்டார்கள். இவர் பேரையூரில் வாசஞ் செய்தார்.

1879-80-ம் வருஷத்தில் வெங்கிடாசலபுரம், மல்லாங்கிணறு என்ற இடங்களில் சபைகள் உண்டாயின. பஞ்சம் தெளிந்தபின், அநேகர் திருவசனத்துக்கு எதிராகத் தங்கள் காதையும் மனதையும் அடைத்துக்கொண்டும், மற்றநேகர் ஞானஸ்நானம் பெற்றுச் சபையிற் சேர்ந்தார்கள். 1881-ம்



வருஷமுடிவில் மதுரை ஸ்பாவையும், நடுக்கோட்டையையும் தவிர மற்றிடங்களில் இருந்த கிறிஸ்தவர்கள் தொகை 999. அப்போது அந்தோனிப் பிரசங்கியார் அங்கே அனுப்பப்பட்டார். அவர் குருப்பட்டம் பெற்ற பின்னும் வெகுகாலம் மதுரை வட்டத்தில் வேலைசெய்தார்.

ஆங்காங்குண்டான சபைகளுக்கு ஆராதனை ஸ்தலங்களைச் சவதரிப்பதும், பள்ளிக்கூடங்களை ஸ்தாபிப்பதும் அவசியமாயிற்று. 1880-ம் ஆண்டு பேரையூர், காடனேரி, என்ற இடங்களிலும், 1881-ம் ஆண்டு வெங்கடாசலபுரத்திலும், மறவர்பட்டியிலும் ஜெபவீடுகள் கட்டப்பட்டன. அதே வருஷத்தில் பேரையூரிலும் காடனேரியிலும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. 1877-ம் ஆண்டு பஞ்சத்தில் சேர்ந்த பிள்ளைகளுக்காகத் திருச்சினாப்பள்ளியில் ஸ்தாபித்திருந்த பெண்பாடசாலை 1882-ம் ஆண்டு டிசம்பர் மீ மதுரைக்குக் கொண்டுவரப்பட்டது. அப்பொழுது அதில் இருந்த பெண்கள் 16.

1882-ம் ஆண்டு அக்டோபர் மீ த்தில் சீமையிலிருந்து திரும்பின சாந்தகின் ஐயர் மதுரைக்கு மாற்றப்பட்டு அந்த வட்டத்தின் வடபாகத்தைப் பார்த்து வந்தார். அடுத்த வருஷக் கடைசியில் அமிர்தம் ஐயர் இறந்துபோனார். 1884-ம் ஆண்டு கிரெம்மர் ஐயர் தரங்கைக்குப் போகவே, மதுரை வட்டம் முழுவதும் சாந்தகின் ஐயர் விசாரணைக்குள்ளாயிற்று. இவர் காலத்திலே மதுரை ஸ்பாவில் மிஸியோனுக்கு 'அவசியமான கட்டடங்கள் ஒன்றன்பின் ஒன்றாய்க் கட்டப்பட்டு, மிஸியோன் வேலை அங்கே உறுதிப்பட ஏதுவாயிற்று. வெளிக்கிராமங்களிலும் அப்படியே. 1890-ம் வருஷம் சின்னையாபுரத்தில் 22 பேர் ஞானஸ்நானம் பெற்றதால் சபை பலப்பட்டது. ஆயினும் அவர்களுக்கு அஞ்ஞானிகளால் உண்டான இடைஞ்சல் கொஞ்சமல்ல. மறுவருஷம் அங்கே 'சிலுவைக் கோவில்' கட்டப்பட்டது. சோளாண்டி, கொரண்டி, மங்கம்பட்டி என்ற இடங்களிலும் சபைகள் உண்டாயின.

1891-ம் ஆண்டு டிசம்பர் மீ மதுரைக் கோயிலுக்கு அஸ்திபாரம் போடப்பட்டது. அது 1893-ம் ஆண்டு மே மீ 24-ம் உ முடிந்து இரட்சணிய கோயில் என்று பெயர் பெற்றுப் பிரதிஷ்டையாயிற்று.

அஞ்ஞான ஸ்திரீகளுக்குள் திருப்பணி நடப்பதற்கு ஏற்பாடாகி 1890-ம் ஆண்டு பேத்தர்சன் பீபியம்மாள் அதற்காக அனுப்பப்பட்டார்கள். அவர்கள் நல் முயற்சியோடு துவக்கின

வேலையைத் தொடர்ந்து செய்யக்கூடாமல் வியாதிப்பட்டதால் 1894-ம் ௵ சீமைக்குப் போகவே, அவர்களுக்கு உதவிக்காரிகளாயிருந்த சுதேச ஸ்திரீகள் அதை நடத்தி வந்தார்கள். 1896-ம் வருஷம் புரொபசெல் மிசியம்மாள் அதைத் தொடர்ந்து சுவேதிஷ் மிசியோன் இனி வட்ட ஏற்பாடான 1901. வருஷமட்டும் நடத்தினார்கள்.

Zenana work.

1894-ம் ௵ சாந்தகிரீன் ஐயர் இடத்துக்கு சே. புளும்ஸ்திராண்டு ஐயர் வந்தார், சாந்தகிரீன் ஐயர் சீமைக்குப் போனார். அப்பொழுது மதுரை வட்டத்தில் இருந்த ஆத்துமாக்கள் 933. புதிதாய் வந்த புளும்ஸ்திராண்டு ஐயர் பல சங்கடங்களினிடையில் வேலைசெய்யவேண்டியதாயிற்று. பேரையூரில் 1894-ம் ௵ அஸ்திபாரம் போடப்பட்ட கோயிலை அவர் கட்டி முடித்து 1898-ம் ௵ பிரதிஷ்டை செய்தார். பேரையூரிலும் காடனேரியிலும் பலர் ஞானஸ்நானம் பெற்றார்கள். 1894-ம் வருஷமுதல் 1898-ம் வருஷமட்டும் ஞானஸ்நானம் பெற்றவர்கள் தொகை 217.

1899-ம் ௵ புளும்ஸ்திராண்டையர் ஈரோடுக்கு மாற்றப்பட்டு, ஷாட் ஐயர் மதுரைக்கு வந்தார். அவர் வந்த சில காலத்திற்குள் சாணார் மறவர் கலகம் உண்டானதால், மிசியோன் வேலைக்கும் கிறிஸ்தவர்களுக்கும் அனேக சங்கடங்கள் உண்டாயின. அதுவிஷயத்தில் ஷாடையர் கிறிஸ்தவர்களுக்குத் துணை நின்றார். அவர் 1900-ம் வருஷம் மாற்றப்பட்டு, அவர் இடத்திற்கு யோகான்சன் ஐயர் வருமளவும் சில மாசக்காலம் மதுரை வட்டம் திண்டுக்கல்லில் இருந்த எல்லைவன் ஐயர் விசாரணைக்குள்ளிருந்தது. இப்பொழுது மதுரை வட்டம் புளும்ஸ்திராண்டையர் விசாரணையில் இருக்கிறது. அந்த வட்டத்து கிறிஸ்தவர்கள் தொகை 470. சபைப் பொக்கிஷம் ரூபாய் 4312. இப்பொழுது அந்த வட்டத்தில் மானுவேல் முத்தையப்பன் என்ற இரண்டு சுதேச குருமார் வேலை பார்க்கிறார்கள்.

Viruduppatti.

1903-ம் வருஷம் மதுரை வட்டத்தை இரண்டாகப் பிரித்ததால் விருதுப்பட்டியென்கிற ஒரு புதுச் சேகரம் உண்டாயிற்று. அங்கே சுவேதிஷ் சங்கக் காரியதரிசியாகிய சாந்தகிரீன் ஐயர் வாசம் செய்கிறார். இந்த வட்டத்துக் கிறிஸ்தவர்கள் 222; சபைப் பொக்கிஷம் ரூபாய் 223.



Ceylon.

இலங்கைத் தீவிலுள்ள லுத்தரன் கிறிஸ்தவர்களைச் சந்தித்து வருவதற்கு 1895-ம் வருஷம் அந்தோனி ஐயர் அனுப்பப்பட்டார். அதுமுதல் வருஷந்தோறும் இருமுறை ஒரு குரு அங்கே போய் வரும் வழக்கம் உண்டாயிற்று. 1903-ம் வருஷம் யோகான்சன் ஐயர் அதற்குப் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டு, 1905-ம் வருஷத் துவக்கமுதல் சீமைக்குப் போமளவும் கொழும்பில் குடியிருந்து, இலங்கையில் சிதறியிருக்கும் லுத்தரன் சபைக் கிறிஸ்தவர்களை விசாரித்து வந்தார். இப்போது அவர் இடத்தில் வேலை பார்க்கிறவர் சின்ன சாந்தகிரீன் ஐயர்.

---

## 18. திண்டுக்கல்.

Dindigul.

முந்த மதுரைவட்டத்தின் ஒருபங்காயிருந்த திண்டுக்கல் 1889-ம் ௵ முதல் பிரத்தியேகமான சேகரமாயிற்று. அதைச் சேர்ந்த ஊர்களில் முக்கியமானவை பஞ்சம்பட்டி, அம்மாபட்டி, பெரியகுளம், கோடைக்கானல், போடிநாயக்கனூர், ஆனைமலையன்பட்டி என்பவை. 1881-ம் வருஷத்தில் ஸ்தாபகமான போடிநாயக்கனூரில் ஒரு சுதேசகுரு வாசஞ்செய்து திருவூழியம் பார்த்துவருகிறார். போடிநாயக்கனூர் பக்கத்திலுள்ள திருவாங்கோட்டு இராச்சியத்தைச் சேர்ந்த தேவிகுள மலைகளில் தேயிலை, காப்பிக்கொட்டை; ஏலம் முதலியவை விளைவிக்கும் அனேக ஐரோப்பிய துரைமார்களுடைய தோட்டங்களில் வேலைபார்க்கும் தமது சபையாருக்கும் திரு ஊழியஞ்செய்துவரும் கஷ்டமான வேலையும் அவருக்குரியது.

Ammapatti.

திண்டுக்கல்சேகரத்தில் உள்ள அம்மாபட்டியில் 1868-ம் வருஷமுதல் தமது கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். அம்மாபட்டிச் சபையார் தமது புதிய சபையொழுங்கை அனுஷ்டித்து முகாமைச்சங்கம் ஏற்படுத்தி, கோயில் காணிக்கைகளைக் கிரமமாய்ச் சேர்த்து வருகிறார்கள். திண்டுக்கல் சேகரத்திலுள்ள பழனிமலைகளின்மேல் குளிர்ச்சியின்பொருட்டு வெகு ஐரோப்பியர்களுக்குப் பிரியமான இடமாகிய கோடைக்கானல் என்னும் ஊரிருக்கிறது. அங்கே தமது ஐரோப்பிய குருக்

கள் கோடைகாலத்தில் முறைமுறையாய் ஏறி இளைப்பாறிப் பலமடைவதற்காக ஏற்பட்ட நமது மிஷியோனுக்குச் சொந்தமான நான்கு பங்களாக்கள் உண்டு. அங்கே சீக்கிரத்தில் ஒரு கோயில் கட்டி முடியுமென்று நம்புகிறோம்.

திண்டுக்கல்லில் குடியிருந்து அந்தவட்டத்தை விசாரிப்பதற்கு முதல்முதல் நியமிக்கப்பட்ட ஐரோப்பிய குரு பெக்சல் ஐயர். அவர் நல்முயற்சியோடு செய்துவந்த வேலையைத் தொடர்ந்து செய்தவர் எல்லையன் ஐயர். அவர் அங்கே பலவருஷங்களாய் வசித்து, புறமதஸ்தருக்குச் சுவிசேஷத்தை அறிவித்துவந்தார். இப்பொழுது அங்கே மிஷியோனரியாயிருப்பவர் பேல்பர்க் ஐயர் (Fehlberg). நெடுநாளாய்க் கோயில் இல்லாதிருந்த திண்டுக்கல்லில் ஒரு கோயில் கட்டப்பட்டு, 1905-ம் ௵ ஜுன் ௴ 18-ம் ௳ பிரதிஷ்டையாகி, திரித்துவ தேவாலயம் என்று பெயரிடப்பட்டது. இந்தக் கோயிலைக் கட்டுவதுடன் திண்டுக்கல்லில் ஒரு ஆண்பிள்ளை ஆசிரிப்புப் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது. அதிலே இப்பொழுது படிக்கும் கிறிஸ்தவ பிள்ளைகளும் அஞ்ஞான பிள்ளைகளும் முப்பது. திண்டுக்கல் வட்டத்தில் 306 கிறிஸ்தவர்களும், போடிநாயக்கனூர் வட்டத்தில் 523 கிறிஸ்தவர்களும் இருக்கிறார்கள். சபைப் பொக்கிஷம் முறையே ரூ. 4003-ம், ரூ. 1309-மாம்.

---

## 19. பங்களூர்.

பங்களூர் கன்னட தேசமாகிய மைசூர் நாட்டிலுள்ளது. அங்கே தமிழ் நாட்டிலிருந்து உத்தியோக சம்பந்தமாய்ப் போன அநேக கிறிஸ்தவர்களுண்டு. அவர்களில் முன்னமே தரங்கையினின்று போன வியாபாரியாகிய பர்க் துரை ஒருவர். இவர் மிருந்த வியாதிப்பட்டிருந்த காலத்தில் சேர்வராயமலையிலிருந்து தேடர்லேன் ஐயர் (1863-ம் ௵) அவரைப் பார்க்கப் போனார். அச்சமயத்தில் அங்கிருந்த மற்ற லுத்தரன் கிறிஸ்தவர்களும் ஐயரைக் கண்டு, தங்கள் ஆத்ம விசாரணைக்காக ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். இது முகாந்திரமாய் பங்களூருக்கு முதல்முதல் போனவர் கோயமுத்தூர் ஹேரே ஐயர். இதற்குப்பின் சென்னைச் சபையி

Bangalore.



லின்று போனவர்களைச் சந்திப்பதற்கு கிரேம்மர் ஐயர் அங்கு சென்றார். பிறகு அவரோடு சுவார்ச்சு அட்டர்லோனி என்ற ஐயர்மார் பங்களூர்ச் சபையின் ஆத்தும விசாரணைக்காக நிலைவரமான ஏற்பாடு செய்வது அவசியமோ என்று யோசனை செய்ய அவ்விடம் சென்றார்கள். அது அவசியந்தானென்று கண்டபொழுது சீமைக்குப்போய்த் திரும்பின பயர்லேன் ஐயர் சுகத்துக்குக் குளிர்ச்சிபொருந்திய பங்களூரே தகுதியென்று சங்கத்தார் யோசனைபண்ணி, அவரை அவ்விடத்திற்கு நியமித்தார்கள்.

1873-ம் ௵ வருஷப்பிறப்பில் பயர்லேன் ஐயர் அவ்விடம்போய், பிறகு ஒரு துரையின் உதவியால் ஒரு இடத்தை 550 ரூபாய்க்கு வாங்கி, ஆராதனைக்கும் பள்ளிக்கூடத்திற்கும், மிஷியோனரியர் குடியிருப்புக்கும் அவசியமான கட்டடங்களைக்கட்டி, தாம் ஒரு வாடகைவீட்டில் குடியிருந்துகொண்டு, அங்கிருந்த சொற்பக் கிறிஸ்தவர்களைப் பார்வையிட்டு, புறமதஸ்தருக்குப் பிரசங்கம் செய்துவந்தார். அவர் அங்கே ஊழியம் ஆரம்பித்தகாலத்தில் சபை வெகு சொற்பமாயிருந்தது. மேற்கூறிய வருஷம் ஜனவரி ௴ 5-ம் ௳ ஞாயிற்றுக்கிழமை வைத்த முதல் ஆராதனைக்கு வந்தவர்கள் ஐயரும் உபதேசியாருந்தான். அடுத்த ஞாயிற்றுக்கிழமை உபதேசியார் குடும்பமும், ஒரு விதவையும் வேறிரண்டு ஆண்பிள்ளைகளும் வந்திருந்தார்கள். இப்படியே நாளுக்கு நாள் ஆராதனைக்கு வருவோர் தொகை அதிகரித்தது. கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகை தினத்தில் 5 அஞ்ஞானிகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, 13 கிறிஸ்தவர்களுக்குப் பரிசுத்த இராப்போசனம் பரிமாறக் கூடியதாயிருந்தது. வருஷக்கடைசியில் சபையார் தொகை 80 ஆயிற்று.

பிறகு அவர் வசதியான ஒரு இடத்தில் தமது குடியிருப்புக்கு ஒரு பங்களா கட்டினதுமன்றி சமீபத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தி, பெருகின சபைக்காக ஒரு புதிய ஜெபவீட்டையுங் கட்டினார். பிறச் சேகரத்துச் சபைகளின் வரத்துப் போக்குக்குத் தக்கபடி சபை பெருகுகிறதும் சிறுகுகிறதுமாயிருந்தது. இதில் பயர்லேன் ஐயர் சளைக்காமல், தாம் பென்ஷன் பெற்றுச் சீமைக்குத் திரும்புமளவும் (1886) உழைத்து, அநேகருக்கு உபகாரியாய் விளங்கினார்.

அவருக்குப்பின் அதற்கு விசாரணைகுருவானவர் ஹேரே ஐயர். (1886-93) இவர்காலத்தில் சபை பெருகியே வந்தது.

பங்களூருக்குத் தென்கிழக்கிலுள்ள குப்பம் என்ற இடத்தில் சுவிசேஷவேலை தொடங்கி ஒரு பள்ளிக்கூடமும் ஸ்தாபிக்கப் பட்டது. ஆயினும் இப்பொழுது அங்கே கிறிஸ்தவர்களும் இல்லை, பள்ளிக்கூடமும் இல்லை. அன்றியும் பங்களூருக்கு 40, 50 மைல் தூரத்திலுள்ள கோலார் என்ற இடத்தில் பொன் எடுக்கும் வேலை ஆரம்பித்தபின் அங்கே வெகு ஜனங்கள் குடியேறினதால் அவர்கள் நடுவிலும் நமது மிஷியோன் வேலை செய்ய ஆரம்பித்தது.

பங்களூர் வட்டம் (1894-99) ஐந்து வருஷக்காலம் வன்ஸ்கே ஐயர் விசாரணையில் இருந்தது. அவர் மற்றிடங்களில் அஞ்ஞானிகளுக்குள் கட்டிப்பழைந்த சுவிசேஷ பிரசங்க வேலையை இங்கும் விடாது நடப்பித்தார்.

இவருக்குப்பின் ரைகார்ட் ஐயரும், வன்ஸ்டன் ஐயரும் ஒருவர்பின் ஒருவராய் வேலைபார்த்தார்கள். இப்பொழுது அங்கே குருவாயிருப்பவர் பேகனையர். அந்த வட்டத்தக் கிறிஸ்தவர்கள் தொகை 322, சபைப் பொக்கிஷம் ரூ. 5679.

---

## 20. இரங்கூன்.

Rangoon.

அக்கரை இந்தியாவில் இருக்கும் இரங்கூனிலும் நமது மிஷியோனுக்குட்பட்ட சபையும் குருவும் உண்டு. இந்தச் சபை சுவிசேஷ பிரசங்கத்தினால் அஞ்ஞானிகளினின்று சேர்க்கப்பட்டதல்ல, பிழைப்புக்கென்று சென்னைமுதலிய இடங்களினின்று அவ்வூருக்குப் போன லுத்தரன் சபையாருடைய ஆத்மவிசாரணைக்காக மிஷியோன் வேலை கொண்டதினால் அச்சபை சேர்ந்தது. 1871-ம் வருஷம் சென்னை புரசைவாக்கத்தில் குருவாயிருந்த கிரெம்மர் ஐயரே தன் வட்டத்திலிருந்து போயிருந்த கிறிஸ்தவர்கள் விஷயமாய் சிரத்தை யெடுத்து முதற் குரு. இரங்கூனில் இருந்த சென்னைச் சபையாரும் தங்கள் ஆத்ம விஷயத்தில் கவலை கொண்டவர்களாய் தங்களுக்கு ஞான திரவியங்களைப் பரிமாறுவதற்கான யாரையாவது அனுப்பும்படி கேட்டார்கள். இதை ஆதாரமாகக் கொண்டு, (டிரெக்டர் ஹார்டெலாந்து சாஸ்திரியார் இந்தியா வுக்கு வந்திருந்த சமயத்தில்) தீவாந்திரங்களுக்குப் போயிருக்



கும் நமது கிறிஸ்தவர்களின் ஆத்ம விசாரணை விஷயத்தைக் குறித்து தரங்கைக் குருமார் கூட்டத்திலே பேசப்பட்டது.

அச்சமயம் இந்தப் பெரிய வேலையை மயர் ஐயர் ஒப்புக்கொண்டு, மா. வேதமாணிக்கம் உபதேசியாரோடு 1877-ம் வருஷம் மார்ச்சு மீ 13-ம் உ புறப்பட்டு 16-ம் உ இரங்கூன் துறைமுகம் போய்ச் சேர்ந்தார். மார்ச்சு மீ 19-ம் உ முதல் ஏப்ரில் மீ 21-ம் உ வரையில் அவர் இரங்கூனில் தங்கியிருந்து, கிறிஸ்தவர்களைக் கூட்டிச்சேர்த்து ஆராதனைகள் நடத்தி, ஞானஸ்நானங் கொடுத்து, பரி. இராப்போசனம் பரிமாறி, குடும்பத் தலைவர்களோடு சபைக் காரியங்களைக் குறித்துப் பேசினார். சபையேற்பாட்டுச் சட்டங்களுக்கு 19 பேர் கையெழுத்து வைத்தார்கள். அவர்களில் 3 பேர் சபையின் மூப்பர்களாகத் தெரிந்து கொள்ளப்பட்டார்கள். 35-ம் நீ தெருவில் ஒரு வாடகை வீட்டில் தெய்வாராதனை நடக்க ஒழுங்கு செய்யப்பட்டது.

பிறகு மயர் ஐயர் * மோல்மேன், பினாங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்களிலுள்ள நமது கிறிஸ்தவர்களைச் சந்தித்துக் கொண்டு ஜூன் மீ 13-ம் உ நாகபட்டணம் வந்துசேர்ந்தார். ஆலோசனைச் சங்கத்தாருக்கு அவர் செய்த அறிக்கையின் பேரில், இரங்கூனுக்கு ஒரு மிஷியோனரியை அனுப்புவது அவசியமென அவர்கள் கண்டு, அவரையே அதற்கு நியமித்தார்கள். அவர் குடும்ப சகிதம் 1878-ம் வரு ஏப்ரில் மாசம் 11-ம் உ புறப்பட்டு, 19-ம் உ இரங்கூன் போய்ச் சேர்ந்தார். அவர் அங்குள்ள சபையை ஒழுங்குப் படுத்தவும், சபைப் பொக்கிஷம் சேர்க்கவும் பட்ட பிரயாசை அதிகம். ஒரு கர்மானிய அரையினால் கொடுக்கப்பட்ட ஓர் சிறிய வீட்டைச் சற்றே மாற்றி, ஆராதனை ஸ்தலமாக்கினார்.

1878-ம் வரு ஆகஸ்டு மீ இங்கிலீஷ் தமிழ் பள்ளிக்கூடம் ஸ்தாபகமாயிற்று. துவக்கத்தில் படித்தவர்கள் 8 பிள்ளைகள். பிறகு கோவிலும் பள்ளிக்கூடமும் கட்டவேண்டுமென்கிற நோக்கமாய் ஒரு தொகை சேர்த்து, டல்ஹௌசி குளத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு முக்கோண வடிவான நிலத்தை அதின்மேலுள்ள 40 பழைய கட்டடங்களோடு ஏலத்திலே வாங்கினார்

---

* மயர் ஐயருக்குப்பின் மேற்கூறிய தீவாந்திரங்களிலுள்ள கிறிஸ்தவர்களைச் சந்திக்கப்போன ஐயர்மார்:— 1900-ம் வரு வேனெர் ஐயர், 1901-ம் வரு கி. யோசேப்பையர், 1904-ம் வரு கேகுலிங் ஐயர்.

கள். நகராதிபதியால் ஐயருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு வீட்டைப் பிரித்து, அதன் தளவாடங்களைக் கொண்டு கோயில் பள்ளிக்கூட கட்டட வேலைகள் தொடங்கக் கூடியதாயிற்று.

1881-ம் வருஷக் கடைசியில் ஏறக்குறைய 100 லுத்தரன் கிறிஸ்தவர்கள் அங்கிருந்தார்கள். ஆரம்பமுதல் அவ்வருஷமட்டுமுள்ள 4 வருஷ காலத்தில் சபையார் சேர்ந்த தொகை ரூ. 2098. இதில் ஐரோப்பியரால் சேர்ந்தது ரூ. 672.

மறுவருஷம் மயர் ஐயர் சீமைக்குப் போகவே, கேரிங் ஐயர் இரங்கூனுக்குப் போய் ஏறக்குறைய 2 வருஷகாலம் அச்சபையை நடத்தி வந்தார். மயர் ஐயர் திரும்பி வந்து 1886-ம் வருஷமத்திமட்டும் அங்கிருந்தார். ஒரு வருஷகாலம் ஞா. தேவசகாயம் ஐயர் (1) சபை குருவாயிருந்தபின், தேவாசீர்வாதம் ஐயர் அதற்குக் காயமான குருவாக நியமிக்கப்பட்டார். இரங்கூனில் உண்மையாயுழைத்த இந்த குரு 1890-ம் வருஷம் மார்ச்சு மீ கர்த்தருக்குள் மரித்தபின், தே. தாவீதையர் அச்சபையின் குருவாகி, 11 வருஷகாலம் அங்கே பொறுமையுடன் வேலை செய்தார்.

மேலே சொன்ன முக்கோண நிலத்திலிருந்த பழைய கட்டடங்களை எடுத்துப்போட்டு, தாழ்வான நிலமட்டத்தை உயர்த்தி, அதிலே வீடுகளைக் கட்டியதில் தாவீதையர் பட்ட பிரயாசை அதிகம். சென்ற செலவு ரூ. 35,000. சபையார் கொஞ்சங் கொஞ்சமாய் இச்செலவைக் கொடுத்துத் தீர்த்து வருகிறார்கள். தீர்த்தபின் இது சபைகுரு முதலியவர்களுக்குச் சம்பளங் கொடுப்பதற்கான வரும்படி கொடுக்கும் பொக்கிஷவைப்பாம்.

தஞ்சாவூருக்கு மாற்றப்பட்ட தாவீதையருக்குப்பின் இ. சு. பாக்கியம் ஐயர் இரங்கூன் சபையை நடத்தி வருகிறார். இப்பொழுது சபையார் தொகை 402.

---

சென்ற இருநூறு வருஷகாலமாய் நமது நடுவே மிஷியோன் வேலை நடந்தேறிவரக் கருணைகூர்ந்த அவரே இனியும் நம்மோடிருந்து, நமது வேலைகளை ஆசீர்வதித்து, விக்கிரகங்களுடைய பேர் முழுவதும் நமது தேசத்தினின்று ஒழிந்து போகப்பண்ணி இயேசுவின் திருநாமம் எங்கும் மகிமைப்படத் திருவுளஞ் செய்வாராக. ஆமென்.

# அநுபந்தம்.

## க. சத்தியவேதத் தமிழ் மொழிபெயர்ப்பின் சரித்திரம். *

இத்தேசத்திற்குச் சுவிசேஷ வெளிச்சத்தைக் கொணர்ந்த முதற் புரோட்டெஸ்டாண்டு குருவாகிய சீகன்பால்கையரே[a] சத்திய வேதத்தை முதல் முதல் தமிழில் மொழிபெயர்க்கப் புகுந்தவர். அவர் 1708-ம் வருஷம் ஆகஸ்டு மாசம் 22-உ சீமைக்கு எழுதிய காகிதத்திலே: திருச்சபையின் அஸ்திபாரமாகப் பராபரனுடைய அருமையான வசனத்தைத் தமிழ்ப் பாஷையில் மொழிபெயர்த்துக் கொடுக்கவேண்டுமென்பது என் விசேஷித்த கவலையாயிருக்கிறது. இதற்காகக் கர்த்தர் எனக்குத் திறமையையும் சாமர்த்தியத்தையும் அருளவேண்டுமென்று அநுதினமுங் கெஞ்சுகிறேன். இப்போது எனக்கிருக்கும் வெகுவான வேலைகளினிமித்தம் இந்த விசேஷித்த தேவ திருப்பணியை இன்னும் இரண்டு மாசங்களுக்கு முன் துவக்க முடியாதென்று எண்ணுகிறேன் என்று எழுதினார். 1708-ம் வருஷம் அக்டோபர் மாசம் 17-ம் தேதி அவர் திரியேக பராபரனுடைய நாமத்திலே உட்கருத்தான ஜெபத்தோடு புதிய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்பைத் துவக்கினார். அவர் கிரேக்க மூலத்திலிருந்து மொழிபெயர்த்து, அத்தோடு லத்தீன், கர்மனிய, டேனிஷ், உலாந்தா, பொர்த்துகீசு மொழி பெயர்ப்புகளையும், பல வியாக்கியானங்களையும் ஒத்திட்டுப் பார்த்தார். அவர் இதற்கென்று அநுசரித்து வந்த பிரமாணங்களாவன:

க. உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கிறதற்கு என் கண்களைத் திறந்தருளும் என்று தாவீதோடு கூடப் பராபரனை நோக்கிச் செய்யும் உட்கருத்தான ஜெபம்.

உ. நாம் மொழிபெயர்க்க விரும்பும் திவ்விய சத்தியங்கள் முந்த முந்த நமது இருதயத்துக்குச் சத்தியமும் ஆவியும் ஜீவனுமாகும்படியாகத் தெய்வ வசனத்துக்குக் கீழ்ப்படியும்

a Ziegenbalg.

---

* இது மாஜி சீனியர் சுவார்ச்சையர் உதவி பெற்று இந்நூலாசிரியன் எழுதியது. (1880, 1881. வருஷங்களின் அருணோதயம் பார்க்க.)

உண்மையான நிரூப்படிதல். இதைக் குறித்து கிறிஸ்து ஒரு
வன் பராபரனுடைய சித்தத்தின்படி செய்ய மனதாயிருந்
தால் அவன் இந்த உபதேசம் பராபரனால் உண்டாயிருக்கிற
தோ அல்லது நானாய்ப் பேசுகிறேனோ என்கிறதை அறிவான்
என்று சொல்லுகிறார்.

௨. வேத எழுத்துக்களில் பரிசுத்த ஆவியானவர் நம்
மோடு பேசுவதில் கையாடும் பாஷை நடையையும் வாசகப்
போக்கையும் அறியும் அறிவு. நான் சத்தியத்தினுடைய பலத்
தை அறியாதே போனால், பேசுகிறவனுக்கு நான் மூடனாயி
ருப்பேன்; பேசுகிறவன் எனக்கும் மூடனாயிருப்பான்.

௩. ஒரு வேதவாக்கியத்தின் அர்த்தம் தெளிவாகும் பொ
ருட்டு அதை மற்ற வேத வாக்கியங்களோடு கவனமாய் ஒத்
துப் பார்க்குதல். இதுவே ஆவிக்குரியவைகளை ஆவிக்குரிய
வைகளோடு ஒத்துப் பார்க்கலாம்.

௪. யாதொரு வாக்கியத்துக்குத் தன்னிஷ்டப்படி அர்த்
தஞ் செய்யாதபடி, மூலபாஷையின் தொனியைச் சாக்கிரதை
யாய்க் கவனித்தல். ஏனெனில், வேதத்திலே, எந்த தீர்க்கதரி
சனமும், எந்த வியாக்கியானமும், எந்த மொழிபெயர்ப்பும்
சுய தோற்றலான வியாக்கியானதாயிருக்கக் கூடாது.

௫. பரி: வேத வசனத்தில் ஆதாரமாகித் தெளிவாய் நி
ரூபிக்கப்பட்டிருக்கிற விசுவாசப் பிரமாணங்களுக்கு விரோத
மான எதையும் ஏற்றுக்கொள்ளாதபடி விசுவாசப் பிரமாணத்
தைச் சரியாய்க் கவனித்தல். இதைப் பற்றி அப்போஸ்தலன்:
தீர்க்கதரிசனம் விசுவாசப் பிரமாணத்திற்கு ஒத்ததாயிருக்கக்
கடவதென்று சொல்லுகிறார்.

இந்தப் பிரமாணங்களின்படியே உட்கருத்தான ஜெபத்
தோடு சீகன்பால்கு ஐயர் வேத மொழிபெயர்ப்பு வேலையை
நடத்தினார். அவருக்கு இவ்வேலையில் உண்டான இடையூறு
[illegible] கள் கொஞ்சம் அல்ல. திருவங்கோட்டுக்குச் மாசம் 19-ம் தேதி முதல்
மாக 1708-ம் வருஷம் நவம்பர் மாசம் 26-ம் தேதி வரையில் காவ
1709-ம் வருஷம் மார்ச்சு மாசம் வெகுவாய்த் தடுக்கப்பட்
லில் போடப்பட்டதால் இவ்வேலை உபத்திரவங்களிலே அவரை
டது. ஆகிலும், கர்த்தர் இந்த உபத்திரவங்களிலே அவரை ஆற்றித்தேற்றி, இடையூறுகளை நீக்கி, அவருக்கு ஞானத்தை
யும் பலத்தையும் கட்டளையிட்டருளினதால், அவர் 1711-ம்
வருஷம் மார்ச்சு மாசம் 21-ம் தேதி புதிய ஏற்பாட்டின் மொ
ழிபெயர்ப்பை முடிக்கக் கூடியவரானார். அவர் இப்புத்தகத்தை



இந்தியாவின் சகல பொக்கிஷங்களிலும் விலையேறப்பெற்ற
பொக்கிஷமென்று சொன்னார்.

இக்காலத்தில் தரங்கன்பாடியிலிருந்த ஐயர்மாருக்கு இங்
கிலாந்திலிருந்து ஒரு அச்சியந்திரமும், சர்மானியாவிலிருந்து
தமிழ் அச்செழுத்துக்களும் வந்தபடியால் உடனே புதிய ஏற்
பாட்டை அச்சடிக்கத் துவக்கினார்கள்.

Tamil N. T. Printed. அதன் முதற் பதிப்பு இரண்டு பங்காக
அச்சடிக்கப்பட்டது. நாலு சுவிசேஷங்
களும் அப்போஸ்தலர் நடபடிகளும் அடங்கிய முதற்பாகம்
பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டு, 1714-ம் வருஷம் செப்
டெம்பர் மாசம் 25-ம் தேதி முடிந்தது. புதிய ஏற்பாட்டின்
மற்ற ஆகமங்கள் அடங்கிய இரண்டாம் பாகம் சிறிய எழுத்
துக்களில் அச்சிடப்பட்டு, 1715-ம் வருஷம் ஜூலை மாசம் 13-ம்
தேதி முடிந்தது. அச்சிடப்பட்ட பிரதிகள் 400. இதனால்
தமிழர் உயிர்ப்பிக்கிற தெய்வ வசனத்தைத் தங்கள் சொந்த
பாஷையில் வாசித்து, அதைக் கொண்டு ஜீவனின் வழியைத்
தெளிவாய் அறிந்து கொள்ள ஏதுவாயிற்று. புதிய ஏற்பாடு
இரண்டாம் விசை 1722-ம் ௵ பதிப்பிக்கப்பட்டது. இந்தப்
பதிப்பில் புதிய ஏற்பாட்டின் ஆகமங்களெல்லாம் சிறிய எழுத்
துக்களில் ஒரே புத்தகமாக அச்சிடப்பட்டது. இதில் அதி
கார அடக்கமும், ஒத்தவாக்கியக் குறிப்புகளும் சேர்க்கப்பட்
டதேயன்றி வேறு மாறுதல்கள் செய்யப்படவில்லை.

இவ்விதமாக, புதிய ஏற்பாட்டின் மொழி பெயர்ப்பு மு
டிந்த பின், சீகன்பால்கையர் பழைய ஏற்பாட்டின் ஆகமங்
களை மூலபாஷைகளிலிருந்து மொழி பெயர்க்கத் துவக்கினார்.
அவர் 1714-ம் ௵ சீமைக்குச் செய்த யாத்திரையிலும் இந்த
மொழிபெயர்ப்பு வேலையைத் தொடர்ந்து செய்தார். அவர்
1716-ம் ௵ ஆகஸ்டு மாசத்தில் தரங்கன்பாடிக்குத் திரும்பி
வந்து, 1719-ம் ௵ மரித்தார். அவர் மரணமடைந்த காலத்
தில் மோசேயின் ஐந்தாகமங்களும் யோசுவா, நியாயாதிபதிக
ளின் ஆகமங்களும் மொழிபெயர்க்கப்பட்டிருந்தன. இவ்வாக
மங்கள் 1720-ம் ௵ தரங்கம்பாடியில் அச்சிடப்பட்டன.
அச்சிடப்பட்ட பிரதிகள் 400.

சீகன்பால்கு சிரேஷ்டர் மரணமடைந்த சில காலத்துக்
குப்பின் தரங்கம்பாடிக்குப் புதிதாக இரண்டு ஐயர்மாருடனே
வந்த சூல்ச்சையர் பழைய ஏற்பாட்டின் மற்ற ஆகமங்களை

மொழிபெயர்த்தார். அதை அவர் 1723-ம் ௵ மார்ச்சு ௴
12௳ முடித்தார். இதற்குப்பின் அவர் அப்போஸ்தலப்பிரசங்கங்களை
மொழிபெயர்க்கத் துவக்கி, அந்த வருஷத்தின் நொவம்பர் ௴
21௳ முடித்தார். அவர் அந்தத் தேதி
Schultze. யில் தமது தினக்குறிப்புப் புத்தகத்தில்:
அநாதியான பரிசுத்தத் திரியேக பராபர
னே, தேவரீர் மனிதராகிய எங்களுக்குப் பாராட்டிவந்த கிரு
பைகளுக்காகவும், கட்டளையிட்ட நன்மைகளுக்காகவும் உமக்கு
ஸ்தோத்திரம். அன்புள்ள பிதாவே, நான் மன்றாடினதைத்
தேவரீர் கேட்டருளினீர், நான் விரும்பினதைக் கட்டளையிட்
டீர், நான் நம்பினதை நிறைவேற்றினீர். நான் என் சீவ
னுள்ள நாள் மட்டும் இந்தக் கிருபைக்காக ஸ்தோத்திரஞ்செ
லுத்தி, உம்முடைய திருநாமத்தை என்றென்றைக்கும் மகி
மைப்படுத்துவேன். உம்முடைய திருவசனமாகிய வெளிச்
சத்தினால் அஞ்ஞான இருளையும் பிசாசின் பொய் மதங்களை
யும் அகற்றிவிட்டு, உம்மை அறிகிற மெய்யான அறிவைக் கட்
டளையிட்டருளும் என்று எழுதினார். 1724-ம் ௵ சங்கீதப்
புத்தகம் பிரதியேகமாய் அச்சிடப்பட்டது. ரூத் ஆகமம்
முதல் பழைய ஏற்பாட்டின் மற்ற ஆகமங்களெல்லாம் அச்சி
டப்பட்டு, 1728-ம் ௵ செப்டெம்பர் ௴ முடிந்தது. 1725-ம்
வருஷம் ஜூன் ௴ 19௳ புதிய ஐயர்மா
Revised by Pressier & Walther. ராகிய பிரேசிர், வால்தர், என்பவர்கள்
தரங்கம்பாடிக்கு வந்து, கர்த்தர் தங்களுக்
குக் கட்டளையிட்டிருந்த கிரியையை மிகுந்த கருத்தோடே
செய்யத் துவக்கினார்கள். இவ்விருவரும் படிப்பாளிகளும்
சமர்த்தருமாயிருந்தார்கள். விசேஷமாய் வால்தர் ஐயர் எபி
ரேய, கிரேக்க, லத்தீன் பாஷைகளில் பூரண பாண்டித்திய
மும், அரபிய சமஸ்கிருத பாஷைகளில் போர்ந்த அறிவும்
உடையவராயிருந்தார். அவர் தமிழிலும் வல்லவராயிருந்
தார் என்பது அவர் இயற்றிய திருச்சபைச் சரித்திரத்திலும்,
வீரமாமுனிவரின் கொடுந்தமிழ் இலக்கணத்தில் அவர் சேர்த்
தியற்றிய குறிப்புகளாலும் தெரியவரும்.

ஜூல்ச்சையர் 1726-ம் ௵ பெப்ருவரி ௴ தரங்கம்பாடி
யை விட்டுக் கூடலூருக்கும் சென்னப்பட்டணத்திற்கும் போ
னார். அங்கே அவர் ஒரு பள்ளிக்கூடத்தைப் புதிதாய் ஸ்தா
பித்து, அஞ்ஞானிகளுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து,
சில ஐரோப்பியருடைய விருப்பப்படி அங்கேயே நிலைத்திருந்



தார்.* இதின் நிமித்தமாக, பழைய ஏற்பாட்டின் மொழி
பெயர்ப்பைப் பரிசோதித்து அச்சிடும் வேலை தரங்கம்பாடியி
லிருந்த வால்தர், பிரேசிர் என்ற ஐயர்மார்கள் பேரில் விழுந்
தது. இவர்கள் அதைப் பார்வையிட்டமட்டில், அதில் அநே
கம் பிசகுகளும் குறைவுகளும் இருப்பதைக் கண்டு, அதை
மிகுந்த பிரயாசையோடு திருத்த ஆரம்பித்தார்கள். விசேஷ
மாய்ச் சங்கீத புத்தகத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களி
லும் செய்த திருத்தங்கள் மிகுதி. சீகன்பால்கு ஸ்ரேஷ்டரும்
ஜூல்ச்சையரும் இஸ்பிரித்து சாந்து என்றும் அரூபி என்
றும் மொழிபெயர்த்திருந்த வார்த்தைகளுக்குப் பதிலாக இந்
தப்பதிப்பில் 'பரிசுத்த ஆவி, ஆவி' என்னும் வார்த்தைகள் உப
யோகிக்கப்பட்டன. 1733-ம் ௵ புதிய ஏற்பாட்டைத் திரும்
பவும் அச்சிட அவசியம் நேரிட்டதால், அதை முற்றிலும் பரி
சோதித்துத் திருத்தவும், அதைப் பங்கு பங்காய் அச்சிடவும்
தீர்மானித்தார்கள். இந்த வேலையை பிரேசிர் வால்சர் என்ற
ஐயர்மாரும் 1730-ம் ௵ புதிதாய்த் தரங்கம்பாடிக்கு வந்த
வோர்ம் என்ற ஐயரும் சேர்ந்து நடப்பிக்க விரும்பி, 1734-ம்
வருஷம் செப்தெம்பர் ௴ மத்தேயு சுவிசேஷத்தைப் பார்வை
யிடத் துவக்கினார்கள். அவர்கள் தாங்கள் திருத்தியதை சென்
னையிலிருந்த சார்த்தோரியுஸ் ஐயருக்கு அனுப்பி, அவர் அபிப்
பிராயத்தையும் ஆலோசனையையும் கேட்டார்கள். அவர்கள்
அந்தச் சுவிசேஷத்தின் 10-ம் அதிகாரம் மட்டும் பார்வையிட்
டாகையில், சற்புத்தியும் திறமையும் உடைய வோர்ம் ஐயர்
இறந்துபோனார். மற்ற இரண்டு ஐயமாரும் இந்த வேலையைத்
தொடர்ந்து செய்து முடித்தார். 1739-ம் ௵ ஆரம்பத்தில்
மத்தேயு சுவிசேஷத்தின் இந்தப் பதிப்பு அச்சிடப்பட்டு முடிந்
தது. முந்தின பதிப்புகளில் உபயோகித்திருந்த சருவே
சுரன் என்ற வார்த்தைக்குப் பதிலாக இந்தப்பதிப்பில் பரா
பரன் என்ற வார்த்தையை உபயோகித்தார்கள். ஐயர்மார்
கள் இந்த திருத்தலுக்கடுத்த வேலையை மிகுந்த பிரயாசை
யோடும் சாக்கிரதையோடும் நடத்தி, தமிழ்வார்த்தைகளையும்
நடையையும் பற்றிய விஷயங்களில் தங்களோடிருந்த ஆரோன்
நாட்டையரையும் இன்னும் உபதேசியாரையும் மாத்திரமல்ல,
படிப்பாளிகளான ரோமகத்தாரையும் அஞ்ஞானிகளையும்

---

* அவர் தெலுங்கு பாஷையில் முழுவேத புத்தகத்தையும் இந்
துஸ்தானி பாஷையில் சில பங்குகளையும் மொழிபெயர்த்ததுண்டு.

யோசனை கேட்டார்கள். ஆனால் சென்னையிலிருந்த சூல்ச்சை யர் தரங்கம்பாடி ஐயர்மாரின் நோக்கத்தை அறிந்ததுடன் அவர்கள் புதிதாய்ப் பதிப்பித்த மத்தேயு சுவிசேஷத்தையும் பார்வையிட்டபோது, மிகவும் ஆயாசப்பட்டு, இதைக்குறித்து கோப்பனுகன் ஆலே நகரங்களிலிருந்த பெரியோருக்குக் கடிதம் எழுதி, அதில் தரங்கை ஐயமார் தமக்குத் தெரிவிக்காம லும், தமது சம்மதமின்றியும், இந்தப் புதிய பதிப்பை அச்சிட்டதாக முறையிட்டு, இந்தப் புதிய பதிப்பு சாதாரண ஜனங் களுக்கு விளங்காதென்று சொல்லி, திருத்தப்பட்ட பதிப்பு அவசியமல்ல என்றும் பழைய பதிப்பை யாதொரு மாற் றமுமின்றி அச்சிடவேண்டுமென்றுங் கேட்டுக்கொண்டார். கோப்பனுகனில் இருந்த பெரியோர் சங்கதிகளைத் திட்டமாய் அறிந்துகொள்ளக் கூடாமல், சூல்ச்சையரின் வார்த்தைகளை மாத்திரம் நம்பிக்கொண்டு, திருத்தப்பட்ட புதிய பதிப்பு வேண் டியதில்லை என்றும், பழைய பதிப்பையே மாற்றாமல் அச்சிட வேண்டுமென்றும் உத்தரவு செய்தார்கள். பற்பல முகாந்தரங் களின் நிமித்தம் பழைய பதிப்பைத் திரும்பவும் அச்சிடும் வேலை 1747-ம் ௵ மட்டும் தாமதமாயிற்று. கர்த்தரின் உத்தமமும் உண்மையுமான ஊழியனுகிய பிரெசிர் ஐயர் இறந்துபோன படியாலும், வால்தர் ஐயர் வியாதியின் நிமித்தம் சீமைக்குத் திரும்பிப்போனபடியாலும், புதியபதிப்பை அச்சிடும் வேலை ஒழிந்ததாகத் தோற்றிற்று. ஆகிலும் கர்த்தராகிய பராபரன் தமது ஞானமுள்ள ஆலோசனைப்படியே தமிழ்த்திருப்புதலைப் பற்றி வேறு தீர்மானம் செய்திருந்தார். மனுஷீகத் தடைகளா னலும் சரி, மனுஷ பலவீனங்களானலும் சரி, அவர் தீர்மா னத்தைத் தடுக்காது.

எதேது அவராலே தீர்மானிக்கப்பட்டதோ,
அதற்கு யாதொன்றாலே மாறுபாட்டம் வருமோ.

அவர் கற்றோர் கல்லார் யாவருக்குந் தெளிவும், மூலபா ஷைக்குப் பொருந்திய உண்மையுமுள்ள ஒரு மொழிபெயர்ப் பைத் தமிழ் நாட்டிலுள்ள தமது திருச்சபைகளுக்குக் கொடுக்கும்

Fabricius. படி அப்போது ஒரு பாலகனை எழுப்பி, அவருக்கு வேண்டிய ஞானம் வரங்களையெல் லாம் அருளி, இந்தியாவுக்கு அனுப்பினர்.

கர்த்தருடைய இந்த ஊழியக்காரன் யோகான் பிலிப்பு பப்ரீசியுஸ் ஐயர்தானே. தமிழுபாஷையில் பாவரிசையர் என்



இவர் 1711 ௵ ஜனுவரி மீ 22 உ பிராங்கு
ளப்பட்ட
போர்த்துப்பட்டணத்துக்குச் சமீபமான கிலேபர்கு (Klee-
berg) என்னும் சிற்றூரில் பிறந்தார். அவருடைய தெய்வபக்
தியுள்ள பெற்றூர் அவரையும் அவருடைய ஏழு சகோதரங்
களையும் பாலதண்டனையிலும் கர்த்தருடைய புத்தியிலும்
வளர்த்தார்கள். அவர்கள் குடும்ப விஷயங்களெல்லாம் தெய்
வபத்தியோடும் பயத்தோடும் நடத்தப்பட்டது. பராபரனு
டைய வசனம் அவர்கள் தினபோசனமும், செபம் அவர்கள்
சீவிய மகிழ்ச்சியுமாயிருந்தது. பாவரிசையர் தமது பாலியத்
திலேயே ஞானோபதேசம் வேதசரித்திரம் முதலிய ஞான
அறிவிலும், கிரேக்க லத்தீன் பாஷைகள் முதலிய லௌகிக
அறிவிலும் திட அஸ்திபாரம் அடைந்தவரானபின், 1728-ம்
௵ கீசன் ஊரிலுள்ள சர்வசாஸ்திரசாலையின் மாணக்கராகி,
3½ வருஷமாகத் தத்துவசாஸ்திரத்தையும் நீதிசாஸ்திரத்தை
யும் சற்றூர். இதற்குப்பின் சிலகாலமாய் அவர் தமது தமைய
னர் வீட்டில் தங்கி, அவருடைய பிள்ளைகளைப் படிப்பித்தார்.
அவர் 1736-ம் ௵ ஹல்லேபட்டணத்திலுள்ள சர்வசாஸ்திர
சாலைக்குப்போய், அங்கே வேதசாஸ்திரம் கற்றதுமன்றி எபி
ரேய பாஷையில் பூரணபாண்டித்தியமும் அடைந்தார். பிராங்
கே, லங்கே, மிகாயேலிஸ் என்ற பெயர்பெற்ற சாஸ்திரபண்டி
தர்கள் அவருடைய போதகர்களில் விசேஷித்தவர்கள். அவர்
தாம் ஹல்லே நகரில் படித்த காலத்தைக்குறித்துச் சொல்லு
கிறதாவது: பராபரன் என்னை உண்மையோடு நடத்தி, "தமது
கிருபையை நான் பூரணமாய் ருசித்து அனுபவிக்க அருள்
புரிந்தார். நான் சோதனைகளுக்கும் துன்பங்களுக்கும் விலக்க
மாயிருந்ததில்லை. இவைகளினால் நான்: என்னையல்லாமல் நீங்
கள் ஒன்றுஞ் செய்யக்கூடாது என்ற கர்த்தருடைய வார்த்
தையை அனுபவசித்தாந்தமாய் அறிந்துகொண்டேன். என்ன
செய்வதென்றும், எப்படி தப்புவதென்றும் நான் வழிவகை
அறியாத சமயங்களுக்கு உட்படுவதற்குப் பராபரன் அடிக்
கடி இடங்கொடுத்தாருண்டு. இதனால் நான் விசுவாசம், உண்
மை, மனத்தாழ்மை, ஞானம் என்றவைகளுக்காக உட்கருத்
தாய்ச் செபம் பண்ணக் கற்றுக்கொண்டேன் என்கிறார். இரக்
கமுள்ள கர்த்தர் அவர் ஜெபத்தைக் கேட்டு, அவர் விரும்பிய
இந்த வரங்களால் அவருடைய ஆயுசுநாளெல்லாம் அவரை
அலங்கரித்தார். அக்காலத்தில் தரங்கம்பாடியில் பிரெசிர் ஐய
ரும் கூடலூரில் சர்த்தோரியுசையரும் இறந்துபோனபடியா

னும், வால்தர் ஐயர் சீமைக்குத் திரும்பிப்போனபடியாலும், மிசியோன் கிரியைக்கு வேலையாட்கள் குறைவுபட்டார்கள். இதன் நிமித்தம் பிராங்கே சாஸ்திரியார் 1739-ம் ௵ செப்டெம்பர் ௴ 11 ௳ இந்தியாவில் தமிழருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் மிசியோனரியாகப் போகமனமுண்டோ என்று பாவரீசையரைக் கேட்டார். இதை அந்த ஐயர் பராபரனுடைய அழைப்பாக எண்ணி, திடமும் உற்சாகமுமான மனதோடு இந்த ஊழியத்தை ஏற்றுக்கொண்டு, உடனே சேக்லின் ஐயரோடு புறப்பட்டு, கோப்பனுகன் பட்டணத்திற்குப் போய், அங்கே அக்டோபர் ௴ 23 ௳ சுவிசேஷ லுத்தரன் திருச்சபையின் குருவாக அபிஷேகம் பெற்றார். இக்காலத்தில் அவருடைய தாயார் அவருக்கு எழுதி அனுப்பின கடிதமாவது:

"என் பிரியமுள்ள மகனே, நீ பராபரனுடைய திருச்சித்தத்தின்படி செய்ய மனதாயிருப்பது எனக்கு மிகுந்த சந்தோஷம். இதற்கு உன்னை அழைத்த பராபரன் உனக்குத் துணையாயிருந்து, பெலனையும் திடனையும் உனக்கு அளித்து, நீ உக்கிர சமுத்திரத்தைக் கடந்து, அவர் அனுப்புகிற தேசத்திற்குச் சுகமாய்ப் போய்ச்சேர அவர் தமது பரிசுத்த தூதரின் உதவியை உனக்குக் கட்டளையிடுவாராக. உன்னைத் தம்முடைய சாயலின்படி சிருஷ்டித்த பராபரன் உன் பட்சமுள்ள தகப்பனும், உன்னைத் தம்முடைய இரத்தத்தினால் சம்பாதித்த அவருடைய நேச குமாரன் உன் அன்புள்ள சகோதரனும், உன்னை ஞானஸ்நானத்திலே பரிசுத்தமாக்கின பரிசுத்த ஆவி உன்னில் வாசஞ்செய்கிறவருமாயிருப்பாராக. நானும், உன் சகோதரங்களும், அவர்களுடைய பிள்ளைகளும் பராபரனுடைய திருச்சித்தத்திற்கு ஒத்த நேரான வழியிலே நடந்து, அவருடைய ஆசனத்துக்கு முன்பாக எல்லாத் தேவ தூதர்களோடும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோடும் அவருடைய மகத்துவத்துக்கு ஸ்தோத்திரமும் துதியும் செலுத்தும்படி தயவுள்ள பராபரன் எங்களைச் சமர்த்தராக்க, எங்களுக்காக எப்போதும் ஜெபம் பண்ணு. உனக்குக் கரிசனமான வினவுதல்களைச் சொல்லி, பராபரனுடைய சமாதானமும் ஆசீர்வாதமும் உண்டாக வாழ்த்தும் உனது

2 தீமோ. 4, 5. பட்சமும் உண்மையுமுள்ள தாயாகிய

எலிசபேத்து கார்லோத்தா பபிரீசியுஸ்"



பாவரீசையர் வேறு இரண்டு ஐயர்மாரோடு புறப்பட்டு இங்கிலாந்து மார்க்கமாக யாத்திரை செய்து, கூடலூர் வந்து கரையிறங்கி, சேக்லின் ஐயரோடு 1740-ம் ௵ செப்தெம்பர் மாசம் 8-ம் ௳ தரங்கை வந்துசேர்ந்தார். உடனே அவர் அதிகப் பிரயாசையோடு தமிழ்ப் பாஷையைப் படிக்கத் துவக்கி, 1741-ம் ௵ மார்ச்சு ௴ 31-ம் ௳ யாகிய பெரிய வியாழக்கிழமை எருசலேம் தெய்வாலயத்தில் யோவான் 1, 29-ம் வசனத்தின்பேரில் தமது முதல் தமிழ்ப் பிரசங்கத்தைச் செய்தார், அவர் இதைப்பற்றித் தமது தினக்குறிப்புப் புத்தகத்தில்: நான் இன்னம் அதிகமாய்த் தமிழ்ப் பாஷையைக் கற்றுக்கொண்டு, இந்தத் தெய்வ ஆட்டுக்குட்டியைப் பற்றி என் ஆயுசு நாளெல்லாம் என் மழலைச் சொல்லால் பேசிச் சாட்சி பகரும்படியாக பராபரன் எனக்கு இரங்குவாராக. கர்த்தாவே, உம்முடைய வெளிச்சத்தையும் சத்தியத்தையும் கட்டளையிட்டருளுமென்று எழுதினார். சென்னையிலிருந்த சூல்ச்சையர் வியாதியின் நிமித்தமாக 1741-ம் ௵ சீமைக்குப் போனபடியால், பாவரீசையர் சென்னப்பட்டணத்துக்குப் போய், சீமையிலிருக்கிற பெரியோர்களின் உத்தரவு பெறும்மட்டும் அங்கிருக்கிற சபையை விசாரிக்கும்படி மற்ற ஐயர்மார் அவரை நியமித்தார்கள். அவர் கர்த்தரின் நாமத்தை முன்னிட்டு இதற்குச் சம்மதித்து டிசம்பர் ௴ 4-ம் ௳ சென்னைக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே அவர் தமது மரண நாள்மட்டும் ஏறக்குறைய ஐம்பது வருஷமாய் உண்மையோடு உழைத்தார். அவருக்கு அங்கே உண்மையற்ற சகோதரராலும் ஊழியராலும் உண்டான துன்பங்களும், யுத்தம் முதலியவைகளால் நேரிட்ட சங்கடங்களும் கொஞ்சநஞ்சமல்ல. யுத்தகாலத்தில் அவருடைய சொத்துக்களெல்லாம் இருமுறை கொள்ளை போயிற்று. அவர் சென்னையை விட்டுப் பழவேற்காட்டுக்கு ஓடிப்போகும்படியாகவும் நேரிட்டது. அவர் ஒரு உபதேசியின் மோசத்தினால் உண்டான கடன் நிமித்தம் தமது விருத்தாப்பியத்தில இரண்டுவிசை காவலில் இருக்க வேண்டியதாயிற்று. ஆகிலும் அவர் மனமகிழ்ச்சியையும் தைரியத்தையும் ஒருக்காலும் விட்டதில்லை. அவர் எப்போதும் உக்கிரத்தோடு ஜெபம்பண்ணி, சாக்கிரதையோடு வேலை செய்து தமக்கு நேரிட்ட எல்லாவற்றிற்காகவும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார். அவர் லோக கனத்தைத் தேடினதுமில்லை, அடைந்ததுமில்லை. அவர் 1791-ம் ௵ ஜனுவரி

மாசம் 23-ம் உ மரணத்தின் மூலமாய் மறுமையின் பாக்கியத்துக்குட்பட்டார். அவருக்கு ஞாபகசின்னமாக யாதொரு சிறந்த கட்டடம் கட்டப்பட்டிருக்கிறதில்லை. ஆயினும், ஸ்ரீநிவாஸரின் பேர் தலைமுறை தலைமுறைக்கு ஆசீர்வாதமாயிருக்கும். அவர் தமிழ்த் திருச்சபைக்கு மொழிபெயர்த்துக் கொடுத்திருக்கிற சொன்னயம், பொருணயம் பொருந்திய சிறந்த ஞானப்பாட்டுப் புத்தகமும், மூலபாஷைக்கேற்ற உண்மையும் தெளிவுமுள்ள நம்பத் திருப்புதலான வேத புத்தகமும் எவராலும் இடிக்கக்கூடாமல், எக்காலத்தும் வியப்புடன் கண்டெடுக்கத்தக்கும் ஞாபக சின்னங்களாக விளங்கி நிற்கின்றன.

பாவரீஸையர் சென்னப்பட்டணத்துக்கு வந்த சில காலத்திற்குப்பின் 1741-ம் வரு முன் வால்தர் பிரெஸியர் ஐயர்மார்கள் துவக்கிவிட்டிருந்த புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பின் வேலையை மறுபடியும் தொடர்ந்து செய்ய ஆரம்பித்தார். கர்த்தர் இந்த வேலைக்கென்று பல பாஷைகளைக் கற்றிருந்த படிப்பாளியாகிய ஒரு தமிழனை அவருக்கு உதவியாகக் கட்டளையிட்டார். அவர் இந்த வேலையில் பிறர் தயவைத்தேடின்றி சுய மனோற்சாகமாகக் கையிட்டுக்கொண்டு இதனால் தமது லாபத்தையும் கீர்த்தியையும் அல்ல, கர்த்தருடைய மகிமையையும் சபைகளின் நன்மையையுமே தேடினார். அவர் புதிய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்பை 1750-ம் வரு. செப்டெம்பர் மாசம் முடித்தார். அவர் அதை உடனே அச்சிடாமல் திரும்பத் திரும்ப மூலபாஷையோடு கவனமாய் ஒத்துப்பார்த்து திருத்தினார். அக்காலத்தில் அவர் ஹால்லே பட்டணத்திலிருந்த தமது சகோதரன் செபஸ்தியான் [illegible]க்கு அனுப்பின காகிதத்தில்: வேத மொழிபெயர்ப்பின் வேலைக்கென்று கர்த்தர் என்னை நியமித்து அதற்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தருளினார் என்று நான் அறிந்திருப்பதினால், நான் அதைக் குறித்துப் பெருமை பாராட்டேன்; கர்த்தர் இதைத் தமக்குப் பிரியமானதாக அங்கீகரித்து, சபைகள் இதை ஏற்றுக்கொள்ளச் செய்வார் என்று நம்பியிருக்கிறேன். ஐரோப்பிய மொழிபெயர்ப்புகளிலிருப்பதுபோலவே இதிலும் சுருக்கச் சொல்லல், விளக்கமுற்றல், அழகுடைத்தாதல், ஓசையுடைமை முதலிய அழகுகள் பொருந்தியிருக்கிறது. இதற்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று எழுதினார்.

இதற்குள்ளாகத் தரங்கம்பாடி ஐயர்மார்கள் 1747-ம் வரு சங்கீத புஸ்தகத்தை பாவெரீஸ் [illegible] அச்சிட்



கோப்பனுகன் பட்டணத்திலிருந்து வந்த உத்தரவுப்படியே புதிய ஏற்பாட்டை மூன்றாம்விசை பதிப்பிக்கத் துவக்கினார்கள். இந்தப் பதிப்பில் முந்தின மூன்று சுவிசேஷங்களை சீகன்பால்கு ஸ்ரீரேஸ்டருடைய மொழிபெயர்ப்பின் படியேயும், யோவான் சுவிசேஷந் துவக்கி, உ கொரிந்தியர் வரைக்கும் பாவரீஸையர் திருப்புதலைக் கலந்துகொண்டும் அச்சிட்டார்கள். இதைப் பாவரீஸையருக்குத் தெரியாமலும், அவர் சம்மதமில்லாமலும் நடப்பித்தார்கள். அவர்கள் உ கொரிந்தியர் நிருபத்தைத் துவக்கும்போது பாவரீஸையருக்கு எழுதி அவர் தமது திருப்புதலின் கையெழுத்துப் பிரதியை அனுப்பும்படி கேட்டுக்கொண்டார்கள். அவர் தாம் இதுவரையில் தரங்கம்பாடி ஐயர்மார்களுக்கு அனுப்பிவந்த கையெழுத்துப் பிரதிகளை அவர்கள் எவ்வாறு உபயோகித்தார்கள் என்று இந்தச் சமயத்தில் முதல் விசையாக அறிந்துகொண்டு மிகுந்த மனவருத்தமடைந்தார். அவர் இதைக் குறித்துச் சற்றுக் கடுமையாக எழுதி, அவர்கள் பழைய திருப்புதலையாவது தமது திருப்புதலையாவது திருத்தமின்றி அச்சிட்டிருக்க வேண்டியதென்றும், அவ்விரு திருப்புதலையும் கலந்து அச்சிடக்கூடாதென்றும், இவைகளைக் கலந்துபோடுவதினால் வீண் குழப்பமும் பொருள் சந்தேகமும் உண்டாகும் என்றும் தெரிவித்தார். தரங்கை ஐயர்மார்கள் தங்கள் தப்பிதத்தை ஒப்புக்கொண்டு, இனி அச்சிடும் விஷயத்தைக் குறித்துத் தங்களுக்குத் தகுந்த ஆலோசனை கொடுக்கும்படி, அவரைத் தரங்கம்பாடிக்கு வரக் கேட்டுக்கொண்டார்கள். [illegible] ஒரு நல்ல திருப்புதல் [illegible] வெளிப்பட வேண்டும் என்கிற விருப்பம் அவருக்கிருந்ததால், அவர் தரங்கம்பாடிக்கு வந்து 1754-ம் வரு ஏப்பிரில் மீ முதல் ஜூலை மாசம் வரையில் அங்கேயிருந்தார். அவர் அங்கிருந்த காலத்தில் அவரும் மற்ற ஐயர்மார்களும் தினந்தோறும் கூடி வந்து, புதிய திருப்புதலை மூலபாஷையின்படி பதம் பதமாய்ப் பரிசோதித்துப் பார்த்த பின் இதையே அச்சிட வேண்டுமென்று ஒருமனதோடு தீர்மானித்தார்கள். புதிய ஏற்பாட்டின் இந்த மூன்றாம் பதிப்பு 1758-ம் வரு முடிவாயிற்று. அதில் உ கொரிந்தியர் முதல் கடைசிமட்டும் திருத்தப்படாத பாவரீஸையரின் மொழிபெயர்ப்பாம். கொஞ்சக் காலத்திற்குப்பின், முழுவதும் பாவரீஸையர் திருப்புதலான புதிய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்பு நிலைபெறத்தக்க யோக்கியமாகத் தமிழ்த் திருச்சபைக்குக் கொடுக்

கப்படக் கர்த்தர் கிருபை செய்தார். 1761-ம் ஞு இங்கிலீஷ்காரர் புதுச்சேரியைப் பிடித்து, அங்கெடுத்த கொள்ளை உடைமைகளில் ஒரு அச்சியந்திரம் அவர்களுக்கு அகப்பட்டது. அதை அவர்கள் சென்னபட்டணத்துக்குக் கொண்டுவந்து வேப்பேரியில் வைத்து, ஐயர்மார்கள் உபயோகிக்கும்படி அவர்கள் வசத்தில் ஒப்புவித்தார்கள். ஹல்லே பட்டணத்திலிருந்து தமிழ் அச்செழுத்து வந்ததால், பாவ்ரீஸையர் புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பை 1769-ம் ஞு அச்சிடத் துவக்கி, 1773-ம் ஞு முடித்தார். அப்பொழுது அச்சிடப்பட்ட பிரதிகள் 1000. அக்காலத்தில் அவர் ஒரு கடிதத்தில்: நான் செய்ததும் தரங்கை ஐயர்மார்களும் நானும் திரும்பத்திருப்பப் பரிசோதித்து திருத்தினதுமான முழுப் புதிய ஏற்பாட்டின் புதிய திருப்புதல் இப்பொழுது அச்சிடப்பட்டு முடிந்தது. பராபரன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் அதற்குத் தமது ஆசீர்வாதத்தைக் கிருபையாய்க் கட்டளையிடுவாராக என்று எழுதினார்.

பாவ்ரீஸையர் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்த உடனே, பழைய ஏற்பாட்டையும் மூல எபிரேய பாஷையிலிருந்து மொழிபெயர்க்கத் துவக்கினார். அவர் 1756-ம் ஞு அக்டோபர் மீ 28 உ பிராங்கே சாஸ்திரியாருக்கு எழுதின கடிதத்தில்: தெய்வ நடத்துதலால் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்க்க வினை முகாந்திரங்களே பழைய ஏற்பாட்டையும் துவக்க என்னை ஏவின. இதில் அதிகமாக வாசிக்கப்படுகிறதும் மொழிபெயர்ப்பதற்கரிதுமான ஆகமங்களையே முந்தித் திருப்பத் துவக்கி, இதுவரையில் [illegible], சாலொமோன் வாக்கியம், ஏசாயா, எரேமியா தீர்க்கதரிசனங்கள் என்ற ஆகமங்களை மொழிபெயர்த்திருக்கிறேன் என்று சொல்லுகிறார். அவர் இந்த வேலையை யுத்தத்தினாலுண்டான சங்கடங்களின் நடுவே நடத்தினார்.

இந்த யுத்தகாலத்தில் அவர் தமது சொத்துக்களை யெல்லாம் இருமுறை கொள்ளை கொடுத்து பழவேற்காட்டுக்கு ஓடிப்போக நேரிட்டது. ஆகிலும் காளவட்டத்தில் பழைய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்பை முடிக்கப் பராபரன் கிருபை செய்தார். தரங்கம்பாடியிலிருந்த ஐயர்மாராலும் சாணியேல் பிள்ளையாலும் கவனமாகப் பரிசோதிக்கப்பட்ட இந்தத் திருப்புதலைத் தரங்கையில் அச்சிடத் தீர்மானித்தார்கள். 1756-ம் ஞு இது அச்சிடத் துவக்கமாயிற்று. சில சமயங்களில் காகி



தக்குறைவினாலும், வேலைக்காரரின் வியாதியாலும் வேறு சில தடைகளினாலும் அச்சுவேலை தாமதப்பட்டு, பாவ்ரீஸையர் மரித்தபின் 1796-ம் ஞு முடிந்தது.

1788-ம் ஞு தரங்கம்பாடியிலே நாலு சுவிசேஷங்கள் திரும்பவும் அச்சிடப்பட்டு நாலாம் பதிப்பு என்னப்பட்டது. அது சரியான பாவ்ரீஸையர் திருப்புதலாயிராமல், அதை அநுசரித்துத் திருத்தப்பட்ட பழைய திருப்புதலாயிருந்தது. 1806-ம் ஞு பாவ்ரீஸையர் திருப்புதலின் 2-ம் பதிப்பு சென்னபட்டணத்திலும், 1810-ம் ஞு தரங்கம்பாடியிலும், 1813-ம் ஞு ஸ்ரீராமபுரியிலும் அச்சிடப்பட்டது. இந்தப் பதிப்புகளில் சிற்சில பிழைகள் விலக்கமாக, பாவ்ரீஸையர் திருப்புதலின் சரியான வாசகம் இருக்கிறது. 1824, 1837-ம் வருஷங்களில் சென்னையில் பிரசுரமான பதிப்புகளில் செய்யப்பட்டிருக்கிற மாற்றுதல்கள் [illegible] கொஞ்சம். பின்னான காலத்தில் அச்சிடப்பட்ட பதிப்புகளில் கவனத்தாட்சியாக வெகுவான மாற்றுதல்கள் செய்யப்பட்டன.

பாவ்ரீஸையர் செய்த மொழிபெயர்ப்பு மூலபாஷைக்கொத்த உண்மையுள்ளதும் கற்றோர் கல்லார் யாவருக்கும் தெளிவானதும் தப்பறைப் போதகங்களுக்குச் சார்பான வாசகங்களற்றதுமாயிருந்தும், சிறந்த செந்தமிழ் நடையை விரும்பும் சிலருக்கு அது பிரியமாயிருக்கவில்லை.

முதல் முதல் ரேனியுஸ் ஐயர் ஒரு புதிய மொழிபெயர்ப்பைச் செய்தார். அவ்வையர் சொல்லுகிறபடி "தெளிவும் தமிழ் நடைக்கு இணங்[illegible]யிருந்தாலும், [illegible] சில கூட்டுமொழிகள் கலந்து [illegible]மூலத்துக்கு வியாக்கியானம்போல் இருக்கிறபடியால் சிறப்படையாமற் போயிற்று."

1850-ம் ஞு பெர்சிவல் முதலான யாழ்ப்பாணத்து ஐயர்மாரால் ஒரு புது மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. "முந்தின இரண்டு திருப்புதல்களில் யாவரும் நலமென்று அங்கிகரித்தவை இதில் பூரணமாய் அமைந்திராதபடியால்" அங்கிகாரமாகாமற் போயிற்று.

கடைசியாக, பாவ்ரீஸையர் திருப்புதலைப் பரிசோதித்துத் திருத்த (to revise) சென்னை வேதாகம சங்கத்தார் கருதி, அதற்கு உதவி செய்ய பவர் ஐயர் முதலியவர்களோடு லுத்தரன் மிஷியோன் சங்கத்தாராகிய நம்மையும் அழைத்தார்கள். நாமும் அதற்குடன்பட்டோம். ஆயினும், வேதாகம சங்கத்தார் பாவ்ரீஸையர் திருப்புதலைத் தள்ளி, ஒரு புதிய திருப்புதலைச்

செய்ய நோக்கங்கொண்டதைக் கண்டவுடனே அதற்குச் சம்மதியாமல் நம்மை விலக்கிக்கொண்டோம்.

பாவரீஸையர் திருப்புதலை இனி சென்னை வேதாகம சங்கத்தார் அச்சிடுவதில்லையென்று நாம் கண்டு, 1878-ம் வருஷ புதிய ஏற்பாட்டைத் தகட்டுப்பதிப்பாகவும், 1893-ம் வருஷ பழைய ஏற்பாட்டைச் சாதாரண அச்சிலும் பதிப்பித்தோம். இவ்வேலையை விசேஷித்த சிரத்தையோடு நடத்தினவர் மாஜி சீனியர் சுவார்ச்சையர். பிறகு 1898-ம் வருஷ பழைய ஏற்பாட்டையும் தகட்டுப் பதிப்பாக்கினோம்.

அப்பால் 1899-ம் வருஷ நாகபட்டணத்திற் கூடின தமிழ்நாட்டுச் சுவிசேஷ லுத்தரன் திருச்சபையின் ஐந்தாம் பொதுக்கூட்டத்தார்: விசேஷித்ததும், அவசியமுமான திருத்தங்களை மாத்திரம் செய்து, பாவரீஸையருடைய தமிழ் வேதாகமத் திருப்புதலை உள்ளபடி அச்சிடவேண்டும் என்று தீர்மானித்ததற்கேற்ப, ஆலோசனைச் சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட கேரிங் ஐயரும், ஞா. சாமுவேல் ஐயரும், ஒரு தமிழ்ப் பண்டிதர் உதவிபெற்று, தேவ கிருபையால் புதிய ஏற்பாட்டைத் திருத்தி முடிக்க, அது இந்த [illegible] வருஷத்தில் அச்சிடப்பட்டது. அவ்வளவு திருத்தம் வேண்டாத பழைய ஏற்பாடும் அவ்வாறு முடிவாகக் கோருகிறோம்.

எப்படியானாலும், பாவரீஸையர் திருப்புதலே குறைவற்ற பூரண திருப்புதலென்று சொல்லோம். [illegible] தமக்குச் சித்தமாயிருக்கும் காலத்தில் தமிழருக்குள்ளே சாமர்த்தியமுள்ள ஒரு [illegible] எழுப்பி, [illegible] தமது வரங்களையும் மூலபாஷைகளின் அறிவையும் அருளி, யாவருக்கும் பிரியமும் எல்லாத் தெய்வபக்தியுள்ள ஆத்துமாக்களின் அங்கீகாரத்துக்கும் ஏற்றதுமான பிரகாரம் பாவரீஸையர் திருப்புதலைச் சீர்திருத்திக்கொடுக்கக் கிருபை செய்வாரென்று நம்புகிறோம். இரக்கமுள்ள பராபரன் இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் நமது நம்பிக்கையை வாய்க்கப் பண்ணுவாராக.

கவனிப்பு. பாவரீஸையர் திருப்புதலான தமிழ் வேதாகமப் பிரதிகளையும், வேதாகமப் பங்குகளையும் சொற்ப விலைக்கு விற்பதனாலும், சமயா சமயங்களில் இலவசமாகக் கொடுப்பதினாலும் நமது கிறிஸ்தவ குடும்பங்களில் பரம்பச் செய்யும் நோக்கமாய் 1883-ம் வருஷ தரங்கை தமிழ் வேதாகம சங்கம் ஏற்பட்டு வேலைசெய்து வருகிறது.



## உ. தரங்கை மிசியோன் கணக்கு (1905).

நமது நாலு சேகரங்களின் சரித்திரத்தைப் பார்த்த நாம் கடந்த வருஷ முடிவில் நமது முழு மிஷியோனின் நிலைமையையும் தொகுத்துப் பார்ப்பதால், கர்த்தர் நம்மிடத்தில் பெரிய காரியங்களைச் செய்தார் என அறிந்துகொள்ளலாம்.

| | |
|---|---|
| நமது மிஷியோன் சேகரங்கள் ... ... ... | 44 |
| ஆராதனை ஸ்தலங்கள் ... ... ... ... | 233 |
| நமது நடுவே வேலைசெய்யும் ஐரோப்பிய மிஷியோனரிகள் ... ... ... | 31 |
| ஐரோப்பிய அம்மாள்மார் ... ... ... | 12 |
| சுதேச குருமார் ... ... ... ... | 21 |
| பிரசங்கியார் ... ... ... ... | 1 |
| உபதேசிமார் ... ... ... ... | 78 |
| உபாத்திமார் ... ... ... ... | 457 |
| உபாத்திச்சிமார் ... ... ... ... | 116 |
| சுவிசேஷகர்களும் ஜெனனா ஸ்திரீகளும் ... | 25 |
| நமது மிஷியோனைச் சேர்ந்த கிறிஸ்தவர்களின் தொகை ... ... ... | 21,516 |
| இவர்களில் நற்கருணை வாங்கக் கூடியவர்கள் ... | 10,011 |
| வேத சாஸ்திர மாணாக்கர் ... ... ... | 12 |
| செமினெரி மாணாக்கர் ... ... ... | 67 |
| ட்ரெயினிங் ஸ்கூல் மாணாக்கர் ... ... | 27 |
| ஹைஸ்கூல் (2) மாணாக்கர் ... ... ... | 550 |
| மிடில் ஸ்கூல் (9) மாணாக்கர் ... ... | 1089 |
| மிடில் ஸ்கூல் (9) மாணாக்கிகள் ... ... | 236 |
| பிரைமெரி ஸ்கூல் (267) மாணாக்கர் ... | 5575 |
| பிரைமெரி ஸ்கூல் (267) மாணாக்கிகள் ... | 2091 |

## பிழை திருத்தம்.

49-ம் பக்கம் 9-ம் வரியில் ஸிர்ஜெமன் என்பதை ஜமித்செமன் என்றும், 50-ம் பக்கம் 33-ம் வரியில் 1741 என்பதை 1749 என்றும், 75-ம் பக்கம் 25-ம் வரியில் கோலெப் என்பதை கோலோப்பென்றும் திருத்திக்கொள்க.